
www.padippakam.com

மார்ச்
2005
ரூ.15

# புதிய கோடாங்கி



படிப்பகம்

www.padippakam.com

# தென்னிந்திய தலித் எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் பேரவை

தமிழ்நாடு SIDWAA - TN

## மாநிலப் பொதுக்குழு மற்றும் மாநில நிர்வாகிகள் தேர்தல்

அன்புடையீர்!

வணக்கம்.

தென்னிந்திய தலித் எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் பேரவை துவங்கி இரண்டு ஆண்டுகள் முடிவுற்ற நிலையில் அடுத்த ஆண்டிலும் நமது பயணத்தை வெற்றிகரமாகத் துவங்க வேண்டியிருக்கிறது.

இந்துத்துவா மற்றும் தலித் விரோதப் போக்குகளுக்கெதிராக தலித் எழுத்தாளர்கள் மற்றும் தலித் கலைஞர்கள் உதிரிகளாக அல்லாமல் பேரவையோடு இணைந்து மிகவும் துடிப்போடு கடந்த ஆண்டுகளை விட உரத்துக் குரல் கொடுக்க வேண்டிய அவசியம் நம்மிடையே உள்ளது.

கருத்தாலும் கரத்தாலும் தலித் மக்களை அரவணைத்து தலித் சமூக விடுதலையை மையப்படுத்தி இயங்க வேண்டியது நமது பேரவையின் இலட்சியமும் குறிக்கோளுமாகும்.

இத்தகைய ஒருங்கிணைப்புப் பணியில் தாங்களும் முன்னின்று பேரவையின் மாநிலப் பொதுக் குழுவில் பங்கேற்க அன்புடன் அழைக்கின்றோம்.

**நாள்**
03.04.2005
ஞாயிற்றுக்கிழமை
காலை 9 மணி

தலைமை
**சிவகாமி**
மாநிலத் தலைவர் SIDWAA

**இடம்**
சாந்தி நிலையம்
விசுவலிங்கம் லே அவுட்
(அரசு மருத்துவமனை அருகில்)
விழுப்புரம்

பொருள்:1. பேரவையின் மாநிலப் பொதுக்குழு 2.பேரவையின் மாநிலத் தேர்தல் - 2005 3. இதர...

குறிப்பு :

தேர்தல் நடத்த வேண்டிய பதவிகள் / பொறுப்புகள்

1. தலைவர் (சிவகாமி)
2. பொதுச் செயலாளர் (ப்ரதிபா ஜெயச்சந்திரன்)
3. இணைச் செயலாளர் (நிகழ் அய்க்கண்)
4. பொருளாளர் (கௌதம சன்னா)
5. எழுத்தாளர்கள் ஒருங்கிணைப்பாளர் (ரவிக்குமார்)
6. கலைஞர்கள் ஒருங்கிணைப்பாளர் (சந்ரு)
7. துணைத் தலைவர்

(அடைப்புக் குறிக்குள் உள்ளவர்கள் தற்போது பொறுப்பில் உள்ளவர்கள்)

எழுத்தாளர்கள், மாவட்ட பொறுப்பாளர்கள், வாழ்த்துரை வழங்குவார்கள்.

நன்றியுரை :
**விழி.பா. இதயவேந்தன்**
விழுப்புரம் மாவட்ட அமைப்பாளர் SIDWAA

**தவறாமல் வருக!**

தொடர்புக்கு

1. புதிய கோடாங்கி முகவரி
2. விழி.பா. இதயவேந்தன் ( 04146 - 259512)

www.padippakam.com


பு
தி
ய

கோ

டா

ங்

கி

மாத இதழ்

மலர் 4 - இதழ் 9
மார்ச் 2005

*ஆசிரியர்*
ஆட்ரி ஜேனட் ஜோசப்

*முகப்பு ஓவியம்*
எம். எஸ். பிரகாஷ் பாபு

*இதழ் வடிவமைப்பு*
யாக்கன்

*சந்தா*
ஆண்டுக் கட்டணம் - ரூ. 150/-
வாழ்நாள் கட்டணம் - ரூ. 1,000/-

அயல் நாட்டினருக்கு
தனி இதழ்: US $ 2

ஆண்டுக் கட்டணம்
US $ 20

*விளம்பரம்*
அரைப்பக்கம் ரூ. 5,000/-
முழுப்பக்கம் ரூ. 10,000/-
பின்/உள் அட்டை ரூ. 20,000/-



*தொடர்பு முகவரி*
604, ஜெயம் பிரிவு
சித்ரா அடுக்ககம்
9 சூளைமேடு நெடுஞ்சாலை
சென்னை - 600 094.
Mobile : 98404 - 49204
puthiakodangi@yahoo.co.in


# தலையங்கம்

தலித் நில உரிமையை முன்வைத்து புதிய கோடாங்கி அனைத்து இயக்கங்களுடன் இணைந்து செயல்திட்டங்களை வகுக்கும் என பிப்ரவரி இதழ் தலையங்கத்தில் சொல்லப்பட்டது.

தற்போது தலித் நிலவுரிமை போராட்டக்குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. திருவாளர்கள் கிறித்துதாசு காந்தி, கருப்பன், மணிவண்ணன், சிவகாமி என முன்னாள் இந்நாள் இந்திய ஆட்சிப் பணியாளர்களும், அனித்ரா, தலித் பெண்கள் இயக்கம், தேசீய மனித உரிமைப் பிரச்சாரம், தலித் மண்ணுரிமை இயக்கம் போன்ற பல தலித் தன்னார்வ நிறுவனங் களும், புரட்சி பாரதம், ஆர்.பி.ஐ., டி.பி.எஃப் போன்ற பல்வேறு இயக்கங் களும், வழக்கறிஞர் எழுத்தாளர் குழுமங்களும், எஸ்சி/எஸ்டி தொழிற் சங்கங்களும் மற்றும் பேரா. கல்யாணி, Fr. ஜோஸ், Fr. குமார் போன்ற தலித் ஆதரவாளர்களும், Fr. விக்டர், Fr. லூக்காஸ், Fr. ஜான் சுரேஷ், CSI போன்ற கிறித்துவப் பாதிரியார்களும் நிறுவனங்களும், பழங்குடிப் பிரதிநிதிகளும் இணைந்த குழுமம் ஒன்று உருவாகிக் கொண்டு வருகின்றது. இது இன்னமும் விரிவாகும்.

இக்குழு முதற்கட்டமாக மார்ச் 27 அன்று சென்னை சாந்தோம் உயர்நிலைப் பள்ளி (சாந்தோம் சர்ச் எதிரில்) அரங்கில் சுமார் மூவாயிரம் களப்பணியாளர்களைத் திரட்டி தலித் நிலவுரிமை மாநாடு ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இம்மாநாட்டுக்கான களப்பிரச்சாரம் துவங்கிவிட்டது. இம்மாநாட்டில் களப்பணியாளர்களுக்கான கையேடு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் கையேடு நிலமில்லாத தலித்துகளையும் களப் போராளிகளையும் இணைக்கும் பாலமாக விளங்கும் வகையில் வடிவமைக்கப்படும்.

இம்மாநாடு முடிவுற்ற அடுத்த பதினைந்து தினங்களில் களப்பணியில் ஈடுபடும் ஆர்வமுள்ள ஆற்றலுள்ள சுமார் நூறு அல்லது நூற்றைம்பது பேருக்கு (விருப்பமுள்ளவர்கள் தயவுசெய்து புதிய கோடாங்கி முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்) மூன்று நாள் பயிற்சி வழங்கப்படும். இந்த பயிற்சி முகாமை நடத்தித் தர போராட்ட களத்திலுள்ள திரு. நிக்கோலஸ் முன்வந்துள்ளார்.

இப்பயிற்சி முடிந்ததும் இவர்கள் கிராம அளவில் ஏற்கனவே செயல்பாடுகளில் உள்ள இயக்கங்கள், தலித் தன்னார்வ நிறுவனங்கள், அம்பேத்கர் மன்றங்களுடன் இணைந்து தீவிர பிரச்சாரங்களில் ஈடுபடுவார் கள். ஒவ்வொரு கிராமத்திலும் தலித் நில உரிமை - பஞ்சமி நில மீட்புக் குழு உருவாக்கப்படும். நிலத்தை சாதி இந்துக்களுக்கு பறிகொடுத்தவர்களும், நிலமில்லாத தலித்துகளும், கிராமத்து இளைஞர்களும், பெண்களும் இதன் உறுப்பினர்களாவார்கள். போராட்டக் குழுக்களை கிராமங்கள் தோறும் நிறுவ தலித் நிலவுரிமை போராட்டக் குழு முடிவு செய்துள்ளது. புதிய கோடாங்கி வாசகர்கள் இப்போராட்டத்தை பெருமைப்படுத்த ஆலோசனை தந்து உதவுவதுடன், களத்தில் இறங்கி பணியாற்றவும், இயலாதவர்கள் பொருளுதவி தந்து உதவவும் முன்வர வேண்டுகிறோம்.

மார்ச் 27-ஆம் தேதி சென்னை சாந்தோம் உயர்நிலைப் பள்ளி அரங்கத்தில் நடக்கும் எழுச்சிமிகு மாநாட்டிற்கு இதையே அழைப்பாகக் கருதி வரவேண்டும் என்று வேண்டுகோள் வைப்பதுடன் இயக்கத்திற்கு ஆதரவு தந்து உற்சாகப்படுத்த வேண்டுகிறோம்.

சந்திப்போம் மார்ச் 27-இல்!

படிப்பகம்

www.padippakam.com

# உள்ளே...


| | | | |
|---|---|---|---|
| சாகித்ய அகாதமி தேசிய பெண் எழுத்தாளர் கருத்தரங்கு | ... | சிவகாமி | 3 |
| சிவகாமியின் தலித்துகளுக்கான தனி ஊராட்சி | ... | மா. வேலுசாமி | 6 |
| சாதிய அம்மாக்களின் உலகம் - கவிதை | ... | இரா. பழனிச்சாமி | 9 |
| மானிடம் - சிறுகதை | ... | அன்பாதவன் | 10 |
| தலித் தேசியம் - தொடர் | ... | கௌதம சன்னா | 13 |
| பெரம்பலூர் வட்டாரக் குறவர்கள் | ... | வை. ராமகிருஷ்ணன் | 17 |
| நிகழ் - கவிதை | ... | சத்யானந்தன் | 18 |
| வரலாறு யாரை விடுதலை செய்யும் - தொடர் | ... | அ. ராமசாமி | 19 |
| மஞ்சள் காமாலை தடுப்பூசி பற்றிய பார்வை | ... | மருத்துவர் வீ. புகழேந்தி | 23 |
| ஏகலைவனின் பூமி - கவிதை | ... | புதிய மாதவி | 25 |
| மக்கள் அறியாத அம்பேத்கர் - தொடர் | ... | குடியரசன் | 26 |
| 2004 திசம்பர் 26 - கவிதை | ... | மகாராசன் | 29 |
| போ - சிறுகதை | ... | க. கலாமோகன் | 30 |
| கவிதை | ... | தமிழ்மகன் | 33 |
| கணிதம் நம் உடைமை - தொடர் | ... | குடியரசன் | 34 |
| பஞ்சாயத்து சாதியத்தின் ஆணிவேர் | ... | சிவகாமி | 36 |
| கேள்வி - பதில் | ... | முனிமா | 43 |
| கன்னித் தீவை ஏன் கண்டுபிடிக்க இயலவில்லை - கவிதை | ... | அமிர்தம் சூர்யா | 44 |
| பகவான் புத்தர் கடவுள் அல்ல என்பதின் அரசியல் | ... | புத்தமித்திரன் | 45 |
| மாநாட்டு நிகழ்வுத் தொகுப்பு | ... | குடியரசன் | 55 |
| தொடரும் திருட்டு - கவிதை | ... | ப. வில்லியம் அந்தோனி | 58 |
| தலித்துகளும் விடுதலை இறையியலும் | ... | அ. அந்தோனி குருசு | 59 |


படிப்பகம்

www.padippakam.com

இடம் : ஐதராபாத்
நாள் : 28-30 ஜனவரி

# சாகித்ய அகாதமி தேசிய பெண் எழுத்தாளர் கருத்தரங்கு

■ சிவகாமி

துவக்க நாளில்

## 'உடல் எழுத்தும் பெண் அரசியலும்'

என்ற தலைப்பில் ஆற்றிய உரையும் - விவாதமும்

நண்பர்களே, நான் விரிவாக பேச விழைந்தாலும் இங்கு சுருக்கமாக கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் பேசுகிறேன்.

'உடல் எழுத்தும் - பெண் அரசியலும்' என்ற இந்த அரங்கு பற்றி துவக்க உரையில் கருத்துத் தெரிவித்த திருமிகு. சென் அவர்கள் உடலைப் பற்றி எழுதுதல் என்றாலே புணர்ச்சி குறித்தும் உடல் விருப்பங்களை எழுதிச் செல்லுதலும் என்ற ஒற்றை அர்த்தத்தில் புரிந்துகொண்டு விரசம், ஆபாசம் என்ற அளவிற்கு அது போய்விடக்கூடாது என்று பெண் எழுத்தாளர்களுக்கு அறிவுரை வழங்கினார். எனக்கு முன் கட்டுரை வாசித்த தெலுங்கு எழுத்தாளர் விஜயஸ்வரி உடல் எழுத்தில் உடல் x மனம் என்ற கருத்தாக்கத்தைக் குறித்து விரிவாக விவாதித்திருந்தார். ஆனாலும் உடல் எழுத்து அல்லது உடல்மொழி என்பது சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லையோ என்று தோன்றுகிறது. எனவே அதைக் குறித்து சுருக்கமாக விவாதிக்கும் அவசியமுள்ளது.

உடல்மொழி தழுவிய நான்கு முக்கியமான கருத்தாக்கங்களை முன்வைக்க விரும்புகிறேன். முதலாவது உடல் x மனம் குறித்த கருத்தாக்கம். உடல் இழிவானது. அழியக்கூடிய, நிலையில்லாத ஒன்று. ஆனால் மனம் அல்லது ஆன்மா உயரியது, நிலையானது என்ற தொன்மங்கள் உடலுக்கான முக்கியத்துவத்தைத் தவிர்த்து வந்திருக்கின்றன.

மனம் அல்லது ஆன்மா முக்கியத்துவம் வாய்ந்தது எனினும் உடல் சார்ந்தது. பகுத்தறிவு என்ற பெயரால் மனித இனம் தன்னை பிற உயிரினங்களிலிருந்து உயர்த்திக் கொண்டதைப் போலவே, மனம் எனும் பெயரால் சகமனிதர்களிலிருந்து சிலரை உயர்த்திக் கொள்ளவே இந்தக் கருத்தாக்கம் பயன்பட்டுள்ளது.

புருஷசுக்தம் இக்கருத்தாக்கத்தின் அடிப்படை. உடலை நான்கு கூறுகளாக துண்டித்து உயர்வு தாழ்வு கற்பித்து, சமுதாயப் படிநிலைகளை உருவாக்கி அவற்றை நிலைபெறச் செய்துள்ளது. மதம், சாதி இவற்றால் வலுவாக்கப்பட்ட இந்தப் பிரிவினை, மனித இனத்தின் ஒரு பிரிவினரை மோசமான முறையில் அடிமையாக்கி, தீண்டாமைக்குள் இருத்தியது. இது இந்தியாவில் மனித வளர்ச்சிக்கும், நாட்டு முன்னேற்றத்திற்கும் தடையாக உள்ளது. எனவே உடல் எழுத்து என்பது உடலின் முக்கியத்துவத்தை மீட்டு, உடலையும் மனத்தையும் அதனிசைவில் ஒன்றாகக் காண்பதையும் மனம், பகுத்தறிவு இவற்றின் பெயரால் மனித சமூகத்தின் மீது தொடுக்கப்படும் வன்முறையைக் களைவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. பெண் தன் உடல் விருப்பங்களையும் புணர்ச்சி குறித்த அனுபவங்களையும் சுதந்திரமாக முன்வைப்பதும் உடல் எழுத்தின் ஒரு கூறாக இருக்குமேயன்றி, புணர்ச்சி குறித்த எழுத்துக்கள் மட்டுமே உடல் எழுத்து/உடல் மொழி என வரையறுப்பது சரியல்ல.

உடல் x மனம் என்ற விவாதத்தின் நீட்சியாக நாம் காண்பது பெண் x ஆண் குறித்த சர்ச்சைகள். பெண் என்றாலே ஆணுக்கான உடல் என்றும், ஒட்டுமொத்த சமூகத்தின் ஆற்றல் அல்லது அறிவு வளர்ச்சி என்பது ஆண் என்றும், பெண் என்னும் உடல் ஆணின் அறிவாற்றலுக்கான உந்து சக்தி எனவும் கருதப்படுவது இதனடிப்படையிலேயே. எனவே உடல் எழுத்து என்பது பெண்ணுக்கான அதிகாரத்தை, இழந்து போன முக்கியத்துவத்தை மீட்டெடுப்பதாகும்.

பெண்ணுடல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. உடல் எழுத்து பெண் ஆணுக்குச் சமமானவளா அல்லது வித்தியாச கட்டமைப்பை உள்ளவளா, சமம் என்றால் அதை நோக்கிய அதிகாரப் பகிர்வையும், வித்தியாசமானவள் என்றால் அதை நோக்கிய அதிகாரப் பரவலையும் முன்வைக்கும். நமது ஆய்வுகள் அனைத்துமே பெண் ஆணுக்குச் சமமானவள், அதே சமயத்தில் வேறுபட்டவள் என்ற முடிவினையே தந்துள்ளன. உடல் எழுத்து பெண் அரசியலை நோக்கி நகர்கையில், ஆணுக்கும் பெண்ணுக்குமான தனிப்பட்ட கூறுகளுக்கேற்றவாறு சில சலுகைகளையும் பிற பரந்துபட்ட தளங்களில் சமமான அதிகாரத்தையும் கோரும். ஆனால் நமது பழைய இலக்கியங்களும், இன்றைய கருத்தாக்



படிப்பகம்

www.padippakam.com

கங்களும் ஆணும் பெண்ணும் முழுதும் வெவ்வேறான, சமனற்ற இயல்புகளைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஆண்மை X பெண்மை வரையறைகள் மூலம் போதிக்கின்றன. இக்கருத்தாக்கங்கள் யாவுமே ஆணின் அதிகாரத்திற்கே வழிவகுக்கின்றன. ஆண்மை, பெண்மை கருத்தாக்கம் உடலை அடிப்படையாகக் கொண்டு வரையறுக்கப்பட்டது. ஆனால் உடல் விஞ்ஞானம் இந்த ஆண்மை, பெண்மை கருத்தாக்கத்திற்கு ஒப்புதல் வழங்கவில்லை. உண்மையில் உடல் என்பதே அனுபவங்களின் தொகுப்புத்தான். நமது உடல் என்பது சமூகம், வரலாறு மற்றும் பண்பாட்டுக் கலவை. எனவே இப்போதுள்ள பெண்ணுடலை வைத்துக் கொண்டு அவள் உடல்ரீதியாக ஆணுக்குச் சமமான வளில்லை என்று கூறிவிட முடியாது. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளில் சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டுக் காரணிகளினால் மாற்றம் பெற்று வந்திருக்கிறது அவளது உடல். எனவே உடல் எழுத்து என்பது 'சமம் எனினும் வேறு' என்பதை அடிப்படையாகக் கொண்டு, பெண்ணின் மீதான ஒடுக்கு முறையை எதிர்கொள்ள வேண்டிய அவசியமுள்ளது.

அடுத்து உடல் எழுத்து என்பது அரசியல். பெண்ணை அதிகாரப்படுத்தும் அரசியல். இதைத் தான் சுசிதாரு அவர்கள் துவக்க விழாவில் "நான் பெண், எனவே பெண்ணைப் பற்றி எழுதுதல் என் இயல்பு என்று இயல்பு சார்ந்து எழுதுதலை மட்டும் 'பெண் எழுத்தாளர்' என்ற பதம் குறிப்பதில்லை. பெண் எழுத்தாளர் என்பவர் ஒரு 'அரசியல் வகையினர்' என்பதை உணரவேண்டும்" என்றார். குடும்பம் என்பதையும், திருமணம், குழந்தைப்பேறு என்பவற்றையும், நமது சொந்த விஷயமாகக் கருதி வருகிறோம். ஆனால் இன்ன சாதி இன்ன சாதிக்குள்தான் திருமணம் செய்யவேண்டும் என்றும், நாமிருவர் நமக்கொருவர் என்று குழந்தைப்பேறு குறைக்கப்படுவதும், திருமணச் சட்டம், விவாகரத்துச் சட்டம், இந்துக் குடும்பங்களுக்கு தனியான சட்டம் எனப் பலவகையிலும் நமது சொந்த விஷயங்கள் யாவுமே வெளியிலிருந்து கட்டுப் படுத்தப்படுகின்றன. பெண்கள் குழந்தைப்பேறு என்பதை அரசியலாக்கி போராட்டம் நடத்திய பின்தான், தொழிற்சாலைகளிலும் அலுவலகங்களிலும் பேறு கால சம்பளமும் விடுமுறையும் கிடைத்தன. ஆகவே உடல் எழுத்து என்பது நமது எழுத்தை பெண் அதிகாரத்திற்கான தரவுகளாக முன்வைப்பதாகும். சொந்த விஷயம் எல்லாமே சமூக விஷயங்கள்தாம் என்பது உடல் எழுத்தின் அடிப்படை.

இறுதியாக, இங்கே, இதுவரை பேசிய எந்த எழுத்தாளர்களும் கண்டுகொள்ள மறுத்த கருத்தாக்கம் - 'பன்மைத் தன்மை' என்பதாகும். சுசிதாரு அவர்கள் தமது துவக்க உரையில் 'இங்கு பழங்குடி, தலித், கிறித்துவ, இஸ்லாமியப் பெண் எழுத்தாளர்கள் வந்திருக்கக் கூடும். இவர்களையெல்லாம் வரவழைக்க சாகித்ய அகாதமி தனி முயற்சி எடுத்துக் கொண்டது பாராட்டுக்குரியது' என்றார். நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். அவ்வளவுதானா? அவ்வளவேதானா? பழங்குடி, தலித் மற்றும் சிறுபான்மையினரிலிருந்து எழுத்தாளர்கள் உருவாகி வந்திருப்பது கவனிப்புக் குரியதுதான் எனினும் அதில் சாகித்ய அகாதமியின் பங்கு என்ன? எப்போதாவது அங்கொன்றும் இங்கொன்றுமாக அவர்கள் எழுத்துகளிலிருந்து ஒரு நறுக்கை எடுத்து வெளியிட்டதைவிட என்ன செய்து விட்டது பெரிதாக? எங்களைப் பார்த்து சந்தோஷப் படுவதே போதும் என்று நாங்கள் இருந்து விட முடியுமா?

*(இவ்விடத்தில் அவையிலிருந்து சிலர் கைதட்டு கின்றனர். சிலர் ஆச்சரியப்பட்டனர். சிலர் அதிர்ந்து ஒருவரையொருவர் புறாக் புறாக் எனப் பார்த்துக் கொண்டனர். சாகித்ய அகாதமியின் செயலரும் புகழ் பெற்ற எழுத்தாளருமான சச்சிதானந்தன் எழுந்து 'நாங்கள் நிறைய செய்கிறோம், உங்களுக்கு எதுவும் தெரியாது' என்று சத்தமிட்டார். நான் அனைவரிடமும் வேண்டுகோள் வைத்தேன், 'தயவு செய்து நான் பேசிய பிறகு யாராயிருந்தாலும் கருத்துச் சொல்லுங்கள் - சச்சிதானந்தன உட்பட' என்று.)*

இன்று தேசிய அளவில் பெண் எழுத்தாளர்களுக்கான கருத்தரங்கை நடத்த சாகித்ய அகாதமி முன்வந்திருப்பது குறித்து எல்லோரும் பாராட்டுகிறார்கள். ஆனால் இதே சாகித்ய அகாதமி ஏன் தலித் எழுத்தாளர்களுக்கான தேசிய கருத்தரங்கை நடத்தவில்லை? சாகித்ய அகாதமி நடத்தும் என்பதற்காக காத்திராது, தலித்துகள் தங்கள் செலவிலேயே இணையான 'தலித் சாகித்ய அகாதமி' என்ற அமைப்பை நடத்தி வருகிறார்கள். பெண்கள் அரசியல் முக்கியம் என்று கருதும் சாகித்ய அகாதமி, தலித் அரசியலை ஒதுக்குவது ஏன்? ஏன் தலித் அரசியல் தேசிய அளவில் விவாதிக்கப் படவில்லை? *(பின்னாலிருந்து மறுபடியும் கரவொலி)*

சுசிதாரு உட்பட, நீங்களெல்லாம் பெண்களையெல்லாம் ஒரு பட்டியில் அடைத்து அவர்கள் ஒற்றுமையாக இருப்பதாக கனவு கண்டு கொண்டிருக்கிறீர்கள். பெண்கள் பல்வேறு வகைப்பட்டவர்கள். தலித் பெண்கள் சாதி இந்துப் பெண்களால் ஒடுக்கப் படுகிறார்கள்.

ஒரு தலித் பெண்ணின் வாழ்க்கையும் அதை அவள் எதிர்கொள்வதும் வேறுபட்டது. உதாரணமாக குடும்பம் சாதி இந்துப் பெண்ணுக்கு ஒடுக்கு முறையின் உச்சகட்டம்; ஆனால் தலித்துக்கோ சாதியத்தை எதிர்கொள்ளும் ஆயுதம். குழந்தைப்பேறு பிறருக்கோ சொத்துக்கான வாரிசு, தலித் பெண்ணுக்கோ உழைப்புக்கு கூடுதலான இரண்டு கைகள். இந்தப் பன்மைத் தன்மை உங்கள் எழுத்தில் வெளிப் படுகிறதா? இந்நாட்டில் பெண்ணடிமை என்பது சாதி-மதத்தால் உருவாக்கப்பட்டது என்பதை உணர்ந்தவர்கள் நீங்கள் என்றால் ஏன் உங்கள் எழுத்துக்கள் அதை வெளிக்கொணரத் தயங்குகின்றன? இங்கு வந்திருக்கும் எத்தனைப் பெண் எழுத்தாளர்கள் இதை விவாதித்திருக் கிறீர்கள்? நாமெல்லோரும் இச்சமூகத்தின் அறிவாளிகள் அல்லது அறிவாளிகள் எனக் கருதிக்கொள்பவர்கள். நாம் இங்கு வந்திருப்பது நமது அறிவைப் பிரகடனப்படுத்திக் கொண்டு பெருமை பாராட்ட மட்டுமல்ல. நமது சமூக அக்கறையை வெளிப்படுத்தவும் தான் என்பதை உணரவேண்டும். நன்றி.



படிப்பகம்

www.padippakam.com

### பின்குறிப்பு

இந்த உரைக்குப்பின் எழுத்தாளர் சென் அவர்கள் கேட்ட நீண்ட கேள்விக்கு பதிலாகக் கூறியது. "ஆமாம், எல்லோரும் சொல்கிறீர்கள் சாதி, மதம் மற்றும் பெண் என்ற எல்லைகளையும் கடந்து அனை வரும் எழுத்தாளர்களாக வரும் காலம் ஒன்று வரும் என்று. நீங்கள் குறிப்பிடுவது போல யாருக்கும் தலித் என்ற அடையாளத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற விருப்பமில்லை. இன்றும் தலித்துகளில் அறுபது சதவிகிதம் வறுமைக் கோட்டிற் குக் கீழ் வாழ்கிறார்கள். தலித் பெண்களில் எழுபது சதவிகிதம் படிப்பறிவில்லாதவர்கள். இந்நிலையில் எப்போது அந்த அடையாளம் நீங்கும் என்று நான் கேட்பதற்கு முன்னால் எப்படி அந்த அடையாளம் நீங்கும் என்பதைப் பற்றி கருத்துச் சொன்னால் நல்லது. விவாதிக்கவே தயங்கும் ஒரு விசயம் முடிவுக்கு வந்து விடும் என்று கூறுவது என்னை இம்மேடையிலிருந்து அப்புறப்படுத்த நீங்கள் காட்டும் அவசரமேயன்றி வேறொன்றுமில்லை."

பிறகு சிலர் தங்கள் எழுத்துக்களில் சாதியைப் பற்றி விவாதிக்கிறோம் என்றார்கள். அவர்களுக்கு பதிலாகக் கூறியது. "ஒரு சிலர் விதிவிலக்காக விவாதித் திருக்கக் கூடும். அந்த விவாதத்தின் தன்மை அறியாமல் என்னால் கருத்துக்கூற இயலாது. ஆனால் அம்பேத்கர் பற்றிய வாழ்க்கைக் குறிப்பை அரைகுறையாக பாடத் திட்டங்களில் வைத்துள்ளது அரசு. அவர் எழுதிய நூலை பாடத்திட்டமாக வைத்திருக்கிறதா? அப்படித் தான் சாதியைப் பற்றி மேம்போக்கான பதிவுகள் பல பெயருக்கேனும் உள்ளன. பெண்ணிய அரங்கில் சாதி விரிவாக விவாதிக்கப்படும் பொருளாக வேண்டும்."

பிறகு தெலுங்கு நவீன எழுத்தாளர்கள் குப்பிலி பத்மா மற்றும் லாலஸா ஆகியோர் தெலுங்கு தினசரிக் காக பேட்டி கண்டனர்.

'மிகவும் துணிச்சலாகப் பேசுகிறீர்கள். உங்கள் எழுத்தைப் பற்றிக் கூறுங்கள்.' - லாலஸா.

நான் "பெண் அரங்கில் பெண்ணைப் பற்றிப் பேசு வதை கடமையாகக் கொள்கிறோம். பெண் எழுத் தாளர் என்ற அடையாளத்தில் பெருமை கொள்கி றோம். அதை நாம் துணிச்சல் என்று சொல்வதில்லை. உரிமையும் கடமையும் ஆகிப்போகிறது அது. அதைப் போலவே தலித்தாகிய எனக்கு இது வாழ்வுரிமையும் கடமையும். எந்தத் தனிப்பட்ட நபரையோ அல்லது சாகித்ய அகாதமியையோ தாக்குவது என் நோக்கமல்ல. சமூக மாற்றம் வரவேண்டும். அந்த சமூக மாற்றத்திற்கு சாகித்ய அகாதமியும் பங்காற்ற வேண்டும். பெண் அரங்குக்காக லட்சக்கணக்கில் செலவு செய்து தேசிய கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்படுகிறது. சாகித்ய அகாதமியின் பணம் தலித்துகளுக்கும் போய்ச் சேர வேண்டும். இது துணிச்சல் சம்பந்தப்பட்ட விஷயமல்ல.

என் எழுத்தைப் பற்றிக் கேட்டீர்கள், எனது எழுத்து எனது அனுபவமாகத்தான் ஆரம்பித்தது. எழுதுவது என் இயல்பாகவும் இருந்தது. இப்போது

**எல்லோரும் சொல்கிறீர்கள் சாதி, மதம் மற்றும் பெண் என்ற எல்லைகளையும் கடந்து அனை வரும் எழுத்தாளர்களாக வரும் காலம் ஒன்று வரும் என்று. நீங்கள் குறிப்பிடுவது போல யாருக்கும் தலித் என்ற அடையாளத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்ற விருப்பமில்லை. விவாதிக்கவே தயங்கும் ஒரு விசயம் முடிவுக்கு வந்து விடும் என்று கூறுவது என்னை இம்மேடையிலிருந்து அப்புறப்படுத்த நீங்கள் காட்டும் அவசரமேயன்றி வேறொன்றுமில்லை**

எழுதுவது அரசியல் என்று உணர்ந்த நிலையில் எனது எழுத்துப்பணி தொடர்கிறது" என்றேன்.

சச்சிதானந்தன் அவர்கள் அரங்கு விவாதத்தால் சூடேறிப் போனதும், விரைவில் முடித்துவிட எண்ணி மேடை ஏறி "சாகித்ய அகாதமி தலித் எழுத்துக்கான அரசு ஒன்றை பீகாரில் நடத்தியது. தொடர்ந்து ராஞ்சியில் மற்றொன்று நடக்கவிருக்கின்றது" என்ற தகவலைத் தெரிவித்தார்.

கருணா என்னும் மகாராஷ்டிரா தலித் பெண் மணியும், அவரது கணவர் டாங்கேவும் என்னிடம் பேசிக்கொண்டிருக்கையில் ஒன்றைக் குறிப்பிட்டனர். சாதாரணமாக தலித்தல்லாதவர்கள் நாம் இவ்விவாதங் களைத் தொடங்குகையில் 'படித்த தலித்துகள் முன்னேறியபின் தமது சமூகத்தைத் திரும்பிப் பார்ப்ப தில்லை' என்று சொல்லக் கேட்டிருக்கிறீர்களா? என்றனர், ஆம் என்றேன் நான். இது எதற்கு தெரியுமா? நாம் பேசுவதை சகித்துக்கொள்ள முடியாமல் நம்மை அடக்க அவர்கள் கையாளும் உத்தியே அது என்றனர். இது எனக்குச் சரியெனப்பட்டது.

ஒரிசா பெண் எழுத்தாளர்கள் தலித்துகளைப் பற்றி தலித்தல்லாதவர்கள் எழுதுவது தலித் இலக்கிய மில்லையா? எனக் கேட்டனர்.

ஒன்றாக சிந்திக்கின்றோம் எனினும் எனக்காக அடுத்தவர் சாப்பிடமுடியாது. அதுதான் உடல் பற்றிய கருத்தாக்கம் என்றேன் நான்.

இறுதியில் கருத்தரங்கம் நடந்த பப்ளிக் கார் டனில் உள்ள ஜூப்ளி மண்டபத்தின் தோட்டக் காரர் ஓடி வந்து, நீங்கள் ஆங்கிலத்தில் பேசியது புரியவில்லை என்றாலும் ஏதோ புருஷ சுக்தம் பற்றிப் பேசியது காதில் விழுந்தது. தலித்துகள் தவிர வேறு யாரும் புருஷ சுக்தத்தை மேற்கோள் காட்டுவதில்லை என்று வாழ்த்துத் தெரிவித்தார்.



படிப்பகம்

www.padippakam.com



# சிவகாமியின் - தலித்துகளுக்கான தனி ஊராட்சி முன்வரைவும், உடைபடும் சாதீய கிராம கட்டமைப்பும்

■ மா. வேலுசாமி

"தலித்துகள் தொழுநோயாளிகள் என்றோ, ஒழுக்கத்தில் மோசமானவர்கள் என்றோ காரணங்கூறி, அவர்களை விலக்கி வைக்கவேண்டும் என்று ஓர் சாதி இந்து கூறமுடியாது. சாதி இந்துக்களுக்கும், தலித்துகளுக்குமிடையே உள்ள மத வேறுபாடு என்பது நிரப்ப முடியாத பெரிய இடைவெளியாக உள்ளது என்றும் சாதி இந்துக்கள் கூறமுடியாது. மேலும் தலித்துகள் சாதி இந்துக்களுடன் இணைந்து வாழ விரும்புவதில்லை என்றுகூட கூறமுடியாது. ஏனெனில் வரலாற்றில் இதுவரை தலித்துகள் கலந்து வாழ விரும்புவதில்லை என்பதற்காக சாதி இந்துக்களிடம் தண்டனைப் பெற்றதில்லை. மாறாக தலித்துகள் சாதி இந்துக்களுடன் சேர்ந்துவாழ விரும்புவதால்தான் தண்டிக்கப்படுகிறார்கள். ஆனால் தலித்துகள் வேறொரு பொருளில் மற்றவர்களிடமிருந்து தனிமையாக உள்ள வெளிப்புற மக்களாக உள்ளனர். இறுதியாக தலித்துகள் தனிமையாக இருப்பதும், பிரித்து வைக்கப்பட்டிருப்பதும் அவர்களின் விருப்பத்தினால் இல்லை..."

- அண்ணல் அம்பேத்கர்

ஏறக்குறைய 70 வருடங்களுக்கு முன்பு இந்தியாவின் கிராமங்களைப் பற்றியும், தலித்துகளின் நிலையினையும் துல்லியமாக தனக்கே உண்டான வாதத் திறமையால் கிராமம் என்பது ஒரு போலியானதும் சாதீய மேலாண்மையினை மட்டும் வளர்த்தெடுத்து, சமத்துவத்தை வேரறுக்கும் அமைப்பு என்பதையும் தெளிவுபடுத்தினார். ஆனால் அதற்குப் பிறகு ஏற்பட்ட பல்வேறு மாற்றங்கள் கிராமத்தையும், அதனுடைய அமைப்பு ரீதியான மாற்றங்களையும் கவனிக்காமல் போனது. அதற்கான காரணம் பாராளுமன்ற, சட்ட மன்ற அமைப்புகளின் மீதான அதீத நம்பிக்கையும், புதுத்தெம்பும். ஆனால் நடந்தவைகள் நம்பிக்கையினையும் எதிர்பார்ப்பையும் தகர்த்தது. இச்சூழலில் உருவானதுதான் பஞ்சாயத்து அமைப்பும் உள்ளாட்சி மன்றங்களும். ஜனநாயகப் பரவலின் இறுதி நம்பிக்கையாக கருதப்படும் இந்த ஊராட்சி அமைப்புகள் ஒரு நிர்வாக அமைப்பு மட்டுமல்லாமல் அதிகாரத்தையும், செயல்பாட்டையும் நேரிடையாக கிராம அளவில் கொண்டு செல்வதால் மிகவும் சக்திவாய்ந்ததாக கருதப் படுகிறது.

பல்வேறு மாற்றங்களைத் தாங்கி இன்று இந்திய அரசியலமைப்பின் 73-ஆவது சாசனத்தின் விதிகளின் படி புதுப்பொலிவுடன் புதிய பஞ்சாயத்து (அ) ஊராட்சி அமைப்புகள் இந்த அடித்தள மக்களுக்கு ஜனநாயகப் பரவலை வலியுறுத்துகின்றது. அதாவது மாநில சுயாட்சி போலவே கிராமங்களுக்கும் சுயாட்சி அதிகாரம் அளிக்கவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆக கிராமங்களுக்கான நிர்வாக அமைப்பாகக் கொள்ளாமல் அதில் உள்ள மக்களின் நலனையும் அவர்களது வளர்ச்சியினையும் உறுதிப்படுத்துவதற்கான அமைப்புகள் என்று பஞ்சாயத்து ராஜ் அமைப்பு கூறுகிறது. ஆனால் தலித்துகள், நலிந்தோர் மற்றும் பிற்படுத்தப் பட்டோர் அதிகமாக வாழும் கிராமங்களே தமிழ் நாட்டில் அதிகமாக உள்ள நிலையில் பாராளுமன்ற, சட்டமன்றங்களுக்கு கொடுக்கப்படுகிற அதிக முக்கியத்துவம் கிராம அளவில் சுதந்திரமும், சமத்துவமும் பெற்றுத் தரக்கூடிய ஊராட்சி அமைப்புகளுக்கு தருவதில்லை என்பதே நிதர்சன உண்மை.

இச்சூழலில் இன்றைய தலித் அமைப்புகளும், அரசியல் கட்சிகளும், தலித்துகளின் நலனுக்காக உழைத்துக்கொண்டிருப்பவர்களும் 'தலித் வாழ்விடங்களை தனி ஊராட்சி' ஆக அறிவிக்க வேண்டிய போராட்டங்களும், கருத்தரங்குகளும் அறிக்கைகளும் தமிழகம் முழுவதும் செய்து கொண்டிருப்பதற்கு வேராகவும், கருத்தியல் தளமாகவும் புதிய கோடாங்கி மாத இதழ் அமைந்துள்ளது. 'தலித்துகளுக்கான தனி ஊராட்சி முன்வரைவு' - 'அப்னா பஞ்சா யத்து' என்ற ஆய்வுக்கட்டுரை எழுத்தாளரும், சமூகச் சிந்தனையாளருமான சிவகாமி அவர்களால் கருத்துருவாக்கம் பெற்று, புதிய கோடாங்கியின் மார்ச் 2004 (பக். 6-15) இதழில் வெளியானது. அதைத் தொடர்ந்து கருத்தரங்குகள், கிராம முகாம்கள், பல்கலைக்கழக ஆய்வரங்குகள், பொது நிகழ்வுகள் நடத்தப்பட்டு மத்திய, மாநில அமைச்சர்களிடமும் இம்முன்வரைவின் நியாயங்கள்



படிப்பகம்

www.padippakam.com

எடுத்து விளக்கப்பட்டது. இவற்றையெல்லாம் புதிய கோடாங்கி இடைவிடாமல் செய்ததன் விளைவாக இன்று தலித்துகளுக்கான தனி ஊராட்சியின் தேவை பற்றி தலித் அமைப்புகளுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் புரிதல் ஏற்பட்டு இருக்கிறது என்பதே உண்மை. இன்று தனி ஊராட்சி தலித்துகளுக்கு அவசியம் என்றுணர்ந்து புதிய கோடாங்கியின் கருத்துக்களை உற்றுநோக்கும் ஆர்வலர்களுக்கும், சிந்தனையாளர்களுக்கும் சிவகாமியின் 'தலித்துகளுக்கான தனி ஊராட்சி' முன்வரைவின் நியாயங்களை இக்கட்டுரை வலிமைப்படுத்துகிறது. ஏனெனில் கிராம அளவிலான சமூக, பொருளாதார, கலாச்சார மாற்றங்களை கவலைப்படாமல் சமூக சீர்திருத்தங்களையும், மாற்றங்களையும் ஏற்படுத்திவிட முடியாது என்ற எழுத்தாளர் சிவகாமியின் சிந்தனைக்கு செயல்வடிவம் தருவதுடன் அதை மக்களிடம் கொண்டு சேர்ப்பது தலித்துகளுக்காக சிந்திப்பவர்கள், செயல்படுபவர்களின் தலையாய கடமையாகும்.

**1. கிராமங்களின் வரலாறும் சாதீய மேலாண்மையும்**

நமது கிராமங்களின் வரலாறு என்ன? என்ற கேள்வியை எழுப்பி அதற்கான விளக்கத்தைத் தேடும் ஒவ்வொரு தலித்துக்கும் பல்வேறு உட்கேள்விகள் ஏற்படுவது கட்டாயம். ஏனெனில் அவர்களது இருப்பின் சூழல் அவர்களை அத்தனை கேள்விகளுக்கு இட்டுச் செல்லுகின்றது. அவை, கிராமங்கள் யாரால் யாருக்காக உருவாக்கப்பட்டது? கிராம கட்டமைப்பினை உருவாக்கியவன் யார், அதனால் யாருக்கு நன்மை? மன்னராட்சி, ஜமீன்களின் ஆட்சி, அந்நியரின் ஆட்சி, பிறகு மக்களாட்சியினைக் கண்ட பிறகும் இன்னும் கிராம அமைப்பு மாறாதது ஏன்? கிராமங்களையும் அதன் அமைவு தத்துவங்களையும் தகர்க்கப் போவது யார்? மக்களாட்சியின் அனைத்து வளங்களையும் தங்களுக்கு சாதகமாக மாற்றிக்கொள்ளவும் சுதந்திர நீரோட்டம் பாயும் வண்ணம் தங்களது வாழ்விடங்களை அமைத்துக் கொண்டவர்கள் தலித்துகளை அதன் எல்லைக்கு அப்பால் வைத்திருப்பது ஏன்? இவற்றுக்கெல்லாம் காரணமான கிராமங்களின் வரலாற்றில் சாதீய மேலாண்மையின் கட்டமைப்பு இறுகியிருப்பது யாராலும் (தலித்துகளைத் தவிர) உணரவோ அறியவோ முடியாததென்பது உண்மை.

இச்சூழலில் சாதீய மேலாண்மையினால் கிராம வளர்ச்சித் திட்டங்களும், சமத்துவ கண்ணோட்டமும் மாறுபடுகிறது. இன்றைய கிராம அமைவு வளர்ச்சி நீரோட்டம் சமநிலையில் பாய்கின்ற அளவில் சமன் படுத்தப்படவில்லை. அவை வரலாறு தொட்டு சில குறிப்பிட்டவர்களை சென்றடையும் வகையில் தாழ்வாகவும், சில குறிப்பிட்டவர்களை சென்றடையாமல் மேட்டுப்பகுதியாகவும் இருப்பதாலேயே சமநிலை வளர்ச்சியினை 53 வருட கால பல்வேறு சிறப்புத் திட்டங்களினால் வென்றெடுக்க முடியவில்லை. இதைப் புரிந்துக் கொள்ளாதது ஆட்சியாளர்களின், அரசியல்வாதிகளின் தவறு இல்லை. ஆனால் இனியும் புரிந்து கொள்ளப் போவது இல்லை என்பதே இன்றைய தலித்துகளின் நிலை என்ற புரிதலில் தனி ஊராட்சி தலித்துகளின் உரிமையாக கொள்ளப்பட வேண்டும். அவர்களுக்கான வளர்ச்சிக்கான வாய்ப்புகள் வலியுறுத்தப்பட வேண்டும். அது அவர்களுக்காக வேடமேற்று நடிப்பவர்களால் சாத்தியமில்லை என்பதும், அது அவர்களாலேயே (தலித்துகளினால்) முடியுமென்பதும் தனி ஊராட்சித் தத்துவம்.

மேலும் தமிழக புள்ளி விவரங்களைக் காணும் போது தலித்துகள் ஏறக்குறைய ஆறு கோடியில், இரண்டு கோடி மக்களாக இருக்கின்றனர். ஆனால் வேலைவாய்ப்பில், நிலவுடைமையில், அரசியல் வாதிகளில் மற்றும் முக்கிய பொறுப்புகளில் அவர்களின் பெரும்பான்மை மக்கள்தொகைக் கேற்றவாறு இல்லை என்பதே பெரும் அச்சத்தை ஏற்படுத்துகிறது. தலித்துகள் வேறு எங்குதான் இருக்கிறார்கள் எனில் விவசாயக் கூலிகளாக அறுபது சதவிகிதத்தினர் உள்ளனர். போதுமான வருமானமும், வாழ்வியல் ஆதாரங்களும், சமூக உரிமைகளும் கிடைக்கப்பெறாத கிராம அமைப்பில் தினம், தினம் நசுக்கப்படுகிறார்கள். சாதீய கிராம கட்டமைப்பில் முன்னேற்றச் சிந்தனை மழுங்கடிக்கப்பட்டு மாதம் 200 ரூபாய் வருமானமே பெரிதென மண்டியிட்டுக் கிடக்கிறார்கள் என்பதே நிதர்சன உண்மை.

இந்நிலையில் யாருக்காக உருவாக்கப்பட்டது இந்த கிராமங்கள் என்று கூர்ந்து கவனிக்கும்போது, சாதியில் உயர்ந்தவர்களாக கருதப்படுபவர்களின் கையில் நிலவுடைமையும், அவர்களால் தானமாக அளிக்கப்பட்ட பொதுச்சொத்துக்கள் அவர்களது முயற்சியால் நிறுவப்பட்ட மதம், கல்வி, அதிகார அமைப்புகள் ஆகியன இன்றுவரை கிராம அளவில் சாதியில் உயர்ந்தவர்களாக, சொத்துக்களில் உயர்ந்தவர்களாக இருக்கும் ஒரு சிலரிடமே அரசின் அதிகாரம் குவியப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களின் ஆட்சியே ஊராட்சியாகவும், கிராமத்தின் ஆட்சியாகவும் இருந்து வந்திருக்கின்றனது. அதே தருணத்தில் அந்த கிராம எல்லைக்குள் அடிமைகளாகவும், பண்ணைத் தொழிலாளிகளாகவும் பெருந்திரளாக இருந்த உழைக்கும் மக்கள், மேற்கண்ட எந்தவொரு பின்னணியும் இல்லாத காரணத்தினால் இன்றுவரை பண்ணைத் தொழிலாளிகளாகவே இருக்கவேண்டிய கட்டாயம் ஏற்படுத்தப்பட்டது.

தங்களது வளங்களையும் வாழ்க்கையினையும் மேம்படுத்திக்கொள்ள மட்டுமே கிராம அமைப்பினை தோற்றுவித்து, அதற்காக பண்ணைத் தொழிலாளர் சமூகங்களை தோற்றுவித்து, தங்களுக்குள் அவர்களை கட்டுப்படுத்தும் அதிகாரத்தை மாற்றிக்கொண்டிருக்கும் நிலவுடைமையாளர்களே இன்று கிராமத்தை தனது கைக்குள் வைத்திருக்கிறார்கள். அதே நேரத்தில் தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டபின் இந்த நிலவுடைமையாளர்களே அந்த தொழிற்சாலைகளுக்கும் முதலாளிகளாக மாறிக்கொண்டனர்.

அதன்பிறகு ஏற்பட்ட எந்தவித அரசியல் ஆட்சி மாற்றங்களும் இந்தக் கட்டமைப்பை உடைத்ததாக உணரமுடியவில்லை. பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்



படிப்பகம்

www.padippakam.com

டாலும் இனம், மதம், மொழி, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை சரிசெய்வதை முன்னிறுத்தி தொடர்ந்த எந்த புரட்சியும் கிராமத்திலுள்ள சாதீய மேலாண் மையை கட்டவிழ்க்கவோ, மாற்றியமைக்கவோ துணிந்து முன்வரவில்லை. ஆனால் இவையனைத் தையும் உள்ளடக்கி சலனமற்றுக் கிடக்கும் கிராமங் களின் சாதீய மேலாண்மையே இதற்கு முக்கிய காரணம். இதிலிருந்து நாம் புரிந்துக் கொள்ள வேண்டிய முக்கியச் செய்தி - தேன் எடுப்பவனுக்கு தேனின் அளவே முக்கியம், தேனீக்களின் வாழ்க்கை இல்லை.

சாதீயம் ஒழிய வேண்டும், சமத்துவம் நிலவ வேண்டும் என்றெல்லாம் லாட்டரிச் சீட்டு வியாபாரிகள் போன்று கூச்சலிட்டுக் கொண்டிருப்பவர்களின் கூப்பாடு அனைத்தும் போலியானது என்றுணர்ந்து இறுதி நம்பிக்கையாக சிவகாமியின் தனி ஊராட்சி முன்வரைவு தலித்துகளுக்காக ஆவணப்படுத்தப் படுகிறது. முன்வரைவின் சிறப்பம்சங்கள் சிலவற்றைக் காண்போம்.

1. சாதி இந்துக்களின் நலனுக்காகவே உருவாக் கப்பட்ட கிராமக் கட்டமைப்பில் தலித்துகளின் நலன் கள் புறக்கணிக்கப்பட்டே வருகின்றது. எனவே சமூக வேற்றுமைகளை அவரவர் வாழ்விடங்களும், சமூக அந்தஸ்துகளுமே நிர்ணயிப்பதால் எதிர்காலத்தில் கூட கிராம அளவிலான சாதீய மேலாண்மை அழியப் போவதில்லை.

2. சாதியினை பின்பற்றி, அதன்மூலம் கௌரவம் கொள்ளும் சாதி இந்துக்கள் ஒரு பக்கம்; சாதியினால் அவமானங்களையும் அடக்குமுறைகளையும் சந்தித்து சாதியினை பின்பற்றுவதை எதிர்க்கும் தலித்துகள் மறுபக்கம். இருவேறு கருத்துடைய இவர்களும், இருவேறுபட்ட புவியியல் அமைப்புடன் வாழ்ந்து வரும் யதார்த்த சூழலை மறுத்து இருவரையும் ஒன்றுபட்ட மக்களாக சித்தரிப்பதுவே ஒரு போலி யானது. இதில் இவர்களின் ஒற்றுமை என்பதே தலித்து கள் மீது திணிக்கப்படும் அதி தீவிர அடக்குமுறை யெனக் கூட கூறலாம்.

3. தலித்துகள் பெரும்பாலும் கிராமத்தில்தான் வசிக்கின்றனர். நிலமற்ற தினக்கூலிகளாகவும், விவ சாயத் தொழிலாளர்களாகவுமே வாழ்ந்து வருகின் றனர். எனவே அவர்கள் மக்கள் தொகையில் அதிகளவு இருப்பினும், சாதி இந்துக்களின் நிலங்களையினையே நம்பியிருக்க வேண்டிய கட்டாயத்தினால் தங்களுக் கான கிராமத்தை உருவாக்க இயலவில்லை. ஆனால் தங்களது தலைவர்களின் பெயரை வைத்து மகிழ்ந்து கொள்வதைக் காணமுடிகிறது.

4. சாதீய அமைப்பின் அடக்குமுறைகளையும் அதன் பயனால் விளைந்த சொத்து குவிப்பு மற்றும் அதிகாரங்களையும் தங்களின் வசப்படுத்திக் கொண்ட தால் கிராமங்களின் சாதீய மேலாண்மை உடைய வாய்ப்பை இல்லையென்றாகிவிட்டது.

5. உதாரணமாக தமிழகத்தில் 74-க்கும் மேற்பட்ட தலித் குழுக்கள் இருப்பினும் பறையர்கள் தனிப்பெரும் திரளாகவும், பள்ளர்கள் அதனையடுத்து அதிக எண் ணிக்கையுடனும் இருப்பதுடன், மூன்றாவதாக சக்கிலி யர் குறிப்பிடத்தக்கவர்களாக இருக்கின்றனர். இம் மூன்று குழுக்களையும் அவரவர் வாழ்விடங்களுக்கும், மக்கள் தொகைக்கும் ஏற்றவாறு பஞ்சாயத்துகள் நிறுவப்பட்டுள்ளதைக் கூர்ந்து நோக்கும்போது அறிய முடிகிறது. நிலவுடைமையாளர்கள், சாதீய மேலாண்மை யுள்ளவர்களின் செல்வாக்கால் கூட இப்படி நிகழ்ந் திருக்கலாம் என சந்தேகம் கொள்ளச் செய்கிறது.

அ) பறையர் அதிகமாக வாழும் மாவட்டங்கள், அவர்கள் தனிப்பெரும்பான்மையாக உள்ளதனால் அதிக கிராம பஞ்சாயத்துக்களாக அமைக்கப்பட்டி ருப்பதைக் காணமுடியும்.

| மாவட்டங்கள் | கிராம பஞ்சாயத்து | அரசால் தலித்துகளுக்கு அளிக்கப்பட்டது |
|---|---|---|
| காஞ்சிபுரம் | 648 | 152 |
| திருவள்ளூர் | 539 | 107 |
| கடலூர் | 681 | 147 |
| விழுப்புரம் | 1104 | 201 |
| வேலூர் | 751 | 105 |
| திருவண்ணாமலை | 860 | 121 |
| தருமபுரி | 588 | 48 |
| தஞ்சாவூர் | 589 | 79 |

ஆ) பள்ளர்கள் அதிகமாக வாழும் மாவட்டங் கள், அவர்கள் தலித்துகளில் இரண்டாவது பெரும் பான்மையாக உள்ளதனால் 400 பஞ்சாயத்துக்களுக்கு மேல்கொண்டிருப்பதைக் காணமுடியும்.

| மாவட்டங்கள் | கிராம பஞ்சாயத்து | அரசால் தலித்துகளுக்கு அளிக்கப்பட்டது |
|---|---|---|
| திருச்சிராப்பள்ளி | 408 | 46 |
| புதுக்கோட்டை | 498 | 52 |
| நாகப்பட்டினம் | 434 | 96 |
| திருவாரூர் | 430 | 94 |
| மதுரை | 431 | 47 |
| ராமநாதபுரம் | 429 | 59 |
| விருதுநகர் | 450 | 62 |
| சிவகங்கை | 445 | 49 |
| திருநெல்வேலி | 425 | 49 |
| தூத்துக்குடி | 408 | 56 |

இ) சக்கிலியர் என்றழைக்கப்படும் தலித் குழுக்கள் வாழும் மாவட்டங்கள் மூன்றாவது பெரிய எண்ணிக் கையுடன் இருப்பதால் அவர்கள் 300 பஞ்சாயத்துக் களாக தொகுக்கப்பட்டுள்ளனர்.

| மாவட்டங்கள் | கிராம பஞ்சாயத்து | அரசால் தலித்துகளுக்கு அளிக்கப்பட்டது |
|---|---|---|
| சேலம் | 385 | 36 |
| ஈரோடு | 331 | 35 |
| நாமக்கல் | 343 | 43 |
| கோயம்புத்தூர் | 389 | 45 |
| கரூர் | 158 | 19 |
| தேனி | 130 | 15 |
| திண்டுக்கல் | 306 | 35 |



படிப்பகம்

www.padippakam.com

மேற்கண்ட தெளிவான புள்ளி விவரத்தில் இருந்து நாமறிந்து கொள்ள வேண்டியது, இவை வேண்டுமென்றே திட்டமிட்டு ஆளப்படுபவர்களுக்கான கிராம அமைப்பை உருவாக்கியதுடன் அதனை நிரந்தரப்படுத்தும் முயற்சியாக இன்றைய கிராம பஞ்சாயத்து அமைப்பு உள்ளது. பல்வேறு முரண்களைத் தாங்கிய பல சமூக குழுக்களை ஒன்றிணைத்து அதற்கு கிராம சுயாட்சி என்றால் சாதிய மேலாண்மைக்கு துணைபோவதாகவே அறிய முடியுமே தவிர சமத்துவத்தை நிலைநாட்டும் அமைப்பாக கருதமுடியாது.

எனவே தனி ஊராட்சிகளே தலித் விடுதலைக்கான கௌரவ முயற்சியாகக் கொண்டு கீழ்வரும் நடுநிலையான கடமைகளை மனங்கொள்வதும், தலித் மக்களுக்கான வரலாற்றை மீட்டெடுக்கும் முயற்சியாகவும் கொள்வோம்.

1. பஞ்சாயத்து அமைப்புச் சட்டத்தின் சரத்துகள் கூறுவது போல 500-க்கும் மேற்பட்ட தலித் மக்கள் தொகை உள்ள கிராமங்களை தனி ஊராட்சியாகவும், குறைவாக உள்ள கிராமங்களை அறிவிக்கப்பட்ட தலித் தனி ஊராட்சியுடன் இணைப்பதற்கான முயற்சியினை மேற்கொள்ள அரசை நிர்ப்பந்தப்படுத்துதல் வேண்டும்.

2. எதிர்வரும் பஞ்சாயத்து (அ) ஊராட்சித் தேர்தலுக்கு முன் அனைத்து தலித்துகளும் தங்களுக்கான தனி ஊராட்சியின் பயனை அறிய வைப்பதுடன் அதற்கான பணிகளைச் செய்தல்.

3. வோட்டு சீட்டுக்களையே, வேட்டுச் சீட்டுக்களாக மாற்றி புதிய கிராமங்களை நிறுவி தலித்துகளுக்கான தனி ஊராட்சி தர மறுக்கின்ற, சாதீய மேலாண்மையை தூக்கி நிறுத்தும் சக்திகளை வேரறுப்போம்.

இறுதியாக அதிகாரமும், அரசியலும் வலிமையுள்ளவனை மேலும் வலிமையுள்ளவனாக்கி வலிமையற்றவனின் கைகளுக்கு எட்டாக்கனியாகி, அவனை நிரந்தரமான வலிமையற்றவனாகவே மாற்றிவிடும் கொடும் தன்மை ஜனநாயக அமைப்பில் உள்ளது. அதே தருணத்தில் வாய்ப்புகளும், போட்டிகளும் கிடைக்கச் செய்து வெற்றியை நிர்ணயிப்பதே ஜனநாயகத்தின் சிறப்பியல்புகளில் ஒன்று. அதே கொள்கை தான் சேரியினுள் சிக்கி வலிமையற்றவனாய் இருக்கும் தலித்துகளுக்கான ஒரே இறுதி நம்பிக்கை 'தனி ஊராட்சியே' என்பதே எழுத்தாளர் சிவகாமியின் சபதம். இந்தியாவின் ஜனநாயகம் உண்மையானது என்று நம்ப வேண்டுமெனில் சேரிகள் - ஊராட்சிகளாக மாறுவதில்தான் உள்ளது.

உருவாக்குவோம் தலித்துகளுக்கான தனி ஊராட்சியை!

●

# சாதிய 'அம்மா'க்களின் உலகம்

■ இரா. பழனிச்சாமி

○ மதப் போர்வைக்குள்
மகுடம் பேசிய மனிதர்கள்
சாதியின் பெயருக்குள்ளாக
சதிராட்டம் ஆடியவர்கள்
ஒரே குட்டையில்
மட்டைகளாக ஊறியவர்கள்
மனிதத்தை மறந்து
மனுவின் நீதியை நேசித்தவர்கள்
அதிகாரத் திமிருக்காக
அணி கோர்த்தவர்கள்
அரசு அமைத்தவுடன்
இராஜ குருவாக பவனிவந்தவர்கள் / வரவைத்தவர்கள்
எதிரெதிர் துருவங்களாய் ஆனதுகூட
அதிகாரத் தேரின் வடம் பிடிக்கத்தான்...

○ ஐயாயிரம் கோடிச் சொத்து
ஆண்டியும் அரசனாவான்
சொன்னது பொய்யில்லை!
காவிக்குள் மறைத்த சொத்தை
சேலைக்குள் தேடும் மர்மம் என்ன?...

○ சட்டத்தின் முன் அனைவரும் சமமெனில்
தலித் மருத்துவருக்கு ஏற்பட்ட பாலியல் கொடுமைக்கு
விசாரணையும் தண்டனையும் ஏனில்லை?
சுப்ரமணியனின் பெண் தொடர்பைக் கிளறுபவர்கள்
தளவாயின் மீதான புகாருக்கு தாழ்ப்பாள் இடும் மர்மம் என்ன?

○ அதிகாரக் கட்டமைப்பின்
கட்டுமானப் பொருள் கூட
அந்தணனாகவே இருக்கவேண்டும் - எனும்
அதிகாரச் செருக்குதானே...

○ அதிகாரச் சிதைவுக்குக் கூட
அரிசனன் காரணமாய் இருக்கக்கூடாது
எனும் அதிகார வேட்கைதானே
தலித்துகளின் குரலை
தகாததாகப் பார்க்க வைப்பது...

○ பேய்கள் அரசாண்டால்
சாஸ்திரத்தை மட்டுமல்ல
சட்டத்தையும் தின்னும்
அதிகார வர்க்கப் பிணங்கள்...

○ அதிகாரக் கட்டமைவுக்கு
பாலியல் சுரண்டலைக்கூட
சாதிய ஏற்றத்தாழ்வுடன்தான்
படிக்கல்லாக ஆக்கப் பார்க்குமோ
சாதனை பேசும் 'அம்மா'க்களின் உலகம்...!


படிப்பகம்

www.padippakam.com

# மானிடம்

■ அன்பாதவன்

"டேய் பழனிவேலு, இங்க ஓடியாயேன்... சீக்கிரமா ஓடியாயேன்"

"ஏம்மாமா கத்துற... இன்னா தான் அங்க அதிசயத்த மறச்சி வச்சிருக்கற"

"டேய்... பேசிகிட்டேயிருக் காதடா...சீக்கிரமா ஓடியாடான்னா..."

"தோ வந்துட்டேன்... இன்னா விசியம் சொல்லு"

"டேய் மச்சான்... சொன்னா நம்ப மாட்டே... நீயே பாரு இந்த அதிசயத்த... நம்ம கெணத்துக்குள்ள ஒரு மானு வுலுந்து கெடக்குதடா..."

"இன்னாது மானா... ஏம்மாமா மொதல்லியே சொல்லக்கூடாது... இரு கெணத்துல பாக்குறன்... நீ சும்மாவாச்சும் கூட சொல்லு வியே... அட... ஆமா... மாமாய்... பாவம் மாமா... அது மூஞ்சப் பாரேன்... பரிதாபமா இல்ல..."

தண்ணீருக்குள் ஒரு புள்ளி மான் தத்தளித்துக் கொண்டிருந் தது.

"ஆமாண்டா மாப்ளே... வாயில்லா ஜீவன் எப்படி கஷ்டப் படுது பாரு..."

கிணற்று நீரில் மூழ்குவதும் எழுவதும் நீந்துவதுமாய் இருந்த அது ஒரு பெண் மான். தங்க மஞ்சள் உடலில் கருப்பும் பழுப்பும் வெண்மையும் கலந்த புள்ளிகள் மிகுந்த அழகை கொடுத்துக் கொண்டிருந்தன. தண்ணீரில் பட்ட தால் தோல் மினுமினுத்துக் கொண் டிருக்க பெண் மானின் முகத்தில் மட்டும் வாட்டம், உயிருக்குப் போராடும் அவலம், கண்களில் மரண பயம் தெரியும் மிரட்சி, அந்நிய இடத்தில் வந்து மாட்டிக் கொண்ட அச்சம் என பல்வேறு உணர்வுகளோடு தத்தளித்துக் கொண்டிருந்தது மான்.

"எப்படி மாமா இங்க வந்து நம்ம கெணத்துல வுழுந்துருக்கும்."

"உளுந்தூர்பேட்டை காட்டுக்குள்ளேயிருந்து மேச்ச லுக்கு வந்திருக்கும்டா... அப்படியே கழனி வேலி வழியா வந்ததுல வழி தப்பி இருட்ல இங்க வந்து தடுமாறி கெணத்துல வுழுந்துருக்கும்."

"ஆச்சரியந்தான் மாமா... உளுந்தூர்பேட்டை எங்கே இருக்கு... இருவேல்பட்டு எங்கிருக்கு... எம் மாந்தூரத்திலே இருந்து இங்க வந்துருக்கு பாரேன்... மண்ணாங் கட்டி மாமோய்... சொல்றேன்னு கோச்சுக்காத... நம்ம கெணத்துக்கு கரை செவுறு கட்டிவை... தரைக் கெணரா இருக்கிறது எப்பவும் ஆபத்துதான். இதோ பாரு, ஒரு உசுரு அல்லாடுது. ஏதோ இந்தவாட்டி மானு வுழுந்துரிச்சி. இதே மனுசனா இருந்தா வுழுந்தவன் கதி இன் னான்னு நெனச்சிப் பாரு."

"போடாங்... புத்தி சொல்ல வந்துட்டான்... போய் மோட்டாரு கொட்டாவுள்ள கயிறு இருக்கும் எடுத்துட்டு வா... எப்படியாவது இந்த வாயில்லா ஜீவன காப்பாத்தப் பாப்போம்."

"கயிறு மட்டும் போதுமா, பாதாளக் கரண்டியும் வேணுமா..."

"கயிறு மட்டும் போதும்... பெரிய தாம்புக்கயிறு சுத்தி வச்சிரப்பன் பாரு... எடுத்துக்கிட்டு ஓடியா..."

தரையோடு இருக்கும் பெரிய கிணறு அது. படிகள் இல்லாத கிணற்றில் பம்பு செட்டுக்காக இறக்கப்பட்ட பெரிய குழாய் களுக்கு பாதகம் இல்லாமல் மானை எப்படி வெளியே கொண்டுவருவ தென யோசிக்க ஆரம்பித்த மண் ணாங்கட்டியை உசுப்பியது பழனி வேலுவின் குரல்.

"இந்தா மாமா கயிறு..."

"ஏன்டா மாப்ள... கயிறு சுருக்குல மானு மாட்டுமாடா..."

"ஏம் மாமா சந்தேகப் படற... நிச்சயமா மாட்டும் மாமா"

கயிறினில் சுருக்கு மாட்டி கிணற்றுக்குள் விட, மான் கயிற்றை முகர்ந்து பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டது.

"இன்னாடாது- கயிற சீண்டவே மாட்டன்து. இன்னா பண்ணலாம் இப்போ..."

"மாமா... நான் தண்ணில குதிச்சி அத கயிறோடு கட்டி போட் டுடட்டா"

"வேணாம் சாமி வேணாம்... அப்புறம் உனக்கு எதுனான்னா உங்க அப்பன் ஆத்தாளுக்கு நான் பதில் சொல்ல முடியாது."

"ஏம்மாமா, நான் வேணும்னா போய் ஊர்க்காரங்க நாலஞ்சு பேர கூட்டிக்கினு வரவா?"

"அய்யோ வேணான்டா... கத்தி களேபரம் கட்டிடுவானுங்க... கல் லால கில்லால அடிச்சி மோட் டாரை பைப்பை எல்லாம் வீணாக் கிடுவானுவ... எவனையும் எதுவும் சொல்ல முடியாது... கேக்கவும் முடியாது."

"மாமனும் மச்சானும் கெணத் துக்குள்ள இன்னாத்த தேடிக்கினு இருக்கிறீங்க... எதுனா பொதையல் கிதையல் மாட்டிக்கிச்சா..."

புதுக்குரல் கேட்டு திரும்பிப் பார்த்தார்கள். ஆலங்குப்பம் நொண்டிச் சாமியார்தான் வந்து கொண்டிருந்தார்.

"அய்யய்யோ.... வந்துடுத்துடா வென... சாமியாரு கண்ல பட்டா அவ்ளோதான்... ஒல வாய மூட லாம்... இவ்ரு வாய மூட முடியாத..."

"டேய் சும்மா இர்ரா... வாய வெச்சிகிட்டு... வாங்க சாமியார... இன்னா இவ்ளோ தூரம்"

"ஒன்னுமில்ல மண்ணாங் கட்டி... வெர மல்லாட்ட வாங்க விருதாஜலம் போலாமான்னு கேக்க வூட்டுக்கு போயிருந்தன். பாப்பா தான் நீ கொல்லீல இருக்குறன்னு சொல்லிச்சி... சர்தான்னு இங்கேயே வந்துட்டன்."

"அதுக்கென்னா? எப்ப வேணா போலாம் சாமியார..."


படிப்பகம்

www.padippakam.com

"அதுசரி... இன்னாதான் கெணத்துல நோண்டிக்கினு இருக்குறீங்க... அட மானு!... யோவ் மண்ணாங்கட்டி, அதுஷ்டக்காரன்யா நீ... மான் கறி துன்னு எவ்வோளா நாளாச்சு தெரியுமா? நல்ல எள மானா இருக்கும்போல."

"இன்னா சாமியார... இன்னா பேச்சு பேசுற நீ... பட்டையும், கொட்டையும் போட்டுகினு பெரிய மனுசன் பேசுற பேச்சா இது"

கிணற்றுக்குள் இருந்த மான் ஒருமாதிரி அலறி சப்தமிட்டது.

"டேய் பழனிவேலு... அப்படி இன்னா நான் தப்பா கேட்டுட்டன். மான் கறி துன்றது தப்பா..."

"மான் கறி துன்றது தப்பில்ல... நீ வேட்டைக்கு போய் புடுச்சித் துன்னு... தப்பில்ல. வழி தவறி கெணத்துக்குள்ள வுலுந்து ஒரு ஜீவன் உயிருக்கு போராடிகினு இருக்குது, அத காப்பாத்த வழி சொல்லாம அடிச்சி சாப்புடணும்னு சொல்றியே... அததான் சாமியார தப்புன்னு சொல்றேன்"

"யப்பா பெரிய மனுசா... அந்த பரமசிவனே மான் தோலத்தான் இடுப்புல கட்டிகிட்டு இருக்காரு தெரியும்ல... கண்ணப்ப நயினாரு கடவுளுக்கு படச்சது இன்னா... மான் கறிதான் தெரிஞ்சுக்க."

"நமக்கு வேணும்னா எதையும் சாதகமா பேச முடியுதுல்ல. சாமியார... பயங்கரமான ஆளு தெரிமா நீ"

"பெரிய பேச்சல்லாம் வேணாம் பழனிவேலு... இன்னா மண்ணாங்கட்டி... சின்னப் பையன பேசவுட்டுட்டு பாத்துகினு இருக்குற..."

"கோச்சுக்காத சாமியார... எள வட்டம்தான... அதான்... ஆனா அதுக்காக நீ கேட்டதும் தப்பு தான... டேய் பழனிவேலு, ஒன்னு செய். நேரா சைக்கிள எடுத்துகினு ஓடு... அரசூர் பேங்குல நம்ம தொர சாமி மேனேஜர் இருப்பாரு... அவருகிட்ட வெவரத்த சொல்லு... இன்னா செய்யலான்னு கேட்டு கிட்டு வா..."

"தோ ஓடியாரன் மாமா..." பழனிவேல் ஓடினான்.

"சாமியார... வறப்புல இருக்குற புல்ல கொஞ்சம் அரிஞ்சி கொடேன். மானுக்கு தீனி குடுக்கலாம்."

"யோவ்... மான எனக்கு தீனியா கேட்டா, மானுக்கு என்ன தீனி குடுக்க சொல்றியா? கில்லாடியா நீ... எங்க இருக்கு அருவா. கொட்டாயிலதான" என்றபடியே சாமியார் உள்ளே போனார்.

கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தார் மண்ணாங்கட்டி. கிணற்றுக்குள் இருந்த மானோ உடல் தளர்ந்து பரிதாபமாக இருந்தது. பயம் உறைந்து வெளிறிப் போயிருந்த முகத்தில் தனித்து மாட்டிக் கொண்ட தவிப்பும், கூட்டம் பிரிந்த கவலையும், என்ன ஆகப் போகிறோமோ என்ற அச்சமும் மானை மிரட்சியோடு காட்டின.

"இந்தா... பா... பா... இந்தா, புல் சாப்புடு..."

மண்ணாங்கட்டி நாக்கால் விதவிதமான ஒலிகளை எழுப்பி மானுக்கு புல்லைக் குடுக்க முயன்றார்.

தண்ணீரில் விழுந்த புல் கொத்தினை அரக்கப் பரக்க மெல்லத் தொடங்கியது மான்.

"பாவம்யா... ரொம்ப பசியா இருக்குது போல."

"மண்ணாங்கட்டி ரொம்ப பாவம் பாக்காத... அந்த ராமனுக்கு பிரச்சன மான் உருவத்துலதான் வந்திச்சி."

"சாமியார... கிருத்துருவம் புடிச்ச ஆளுய்யா நீ. பேசாம புல்ல அறுய்யா."

பழனிவேலு சாலையில் விரைந்து சைக்கிளை மிதித்து வந்துகொண்டிருந்தான். அவன் உடல் அசைவுகள் வேகத்தைக் காட்டின. நெடுஞ்சாலை வாகனங்கள் தத்தம் கவலையோடு சர் சர் என பறந்து கொண்டிருந்தன.

மண்ணாங்கட்டி மானைப் பற்றி கவலைப்பட ஆரம்பித்தார். 'இந்த மான் மட்டும் நல்லபடியா பொழச்சி வந்தா நம்மளே வளக்கலாம். அங்காளம்மா தாயே... இந்த உசுர காப்பாத்திக் குடு. அம்மா வாசைக்கு ஒன் கோயிலுக்கு வந்து மொட்ட போடுறன்.' தனக்குள் மனமுருகி வேண்டிக் கொண்டார் மண்ணாங்கட்டி.

"டேய்... டேய்... பொறுமையா வாடா... மாமங்காரன விட மச்சான் ரொம்ப வேகமா இருக்கான்."

"சாமியார... ஒனக்கெல்லாம் கிண்டலாப் போச்சி... மாமா... மேனேஜர் சார் கிட்ட சொன்ன(ன்). அவரு திருவெண்ணெய்நல்லூரு போலீஸ் ஸ்டேசனுக்கு பேசுனாரு..."

"போலீசு வர்ராங்களாமா"

"இல்லல்ல, போலீஸ்காரங்க இதுல ஒன்னும் பண்ண முடியாதாம்... பாரஸ்டு ஆபிசுக்கு பேசச் சொன்னாங்க. அப்புறம் மேனேஜர் சாரு பாரஸ்ட் ஆபிசுக்கு போன் போட்டு வெவரம் சொன்னாரு. அவுங்க ஒடனே பொறப்பட்டு வர்ராங்களாம்."

"ஒன்னுமில்லாத விசயத்த ஊதி பெரிசாக்குறீங்கப்பா மாமனும் மச்சானும்.. அழகா மான கறியாக்கி மூனு பேரும் குடும்பத்தோட சாப்புடறத வுட்டுட்டு..."

"சாமியார... செத்த வாய மூடிக் கிறியா... ஈசாமைய கௌப்பாம கௌம்பு மொதல்ல இங்கயிருந்து... அப்புறம் எனக்கு நல்லா வந்துரும் வாயில..."

"சரி சரி, நீ கோச்சிக்காத... என்னோட ஆசய சொன்னன். டேய், விலாசம் சரியாச் சொன்னியா..."

"ஆங்... சொல்லிட்டுதான் வந்தன்... இருவேல்பட்டு ஆஸ்பத்திரி பின்னாடி, ரெட்டியார் கழனிக்கி பக்கத்தில, டிரான்ஸ் மரம் இருக்கும், அங்கிருக்கிற தர கெணத்துல"

சாலையிலிருந்து ஒரு ஜீப் விலகி உள்ளே இறங்கி நின்றது. "இதுதான அந்த இடம்."

"ஆமா சார்..."

"பழனிவேலு, பாரஸ்ட் ஆபிசுல இருந்து வந்துட்டாங்க போல... ஓடிப்போய் அவங்கள கூட்டியா..."

ஜீப்பிலிருந்து நாலு பேர் இறங்கினார்கள். ஒருவர் மட்டும் அதிகாரிக்குரிய தோரணையோடு இருந்தார்.


படிப்பகம்

www.padippakam.com

"யார்யா இங்கே மண்ணாங் கட்டி... நீதானா..."

"இல்ல சார். எங்க மாமன். அதோ சட்ட போடாம நிக்கிறாரே அவுருதான் சார்"

"எல்லாருக்கும் வணக்கம் சார்."

"நீதானாய்யா மண்ணாங்கட்டி, எப்பய்யா பாத்த மான் கெணத்துல கெடந்துத."

"டேய் பழனிவேலு... மரத்துல ஏறி எளநீ பறிச்சிப்போடு... காலைல வழக்கமா வர்ர மாதிரி யதார்த் தமா கொல்லிக்கி வந்தன் சார். கெணத்துக்குள்ளயிருந்து 'சள புள'ன்னு சத்தம் கேட்டுது. இன் னாவோ ஏதோன்னு கெணத்துக் குள்ள எட்டிப் பாத்தா... இந்த வாயில்லா ஜீவன் உள்ள தவிச்சிக் கிட்டு இருக்குது சார்..."

"வாயில்லாம எப்டியா அது சாப்புடும்" அதிகாரி சொல்ல உடன் வந்தவர்கள் சிரித்தார்கள். அந்த இடத்தில் சிரிக்கவேண்டும் என்று அவர்களுக்குத் தெரியும்.

"நல்லாயிருக்குய்யா எளநீ. யார் நெலம் இது, ஒன்னதுதானா"

"இல்ல சார்... இருவேல்பட்டு சம்பந்தம் நெலம். போக்யத்துக்கு ஓட்றன். சார்... அந்த மான பாருங்க சார்."

"யோவ் பதட்டப்படாதய்யா... சொல்லிட்டயில்ல. நாங்க பாத்துக் கறம். ஜெயராமன், என்ன பண்ண லாம்."

"வேற ஒண்ணுமில்ல சார்... நெட் அப்ளை பண்ணிடலாம். ஈஸி ஜாப்தான். டிரைவர், வண்டி லயிருந்து நெட் எடுத்துக்கிட்டு வாங்க. கோபால், கூட போயேன்."

"ஜெயராமன், அனிமலுக்கு எந்த அடியும் இல்லாமப் பாத்துக் குங்க..."

"ஆமாங்க சார்"

"யோவ் நீ கம்முனு அப்டியே ஒக்காருய்யா... குறுக்க குறுக்க பேசிக்கிட்டு..."

"ஜெயராமன் நீங்க வேலய பாருங்க..I will take care of him.. மண்ணாங்கட்டி, தார்போட்டுருக்குத, என்னா வாழை இது."

"கற்பூரவள்ளி சார்... சார் சாப்புடுவீங்கன்னா" என்று இழுத்த மண்ணாங்கட்டியை இடைமறித் தார் அதிகாரி. "ஏம் மண்ணாங் கட்டி, அதிகாரின்னா வாழப்பழம் சாப்டக்கூடாதா?"

"சாமியார இங்கே வாயேன்... அந்த வாழத் தார வெட்டி ஜீப்புல ஏத்து."

கிணற்றுக்குள் வலை வீசி மானைப் பிடிக்கும் முயற்சியில் ஈடு பட்டனர் வன இலாகா ஊழியர் கள். மிரட்சியோடு போக்குகாட்டி அங்குமிங்கும் அலைக்கழித்தது மான்.

"சனியன் பிடிச்சது, மாட்டுதா பார்யா வலையில."

"சார், அத ஏன் சார் திட்றீங்க... வாயில்லா பிராணி சார் அது."

"தோடா வந்துட்டாரு சொல்ல போப்பா போய் அப்டி ஒரு ஓரமா ஒக்காரு."

பழனிவேல் நகர்ந்து மோட் டார் கொட்டகை ஓரமா நின்றான். மனம் பதபதைக்க...

"என்ன ஜெயராமன், எனி பிராப்ளம்."

"இல்ல சார்.... நெட்ல அனி மல் சிக்காம இருந்தது, இப்ப சிக்கி டுத்து. அப்டியே தூக்கிடலாம்.

"டேமேஜ் ஒன்னுமில்லில்ல."

"அதல்லாம் ஒன்னுமில்ல சார்."

"யோவ் மண்ணாங்கட்டி... தம்பி டேய் நீயும் வா இப்படி. ஆளுக்கு ஒரு கை பிடிச்சா மான வெளில தூக்கிடலாம்."

பதற்றத்தோடு ஓடிவந்தார்கள் மண்ணாங்கட்டியும் பழனிவேலு வும். வலைக்குள் மான் சுருண்டு கிடந்தது.

"புடிய்யா புடி"

"இறுக்கிப்பிடி உட்டுடாத..."

"தூக்கு தூக்கு... இந்தப் பக்கமா."

"தூக்கு அப்டித்தான்"

"பத்திரம் பத்திரம். பைப்ல மோதிடப்போவுது..."

"செவத்துல இடிச்சுடாம தூக்கு. அவ்ளவுதான். அப்டியே தூக்கி தரையில வை."

"எவ்ரிதிங் ஓகே சார்... ஒரு இன்ஜக்ஷன் போட்டா சரியாயி டும்."

"சார் ரொம்ப நன்றி சார். தெய்வம் சார் நீங்க எல்லாரும்."

"அதல்லாம் ஒன்னுமில்ல. நாங்க எங்க டூட்டியத்தான் செஞ்சோம்."

"சார் ஒரு விண்ணப்பம் சார், இந்த மான என் கிட்டேயே குடுத்தா கொழந்த போல பாத்துக்குவேன் சார். புள்ளப்போல வளப்பன் சார்."

"யோவ் என்னய்யா பேசுற நீ... காட்ல இருக்கிற மிருகங்கள வீட்ல வெச்சி வளக்கக்கூடாதுய்யா... சட்டப்படி குற்றமாயிடும்."

ஊழியர்கள் மானை வலை யோடு தூக்கி ஜீப்புக்கு கொண்டு சென்றனர்.

"அப்பறம் இந்த ஜீவன இன்னா சார் பண்ணுவீங்க."

"அப்படியே கொண்டுபோய் காட்டுல வுட்ருவோம். அது அங்க போயி அதோட கூட்டத்தோட சேந்துடும். அப்டியே பொழச்சிக்க வேண்டியதுதான்... சரி வர்ட்டுமா"

"ரொம்ப நன்றி சார்... ஒரு உயிர காப்பாத்துன புண்ணியம் உங்க புள்ள குட்டிங்கள எல்லாம் காப்பாத்தும் சார்..."

"சரீய்யா. வர்ரன்... எல்லோ ருக்கும் வர்ரன்." ஜீப் கிளம்பியது.

"சார்... ஜீப்ப உளுந்தூர் பேட்டை ஓட்டட்டுமா?"

"யோவ்... சுத்த வெவரங்கெட்ட ஆளாயிருக்கிறயா... எம் மாமனாரு வூட்ல மான் கறி சாப்புட்டு ரொம்ப நாளாச்சின்னாங்க... வண்டிய திருக்கோவிலூர் பக்கம் திருப்பு..."

தூரத்தில் மண்ணாங்கட்டி கண்களை துடைத்தபடி ஜீப் போவதையே பார்த்துக்கொண்டி ருந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

# தலித் தேசியம்

## ஒரு கோட்பாடு விவாதம்

தலித் தேசியம் 19

■ கௌதம சன்னா

தலித்துகள் தாங்கள் ஒரு தேசிய இனம் என்பதை அவர்கள் அறிவித்துக்கொண்டால் மட்டுமே போதுமானதாகி விடாது. அது பல சோதனைகளில் தேறியாக வேண்டும். இதில் பெயரைத் தவிர வேறு என்ன இருக்கிறது என்று அதன் எதிர் ஆர்வலர் கேட்கக் கூடும்.

'தலித்' எனும் பெயர் மிக அண்மைக்காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சாதியின் பெயராய் இருக்க, அதற்கு ஒரு தேசியத் தகுதியை வழங்குவது எப்படி சாத்தியம் என்று கேள்வி எழுப்பப்படலாம். அதே வேளை அவர்கள் மொழிவழி தேசிய இனத்தில் ஓர் அங்கமாக இருக்கின்றனர் என மொழி தேசியரும், இந்து மதத்தில் ஓர் அங்கமாக இருக்கின்றனர் என இந்திய தேசியரும் மறுக்கக்கூடும். இது ஒரு விடை காணத்தக்க அவசியமான மறுப்பீடாகும். மேலும் இன்றும் நாம் கேட்கக்கூடிய சங்கதிகள்தான். இவைகளை அடிப்படையாகக் கொண்டு தலித் தேசியத்தைச் சோதனைக்குட்படுத்துவோம்.

**பொது நிலம்**

தேசிய இனத்திற்கு ஒரு பொதுவான நிலப்பரப்பு இல்லையெனில் அது தேசமாக எழக்கூடிய தகுதியினைப் பெறாது என்பதை ஏற்கெனவே பார்த்தோம். ஆனால் அதற்கு எதிர் உண்மையாக யூதர்களும், அமெரிக்க கருப்பர்களும் ஒரு தேசிய இனமாக பரிணமித்ததை பார்த்தோம். இந்த இரண்டு இனங்களும் தனித் தனியே சிறப்பு வாய்ந்தவை. எப்படியெனில் யூதர்களுக்கு நிலப்பரப்பு இல்லாமல் அலைந்து கொண்டிருந்தபோது, பைபிள் கதைகளை மெய்யாக்கியது போல, ஒரு நிலப்பரப்பை அபகரித்து தமது தேசத்தை உருவாக்கிக்கொண்டார்கள். அமெரிக்க கருப்பர்களுக்கு பொதுவான நிலப்பரப்பு இல்லையெனினும், அவர்களது 'கெட்டோக்கள்' அவர்களை தனி தேசிய இனமாக அடையாளப்படுத்த உதவியது. இந்த இரண்டு இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்து சென்று தனி நாடாக அமைந்தவையில்லை. இஸ்ரேலைப் பொறுத்தவரையில் பிரிவினை இல்லை. புதிதாக நாடே உருவாக்கப்பட்டது. கருப்பர்களைப் பொறுத்தவரையில் அவர்களது சுயநிர்ணயம் அதிகாரப் பகிர்வு என்பதாகும்.

ஏனெனில் தேசிய இனப்பிரச்சினையின் 'வெளிப்பாடு' ஜனநாயக கோரிக்கையின் ஒரு தனி சிறப்பான வடிவம். அதனால்தான் இடத்துக்கு இடம் மாறுபடுகிறது.

தலித்துகளுக்கு இந்த இரண்டு எடுத்துக்காட்டுகளையும் பயன்படுத்திக்கொள்ள முடியும். தலித்துகளுக்குப் பொதுவான இடையீடற்ற நிலப்பரப்பு ஏதுமில்லை. ஆனால் இடையீடுள்ள குறிப்பான நிலப்பகுதி உண்டு. அதுதான் ஒவ்வொரு கிராமத்திலும் தனியாக இருக்கும் 'சேரிப்பகுதி.' நவீன அரசியல் மொழியில் இது கெட்டோக்கள் எனப்பட்டாலும், வரலாற்றின் நினைவுக்குட்பட்ட நாளிலிருந்து 'இச்சேரி அமைப்பு' நிலவுகிறது. இந்த நெடுந்தொடர்ச்சியே தலித்துகளின் நிலத் தகுதியை, தனி நிலத் தகுதியை வழங்கி பொது நிலப்பரப்பாக பரிணமிக்கிறது.

இந்த சேரிப்பகுதி ஸ்டாலின் முன்வைத்த வட்டாரத் தன்னாட்சிக்கு இசைவானது. அதேபோல ஒட்டோ பௌலர், ஸ்டிங்கர் போன்றோரின் பண்பாட்டுத் தன்னாட்சியை உறுதி செய்வதற்கான நிலப்பலத்தையும் வழங்குகிறது.

எனவே மொழி மற்றும் இந்துத்துவ தேசியவாதிகள் முன்வைக்கும் பொதுநில அம்சத்திற்குள் சேரிகள் வராது. அப்படி வரவேண்டுமெனில் சேரியையும் ஊர்ப்பகுதியையும் ஒருங்கிணைப்பதற்கான திட்டத்தை அவர்கள் முன்வைக்கவேண்டும். துரதிருஷ்டவசமாக இதற்கு இதுவரை அவர்களிடம் எந்த செயல்திட்டமும் இல்லை. வெறும் வார்த்தைகள் இரு பகுதியையும் ஒன்றாக்கிவிடாதல்லவா?

யூதர்கள் விஷயத்தை ஓர் எடுத்துக்காட்டாகக் கொள்வது தவறு என்று சிலர் மறுக்கக்கூடும், ஏனெனில் 'ஜியோனிஸ' கொள்கையைக் கொண்டு மத்திய கிழக்கு நாடுகளில் அவர்கள் ஒரு பாதுகாப்பற்ற தன்மையை உருவாக்கினார்கள். அதோடு, அவர்கள் ஜார் ருஷ்யாவிலும், இதர ஐரோப்பிய நாடு களிலும் தங்களுக்கான சிறுகுடியிருப்புப் பகுதிகளில் ஒதுங்கியே வாழ்ந்தார்கள் என்றும் மறுப்புக் கூறலாம். ஆனால் இது எடுப்பான மறுப்பல்ல. ஏனெனில் யூதர்கள் இனவெறிக் கொள்கை கொண்டவர்கள்தான். இருந்தாலும் இந்த சான்றினை தலித்துகளுக்கு ஆதரவாக எடுத்துக்கொள்வதற்கு தார்மீக நீதி உண்டு. ஏனெனில் யூதர்கள் விலகி வாழ விரும்பினர். தலித்துகளோ ஒன்றிணைந்து வாழ விரும்பினர். ஆனால் நடந்தது என்ன என்பது யாவருக்கும் தெரியும்.

இந்திய கிராம நிலப்பகுதியைக் குறித்து அம்பேத்கர் கூறுகிறார்:

"இந்திய கிராமம் குடியரசின் தத்துவங்கள் எல்லாவற்றையும் மறுப்பதாக உள்ளது. இது ஒரு குடியரசு என்றால், தீண்டத்தகாதவர்களால் தீண்டத்தக்கவர்களுக்காக நடத்தப்படும், தீண்டத்தக்கவர்களின்


படிப்பகம்

www.padippakam.com

**பொருளீட்டும் மூலங்கள், வளங்கள் இன்றும் தலித் அல்லாதாரின் கைகளிலேயே இருக்கின்றன. தலித்துகள் பொருளாதார விடுதலை பெற வேண்டுமெனில் நிலத்தி லிருந்தும், தொழிற்துறையின் சுரண்டலிலிருந்தும் விடுதலை பெற வேண்டும்.**

குடியரசாகும். இது தீண்டத்தகாதவர்களை சுரண்டி வாழ்வதற்காக இந்துக்களால் உருவாக்கப்பட்ட ஒருவகை காலனி ஆதிக்கமாகும்." (அ.எ.பே : 9:43)

தலித் சேரிகள் காலனி என்று ஏற்றுக்கொண்டால், அது பொது நிலப்பரப்புத் தன்மை வாய்ந்தது என்றும், சுயநிர்ணயத் தகுதி உள்ளது என்பதையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

**ஒன்றிணைந்து துயரங்களைத் துய்த்தல்**

தலித் தேசிய இனத்திற்கு ஒன்றிணைந்து துயரங் களைத் துய்த்த சம்பவம் ஏதேனும் உண்டா என்பது போல தலித் அல்லாத பிற தேசிய இனைத்தினருக்கும் இந்த கேள்வி உண்டு. எடுத்துக்காட்டாக, இந்திய - பாகிஸ்தான் பிரிவினை நேரத்தில் இந்துக்களும் முஸ் லீம்களும் ஒருவரையொருவர் வெட்டிச் சாய்த்துக் கொள்ள துணைக்கண்டம் ரத்த வெள்ளத்தில் மிதந் தது. இந்த சம்பவத்தின்போது தலித்துகள் தனித்து விடப் பட்டனர். பாகிஸ்தானில் இருந்த பலாய் எனும் துப்புரவு தொழிலாளர்களான தலித்துகள் அங்கிருந்து இந்தியா வருவதற்கு பாகிஸ்தான் இசுலாமியர் அனு மதிக்கவில்லை. அதேவேளை, இந்துக்களும் அவர்கள் நமது சொந்தங்கள் என்று மீட்டுவரவில்லை. தனித்து விடப்பட்ட பலாய்கள் துயருற்றிருந்த வேளையில் அம்பேத்கர் அமைத்த மகர் ராணுவம் அவர்களை மீட்டது. இந்த சம்பவம் இரண்டு பதிலைத் தருகிறது.

1. தலித்தல்லாதவர்கள் தலித்துகளின் துயரத்தில் பங்கேற்பதில்லை. அவர்களுக்கு ஆதரவான கரமாய் இருப்பதில்லை.

2. தலித்துகள் மட்டுமே தங்களது துயரினை ஒன்றிணைந்து எதிர்கொள்கின்றனர்.

மேற்கண்ட எடுத்துக்காட்டு மட்டுமே போது மானதாக இருக்காது என தோன்றுமாயின் சில கூடுதல் அம்சங்களைக் காணவேண்டும்.

1. தலித்துகள் ஒரே பகுதியில் ஒருங்கிணைந்து வாழும் தேசிய இனமல்ல. மாறாக நாடு முழுதும் சிதறிவாழும் ஒரு தேசிய இனம், அதாவது தேசிய சிறு பான்மை இனம்,

2. இவர்களின் இருப்பிடமான சேரியிலோ இவர் கள் ஆகச் சிறுபான்மையினர். இந்த சிறுபான்மை மக் களை பெருபான்மை சாதி இந்து கிராமம் நசுக்கி வருகின்றது. இந்த நுகத்தடியை வீழ்த்தும் வண்ணம் பெரும்பான்மை மக்கள் தொகையுள்ள சேரிகள் எதிர்த்து தங்களுக்கு எதிரான ஒடுக்கு முறையை பல வீனப்படுத்தியுள்ளன என்பதற்கு நிறைய சான்று உண்டு. அதேபோல சிறுபான்மையினராக உள்ள பகுதிக ளிடையே அவர்களுக்கு பெரும்பான்மையாக தலித் துகள் வசிக்கும் இடங்களிலிருந்து கிடைக்கும் பாது காப்பு, இதற்கான சான்றுகளை சாதி கலவரக் காலங் களிலிருந்து எடுத்துக்கொள்ள முடியும்.

சமூக ஒடுக்குமுறையை நேரடியாக எதிர்த்து எழுவதோ அல்லது அதை முறியடிப்பதிலோதான் இந்த துயர் பகிர்தல் காணப்படும். மேலும் எங்கோ வடமூலையில் நடக்கும் தலித்துகளின் மீதான வன் செயலுக்கு எதிர்வினையை இந்தியாவின் பிற பகுதி தலித் அமைப்புகள் எதிர்த்து எழுவதை காண முடிகிற தல்லவா?

ஆனால், ஒரு தலித்தும் தலித் அல்லாதாரும் இது போன்று துயரை ஒன்றாக சேர்ந்து துய்த்த அனுபவத் தைக் காணமுடியுமா? இந்திய துணைக் கண்டத்தின் சாபக்கேடு, அப்படி ஒரு சம்பவத்தை இன்னும் காண முடியவில்லை. இப்படி நிகழுமாயின் அதை தலித் விடுதலையின் சிறப்பான அம்சமாகக் கருதிக் கொள் ளலாம்.

**கடந்த காலப் புகழ்**

தலித்துகளுக்கு கடந்த காலத்தை நினைத்து மகிழத்தக்க எந்த நிகழ்வோ அல்லது வரலாற்றுத் தடமோ இல்லை என்பது போல இந்திய வரலாறு கட்டமைக்கப்பட்டுள்ளது. இதற்கு தமிழக வரலாறும் விதிவிலக்கல்ல. ஆனால் இன்றைய நிலைமை என்ன, தலித்துகளிடையே வரலாற்றுணர்வு கடந்த 150 ஆண்டுகளாக வளர்ந்து இந்திய வரலாற்றினை கேள்விக்குட்படுத்தி வருகிறது. கடந்த காலத்தின் புகழ் பெற்ற நிகழ்வுகள், வரலாற்று மாண்புகள் தங்களிட மிருந்துதான் துவங்கியதாக தலித்துகள் பறை சாற்று கின்றனர்.

உலகத்திற்கு ஞான ஒளி வழங்கிய புத்தனின் சுடர் மிகு வரலாற்றிலிருந்து தங்களின் வரலாற்றை அடை யாளம் காண்கின்றனர். சாக்கிய வம்சம் தலித்துகளின் வம்சங்களில் ஒன்று என பண்டிதர் முதல் அம்பேத்கர் தொடங்கி, இன்றைய தலித் ஆய்வாளர் வரை நிரூ பித்து வருகின்றனர். இதுவுமின்றி, தமிழகத்தின் மூவர சர் தலித்துகள் தான் என்பதை ஆதாரங்களுடன் கூறு கின்றனர்.

ஆந்திரத்தின் மாலாக்கள், மாதிரர்கள், அருந்ததி யர்கள் மாணவ வம்ச அரச பூர்வீகர்களாவர். புலையர் என்ற செருமாள்கள் சேரர்களின் வழித் தோன்றல்கள். தேவேந்திரர், பறையர் உள்ளிட்ட தலித் குடிகள் அரச குடிகளாய் இருந்தவர்கள் என்பதை ஆதாரங்களுடன் நிரூபிக்கின்றனர்.

இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள தலித்துகள் அம்மண்ணின் ஆதிகுடிகள், அந்த



படிப்பகம்

www.padippakam.com

**தேசிய இனக் கோட்பாடு ஒரு மக்களின் விருப்பமே மற்றெல்லாவற்றையும் விட மேலானது, உன்னதமானது என்ற ஜனநாயகக் கோட்பாடுடன் பின்னிப் பிணைந்துள்ளது என்பதை வரலாறு காட்டுகிறது. தங்களுக்கு ஒரு தேசியம் வேண்டும் என்று ஒரு தேசிய இனம் கோரும்போது அதற்கு ஆதரவாக தங்களுக்குள்ள மனக்குறைகளை அவர்கள் பட்டியல்படுத்த வேண்டும் என்று இதற்குப் பொருள் அல்ல; மக்களின் விருப்பமே இந்தக் கோரிக்கையை நியாயப்படுத்தப் போதுமானது**

மண்ணை ஆண்ட குடிகள் என்ற வரலாற்று நம்பிக்கை பரவலாக எழுந்துள்ளது. இத்துனைக் காலம் மறைக்கப்பட்டிருந்த அவர்களின் கடந்தக் காலப் புகழை இன்று அவர்கள் மீட்டெடுத்து தங்களை தனி தேசிய இனமாக அடையாளம் காண்கின்றனர்.

தலித் மற்றும் தலித் அல்லாதாரின் கடந்த காலப்புகழும் கூட இனி மோதிக்கொள்ளும் சூழல் உருவாகியுள்ள. து. இந்த மோதலே தலித்துகளுக்கு ஒரு பெருமிதத்தை அளிக்கவல்லது. இதுவே தேசிய இனமாகப்பரிணமிப்பதற்கான ஆதாரச் சொத்து.

**பொருளாதார வாழ்வு**

தலித்துகளுக்கு தனித்த பொருளாதார வாழ்வு இல்லை என எடுத்த எடுப்பிலேயே கூறிவிடக் கூடும், இப்படி கூறுவது தலித்துகளுக்கு மட்டும் பொருந்துவதில்லை. தலித் அல்லாத மற்றவர்களுக்கும் இந்தியச் சூழலில் பொருந்தும்.

மார்க்சிய கண்ணோட்டத்தில் ஒரு தேசிய இனம் என்ற அடையாளத்தை பாட்டாளி வர்க்கமும் பெறும். மார்க்ஸ் "பாட்டாளி வர்க்கமானது தன்னையே ஒரு தேசமாக முன்னிருத்த வேண்டும்" என கூறினார். பாட்டாளிகளுக்கு இந்த தகுதியானது அவர்களது நில, மொழி, பண்பாட்டு காரணத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. முதலாண்மை ஒடுக்கும் தேசமாக கருதப்பட்டால், தொழிலாளர் வர்க்கம் அதை எதிர்க்கும் தேசியமாக தன்னை கட்டமைத்துக்கொள்ள வேண்டும் என்பது இதன் பொருள். சர்வதேசிய வாதம் பேசும் தொழிலாளர்கள் தன்னை ஒரு தேசியமாக முன்னிருத்திக்கொள்வது முரண்பாடு போலத் தோன்றும்.

லெனின் கூறியது போல ஒவ்வொரு தேச தொழிலாளர் வர்க்கமும், அந்தந்த நாட்டிலுள்ள தேசிய இயக்கங்களை ஆதரிக்கவேண்டும் என்றார். சாராம்சத்தில் தேசிய இன விடுதலைப் போராட்டம் முதலாண்மையருக்கான நிகழ்வாய் இருந்த போதிலும் அதன் வரலாற்று விதியை கணக்கில் கொண்டு லெனின் கூறினார்.

மார்க்ஸ் கூறியதற்கும், லெனின் கூறியதற்கும் முரண்பாடு இருப்பதுபோலத் தோன்றினால் அது தோற்ற மயக்கம். ஏனெனில் தேசிய இன விடுதலையை சாதித்த தொழிலாளர் வர்க்கம், தன்னுடைய விடுதலையையும் சாதித்தாக வேண்டும். எனவே தன் விடுதலைக்கு அது ஒரு தேசிய இன குறியீட்டுத் தன்மையை பெற்றுக் கொள்கிறது.

இந்த அம்சத்தை தலித்துகளுக்குப் பொருத்திப் பார்ப்போம். தலித்துகளின் பெரும்பகுதி - சுமார் 65% -க்கும் மேல் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழ்பவர்கள் சமார் 79%-க்கும் மேல் கூலித் தொழிலாளர்கள். இதில் விவசாயிகள், ஆலைத் தொழிலாளர்கள், உதிரித் தொழிலாளர்கள் அடங்குவர். இவர்களின் ஊதியமானது சொல்லத்தக்க அளவில் இல்லை என்பது தெரிந்த விஷயம்.

இவர்களது பொருளீட்டும் மூலங்கள், வளங்கள் இன்றும் தலித் அல்லாதாரின் கைகளிலேயே இருக்கின்றன. தலித்துகள் பொருளாதார விடுதலை பெற வேண்டுமெனில் நிலத்திலிருந்தும், தொழிற்துறையின் சுரண்டலிலிருந்தும் விடுதலை பெற வேண்டும்.

இன்றைக்கு தொழிலாளர்கள் அனைவரும் ஆலைத் தொழிலாளர்களாக இல்லை. எனவே தொழிலாளர்களிடையே சுரண்டல் என்பது முதலாண்மைக்கு உபரியைப் பாதுகாப்பதுதான். எவ்வகைத் தொழிலாளரின் உழைப்பைச் சுரண்டி, அதை உபரி மதிப்பாக சேமிப்பது இன்று என்பது முதண்மை காலகட்டம் துவக்கத்திலிருந்து தொடர்கிறது. சுரண்டலின் வடிவங்களில் மாறுதல் தென்படலாம். ஆனால் சுரண்டல் மாறவில்லை.

எனவே, தலித்துகளின் பொருளாதார வாழ்வை முதலாண்மை சமூக கண்ணோட்டத்துடன் அணுகாமல் மார்க்ஸின் பார்வையின் ஒளியுடனே அணுகுகிறேன். இந்த அர்த்தத்தில், மார்க்சின் 'தொழிலாளர் ஒரு தேசிய இனம்' என்ற கண்ணோட்டத்திலும், தலித்துகள் தொழிலாளர்களாக, சுரண்டப்படுபவர்களாக இருப்பதால் தமக்கான பொருளாதார வாழ்க்கையினை இந்த அம்சத்திலேயே வெளிப்படுத்துகிறார்கள். அதனாலேயே அவர்களும் ஒரு தேசிய இனமாகப் பரிணமிக்கிறார்கள். தலித் அல்லாத பிற தேசிய இனங்களில் உள்ள தொழிளாளர்கள், அவர்களது முன்னணி அமைப்புகள் தலித்துகளின் இன விடுதலைக்கு முன்னணியில் நிற்கும் துணைச் சக்திகளாக இருக்கும் தகுதி படைத்தவர்கள்; அவர்கள் தங்களது பொறுப்பினைத் தட்டிக்கழிக்க முடியாது.

**மறதி**

தேசிய இனக் கோட்பாட்டில் மிக முக்கியமான அம்சமாகும். ஏனெனில் ஒடுக்கும் ஒரு தேசிய இனத்தின் ஒடுக்குமுறை வரலாற்றை, ஒடுங்கிய தேசிய இனம் மறந்துவிடுமானால் அது ஒரு பொதுத் தன்மையை நோக்கி நகர்கிறது என எடுத்துக்கொள்ள



படிப்பகம்

www.padippakam.com

லாம். மாறாக ஒரு இனம் பூண்டோடு அழிக்கப்பட்டிருக்குமானால் இந்த பேச்சிற்கே இடமில்லை. ஆனால் இன்றைய காலத்தில் இப்படி பூண்டோடு அழிக்கப்பட்ட இனங்களை காண்பதரிது. அவற்றில் மிஞ்சி இருப்பவையும் உண்டு. இவைகளின் தொகை எண்ணிக்கை அவை தேசிய இனமாக எழும் ஆற்றலைத் தாராமல் போகலாம். எனினும் இதற்கு சில எடுத்துக் காட்டுகளை காண்பது அவசியம்.

திரு. ரெணன் அவர்களிடமிருந்து அம்பேத்கர் ஒரு எடுத்துக்காட்டைத் தருகிறார். அதில் வடக்கு - தெற்கு பிரான்ஸ் இணைப்பிற்கு ஒரு இனமே கூண்டோடு அழிக்கப்பட்டது. நூறாண்டுகள் நடந்த இந்த கோர வெறியாட்டத்தின் விளைவாக இணைப்பு சாத்திய மானது. ஆனால், இந்த இணைப்பை சாத்தியப்படுத்திய பிரெஞ்சு மன்னரின் கொடுஞ்செயல் அம்பலத்திற்கு வந்தபோது அவர் மக்களின் சாபத்திற்கு உள்ளானார். இந்த மன்னரின் வழியைப் பின்பற்றிய பல மன்னர்கள் பேரிடருக்கு ஆளானார்கள். (காண்க அ.எ.பே.பக். 55)

இந்த சம்பவத்துக்குப் பிறகு மேற்கு ஐரோப்பா தேசிய இனச் சண்டைகளின் களமாகிவிட்டது. ஏனெனில் மறதி என்பது நிகழாததால் தேசிய இனங்களுக்குள்ளே இப்படி நடந்தது.

இந்த எடுத்துக்காட்டை இந்து - முஸ்லீம் பிரிவினருக்கு பொருத்திய அம்பேத்கர் இந்திய - பாகிஸ்தான் பிரிவினைக்கு இந்து முஸ்லீம் மக்களிடையே ஊறிப் போயிருக்கும் கடந்த கால நிகழ்வுகள் - நினைவுகளாக, அவர்களை தனித்தனியே பிரித்து வைத்திருப்பதாக கூறுகிறார். அவரது வார்த்தைப் படி,

"கடந்த காலத்தை மறப்பது என்பது அவர்களது மதத்தையே மறப்பதாகும். அதனைக் கைவிடுதலாகும். இவ்வாறு நடைபெறும் என்று கருதுவது முற்றிலும் வீண் (மேலது பக். 56)"

இந்த அம்சம் தலித்துகளுக்கும், தலித் அல்லாதாருக்கும் பொருந்தும்.

நீண்ட நெடுங்காலமாக தீண்டாமையின் கோர வடிவத் தாக்குதல்களை தலித்துகள் அனுபவித்து வந்துள்ளார்கள். அவற்றின் வடிவம் ரத்தக் களறியான வெளிப்படையான வடிவம் முதல், மிக நுட்பமான மென்மையான வடிவங்கள் வரை காணப்படுகிறது. இது எதிர்காலத்திலும் மறையும் என்பதற்கான நம்பிக்கை சிறிது சிறிதாக குறைந்து வருகிறது. தலித்துகள் இதிலிருந்து தப்பிக்க நினைக்கலாம். அதற்காக முயலலாம். ஆனால் ஒருபோதும் அவர்களால் அந்த கொடூரத்தை மறக்கமுடியாது. ஏனெனில் எல்லா நிலையிலும் அதை ஞாபகப்படுத்துவதற்கான வாய்ப்புகள் இங்கு நிறையவே இருக்கிறது.

அதேபோல தலித் அல்லாதாரைப் பொறுத்த வரையில் அவர்களும் இதை கைவிடும் நிலையில் இல்லை. ஏனெனில் தீண்டாமைக்கு இந்து மதத்தின் அனுமதியும், ஆதரவும் உள்ளது. அப்படி அவர்கள் அதை கைவிடுவதென்பது அவர்களது மதத்தைக் கைவிடுவதாகும். இன்னும் தெளிவாகச் சொன்னால் அவர்களது சாதியைக் கைவிடுவதாகும். மதம் மாறினாலும் கூட ஒரு இந்துவினால் சாதியைக் கைவிட முடியவில்லை எனும்போது, அவர்களது ஆதிக்க உணர்வே தலித்துகளுக்கு மறதியை அளிக்காமல் என்றும் வாழும் நினைவுத் தூண்டலாக இருக்கிறது எனும் நிலையே தலித்துகள் ஒரு தேசிய இனமாகப் பரிணமிப்பதற்கான உறுதியை வழங்குகிறது.

இந்த தலித் தேசிய இன வரையறுப்புக் கோட்பாட்டில் அம்பேத்கரின் மேலும் ஒரு வறையறுப்பை காண்போம்.

"தேசிய இனக் கோட்பாடு ஒரு மக்களின் விருப்பமே மற்றெல்லாவற்றையும் விட மேலானது, உன்னதமானது என்ற ஜனநாயகக் கோட்பாடுடன் பின்னிப் பிணைந்துள்ளது என்பதை வரலாறு காட்டுகிறது. தங்களுக்கு ஒரு தேசியம் வேண்டும் என்று ஒரு தேசிய இனம் கோரும்போது அதற்கு ஆதரவாக தங்களுக்குள்ள மனக்குறைகளை அவர்கள் பட்டியல்படுத்த வேண்டும் என்று இதற்குப் பொருள் அல்ல; மக்களின் விருப்பமே இந்தக் கோரிக்கையை நியாயப்படுத்தப் போதுமானது." (மேலது பக்: 62)

தலித்துகளுக்கு தங்களது கோரிக்கையை வெளிப்படுத்தும் நிலை இருக்கிறது, இருந்து கொண்டும் இருக்கிறது என்பதை தற்பொழுது நடைபெறும் இயக்கங்களிலிருந்தே புரிந்துகொள்ளலாம்.

**இறுதியாக**

"தேசியப் பண்பு இருக்கக்கூடும் என்றும் தேசிய உணர்வு அறவே இல்லாதிருக்கலாம், வேறு விதமாகச் சொன்னால் தேசியப் பண்பு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தேசியத்தை தோற்றுவிக்கும் என்றும் கூற முடியாது." (மேலது பக்:59)

தலித்துகளுக்கு தேசிய இனப் பண்புகள் இருக்கிறது. அது இதுவரையில் ஒரு தேசிய உணர்வாக அடையாளப்படுத்தப்படவில்லை. இன்றைய காலகட்டம் அதை வளர்த்தெடுக்கும் என்பதற்கான அறிகுறிகள் உயிர்த்துள்ளன. தலித்துகள் ஒரு தேசிய இனம் என்பது ஒரு மலரின் மணம் போல் உணரத்தக்க வகையில் இருக்கிறது. வரலாற்றின் மூலமும் உணரப்பட்டுள்ளது.

இரண்டையும் ஒரு சேர வைத்துப் பார்க்கும் வரலாற்றுப் பார்வை இதுகாறும் தலித் அல்லாதவர்களால் மறைக்கப்பட்டு வந்துள்ளது.

தலித்துகள் தங்கள் வரலாற்றை தோண்டியெடுக்கத் துவங்கியுள்ள நிலையில், மறைப்புகளும், ஆதிக்க அழுக்குகளும் விலகும். தலித் தேசிய இன கோட்பாடு மிளிரும்.

இனி இந்த கோட்பாட்டுக்கெதிராக எழக்கூடிய ஆட்சேபங்களைக் காண்போம்.

(தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

# பெரம்பலூர் வட்டாரக் குறவர்கள் – ஓர் அலசல்

■ வை. இராமகிருஷ்ணன்

தமிழகச் சூழலில் ஒரு குறிப்பிட்ட இனத்தவரை இழிவாக ஒதுக்கிப் பார்க்கும் தன்மையைக் காணலாம். சமூகவியல் மற்றும் மானிடவியல் கண்ணோட்டத்துடன் பார்க்கும்போது இவ்வாறு ஒதுக்கிப் பார்ப்பது கோட்பாடுகளுக்கும், மனித நேயத்திற்கும் எதிர்மாறான பார்வையென்பது புலனாகிறது. இங்ஙனம் ஒதுக்கிப் பார்க்கின்ற / ஒதுக்கப்படுகின்ற மக்கள் யார்? என்ற கேள்வியின் ஊடாகப் பார்த்தால் தலித், பழங்குடியினர் மற்றும் விளிம்புநிலை மக்களாகக் கருதப்படுகின்றவர்கள் என்பவர்களை மதிப்பிடலாம். பழங்குடியினர் என்பவர்கள் அவர்களின் பிழைப்புக்காகவும், அதன் மூலம் ஏற்படுகின்ற சூழல் காரணமாகவும், மலையை விட்டு மலையற்ற தாழ்வாரப்பகுதிக்கு இடம் பெயர்கிறார்கள். இவர்கள் மக்கள் என்ற மையத்திலிருந்து விலகி விளிம்பு நிலை மக்களாகக் காணப்படுகின்றனர். சமூகம் கட்டமைத்துள்ள மேல் நிலையாக்குப் படிநிலையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளாமல், தலித் மக்களும் அவர்களை ஒதுக்கிப் பார்க்கும் தன்மை காணப்படுகின்றது. ஆனால் இவர்களை ஆதரித்து தாங்கள் வசிக்கும் பகுதியோரமாக, குடிசை போடத் திட்டமிட்டுக் கொடுப்பவர்கள் தலித் மக்களென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சமூகவியல், மானிடவியல் சார்ந்த ஆய்வுகள் மேலோங்கி நடைபெறும் நிலையில் இவர்களை ஒதுக்க முடியாதவர்களாகவும், உட்படுத்த வேண்டிய கட்டாய நிலையிலும் ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலை காரணமாகவும், சமூக புரிதலின் மூலமாகவும் இவர்களைப் பற்றி எழுதுகின்ற / பேசுகின்ற நிலைக்கு வளர்ந்துள்ளோம். இவ்வாறான செயல்பாடுகளில் முதன்மையாக ஈடுபட்ட பெருமை புதிய கோடாங்கி இதழைச் சாரும். மே 2004, ஜனவரி 2005 ஆகிய மாதங்களில் நடைபெற்ற தலித்-அரவாணிகள்-பழங்குடியினர் மாநாடுகள் இதில் குறிப்பிடத்தக்கன. தலித் தலைவரான அயோத்திதாச பண்டிதரைப் பற்றி பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில் பணியாற்றும் பேராசிரியர் ஆ. தனஞ்செழியன் அவர்களை முதன்மையாகக் கொண்டு நடைபெறும் 'நாடோடிகள்' பற்றிய ஆய்வும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும். சில மாதங்களுக்கு முன் வெளிவந்த 'நாடோடிகள்' என்ற சீ. பக்தவச்சலப் பாரதியின் நூலும் சுட்டிக் காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

தமிழில் தெலுங்கு மொழிப்பெயர்ப்பு: 'அவன் காட்டை வென்றான்' என்ற குறுநாவலும், நரிக்குறவர்களின் திருவிழா முறையைப் பற்றி 'திருவிழா' என்ற தலைப்பில் எடுக்கப்பட்ட குறும்படமும் (செழியன்) குறிப்பிடத்தக்கன. சென்னையை மையமிட்டு சாலையோர மற்றும் குடிசைவாழ் மக்களைப் பற்றி ஆய்வு செய்து 'நகர்சார் நாட்டார் பண்பாடு கானாப்பாடல்கள்' என்ற தலைப்பில் கட்டுரையாளர் வெளியிட்டுள்ள நூலும் குறிப்பிடத்தக்கதாகும். மேற்காண் பதிவுகளின் தொடர் நீட்சியாகவும் புதிய கோடாங்கி வாசிப்பின் ஊடாகவும், களாய்வு மூலமும் இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

பெரம்பலூர் வட்டாரத்தில் பல சிற்றூர்களில் குறவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களை பதிவு செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு வயலப்பாடி கீரனூரில் வசிக்கும் குறவர்கள் நேர்காணல் செய்யப் பட்டனர். இவர்களின் சாதி 'மலைக்குறவர்' என்றும், முன்னோர்கள் மலையில் வாழ்ந்ததாகவும் கூறுகின்றார்கள். இவ்வட்டாரத்தில் அத்தியூர், பெண்ணங்கொணம், வேப்பூர், நன்னை, கல்லை, ஓலைப்பாடி, வேட்டைக்குடி, கீழ்ப்பெரம்பலூர், வயலூர், கீழ்மாத்தூர், அகரம் சீகூர், ஜெயங்கொண்டம், சிலால் கள்ளங்குறிச்சி, நெய்வாசல், சித்தமல்லி ஆகிய ஊர்களில் இவர்கள் பரவிக் காணப்படுகின்றார்கள். இவை மட்டுமின்றி தமிழகமெங்கும் மலைக்குறவர்களைக் காணலாம். மலையில் வாழ்ந்த மனிதன் ஏன் மலையில்லா மண்ணிற்கு வர/இடம் பெயர வேண்டும் என்ற கேள்வி இயல்பாய் எழுகிறது.

இம்மலைவாழ் மக்கள் தங்களின் கைவினைப் பொருட்களை விற்பதின் நோக்கமாக, குறிஞ்சி நிலத்தை விட்டு முல்லை நிலத்திற்கு வருகின்றார்கள். விற்பனையின் ஊடாக வந்த மக்கள், சில நாட்களில் நேரமின்மையால் விற்பனை செய்யும் ஊரிலேயே தங்கும் சூழல் ஏற்படுகிறது. இவ்வாறு தங்குவது ஒருநாள், இருநாளாகி பல நாட்கள் தங்கி விடுகின்றார்கள். மலைக்கு ஒரு சில தினங்கள் சென்று தங்களுக்கு தேவையான உபகரணங்களை (நொச்சி, ஈஞ்சங் குச்சிகள்) அறுத்து வருவார்கள். அறுத்து வந்த குச்சிகளைப் பயன்படுத்தி கைவினைப் பொருட்களைச் செய்வார்கள் (புட்டு, மொரம், கூடை). ஊருக்கு ஒதுக்குப்புறத்தில் ஆலமரம் மற்றும் புளியமரத்தில் தங்கத் தொடங்கி, பிறகு தலித்துகள் வாழுமிடத்திற்கும், இடைநிலை சாதிகள் வாழுமிடத்திற்கும் இடையே ஏதாகிலும் வெற்றிடத்தில் குடிசை போடத் தொடங்குகின்றார்கள். வெற்றிடம் கிடைக்கும் பட்சத்தில் கிராம மக்கள் வெளியே (toilet) போகிற இடத்திலோ அல்லது வெளியே போனவுடன் கழுவுகின்ற குட்டைகளின்



படிப்பகம்

www.padippakam.com

கரையோரத்திலோ குடிசை போட்டு வாழ்கிறார்கள். இக்குட்டைகள் பீய்க்குட்டை, பறையன் குட்டை, குறவன் குட்டை, கோணங்குட்டை போன்ற பெயர்களில் அவ்வூர் மக்களால் அழைக்கப்படுகின்றன. குடிசைகளின் பாதியளவிற்கு குட்டிச் சுவர் எழுப்பி பன்றிகள் அடைவதற்கு பயன்படுத்துகின்றார்கள்.

இவர்களின் முதன்மைத் தொழிலென்பது பன்றி வளர்ப்புத் தொழிலாகும். பன்றி போடும் விட்டைகளை பொறுக்கிக் குவியலாக வைத்திருந்து மூட்டை போட்டு விற்பார்கள். இவ்விட்டை உரத்திற்கு பயன்படுவதாகக் கூறப்படுகின்றது. (சிவகாமி, ஐஏஎஸ் அப்பா பழனிமுத்து அவர்கள் பன்றி விட்டை வியாபாரம் செய்ததாக கட்டுரையாளரிடம் தாத்தா திரு. க. பெருமாள், வயது 64 அவர்கள் கூறியுள்ளார்). ஈஞ்சங்குச்சி, நொச்சிக்குச்சி, மூங்கில் வாரை ஆகியவற்றைக் கொண்டு புட்டி, மொரம், சொளவு, கூடை, தாங்கடை (உணவு கொட்டி ஆற்றுவது), வெட்டிக் கூடை, மூங்கில் கூடை போன்ற கைவினைப் பொருட்களை செய்து விற்பார்கள். விற்பதின் மூலம் கிடைக்கும் வரகு, சோளம், கம்பு, கேழ்வரகு, நெல் போன்ற தானியங்களை உணவிற்குப் பயன்படுத்துவார்கள். தங்களுக்கு பிடிக்காத தானிய வகைகளை அவ்வூரில் தலித் மக்களிடம் விற்று விடுவார்கள். தற்போது இவ்வாறான தானிய வகைகளை பெரம்பலூர் வட்டாரத்தில் விதைப்பது கிடையாது. ஆகையால் விற்கும் பொருட்களுக்குப் பதில் பணம் வாங்கி, நெல் அரிசி உணவை உண்கின்றார்கள். சோற்றிற்கு இனமாக பன்றி இறைச்சியை முதன்மையாக சாப்பிடுகின்றனர். எலி, அணில், காட்டுப்பூனை, முயல், நரி ஆகிய இறைச்சி வகைகள் கிடைக்கும்போது உண்பார்கள். சிறார் முதல் பெரியோர் வரை ஆண், பெண் இருபாலரும் வேறுபாடின்றி சாராயம், கள் குடிக்கும் பழக்கம் உண்டு.

இவர்களின் பெண்களுக்கு பூப்பெய்வதற்கு முன்பே திருமணம் நடைபெறுகின்றது. பெண் கற்பு குறித்து மிக உயர்வான எண்ணத்தை வைத்துள்ளனர். குழந்தைகள் இயல்பாய் பிறக்கின்றன. சடங்குகள் என்பது தற்போது எவ்வூரில் தங்கியுள்ளார்களோ அவ்வூர் மக்களின் சடங்குகள் போன்றே சிலவற்றை நிகழ்த்துகின்றார்கள்.

பேசும் மொழி என்ற நிலையில் அவதானிக்கும் போது ஆதித்தமிழ் மொழியாகவும் இன்றைய மலையாள மொழியின் கூறுகளும் காணப்படுகின்றன. கல்வியறிவு என்பது இவர்களிடத்தில் கிடையாது. தங்களது பிள்ளைகளை தாங்கள் வாழும் ஊரில் பள்ளியிருந்தால் அனுப்புகின்றார்கள். இப்பிள்ளைகள் ஐந்தாறு வகுப்புகளுக்கு மேல் படிக்கும் நிலை அமையவில்லை. சிறுவயது முதலே தங்களின் தொழில் சார்ந்து ஈடுபட்டு வருகின்றார்கள்.

தெய்வ நம்பிக்கை என்பது அவர்களின் பூர்வீகமான மலைக் கடவுளாகிய முருகனை வழிபடுவதாகவும், மலையைக் கடவுளாகவும், இயற்கைக் கடவுளாக சூரியனையும் வணங்குவதாகக் கூறுகின்றார்கள். தங்களது தொழிலைத் தொடங்கும் முன் சூரியனை வணங்கிவிட்டு தொடங்குகின்றார்கள். தங்கள் குடியிருக்கும் ஊரின் சிறு தெய்வங்களையும் வழிபடுவார்கள். அரியலூர் அருகில் கள்ளங்குறிச்சி திருவிழாவிற்கு சொந்த பந்தங்கள் அனைவரும் செல்வார்களாம். தாங்கள் குடியிருக்கும் ஊரில் திருவிழாவென்றாலும் அவர்களது உறவினருக்கு அழைப்பு விடுப்பார்கள். இவ்வாறான செயல்பாடுகள் கிராமங்களில் திருவிழாக் காலங்களில் உறவினர்களுக்கு அழைப்பு விடுத்து அழைக்கும் பழக்கம் இன்றும் உண்டு. விழாக் காலத்தில் தாங்கள் வாழும் ஊர்மக்கள் என்ன செய்கின்றார்களோ, அதன் தாக்கம் இவர்களிடத்தில் உள்ளது.

இம்முதுமக்களின் மொழி, பண்பாடு ஆகியவற்றை மீட்டுருவாக்கம் செய்வதன் மூலமாக நமது பழமையான வாழ்க்கையையும், சொற்களையும் கண்டு கொள்வதற்கு ஏதுவாகும். குறவர்களின் வாழ்முறை இன்றும் இயற்கையோடு இழைந்த இயல்பாக வாழ்ந்து வருவது கண்கூடு. இன்றைய நவீன பொருட்கள், உடையணிகளுக்கு அப்பாற்பட்டு தங்களுக்கே உரிய தனிப்பாணியுடன் இரவும் பகலும் தங்களது தொழிலைச் செய்து வருகின்றார்கள்.

**கள ஆய்வு தகவலாளர்கள்**

| | |
|---|---|
| மொ. பொன்னன் | : வயது 28 |
| குட்டையன் | : வயது 30 |
| இடம் | : வயலப்பாடி - கீரனூர் |
| நாள் | : 15.01.2005 |
| நேரம் | : மாலை 3 மணி |

## நிகழ்

■ சத்யானந்தன்

இன்றியமையாத ஒரு காகிதத்தைத்
தேடும்போது தென்படும் எத்தனையோ
முகவரி அட்டைகள் கொடுத்தவரை
நினைவில் கொண்டு வர முடியாது

புகைப்படங்கள் நிறையவே உண்டு
அதில் தோளோடு தோள்
பொருத்திய நண்பன் எங்கே
தேடிப்பிடிக்க இயலாது

இலக்கும் இலட்சியமும் இறுகப்
பற்றும் வரை எது எது மையமாகி
எவ்வளவு அலைக்கழித்தது என
அசை போட்டே இறந்தது நிகழ்

மயங்கி கிறங்கி உறங்கி
எப்போதேனும் விழி திறந்தால் நேரம்
கிழம்ப நிழல்கள் எல்லாப் பக்கமும்
நீள வெளிச்சம் தேடினேன்

எப்போதும் மொட்டுக்கள் உள்ளே
விரிய பறவைகள் சிறகு உதறி
எப்போதும் புறப்படும் இலக்கிய உலகில்
எல்லா திசையும் கிழக்கு.



படிப்பகம்

www.padippakam.com

# வரலாறு யாரை விடுதலை செய்யும்..? 3

■ அ. ராமசாமி

## கிராமப் பஞ்சாயத்தும், அதன் நிர்வாகமும்

இந்திய மக்களின் நலன்களுக்கான திட்டத்தை நிறைவேற்ற மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தை ஏற்றுக்கொண்டு ஐம்பத்து ஐந்து ஆண்டுகள் ஆகி விட்டன. ஜனநாயக சமூகத்தில் அனைவரும் சட்டத்தின் முன் சமம் என்பது மட்டுமல்ல; அனைவரும் சட்டத்தை உருவாக்கும் சபைகளில் உறுப்பினர்களாகப் பங்கேற்க வேண்டும் என்பது அதன் அடிப்படை நோக்கம். நாட்டின் உயர் அவையான பாராளுமன்றம் தொடங்கி கிராம சபைகள் வரை சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரும் பங்கேற்று சட்டங்களை நிறைவேற்றுவதும் நிர்வாக நடைமுறைகளில் ஈடுபடுவதும் இதன் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இட ஒதுக்கீடு சார்ந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் நாட்டின் பேரமைப்புகளில் செவ்வனே நடைமுறையில் இருப்பதுபோலத் தோற்றமளிக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் சட்டமன்ற உறுப்பினர்களாகவும் சமுதாயத்தின் அடித்தளத்தில் நசுக்கப்பட்ட மக்களின் பிரதிகள் தேர்ந்தெடுக்கப்படுவது இதுவரை சிக்கலுக்குள்ளாகவில்லை. சிக்கலில்லாமல் தேர்ந்தெடுக்கப்படும் அடித்தள மக்களின் பிரதிநிதிகள் உண்மையில் அம்மக்களின் பிரதிநிதிகளாக விளங்குகிறார்களா? என்பது இன்னும் கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது. அப்படி அவர்கள் விளங்கியிருந்தால் சிக்கல்கள் இல்லாமல் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்களா என்பது கூடச் சந்தேகம்தான்.

இந்தியாவில் சாதியின் இருப்பும் அதிகாரமும் தேசம் தழுவியதாக இருந்தபோதும் அதன் கூர்மையான செலுத்து நிலை மிகக் குறுகிய வெளியில் கூடுதலாக இருக்கிறது என்பது கண்கூடான உண்மை. கிராமம் அல்லது ஊர் என்ற மிகச் சிறிய வெளியில் சாதி அதிகாரம் அதன் வன்முறையான முகத்தைத் திரும்பத் திரும்ப உறுதி செய்துகொண்டே இருக்கிறது. இந்த வெளிப்பாட்டின் அப்பட்டமான அடையாளங்களே பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டாங்கச்சியேந்தல் என்னும் கிராம பஞ்சாயத்துக்கள். நிகழ்காலத்தில் இப்பஞ்சாயத்துக்களில் ஜனநாயக நடைமுறைகளைச் செயல்படுத்த முடியாமல் போனதற்கான காரணங்கள் நிச்சயமாக நிகழ்காலத்திற்கு மட்டும் உரியதல்ல என்றே தோன்றுகிறது. வரலாற்றிலேயே அதற்கான காரணங்கள் இருந்தன. குறிப்பாக இந்தியாவில் பாரதூரமான மாற்றங்களைக் கொண்டு வந்த பிரிட்டானியர்களின் வருகைக்கு முன்பு இருந்த ஸ்தல நிர்வாகம் என்னும் உள்ளாட்சி அமைப்புக்களில் பிரிட்டானியர்கள் செலுத்திய கவனம் என்பது என்ன? அவர்கள் கட்டமைப்பு மற்றும் நிர்வாக ரீதியாக மாற்றங்களை ஏற்படுத்தினார்களா...? அதன் பின் சுதந்திர இந்திய அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் எத்தகையன என்றெல்லாம் விசாரிக்க வேண்டிய தேவைகள் இருக்கின்றன. இந்த விசாரணைகளின் வழியாக வரலாறு நிகழ்கால மாற்றத்திற்கு எவ்வளவு தூரம் பயன்படும் என்ற கேள்வியையும் எழுப்ப முடியும்.

பிரிட்டானியர்கள் இந்தியாவிற்குள் நுழைந்த போது மையப்படுத்தப்பட்ட இந்திய அரசு என்றோ தமிழகம் முழுவதையும் ஆண்ட ஒரு தமிழ்நாட்டரசோ கூட இருக்கவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். மையப்படுத்தப்படாத நிர்வாக அமைப்பைக் கொண்ட வட்டாரத் தலைவர்களோடு தான் ஆங்கிலேயர்கள் உறவும் பகையும் கொள்ள வேண்டியிருந்தது. அக்கால வட்டாரத் தலைவர்களுக்கு இந்தியாவில் அந்தந்த மொழிப் பிரயோகத்திற்கேற்ப வெவ்வேறு பெயர்கள் வழங்கி வந்தன. தமிழ்நாட்டில் அவர்களின் பொதுப்பெயர் பாளையக்காரர் என்பது. பாளையப்பட்டு என அழைக்கப்பட்ட ஆட்சிப் பிரதேசத்தின் தலைவன் பாளையக்காரன். இந்த பாளையக்கார முறை தமிழ்நாட்டில் அறிமுகமானது விசயநகர அரசின் நாயக்க முறையின் வழியேதான் என்பது வரலாற்றாசிரியர்களின் முடிவு. நாயக்க முறையிலும் பாளையக்கார முறையிலும் கிராம நிர்வாகம் செய்வதற்கு இருந்த முறைக்குப் பெயர் ஆயங்கார முறை என்பது. ஆயங்கார முறையைப் பற்றி டி.என். வெங்கடராமையா, ஏ. கிருஷ்ணசாமி போன்றோர்கள் இவ்வாறு கூறுகின்றனர்.

> ஆயங்கார முறை பன்னிரண்டு உறுப்பினர்களைக் கொண்டது. முதல் மூன்று நபர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்படுவர். கர்ணம், மணியகாரர், தலையாரி என்பவர்களே அவர்கள். இதர உறுப்பினர்கள் புரோகிதர், பொற்கொல்லர், நீர்கண்டி அல்லது மடையன் (நீர் பாய்ச்சுபவன்), கொல்லன், தச்சன், குயவன், வண்ணான், அம்பட்டையன், செருப்புத் தைப்பவன் என்பவர்கள். இவர்கள் அரசாங்க ஊழியர்கள் அல்லர். அரசு இவர்களுக்குச் சம்பளமாக எதுவும் தரவில்லை. ஆனால் வரியில்லாத (இறையிலி) நிலங்களை மானியமாக அளித்திருந்தது. *(A. Krishnaswamy, Tamil Country under Vijayanagar, PP. 104-105)*



படிப்பகம்

www.padippakam.com

அரசனைத் தலைவனாகக் கொண்ட மைய அமைப்பும் பாளையக்காரர்களைத் தலைவர்களாகக் கொண்ட உள் நிர்வாக அமைப்பும் - வட்டார ஆட்சியும் - நாயக்கர்காலத் தமிழகத்தில் இருந்தன. விசயநகரத்தின் அமரநாயக முறையை அடியொற்றி, கி.பி.1538-இல் விசுவநாத நாயக்கன் காலத்தில் மதுரைப் பகுதி பாளையங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தளவாய் அரியநாயக முதலி முன்னின்று பாளையங்களாகப் பிரித்துள்ளார். நாயக்கர்களுடன் வந்த தெலுங்கு ராணுவ அதிகாரிகளுக்கு முன்னுரிமையும், தமிழர்களில் அவ்வவ்வட்டாரத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தவர்களுக்கு அடுத்தடுத்து முக்கியத்துவமும் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ராமய்யன் அம்மானையில் இடம்பெறும் 75 பாளையக்காரர்களில் 38 பேர் தெலுங்குப் பாளையக்காரர்கள்; 13 பேர் இசுலாமியப் பாளையக்காரர்கள்; 24 பேர் அந்தப் பகுதியில் செல்வாக்குடன் இருந்த தமிழ்ச் சாதியினர் (தேவன், கவுண்டன், வன்னியன், மாறன், மூவரையன், நாடன், பூசாரி, அய்யன் முதலான பட்டப் பெயர்களில் அவர்கள் குறிக்கப்படுகின்றனர். (ராமய்யன் அம்மானை பக். 23-26).

நாயக்கர்கள் காலத்தில் இருந்த பாளையக்கார முறை மற்றும் கிராம சபை அமைப்பான ஆயங்கார முறை என்பனவற்றில் உறுப்பினர்களாகவோ இறையிலி நிலங்கள் பெறத்தக்கவர்களாகவோ இன்று தலித்துகள் என்ற பொதுப்பெயரில் அழைக்கப்படும் அட்டவணைச் சாதியினர் எவரும் இல்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. வரலாற்று ஆசிரியர்கள் ஆயங்கார முறையின் பன்னிரண்டு உறுப்பினர்களைப் பட்டியல் இட்டபோதும் அவர்கள் அனைவரும் அதிகாரம் உடையவர்கள் - இறையிலி நிலங்கள் அல்லது சலுகைகள் பெற்றவர்கள் அல்ல என்பதும் கவனிக்க வேண்டிய ஒன்று. கர்ணம், மணியகாரர், தலையாரி போன்றவர்கள் மானியமாக இறையிலி நிலங்களைப் பெற்றுக் கொள்ள, இதர உறுப்பினர்கள் பொது நிலங்களிலிருந்து விளைச்சலில் பங்கு பெறும் உரிமையைப் பெற்றிருந்தனர். இவர்களுக்குத் தங்களின் உழைப்பை அளந்துவிட்டுபட்ட கஷ்டங்களையே பள்ளு நூல்களில் வரும் பள்ளர்களின் புலம்பல்களாகவும் மூத்த பள்ளி - இளைய பள்ளிக் குடும்பச் சண்டைகளாகவும் படிக்கிறோம்.

**பிரிட்டானியர்களின் வருகையும் கிராம நிர்வாகமும்**

வணிக விரிவாக்கத்திற்காக இந்தியாவிற்குள் நுழைந்த பிரிட்டானியர்கள் ஆட்சியதிகாரத்தில் அமர்ந்ததும் இந்தியச் சமுதாயத்தின் அன்றாடச் செயல்பாடுகளிலும் சிந்தனை முறைகளிலும் மாற்றங்களை உண்டாக்கிவிட்டுச் சென்ற கதைகள் இன்று பழங்கதைகள். தொடக்கத்தில் இந்தியக் கிராமங்களைப் படித்துப் புரிந்துகொள்ள முயன்ற ஐரோப்பியர்களில் அரசு நிர்வாகம் சார்ந்தவர்களைவிட, சமயம் பரப்புதலில் ஆர்வம் கொண்ட பாதிரிகளின் ஈடுபாடும் கல்வி மற்றும் சமூகத்தொண்டில் ஈடுபட்டவர்களின் ஈடுபாடுகளுமே அதிகம் என்பது பலரும் அறிந்ததே. எட்கர் தர்ஸ்டனின் தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்

**நுண்ணியல் போராட்டங்கள் ஜனநாயக நடைமுறைகளிலிருந்து விலகிப் போவதாக இருக்கவும் வாய்ப்புக்களுண்டு. அப்படி விலகிப் போக நேர்ந்தால் அதற்கான பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள் போராட்டத்தை நடத்துபவர்கள் அல்ல; போராடத் தூண்டியவர்களே!**

போன்ற தொகுப்புக்கள் அக்காலச் சாதி அமைப்பைப் பிரிட்டானியர்கள் புரிந்துகொள்ள முயன்றதின் வெளிப்பாடுகள். கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், ஜி.யூ. போப்பின் திருக்குறள் மற்றும் திருவாசகப் பத்தி போன்றன தமிழ்நாட்டின் மனநிலையைப் புரிந்துகொள்ள எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்பனவும் கவனிக்க வேண்டிய ஒன்று. கல்வி, மருத்துவம், போக்குவரத்து, சட்டம் ஒழுங்கு எனப் பலவற்றில் தங்களின் கட்டமைப்புக்களை இந்தியாவிற்கு அறிமுகப்படுத்திய பிரிட்டானியர்கள் இந்தியக் கிராமிய நிர்வாகத்தில் செய்த மாற்றங்கள் பற்றி கருத்து வேறுபாடுகள் பல உள்ளன. மாவட்ட அளவு நிர்வாகத்தில் மட்டுமே அவர்கள் கவனம் செலுத்தியுள்ளனர்; கிராம நிர்வாகத்தில் அவர்கள் மாற்றம் எதுவும் செய்யவில்லை என்பது வைக்கப்படும் விமரிசனம்.

தங்களின் ஆட்சி அதிகாரம் ஏற்படுவதற்கு முன்பிருந்த நாயக்கர் கால நிர்வாகக் கட்டமைப்பு, கிராம நிர்வாகம், பண்ணை முறை முதலியவற்றைப் பற்றிய தகவல்களைத் தொகுத்துக்கொண்ட பிரிட்டானியர்கள் தங்களின் நிர்வாக முறைக்கு வசதியாக இன்னொரு முறையைப் புகுத்தினர். அந்த முறையின் பெயர் ஜமீந்தாரி முறை என்பது. ஜமீந்தாரி முறை வெறும் வரிவசூல் முறைதானேயொழிய அடிப்படையான மாற்றத்தைக் கொண்டுவந்த முறை அல்ல. பிரிட்டானிய அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய வரிவசூலை நடத்திக் கொள்ள அம்முறை பயன்பட்டுள்ளது; அவ்வளவே. வரியைக் கட்டுவதற்கு மக்களை, நிலத்தில் உழுது பயிரிட்டவர்களை இந்த ஜமீந்தார்கள் எத்தகைய வன்முறையைக் கையாண்டு வசூல் செய்தார்கள் என்பது பற்றியோ பட்டினி போட்டார்கள் என்பது பற்றியோ அக்கறை கொள்ளவில்லை என்பதைப் பல இலக்கியங்களும் வரலாற்றுக் குறிப்புகளும் கூறுகின்றன.

இந்தியாவில் பிரிட்டானியர்கள் செய்த கட்டமைப்பு மாற்றங்கள் பற்றி விரிவாகப் பேசியுள்ள இடதுசாரிச் சிந்தனையாளர்களும் வரலாற்றாசிரியர்களும் கிராம நிர்வாகம் பற்றிய கணிப்பில் தொடர்ந்து பிழையான புரிதல்களையே வழங்கி வருகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

இந்தியச் சமூகத்தின் இருப்பு நிலை மற்றும் அரசின் தன்மை பற்றிய அவர்களின் கணிப்புகள் இன்றும் தெளிவற்றதாகவே இருக்கின்றன. அதனால் மாற்று நிலைப்பாடுகளை முன்வைக்கவும் அதற்கான போராட்ட முறைகளை அறிவிக்கவும் முடியாமல் தவிப்பதும் தொடர்கின்றன. கிராம அளவில் செய்ய வேண்டிய மாற்றங்களை 'விவசாயிகள் புரட்சி' என்ற பதத்தால் குறிப்பதில் உள்ள போதாமைகள் பற்றி உணரப்பட்டதாகத் தெரியவில்லை. விவசாயிகள் என்பதில் யாரெல்லாம் அடக்கம் என்பது பற்றிக்கூட தெளிவான பார்வைகள் இன்றில்லை. பெரும் பண்ணைக்குச் சொந்தக்காரனான ஆதிக்கச் சாதிக் காரனைத் தனது சொந்த சாதிக்காரனாகவும் தன்னையொத்த ஒற்றை ஏர்மாடு வைத்திருக்கும் சிறு விவசாயியை வேற்றாளாகவும் பார்க்கும் பார்வை வரக் காரணங்கள் என்ன என்பது பற்றி பேச்சுக்கள் தேவைப் படுகின்றன. நிலங்கள் எதுவுமில்லாத இடைநிலைச் சாதிக்கார விவசாயக் கூலியிடம் சாதி ஆதிக்க உணர்வு தங்கி இருப்பதற்கான காரணம் பற்றிய பேச்சுக்களே இல்லை. 'இனி நீ தேவையில்லை' எனக் கூறி கிராமம் வெளியே தள்ளி நகரத்தின் உதிரியாக ஆக்கியபின்னும் அது தந்த ஆதிக்க உணர்வை உதற முடியாமல் தவிக்கும் இடை நிலைச்சாதி விவசாய மக்கள் நமது நகரங்களில் படும் பாடுகள் பலப்பல. அவர்களின் பாடுகளைத்தான் நமது புனைகதைக்காரர்களும் மண்சார் கவிகளும் வாயில் நுரை தள்ளத் தள்ளப் பேசிக்கொண்டிருக்கின்றனர். இழந்த சொர்க்கத்தை மீட்டெடுக்கும் அவர்களின் விருப்பங்களில் ஒன்றாக தலித்துகளின்மேல் செலுத்திய அதிகாரமும் இருக் கிறது என்று சொன்னால் யாரும் மறுத்துவிட முடி யாது. இடம்பெயர்தலைத் தவிப்பின் பாடாகப் பேசும் பேச்சுக்களின் பின்னணியில் எல்லாவற்றையும் வரிசைப்படுத்திப் புரிந்துகொள்ளும் இந்தியச் சாதிய அறிதல் முறை இன்னும் தொடர்கிறது என்பதுதான் உண்மை. இந்தியக் கிராமங்கள் பற்றிய கதைகளில் மட்டுமல்ல, அவைகளின் வரலாற்றிலும் கூட ஐரோப் பியர்களின் அறிதல் முறையான எதிர்வுகளால் புரிந்து கொள்ளும் முறை (binary opposition) இந்தியச் சமூகத்தின் அறிதல் முறையாக மாற முடியாமலேயே தோல்வியுற்றுத் திரும்பிய கதையும் இருக்கிறது.

காரல் மார்க்ஸ் இந்தியாவைப் பற்றி எழுதிய குறிப்புக்களை இந்த இடத்தில் நாம் நினைவில் கொண்டு வரலாம் என்று நினைக்கிறேன். ஆங்கில ஆட்சி இந்தியாவில் ஏற்படுவதற்கு முன்பு நிலவிய சமுதாய அமைப்பை 'ஆசிய சமூக அமைப்பு' (Asiatic Society) எனவும், அதன் உற்பத்தி மற்றும் உற்பத்திப் பகிர்வினைக் குறிக்கும் சொல்லாக ஆசிய உற்பத்தி முறை (Asiatic Mode of Production) என்ற சொல்லையும் கூறுகின்றனர். இந்த அமைப்பையும் உற்பத்தி முறை யையும் மிகுந்த நேர்மறைக் கூறாகப் பார்க்கும் காரல் மார்க்ஸ்,

> "சமூகம் முழுதும் இந்த ஒரு டஜன் பேர்களுக்கான (கிராமசபை உறுப்பினர் கள்) செலவை ஏற்கிறது. மக்கட் தொகை மிகுந்தால் காலி நிலத்தில் பழைய சமூகத்தின் பாணியில் புதிய சமூகம் நிறு வப்படும். இந்தச் சமூகங்கள் தம் தேவை களைத் தாமே பூர்த்தி செய்துகொள் பவை. இவற்றில் உற்பத்திக்கான எளிய ஏற்பாடு அதே வடிவத்தில் மீண்டும் தொடரும். ஒரு சமூகம் தற்செயலாக அழிந்தால் அதே இடத்தில் மற்றொரு சமூ கம் அதே பெயருடன் முளைக்கும் ஆசி யச் சமூகங்களின் மாறுபடாத தன்மை யின் ரகசியத்திற்குத் திறவுகோல் அதன் எளிமையே" *(மூலதனம் 1:11:4)*

இந்த எளிய வடிவம் இந்தியாவில் நீண்டகாலம் நிலவியது, ஆங்கிலேயரின் ஆட்சியே அதனை மாற் றியது என்றும் மார்க்ஸ் எழுதுகிறார்.

"இந்துஸ்தானத்தில் உள்நாட்டுப் போர்களும், படையெடுப்புக்களும், புரட்சிகளும், வென்றெடுக்கும் ஆக்கிரமிப்புக்களும், பஞ்சங்களும் அடுத்தடுத்து நிகழ்ந்தன என்பதும், அவை சிக்கலானவை என்ப தோடு விரைவாக நிகழ்ந்து பெரிய அழிவுகளை ஏற் படுத்தின என்பதும் உண்மையே. ஆனால் அவை யெல் லாம் சமுதாயத்தின் மேற்பரப்பையே பாதித்தன. இங்கிலாந்தோ இந்திய சமுதாயத்தின் முழு அமைப் பையும் சின்னா பின்னமாக்கிவிட்டது." *(மார்க்ஸ் ஏங்கல்ஸ், இந்தியாவைப் பற்றி ப. 21)*

'எளிமையான திறவுகோல்' என்ற சொல்லைப் பயன்படுத்தி எழுதும் மார்க்ஸ், ஆசியச் சமூகங்களின் நேர்மறைத் தன்மையை அதிகம் பாராட்டியதோடு அதன் அழிவைக் கருதி வருத்தமும் அடைந்துள்ளார். ஆனால் இவ்வருத்தமும் தேவையற்றது என்றே கூறத்தோன்றுகிறது.

இந்தியக் கிராம நிர்வாகத்தில் எப்பொழுதாவது, நிலத்தில் உழுது பயிரிட்டு வேலை செய்த உழைப் பாளிகளுக்கு, இன்றைய வார்த்தையில் கூறுவதானால் தலித்துகளுக்கு இடம் இருந்ததா? அவர்களின் அடிப் படைத் தேவைகளை அந்தக் கிராம அமைப்பும் அதி காரப் படிநிலைகளும் பொருட்படுத்தியனவா என்று கேள்வியெழுப்பினால் விடை 'இல்லை' என்பதாகவே கிடைக்கும். சமூகத்தின் மேல் தட்டு உறுப்பினர்களுக் கான தேவையைப் பூர்த்தி செய்யும்படி வற்புறுத்தப் பட்ட வன்முறை அமைப்பையே 17-ஆம் நூற்றாண்டுப் பள்ளு நூல்களில் இடம் பெறும் பண்ணை முறையும் விளைச்சலின் பங்கீடுகளும் காட்டுகின்றன.

இந்தியாவில் தன்னிறைவு பெற்ற கிராம சமுதாயம் நிலவியதாகச் சொல்லப்படுவதும் கிராம உறுப்பி னர்கள் ஒவ்வொருவரின் தேவையும் அந்தக் கிராமத் திற்குள்ளேயே பூர்த்தி செய்யப்பட்டது எனச் சொல்லப் படுவதும் கூட முழுமையான உண்மை அல்ல; அந்தக் கிராமச் சமுதாயம் பிரிட்டானியர்களின் அதிகாரப் பரவலால் சிதைக்கப்பட்டது என்பதும் அதே போல் முழுமையான உண்மையாக இருக்க வாய்ப்பில்லை என்றே கூறலாம். ஏனெனில் அதன் சிதைவு அவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

வருவதற்கு முன்பிருந்த இந்துக்களின் ஆட்சிக்காலத்தி லேயே தொடங்கிவிட்டது என்பதற்கு இலக்கியங்கள் சான்றுகளைத் தருகின்றன. கிராமசபை உறுப்பினர்கள் என்று கூற முடியாவிட்டாலும் கிராமத்திற்குத் தேவையான பொதுச் சேவைகளைச் செய்த பலரும் மோசமான வாழ்நிலையில் இருந்ததைக் காட்டுகின்றன இலக்கியங்கள். கவி கற்றவர் - புலவர், கணிகற்றவர் - சோதிடர், கம்மாளர் - கொல்லன், ஓவியம் கற்றவன், உபாத்திகள் - ஆசிரியர்கள், குவி வைக்கும் ஒட்டர்கள், குயவர்கள், குருக்கள் - பஞ்சாங்கப் புரோகிதர்கள் மற்றும் கூத்தாடிகள் முதலானவர்கள் வறுமைக்குரிய வர்களாக இருந்தனர் எனக்கூறுகிறது படிக்காசுப்புல வரின் தனிப்பாடல். இதே போல கடன் கொடுக்கக் கூடாதவர்கள் பட்டியல் ஒன்றை - வாத்தியார், குரு, கவிவாணர், மறையோர், பண்டிதர்கள், தச்சாண்டி, தட்டான், சவரகன் - கூறி இவர்களிடம் கொடுத்த கடன் திரும்ப வராது எனக் கூறுகிறது கயிலாச நாதர் சதகம் (31). இவர்களின் அடிப்படைத் தேவைகளுக்கு இந்தக் கிராம சமுதாயம் பொறுப்பேற்கும் வலுவை இழந்திருந்ததா..? அல்லது அப்படியொரு பொறுப்பு எப்பொழுதுமே இருந்ததில்லையா..? என்ற கேள்வி எழுவது கூட நியாயமான ஒன்றுதான்.

ஜமீந்தார்கள், ஆயங்கார முறையிலிருந்த கர்ணம், மணியகாரர், தலையாரி போன்றவர்களைத் தங்கள் ஊழியர்களாக மாற்றிக்கொண்டு கொடுமையான வரிவசூல் செய்துள்ளனர். இம்மூன்று உறுப்பினர் களுடன் தோட்டி என்ற இன்னொரு உறுப்பினரும் ஜமீந்தாரி முறையில் வரிவசூல் அமைப்பின் அங்கமாக ஆகியுள்ளார். தோட்டி என்று அழைக்கப்பட்ட அவரின் பணி அரசாங்க ஆணைகளை மக்களிடம் அறிவிப்பது மட்டுமே. இந்தப் பதவி தோல் தொழிலுடன் தொடர் கொண்டிருந்த சக்கிலி அல்லது பறையர் சாதியினரின் உரிமையாக இருந்துள்ளது. அறிவிப்பது மட்டுமே அதன் வேலை என்பதால் இப்பதவி தெருவுடன் நின்றுவிடும் தன்மையுடையது. பிரிட்டானியர்கள் வெளியேறிய பின்னர் வந்த கிராம நிர்வாகம் சார்ந்த மாற்றங்கள் எல்லாம் கூட இந்தத் தடத்திலேயே பயணம் செய்தன.

**சமீபத்திய மாற்றத்தின் போதாமைகள்**

சுதந்திர இந்திய அரசாங்கமும் தொடக்க நிலையில் கிராம நிர்வாகம் சார்ந்து பெரிய அளவு மாற்றங்கள் எதனையும் கொண்டுவரவில்லை. கிராம நிலங்கள் மீது அதிகாரம் செலுத்தவல்ல பதவிகள் ஒழிக்கப்படாமல் அப்படியே தொடர்ந்தன. அதற்குப் பதிலாக கிராமப் பஞ்சாயத்துக்களில் அட்டவனை சாதியினர் முதலில் நியமன உறுப்பினர்களாக ஆக்கப்பட்டனர்; அந்த நியமனங்கள் இட ஒதுக்கீடு நடைமுறையில் உள்ளது எனக் காட்ட மட்டுமே பயன்பட்டன. அதிகாரமற்ற அந்த உறுப்பினர்களால் தலித்துகளுக்கு வழங்கப் பட்டிருந்த பஞ்சமி நிலங்களின் மீது கூட உரிமை கொண்டாடி திரும்பப் பெற்றுத்தர முடியவில்லை. தொடர்ந்து எல்லா நிலைகளிலும் தலைவர் உள்பட அனைத்துப் பதவிகளிலும் இட ஒதுக்கீட்டை உறுதி செய்த பஞ்சாயத்து ராஜ் அமலுக்கு வந்த பொழுது தான் கிராமங்களில் தாண்டவமாடும் சாதி அதிகாரம் வெளியே தெரிய ஆரம்பித்துள்ளது.

ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பதுகளில் திரு. எம்.ஜி. ராமச்சந்திரன் முதல்வராக இருந்தபோது கொஞ்சம் முற்போக்கான ஒரு திட்டம் முன்வைக்கப் பட்டது. பாரம்பரியமான கிராம முன்சீப், கர்ணம், தலையாரி போன்ற பதவிகளின் தன்மை ஒழிக்கப்பட்டு அவர்கள் அரசாங்கச் சம்பளம் வாங்கும் ஊழியர்களாக மாற்றப்பட்டார்கள். அப்போதும் கூட இடைநிலைச் சாதிகள் தங்கள் அதிகாரத்தை விட்டுக் கொடுக்காமல் போராட்டம் நடத்தின. அதனால் முழுவதும் புதிய ஆட்களைத் தேர்வு செய்யாமல் பழைய பாரம்பரியக் குடும்பங்களில் படித்தவர்கள் இருந்தால் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது என்பது நினைவுபடுத் திக்கொள்ள வேண்டிய ஒன்று. அந்தத் தொடர்ச்சி அதிகார உறவில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்குப் பதிலாக நடைமுறைகளில் புதிய வழிகளை மட்டுமே கொண்டு வந்தது.

அவ்வாறு செய்யாமல் படித்த எல்லாச் சாதிகளி லிருந்தும் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு கிராம நிர்வாக அதிகாரிகள் நியமனம் நடந்திருந்தால் பழைய நிலவுடைமை அமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கக்கூடும். அதிகாரத்தின் உறுப்பினர்களாக ஆகிவிட்ட அடித்தள சாதி ஊழி யர்களை, ஆதிக்க சாதிகள் அணுகும் போக்கில், மனநிலையில் மாற்றங்களும் ஏற்பட்டிருக்க வாய்ப்பு களுண்டு. அந்த மாற்றம் நடைபெறாமல் தடுத்ததில் பாரம்பரியமான கர்ணம், கிராம முன்சீப் குடும் பத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கல்வித் தகுதியில் கூட சலுகைகள் வழங்கப்பட்ட உத்தரவுக்கு முக்கியப் பங்குண்டு. அந்த உத்தரவை இடைநிலைச்சாதி அர சியல்வாதிகளின் போராட்டங்களே பெற்றுத் தந்தன என்பது இங்கு நினைத்துக்கொள்ள வேண்டிய ஒன்று.

இந்நிலையில், குறுகிய வெளிகளில் எல்லா ஜனநாயக நடைமுறைகளையும் மீறி வன்முறையுடன் வெளிப்படுத்தித் தனது இருப்பைக் காட்டும் சாதி அதிகாரத்தைக் கேள்விக்குள்ளாக்குவதற்குப் பேரளவு (Macro) அரசியல் நடவடிக்கைகள் மட்டும் போதாது. மைய அரசு, மாநில அரசு, அவற்றின் நிர்வாக எந்திரங் கள் என அனைத்தையும் அம்பலப்படுத்த வேண்டும். அதற்கான அரசியல் இயக்கங்கள் கட்டும் அதே நேரத்தில் நுண்ணியல் (Micro) போராட்ட உத்திகளும் வகுக்கப்படவும் வேண்டும்.

அத்தகைய நுண்ணியல் போராட்டங்கள் ஜனநாயக நடைமுறைகளிலிருந்து விலகிப் போவதாக இருக்கவும் வாய்ப்புக்களுண்டு. அப்படி விலகிப் போக நேர்ந்தால் அதற்கான பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ள வேண்டியவர்கள் போராட்டத்தை நடத்து பவர்கள் அல்ல; போராடத் தூண்டியவர்களே!

●



படிப்பகம்

www.padippakam.com

# மஞ்சள் காமாலை தடுப்பூசியின் திணிப்பு

## அரசு / மருத்துவர்களின் காமாலை பார்வையின் விளைவே

■ மருத்துவர் வீ. புகழேந்தி

குறிப்பிட்ட ஒரு வியாதியால் ஒரு நாட்டில், இடத்தில் அதன் பாதிப்பு/இறப்பு விகிதம் அதிகம் இருக்குமானால், தடுப்பூசியின் காரணமாக அது உறுதியாக தடுக்கப்படும் என்ற விசயம் அறிவியல் பூர்வமாக நிருபிக்கப்பட்டிருந்தால், செலவுகுறைந்த மாற்று வழிகளில் அவ்வியாதியைத் தடுக்க மாற்று வழிகள் இல்லை என இருக்கும் சமயத்தில் மட்டுமே தடுப்பூசியை பயன்படுத்தி வியாதி வராமல் காப்பது நன்மை பயக்கும்.

நம் நாட்டில் மஞ்சள் காமாலை தடுப்பூசியை அமலுக்கு கொண்டுவர, அரசு / மருத்துவர்கள் / மருந்துக் குழுமங்கள் சொல்கின்ற காரணம். 1. இது ஒரு ஆட்கொல்லி வியாதி, 2. இதன் பாதிப்பு மக்களிடையே மிகவும் அதிகம். 10% மக்கள் மஞ்சள் காமாலை நோய் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். 3.இந்நோய் பாதிப்பின் காரணமாக ஈரல் முழுவதுமாக பாதிக்கப்பட்டு இறப்பு நிகழ்வது. 4. இந்நோய் காரணமாக ஈரல் புற்றுநோய் பாதிப்பால் பலரும் இறப்பது. 5. இந்த தடுப்பூசி நம்பகமானது, பாதுகாப்பானது போன்றவை. இனி இவை உண்மைதானா? மக்கள் நலன்தானா இந்த தடுப்பூசியை அறிமுகப்படுத்துவதற்குக் காரணம்? என ஆராய்ந்து பார்க்கலாம்.

ஐதராபாத்தின் People for Economical and Effective Medicare (PEEM) என்னும் இயக்கத்தைச் சேர்ந்த இருதய அறுவை சிகிச்சை நிபுணர் திரு. பாஸ்கர் ராவ் “ஆட்கொல்லி, கொள்ளை நோயாக இருக்கும் பட்சத்தில் மட்டும் (அல்லது) கொள்ளை நோயாக உருவாகக் கூடிய அபாயமுள்ள வியாதிகளுக்கு எதிராக மட்டுமே தடுப்பூசியை பயன்படுத்த வேண்டும். இந்தியாவைப் பொறுத்தமட்டில் இது கொள்ளை நோயாகவோ (அ) உருவாகவோ வாய்ப்பு இல்லை என்பதை இருக்கின்ற புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. மேலும் இது ஆள்கொல்லி வியாதி என்பதும் உண்மைக்குப் புறம்பானது. இவ்வியாதியால் பாதிக்கப்பட்ட பெரும்பாலோர் தானாகவே இயல்பு நிலைக்கு திரும்பி விடுகின்றனர்” என்று கூறுகிறார்.

இவ்வியாதி பற்றிய உலகின் மிகச் சிறந்த வல்லுநர் திருமதி Dr. ஷீலா செர்லாக் “மஞ்சள் காமாலை ஏற்படுத்தும் இக்கிருமிகள் (Hepatitis 'B' Virus) 100 பேர் உடம்பில் உட்புகும்போது 95 பேருக்கு அதன் உடனடித் தாக்கம் (Acute Infection) தெரியும். அதில் 94 பேர் தானாகவே இயல்பு நிலைக்கு திரும்பி விடுவர். இவ்வியாதியால் பாதிக்கப்பட்ட 1%-க்கும் கீழானவர்களுக்கே இறப்பு நிகழும்போது, இதை எப்படி ஆட்கொல்லி வியாதி என அழைக்க முடியும்” என்கிறார்.

இந்தியாவைப் பொறுத்தவரை இவ்வியாதியின் உடனடித் தாக்கத்திற்கு ஆளானவர்கள் குறித்தான புள்ளி விவரங்கள் / ஆய்வுகள் இல்லை. இக்கிருமித் தாக்கத்தின் காரணமாக பாதிப்பு ஏதும் சிறிதளவு இல்லாமலும், ஆனால் அதே சமயம் இக்கிருமியை பிறருக்கு பரப்பக்கூடிய தன்மை கொண்டவர்கள் (Carriers) பற்றிய ஆய்வு / புள்ளி விவரங்கள் மிகவும் சிறிதளவில் உள்ளன. இவ்வாய்வுகளில் நோய் சுமப்பவர்கள் (Carriers) 1.62% - 4% எனத் தெரிய வந்துள்ளது. அதிலும் 1% இவ்வியாதியின் தீவிரப் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர். ஆக விஷயம் இப்படி இருக்க ஆந்திர மாநிலத்தில் அனைத்து குழந்தைகளுக்கும் (4.5 லட்சம் குழந்தைகள்) Bill Gates Foundation உதவியுடன் கிடைத்த இத்தடுப்பூசிகள் போடுவது தேவைதானா? கொழுத்த வியாபாரியான Bill Gates-க்கு ஆந்திரக் குழந்தைகள் நலன் மீதுதான் அக்கறையா? அமெரிக்காவில் அனைத்து குழந்தைகளுக்கும் மஞ்சள் காமாலை தடுப்பூசி போடப்படுவது அவ்வூசிகளின் காரணமாக எழும் பெரும் பின் விளைவுகளுக்காக நிறுத்தப்பட்டிருக்கும் நிலையில், அந்த குழந்தைகள் மீது இல்லாத கரிசனம் Bill Gates-க்கு ஆந்திரக் குழந்தைகள் மீது மட்டும் எழக் காரணமென்ன? இந்தியாவிலேயே நல்ல, தரமான மஞ்சள் காமாலை தடுப்பூசி குறைந்த விலையிலேயே உற்பத்தி செய்யப்படுகின்ற இந்நிலையில் இந்த தடுப்பூசிகளை வாங்குவதற்குப் பதிலாக உலக சுகாதார நிறுவனம் (WHO) பரிந்துரைக்கும் விலை உயர்ந்த மருந்துக் குழுமத்தில் இருந்து வாங்கி ஆந்திரக் குழந்தைகளுக்கு கொடுப்பது, வெளிநாட்டு மருந்துக் குழுமத்தின் வணிக நலனை கருத்தில் கொண்டு ஆந்திரக் குழந்தைகளை சோதனை விலங்குகளாக மாற்றுவதாகவே எடுத்துக் கொள்ள முடியும்.

**இனி மஞ்சள் காமாலை (Hepatitis 'B') குறித்து உலக வல்லுநர்களின் கூற்றை பார்ப்போம்**

1. சிறு குழந்தைகளுக்கு (1 வயதிற்குக் கீழ்) மஞ்சள் காமாலை தொற்றும் வாய்ப்பு 1% - 3% (US Department of Public Health 1996)

2. கருவுற்ற பெண்கள் இந்நோயால் பாதிக்கப்பட்டிருந்தாலொழிய பிறக்கும் குழந்தைகளுக்கு இந்நோய் தொற்றும் வாய்ப்பு மிக மிகக் குறைவு. அதனால் US Federal Authorities அனைத்து குழந்தைகளுக்கும் இது கொடுக்க வேண்டிய தேவையில்லை (1999-ஆம் ஆண்டு அறிக்கை) என்று கூறியிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

3. மஞ்சள் காமாலையால் பாதிக்கப்பட பெரும்பாலும் முடியாத பிறந்த குழந்தைகள் / சிறுகுழந்தைகளுக்கு இந்த தடுப்பூசி தேவையில்லாமலேயே கொடுக்கப்படுகின்றது. (Pat Griggin Mackie)

4. இந்த தடுப்பூசியால் எவ்வளவு காலம் பாதுகாப்பு கிடைக்கும் என்பதும், பாதுகாப்பைப் பெருக்க கூடுதல் ஊசி தேவையா என்பதும் தெளிவாக இல்லை. (National Vaccine Information Center, USA. Harrison's Principles of Internal Medicine).

5. மஞ்கள் காமாலை நோய் கண்டு, அதிலிருந்து விடுபட்டவர்கள் வாழ்க்கை முழுக்க அந்நோய் திரும்ப தாக்காத அளவிற்கு நோய் எதிர்ப்பு சக்தி உடலில் உண்டாக்கப்படுகின்றனது. (Robbin's Pathologic Basis of Disease 1994)

6. சிசு கருப்பையில் இருக்கும் காலத்திலே பாதிப்பு ஏற்பட்டு பிறக்கும்போது HBsAg Positive இருந்தால் இத்தடுப்பூசியால் எந்த ஒரு பயனும் இல்லை Zucker Man 1993.)

7. ஏற்கனவே ஒருவர் carrier-ஆக இருந்தால் அவருக்கு இந்த தடுப்பூசியால் ஒரு பயனும் கிடையாது. (National Drug Bulletin 2001).

8. 1987-இல் மரபனு மாற்ற தொழில் நுட்பத்தில் உருவாக்கப்பட்ட இத்தடுப்பூசியின் திறன் குறித்து தெளிவான விளக்கம் இல்லை. மேலும் குழந்தைப் பருவத்தில் கொடுக்கப்படும் இவ்வூசி எவ்வளவு காலம் பாதுகாப்புக் கொடுக்கும், அவர்கள் பெரியவர்களாக வளர்ந்த பருவத்திலும் பாதுகாப்பைக் கொடுக்குமா? என்பது கேள்விக் குறியாக உள்ளது. குழந்தைகள் மீது பரிசோதிக்கவே இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. (Morbidity and Mortality Report Jan. 1997)

9. 14 வயதிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு இத்தடுப்பூசி கொடுத்தால், இவர்களுக்கு நோய் தடுப்பைக் காட்டிலும் இவ்வூசியின் பின் விளைவுகள் காரணமாக இறப்போ / பிற பின் விளைவுகளோ ஏற்படுவது 3 மடங்கு அதிகமாக உள்ளது. (Association of American Physicians and Surgeons, Dr. Jane Orient 8.7.1999)

10. ஆக, அமெரிக்காவில் கட்டாயப்படுத்தப்படாத ஒரு தடுப்பூசியை, அங்கு விற்க முடியாத / கடினமான, தேவைக்கதிகமாக உற்பத்தி செய்யப்பட்ட தடுப்பூசியை, வளரும் நாடுகளின் கையில் திணித்து பரிசோதனை விலங்குகளாய் மாற்றுவது மட்டுமின்றி / அரசு மருத்துவர்கள் / மருந்துக் குழுமங்களின் துணையோடு லாபமும் சம்பாதிக்க நினைப்பதை என்னவென்று சொல்லுவது. Bill Gates-இன் கரிசனம் புரிந்திருக்கும் என நம்புகிறேன்.

இந்தியா போன்ற ஏழை (ஆக்கப்பட்ட) நாடுகளில் தடுப்பூசியின் பின் விளைவுகளை ஆராய தொடர் ஆய்வு (Follow up) செய்யப்படாமல் போவதால் இந்த தடுப்பூசியினால் ஏற்படும் சில பிரச்சினைகளும் பின் விளைவுகளும் பதிவு செய்யப்படாமல் உள்ளது. எனினும் பிற நாடுகளிலிருந்து கிடைக்கும் ஆதாரங்களையாவது நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**அமெரிக்காவில் அனைத்து குழந்தைகளுக்கும் மஞ்சள் காமாலை தடுப்பூசி போடப்படுவது அவ்வூசிகளின் காரணமாக எழும் பெரும் பின் விளைவுகளுக்காக நிறுத்தப்பட்டிருக்கும் நிலையில், ஆந்திர மாநிலத்தில் அனைத்து குழந்தை களுக்கும் (4.5 லட்சம் குழந்தைகள்) Bill Gates Foundation உதவியுடன் கிடைத்த இத்தடுப்பூசிகள் போடுவது தேவைதானா?**

1999-இல் US Senate Congressional Hearing by its Sub-Committee ஏற்பாடு செய்த கூட்டத்தின் மருத்துவக் கட்டுரையிலிருந்து மஞ்சள் காமாலை தடுப்பூசியின் மோசமான பின் விளைவுகளாக Dr. Buston A Wais Bren என்பவர் பட்டியலிட்டு கூறுவன: வலிப்பு நோய் (Convulsion), முக ஜன்னி (Bell's Palsy, இடுப்பு, நரம்பு வலி (Lumbar Neuro Pathy), கண் பார்வை பாதிப்பு (Optic Neuritis), தண்டுவட பாதிப்பின் காரணமாக கை, கால் வாதத்தால் பாதிக்கப்படுவது (Transverse myelitis), பல நரம்புகள் பாதிக்கப்படுவது (Polyneuropathy), தசைகளை தளர்த்தி பாதிக்கும் நோய் (Myasthenia Gravis), நரம்பு உறைகள் பாதிக்கப்படுதல் (Demyelination), மூளை, பிற நரம்பு மண்டலங்களை பாதிக்கும் ஒருவகை நோய் (Multiple sclerosis), நரம்புகளை பாதிக்கும் நோய் (Guillion Barre Syndrome), மூளைக் காய்ச்சல் (Encephalitis), கண்களை பாதிக்கும் நோய் (Uveitis) மற்றும் மூட்டுகளை பாதிக்கும் நோய் (Rheumatoid Arthritis) இவை அனைத்தும் உலக மருத்துவ ஏடுகளில் மறுப்பின்றி ஏற்றுக்கொள்ளப்பட்ட விஷயங்கள்.

## மாற்று

அரசானது கருவுற்ற அனைத்துப் பெண்களும் மஞ்கள் காமாலையால் பாதிக்கப்பட்டுள்ளனரா என அறிய Hbs Ag பரிசோதனை செய்வது மட்டும் நல்லது. பாதிக்கப்பட்ட கருவுற்ற பெண்களின் (Hbs Ag Positive) குழந்தைகளுக்கு மட்டும் இத்தடுப்பூசி போடுவது நல்லது. இது பாதுகாப்பானது, விலையும் குறைவு. தேவையற்று அனைத்துக் குழந்தைகளுக்கும் கொடுப்பது தவிர்க்கப்படுகிறது.

மேலும் இத்தடுப்பூசிகளை நம்மூரிலே தயாராகும் தரம் நிறைந்த, குறைந்த விலையில் கிடைக்கும் மருந்துக் குழுமங்களிடமிருந்து வாங்கி பயன்படுத்த வேண்டும்.

யாருக்குக் கொடுக்க வேண்டும் என்பதைக் காட்டிலும், யாருக்குக் கொடுக்கக்கூடாது என்பதில் தெளிவாக இருக்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

### கொடுக்கக்கூடாதோர் பட்டியல்

1. மஞ்சள் காமாலையால் பாதிக்கப்படாத (Hbs Ag Nagative) கருவுற்ற பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகள்.

2. முழு வளர்ச்சி இல்லாத குறைப்பிரசவ குழந்தைகளுக்கு (Premature born children)

3. சத்துக் குறைவால் பாதிக்கப்பட்ட எடை குறைவான குழந்தைகள் (Malnourished and undernourished Children)

4. இரத்த சோகையால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் (Anemic Children)

5. அதிக சளித் தொல்லையால் (Respiratory infection) பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு.

6. ஒவ்வாமை ஏற்படும் குழந்தைகளுக்கு (Children with history of allergy)

யார் யாருக்கு இந்த தடுப்பூசி கொடுக்கப்பட வேண்டும் என (CDC - USA) வரையறுத்ததைக் காண்போம்.

1. மஞ்சள் காமாலையால் பாதிக்கப்பட்ட கருவுற்ற பெண்களுக்கு (Hbs Ag Positive) பிறக்கும் குழந்தைகளுக்கு.

2. விபரீதமாக Hbs Ag இரத்தம் ஒருவர் உடம்பில் கலக்கும்போது (இது பரிசோதிக்காத இரத்தம் ஒருவர் உடம்பில் ஏற்றுகையில் இதன் பாதிப்பு வரலாம்)

3. Hbs Ag Positive உள்ள ஒருவரிடத்து உடலுறவு கொள்ளும்போது இதன் பாதிப்பு ஏற்படலாம்.

4. குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு மஞ்சள் காமாலையின் பாதிப்பு (Acute Hepatitis B Infection) இருக்கையில் அக்குடும்பத்திலுள்ள 1 வயதிற்கு குறைவான குழந்தைகளுக்கு அதன் பாதிப்பு ஏற்படலாம் என்பதற்காக கொடுக்கலாம்.

தடுப்பூசி / மருந்தின் சாதக பாதகங்களை விளக்கி, பின் மக்கள் / நோயாளிகள் கொடுக்கும் ஒப்புதல் (informed consent) இல்லாமல் குழந்தைக்கோ / பெரியவருக்கோ தடுப்பூசி கொடுத்தால், அதனால் ஏற்படும் பின் விளைவுகளுக்கு சட்டப்படி மருத்துவர்களும், மேலும் அத்தடுப்பூசியை உயர்த்திப் பிடிக்கும் மருந்து உற்பத்தியாளர்களோ, தன்னார்வ தொண்டு நிறுவனங்களோ, ஏன் அரசோ பொறுப்பேற்க வேண்டும்.

### பின்குறிப்பு

மருத்துவரான நான் கல்பாக்க கதிர்வீச்சின் பாதிப்பை (**Multiple Myeloma** *எனும் எலும்பு மஜ்ஜை புற்றுநோய் இந்தியாவிலே கல்பாக்கத்தில் அதிகம் என்றும், அதற்கான காரணம் இங்குள்ள கதிர்வீச்சு தான் என புள்ளி விவரங்களுடன்)* நிறுவிய பின், அதுவரை பெருமளவில் சுற்றுப்புற மக்களுக்கு ஒன்றும் செய்யாத அணுசக்தி நிர்வாகம், பல மருத்துவ முகாம்களை இலவசமாக நடத்தி (என்னை ஓரங்கட்ட) அதில் மஞ்சள் காமாலை தடுப்பூசியை இலவசமாக பலருக்கும் கொடுத்து (கெடுத்து) வருவது வேடிக்கையாக உள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதை (கட்டுரையை) படித்த பின் என்ன சொல்லப் போகின்றனர் என்பதைக் கேட்க ஆவலாக உள்ளது. ●

## ஏகலைவனின் பூமி

■ புதிய மாதவி

சைய்திய பூமியில்
நாற்பத்தெட்டு வருடங்கள்
எரிகின்றன உன் அலைகடலில்
எங்கள் வலியின் மெழுகுவர்த்திகள்
வலியுடன் பிறந்து
வலியுடன் வாழ்ந்து
வலிமறக்கவே நடக்கிறது
எங்கள் கால்கள்.

உன் எழுத்து தோட்டாக்களில்
மகாத்மாக்கள் பலமுறை
மண்ணில் சரிந்தார்கள்
இருந்தாலும்
இன்றும் எழுந்து நடக்கும்போது
உன் கடற்கரை மணலில்
எங்கள் கால்கள்
எங்கள் நிழல்களை மிதித்து
எங்கள் நிஜங்களை சரிக்கின்றது
ஆயுதங்களாக அடுத்தவர் கைகளில்
எழுதப்படுகிறது எங்கள் நாட்கள்.

மனித அலைகள்
உன் மடிதேடி அலைகிறது.
உன் சைய்தியபூமியின்
சரித்திரப்போரில்
வலிகளுடனேயே பிறக்கின்றது
எங்கள் வலியின் சிசு.
மொழிகள் வேறாகி
பிரித்த உயிர்களை
விழிகள் ஒன்றாக்கி
கண்ணீரில் எழுதுகின்றது
எங்கள் கதைகளை.
எங்கள் தொடக்கமும்
எங்கள் முடிவும்
உன் சைய்தியபூமியின்
அலைகளின் மடியில்...-



படிப்பகம்

www.padippakam.com

# மக்கள் அறியாத அம்பேத்கர்

# 18

■ குடியரசன்

லண்டன் மாநாடு அக்டோபர் 1930-இல் நடந்தது. இந்த மாநாட்டில் தாழ்த்தப்பட்டவர்கள், கிருத்துவர்கள், இஸ்லாமியர்கள் தங்களின் பிரதிநிதிகளாய் கலந்துகொண்டனர். தாழ்த்தப்பட்ட வகுப்பார்களின் சார்பாக இந்த மாநாட்டின் தலைவருக்கு தந்தி ஒன்று அனுப்பப்பட்டது. அதில்,

"நாங்கள் depressed class", மத்திய மாகாண நாடாளுமன்ற, சட்டமன்ற அவைகளுக்கு எங்கள் எண்ணிக்கையின் விகிதங்களில் முக்கியத்துவம் வழங்க கேட்டுக்கொள்கிறோம். மற்றபடி இணை வாக்குரிமை (Joint Electorate), தாழ்த்தப்பட்டோர் அல்லாதவர்கள் (non-depressed people) எங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக ஆவதை நாங்கள் விரும்பவில்லை என்றவாறாக குறிப்பிட்டிருந்தது.

இந்த தந்திச் செய்தியின் விரிவாக்கம் இதுதான்.

1. தாழ்த்தப்பட்ட வகுப்பார்கள் தங்களுக்கான விகிதாச்சாரமும் (weightage) வழங்கப்பட வேண்டும். இந்த உரிமை மத்திய, மாகாண இரு அவைகளிலும் உறுதி செய்யப்பட வேண்டும்.

2. இணை வாக்குரிமை என்ற பெயரில், சாதி இந்துக்களை எங்களின் பிரதிநிதிகளாக நாங்கள் விரும்பவில்லை.

3. தாழ்த்தப்பட்டோர் அல்லாதார் விரும்பும் வகையில் அவர்களின் பணியாட்கள் (அவர்கள் தாழ்த்தப்பட்டோர் வகுப்பாரிடமிருந்து கொண்டு வரப்பட்டாலும்) அது எங்களுக்குப் பயன்படாது.

4. தாழ்த்தப்பட்டோர் நலனில் நேரடியாக அக்கறையும் அதையே தங்களின் நலனாகக் கருதி இயங்கக்கூடியவர்கள் மட்டுமே தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதிகளாக மத்திய மாகாணங்களின் சபைகளுக்கு தேர்வு செய்யப்படவேண்டும்.

அதாவது தாழ்த்தப்பட்ட வகுப்பார், அவர்களின் உண்மை பிரதிநிதிகளில் அடையாளப்படுத்தப்பட வேண்டும். இதற்கு Joint Electrorate (இணை வாக்குரிமை) non-depressed class (தாழ்த்தப்பட்டோர் அல்லாதார்) போன்றவை நிரந்தரத்தடை என முன் வைக்கப்பட்டது. இந்த தந்தியின் வாசகம் நமது அம்பேத்கரால் வடிவமைக்கப்பட்டது.

தாழ்த்தப்பட்டோர் விடுதலைக்கு எவை உகந்தது என்பது எவ்வளவு முக்கியமோ, அதேபால எவையெல்லாம் எதிர்தரப்பு தடைகள் என்பதை கணக்கிடுதலும் முக்கியம் என்று அம்பேத்கர் வரையறுத்தார்.

நம்மக்கள் தொடர்ந்து உழைத்தாலும், போராடினாலும், விடையாகக் கிடைப்பது சில தனி நபர்களின் அதிகாரமே.

இவர்களோ அல்லது இவர்களின் அதிகாரமோ நம் விடுதலைக்கு பயன்படாமல், நம்மை நிலையிலேயே வைப்பதற்கு உதவுவது எதனால்?

இதற்கான விடை,

1. தேர்ந்தெடுக்க பயன்படும் முறை பிழையானதாக இருக்கக்கூடும். (election system)

2. தேர்வுசெய்ய தகுதிவாய்ந்தவர்கள், (votes) தாழ்த்தப்பட்டோர் விடுதலையை விரும்பாதவர்களாக இருக்கக்கூடும்.

3. அல்லது முறை, நபர்கள் இரண்டும் சரியாக இருந்தாலும், இதன் பயனால் உருவாகும் நபர்கள் இயங்கும் அதிகாரம் கொண்ட மத்திய, மாகாண அவைகள் எந்தவித பயனையும் தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதிகளுக்கு வீச்சாக வழங்காமலிருக்கலாம்,

என்ற நிலையிலிருந்து விடை தேவையாகிறது. தேர்வு செய்யத் தகுதி வாய்ந்தவர்கள் (voters) தாழ்த்தப்பட்டோர் விடுதலையை எதிர்ப்பவர்களாகவே, non-depressed (தாழ்த்தப்பட்டோர் அல்லாதவர்கள்) வகுப்பார் உள்ளனர்.

இங்கு எழும் சாத்தியக்கூறு என்னவெனில், இதுகாரும் நம் மக்களுக்கு ஓட்டுரிமை இல்லை. இதனால் சாதி இந்துக்கள் ஓட்டளிக்கும் முறைமையால் முழு வெற்றி பெற்று வந்துள்ளனர். இதை நேர் செய்ய,

1. நம் மக்களுக்கு ஓட்டுரிமை

2. நம் மக்களுக்கு கூடுதல் ஓட்டுரிமை

3. சாதி இந்துக்களுக்கு ஓட்டுரிமை இல்லை

என்ற மூன்று நிலைகளில் நாம் தேர்தல் அரசியல் நிலைகளை கைக்கொள்ளவேண்டியுள்ளது.

இவைகளை பூர்த்தி செய்வதானால், நமக்கு முதல் எதிரி joint electorate (இணை ஓட்டுரிமை அல்லது கூட்டு ஓட்டுரிமை) என்பதும் non-depressed class (தாழ்த்தப்பட்டோர் அல்லாதோர்) வாக்குரிமை பெறுவதுமேயாகும்.

இவைகளை நமது நேரடியான நிபந்தனையாக வைப்பதென்பதை விட இவைகளின் மாற்று வடிவங்களான,



படிப்பகம்

www.padippakam.com

1. Seperate electorate (தனி வாக்குரிமை)

2. Seperate settlements (தனி நில உரிமை)

வலியுறுத்தப்பட்டது. இந்த இரண்டு நிபந்தனை களின் பொதுவடிவமாக (Dual Electorate) இரட்டை வாக்குரிமை கொள்ளப்படுகிறது.

இன்றைய இந்திய அரசியலில் நம்மக்களின் நிலை, இரட்டை வாக்குரிமை பெறுவதற்கான வடிவம், சாத்தியக்கூறுகள் நம்மை தேர்தல் கணக்கிலிருந்து விடுவிக்கப்போவதில்லை "இரட்டை வாக்குரிமை" என்ற தமிழ்ச் சொல்லின் நேரடி பயன், விளக்கம் - தமிழ்நாடு/பிற மாநிலங்களில் உள்ள தலித்துகளை ஒருங்கிணைப்பதற்கும், அரசியல் சக்தியாக்கத்திற்கும் பயன்படும் என்பதாக கொள்ளப்படுகிறது.

மொழிவழி தேசியத்தை முன்னிருத்தி, மாநில அரசியல் சிந்தனைகள் மேலோங்கும் இக்காலத்தில் இரட்டை வாக்குரிமை நேரத்திய போராட்டம் தலித்து களை ஓர்மையான வாக்கு வங்கியாகவும், ஓர்மையான அரசியல் சக்தியாகவும் மாற்றும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இருக்கவியலாது.

ஆனால், 1. தமிழ் மாநில காங்கிரசு, 2. திரினாமுல் காங்கிரசு என்று தேசிய (இந்திய) கட்சிகளே, மொழி அடிப்படையில் பகுதிவாரி காங்கிரசு கட்சிகளாக உடைபட்டு, மாநில மக்களின் அரசியலை முன் வைத்து வெற்றி பெறுகையில்,

முழுமையான அரசியல்படுத்தப்படாத தலித்து கள், தங்கள் பிரச்சினைக்காக, இரட்டை வாக்குரிமை என்ற அளவில் இந்திய தேசிய அரசியல் சக்தியாக, மொழி எல்லைகளைக் கடந்து அணி திரட்டுவது பெரும் போராட்டம்.

மத்திய, மாநில அரசு ஊழியர்களுக்கு இந்திய அரசியல் சட்டம், இட ஒதுக்கீடு போன்றவை பொதுமையாக இருந்தாலும், மாநில உணர்வினால் தலித்துகளும் உந்தப்படுவது, இரட்டை வாக்குரிமை கோரிக்கையினால் சீர் செய்யப்படும்.

சாதி என்பது மொழி எல்லைகளைக் கடந்தது. இந்து மதத்தின் கோடூரம், அதன் வன்கொடுமை மொழிவழி தேசியத்தின் எல்லைகளைக் கடந்தது. தமிழ்நாடு முதல் காஷ்மீர் வரை உள்ள சாதி வயப்பட்ட சாதி இந்துக்கள், தலித்துகள் இந்துக்கள் என்ற பெயரால் நிகழ்த்தப்படும் கொடுமை வீச்சானது. மொழிவழி தேசியம், மொழிகளைக் கடந்த இந்து கொடூரத்தை எப்படி எதிர்க்கவியலும் என்ற வினா பல் வேறு காலங்களில் தலித்துகளால் முன்வைக்கப்பட்ட கருத்து.

இரட்டை வாக்குரிமை என்பது ,

அ. மொழிவழி தேசியத்திற்கு உட்படாததும்

ஆ. இந்து மதத்திற்கு எதிரானதும்

இ. நாடு முழுக்க தலித்துகளின் ஓர்மையை இந்திய அரசியல் சட்டம் போல, இட ஒதுக்கீடு போல விரிவாக்கப்பட்டதுமாக இயல்பாகவே இருப்பதால் இதன்மீது நமக்கு கூடுதல் எதிர்பார்ப்பு உள்ளது.

**மொழிவழி தேசியத்தை முன்னிருத்தி, மாநில அரசியல் சிந்தனைகள் மேலோங்கும் இக்காலத்தில் இரட்டை வாக்குரிமை போராட்டம் தலித்துகளை ஓர்மையான வாக்கு வங்கியாகவும், அரசியல் சக்தியாகவும் மாற்றும்**

தமிழகத்தில் இதைக் குறித்து தலித் அரசியலை புதிய தமிழகம் முன்னாள் குடியரசுத் தலைவர் K.R. நாராயணன் அவர்களை அழைத்தும், விடுதலைச் சிறுத்தைகள் தம் அளவில் அனைத்து தமிழக அரசி யல் கட்சிகளை அசைத்திருப்பதும் நம்பிக்கைக்குரிய இயக்கங்களே. இதன் விடைப்பரிமாணம் அடுத்த கட்டுரையில் தொடரும்.

கூடுதலாக, அம்பேத்கர் காலத்தில் இதன் பரி மாணம் அணுகப்பட்டவிதம் குறித்த தகவல்கள்:

A. அக்டோபர் 1931, திரு. பாலு, மிகவும் புகழ் பெற்ற கிரிக்கட் வீரர் தலைமையில் அம்பேத்கரின் இரட்டை வாக்குரிமையை எதிர்த்தும், காந்தியின் தலைமை, காங்கிரசு, இணை வாக்குரிமை ஆகிய வற்றை வலியுறுத்தி நடைபெற்றது. (இவர் தாழ்த்தப் பட்டவர், கிரிக்கட் வீரர்களின் புகழ், தாழ்த்தப்பட்ட மக்களின் சக்தியை திசைதிருப்ப காந்தியால் பயன் படுத்தப்பட்டதை இங்கு காண்க)

B. திரு. காந்தி, மெக்டொனால்டு (தலைவர், சிறுபான்மையினர் துணைக்குழு) ஆகியோர்களுக்கு

"தாழ்த்தப்பட்ட மக்கள் தனிவாக்குரிமையை விரும்பவில்லை. வயது வந்தோர் வாக்குரிமையில் முழு நம்பிக்கையுள்ளது. அம்பேத்கர் மீது நம்பிக்கை யில்லை" என்ற தந்தி சிரத்தானந் மெமோரியல் ட்ரஸ்ட், தில்லி அனுப்பியது (அக்டோபர் 1930)

C. "மகாத்மா காந்தியின் மீது எங்களுக்கு முழு நம்பிக்கையுள்ளது. அம்பேத்கர் எங்களைப் பற்றிப் பேச அவருக்கு எவ்வித உரிமையும் இல்லை. அம்பேத்கர் எங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப் பினர் இல்லை. அம்பேத்கர் அரசு தரப்பு பிரதிநிதி" என்ற தீர்மானத்தை தந்தியின் வாயிலாக திரு. ராஜ் போஜ், சகாத் ஆகியோர் - பார்வதி கோயில் சந்தியாகிரக கமிட்டி உறுப்பினர்கள் - காந்திக்கும் மற்றவர்களுக்கும் லண்டன் வட்டமேஜை மாநாட்டிற்கு அனுப்பப் பட்டது.

(இவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களாக இருந்தாலும் Joint Electorate எதிர் seperate electorate பற்றி அறியாமல் அம்பேத்கருக்கு எதிராக செயல் திட்டத் தில் ஈடுபடுத்தப்பட்டனர்.)

D. அம்பேத்கர் இஸ்லாமியர்களுடன் சேர்ந்து கொண்டு மகாத்மா காந்தியை நெருக்கடிக்குள்ளாக்கு கிறார். அதில் அவர் மகிழ்ச்சியும் காண்கிறார். மகாத்மா



படிப்பகம்

www.padippakam.com

மல் இருக்கத் தயாராக உள்ள காந்தி, இந்த மண்ணின் பூர்வகுடிகளின் உரிமைக்காக seperate electorate வழங்குவதை எதிர்க்கவும் தயாராக உள்ளார். என் மக்களின் விடுதலைக்கு முன், காந்தியின் சாகும் நாடகம் பற்றி நான் கவலைப்படவில்லை. (1932 செப்டம்பர்)

I. அரசியல் தளத்தில், தேர்தல் அரசியல் என்பது, "It is a game of possibilities and not a policy oriented" என்றார் அம்பேத்கர். என் மக்களிடம் விடுதலை உணர்வை seperate electorate மட்டுமே ஏற்படுத்தும். இதை மக்கள் உணரவேண்டும் (1946, நவம்பர்)

J. "Qualified seperate electorate" அதாவது "தகுதிவாய்ந்த தனி வாக்குரிமை" வேண்டும். அதுவே என் மக்களின் விடுதலைக்கு வழிகோலும் என்று அம்பேத்கர் அரசிடமும் மக்களிடமும் விளக்கமாக கருத்தரங்குகளை ஏற்படுத்தினார். (ஜனவரி 26, 1947) (இந்த கருத்தை நாடு முழுவதும் கொண்டு செல்ல வேண்டிய பணியாக SCF செட்யூல்டு காஸ்ட் பெடரேசன் எடுத்துக்கொண்டது)

K. இந்த தகுதிவாய்ந்த தனி வாக்குரிமை அல்லது இரட்டை வாக்குரிமை என்பது, 1. ஒவ்வொரு தாழ்த்தப்பட்ட வாக்காளருக்கும் தனித் தொகுதியில் ஓட்டுரிமை வழங்கப்படும். 2. இந்த வாக்குரிமை அந்த தொகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட வாக்காளருக்கு மட்டுமே வழங்கப்படும். 3. அந்த தனித் தொகுதியில் வசிக்கும் பொது வாக்காளர் அருகாமையில் அல்லது வேறு தொகுதிக்குச் சென்று (தனக்கு ஒதுக்கப்பட்ட) வாக்குரிமையை நிறைவு செய்யவேண்டும்.

இந்த முறை என்னுடைய சுய கண்டுபிடிப்பு அல்ல. சென்னை முனிசிபாலிடியில் இன்றும் இந்திய கிருத்துவர்களுக்காக நடைமுறையில் உள்ள சிறப்புத் திட்டம் மெட்ராஸ் போலவே இந்தியாவின் மிகச் சில பாகங்களில் இந்த முறை நடைமுறையில் உள்ளது. இந்த முறை இந்திய அரசு ஆணை 1935 மூலமாக சென்னையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இந்த முறை இயங்குவதை கீழ்காணும் விதத்தில் அம்பேத்கர் விளக்குகிறார். 1. இந்திய நாடு முழுமையும் ஒன்பது மாகாணங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. 2. இதில் 151 நாடாளுமன்ற இடங்கள் தனித்தொகுதியாக அறிவிக்கப்படும். 3. 416 மற்ற பொதுத் தொகுதியாக (யூனியன் பிரதேசங்கள் உட்பட) அறிவிக்கப்படும். இதன் மூலமாக இந்த நாட்டின் பூர்வக்குடிகளின் உரிமை பாதுகாக்கப்படும்.

L. தேர்தல் முறை பூர்வகுடிகளுக்கு மூன்று அவசியத் தேவைகளை நிறைவு செய்யவேண்டும். அவை,

a. தங்களின் விடுதலையை முன்னெடுக்கும் உண்மைப் பிரதிநிதியை தேர்வு செய்ய உகந்ததாக இருந்திருக்கவேண்டும்.

b. தாழ்த்தப்பட்டோர் அல்லாத மக்கள் அரசியல் ரீதியாகவோ அல்லது வேறுவகையிலோ தாழ்த்தப்பட்ட மக்களை புறக்கணிக்கும் பொய்யை தவிர்த்ததாக இருக்கவேண்டும்.

○○

**நாம் சாதியற்றவர்களாகவும், சாதி – வர்ண முறையை எதிர்த்துப் போராடும் வீரர்களாகவும் உள்ளபோது, நமக்கு உட்சாதிகளை புகுத்தி தனிவாக் குரிமையின் வீரியத்தை குறைகூறுவதென்பது மாபெரும் அநீதியாகும்.**

○○

இந்து மதத்தில் இருக்கும் தீண்டாமையைப் போக்க தன்னால் இயன்ற பணியினைச் செய்கிறார். அவருக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் மீது உயர்ந்த அன்பு உள்ளது. இவ்வாறு திரு. கரால்கர், மக்களால் நன்கு அறியப்பட்ட நாடக நடிகர், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர், லண்டனுக்கு தந்தி அனுப்பினார் (1931)

E. "ஒருவேளை தனிவாக்குரிமை நடைமுறைக்கு வருமேயானால், இந்தியாவின் மாபெரும் சாதிகளாக 46 உட்சாதிகள் உள்ளன. இவர்கள் அனைவருக்கும் தனித்தனியே இடஒதுக்கீடு தந்து தேர்தலில் பிரதிநிதித்துவம் தருவதென்பது இயலாது. எனவே அம்பேத்கரின் seperate electorate system நடைமுறைக்கு ஒத்து வராது என்று காங்கிரசு கட்சி கருத்துத் தெரிவித்தது. (நம் மக்களை உட்சாதிப் பிரிவினையின் மூலமாக தலித் விடுதலையை வேரறுக்க காங்கிரசு கட்சியின் முயற்சி இது)"

F. அம்பேத்கர் உறுதியான நிபந்தனை விதித்தார். "இனி அரசு எங்களிடம் எங்கள் தேவைகளை குறித்து ஆலோசனை நடத்துமானால் அதில் முதல் பகுதியாக" "Seperate Electorate Versus Joint Electorates" அரசின் நேரடி கமிட்டியிலேயே விவாதம் செய்யவேண்டும். கமிட்டிக்கு வெளியே விவாதம் செய்வதாக உறுதி தந்து அதை பொதுப்பிரச்சினையிலிருந்த விலக்கி தனியாக தீர்த்துக்கொள்ள வேண்டியதாக மாற்ற காங்கிரசின் சதிக்கு அரசு துணை போய்விடக்கூடாது.

G. காந்தி சாகும் வரையில் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளார். இந்த நிலையில் என்னிடம், இரட்டை வாக்குரிமை பற்றி பேச அழைத்துள்ளார். அவர் தன்னுடைய மிரட்டலை கைவிட்டு விட்டு, அதாவது உண்ணாவிரதத்தை கைவிட்டு பேச்சு வார்த்தைக்கு அழைப்பதே நேர்மையானது. என அம்பேத்கர் குறிப்பிட்டார். (1932, செப்டம்பர்)

H. நான் இதுபோன்ற அரசியல் நாடகங்களை லட்சியம் செய்வதில்லை. சாகும்வரை உண்ணாவிரதம் என்ற காந்தியின் அறிவுப்பு நேர்மையானது அல்ல, மாறாக இது ஓர் அரசியல் தந்திரம். அரசியல் ரீதியான மாற்றுக் கருத்துக்களை சமநிலையில் இருந்து விவாதிக்கும் நேர்மையான திறன் இல்லாதவராக காந்தி உள்ளார். இது போன்ற தரக்குறைவான வழிகளுக்கு நான் என்றுமே அசைந்து கொடுப்பதில்லை. சாதி இந்துக்களுக்காக சாகும்வரை உண்ணா



படிப்பகம்

www.padippakam.com

c. தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் தேர்தல் முறையில், தாழ்த்தப்பட்டோர் அல்லாத (non-depressed class) தேர்தலில் தேர்வு செய்யப்படுவதில் தனக்கான பங்கைப் பெற்றவராக இருத்தல்வேண்டும்.

இந்த மூன்று வாய்ப்புகளையும் லட்சியம் செய்யும் வகையில் இணைவாக்குரிமை, வயது வந்தோர் வாக்குரிமை, பொது வாக்குரிமை போன்ற எவையும் இல்லை. மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று நிபந்தனைகளில் முதல் நிபந்தனையை தனிவாக்குரிமை நிறைவு செய்யலாம். ஆனால் 2 மற்றும் 3-ம் நிபந்தனைகளை நிறைவு செய்யவில்லை. நான் வரைந்தளித்துள்ள தகுதிவாய்ந்த தனி வாக்குரிமை இம்மூன்று நிபந்தனைகளையும் முழுமையாக பூர்த்தி செய்யும் என்று அம்பேத்கர் (1947, பிப்ரவரி, National Standard பத்திரிக்கை பேட்டி) வலியுறுத்தியுள்ளார்.

அம்பேத்கர் 1931-ஆம் ஆண்டு நம் விடுதலையை வென்றெடுக்க நாம் மேற்கொள்ள வேண்டியவையாக குறிப்பிட்டது. இப்பொழுது கூடுதல் கவனம் கொள்ள வேண்டியுள்ளது. அது நம்மக்கள் இதுவரை பிரிட்டிசாரிடமிருந்து அரசியல் அதிகாரத்தைப் பெற பெரும் அளவில் எவ்வித இயக்கத்தையும் கட்டமைக்கவில்லை. சாதி இந்துக்களிடம் இருந்து விடுதலை பெறுவதையும், இந்துமதக் கொடுங்கோன்மைகளிடமிருந்து தப்பிப்பதற்காக கடந்த 350 ஆண்டுகளாக போராடி வந்துள்ளனர். இன்னும் சரியாகச் சொல்வதானால், தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுக்குள் சாதியற்றவர்களாக, மூடப்பழக்கவழக்கங்களை எதிர்த்துப் போராடுபவர்களாக, பகுத்தறிவு கருத்துக்களை நம்புபவர்களாக இருந்து வந்துள்ளனர்.

நாம் சாதியற்றவர்களாகவும், சாதி - வர்ண முறையை எதிர்த்துப் போராடும் வீரர்களாகவும் உள்ளபோது, நமக்கு உட்சாதிகளை புகுத்தி தனிவாக்குரிமையின் வீரியத்தை குறைகூறுவதென்பது மாபெரும் அநீதியாகும். நாம் பூர்வகுடிகள் என்பதையும், நாம் தான் ஆதி மக்கள், உண்மையான இனம் என்பதையும் வலியுறுத்துகிறேன். பூர்வகுடிகளின் ஒட்டுமொத்த மக்களுக்கும் உரிமை கிடைக்கும் வகையில் அனைத்து தரப்பு ஆதிக்குடிகளின் உட்பிரிவுகளுக்கும் (sub-selection) (கவனிக்க sub-caste அல்ல), அங்கீகாரம் அளிக்க நான் பாடுபடுவேன்.

தேவைப்பட்டால் seperate electorate within seperate electorate முறைமையும் நான் ஆய்ந்து வழி வகுப்பேன் என்றார் அம்பேத்கர்.

இவையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கையில், இன்றைய சூழல் வேண்டுவது என்ன என்பதை நம் மக்களிடமிருந்து கேட்டறிய வேண்டும். இதற்காக தலித் இயக்கங்கள் மக்களிடையே போதிய விழிப்புணர்வை வளர்த்தெடுக்க வேண்டும்.

வரும் இதழில், இரட்டை வாக்குரிமை பற்றி திரு. M.C. ராஜா அவர்களது வாதத்துடன் விரிவாகக் காண்போம்.

●

# 2004 திசம்பர் 26

■ மகாராசன்

கீழ்வெண்மணி
துயர் சுமந்த
நாளின் பிற்பொழுதை
தின்று முடித்த காலை
காரித் துப்பியது சோகம்

மடி விரித்த
ஆழ் கடல் ஓரங்கள்
துகளோடு துகள்
குடிசைகள்

நிலவுக் கீற்று
கிழித்த கோடு பிடித்து
கட்டுமர மீதில் சென்ற
உயிர்கள் உறிஞ்சி
உடல் மிதந்து
வெறும் கட்டைகளாய்

கால் புதைச் சுவடுகளின்
தடங்கள் சடலங்கள்

அலை ஓசைத் தாலாட்டில்
தூங்கிய பிஞ்சுகள்
ஒப்பாரி பாடி
உயிர் முறிவு

வலையில்
மீன்கள் அள்ளி
வயிறு கழுவி
பின் மீன்களுக்கு இரை

அகலப் பரப்பி
சேரிக்குள் வந்தது
ஒதுங்கி இருந்த
இடுகாடு

உலகு அறுத்த உடலில்
சுள்ளி அடுக்குகளாய்
மனிதங்கள் அடுக்கி
பெருங்குழிக்குள்
பிணங்களின் கூட்டு வாழ்வு

உரிமை பறித்த


சாதித் திமிராய்
உயிர்கள் எடுத்தது
கடல் திமிர்.


படிப்பகம்

www.padippakam.com

■ க. கலாமோகன், பாரீஸ்

# போ!



மூன்றாவது "8-6" ரின் காலியாகியபோது நான்காவதின் தாகம் எனக்குள். காற்சட்டைப் பைக்குள் கையை விட்டுத் துளாவினேன். 50 சென்ரிம் ஈரோவே தட்டுப்பட்டது. இதனை வைத்துத் தாகம் போக்கலாம் எனக் கனவு செய்வதைக் காட்டிலும் முட்டையில் மயிர் பிடுங்குதல் இலகுபோல எனக்குப் பட்டது. ஆனால் அந்த இரவில் நான் முட்டைகளை வாங்கச் செல்லவில்லை.

"போ!!!"

எனது தூக்கம் கலைந்து சிரமப்பட்டு விழிகளைத் திறந்தேன். நடந்து செல்பவர்கள் என்மீது தமது விழிகளை ரகஸியமாக ஊரவிட்டுச் சென்றனர். எனது நீள்காற்சட்டையை சிறுநீரகம் நனைத்திருந்தது. அந்த மணம் எனது மூக்கிற்குப் பழக்கமாகிப் பல ஆண்டுகள்.

என்னிடம் அகதிக் காட் இருந்தது. அதனை நான் தொலைத்துப் பல வருடங்கள். நான் ஓர் அறையில் தனியாக இருந்தேன் சில ஆண்டுகள். இன்றோ நான் வீதி மனிதன். எனக்கு ஓர் தேசம் இருந்தது. அது கடுகைக் காட்டிலும் சிறிதாக, தூரத்தில் வேறு.

என்னிடம் பலர் "நீ இங்கு வந்து பல வருடங்கள் ஆகிவிட்டன. உனது தேசத்திற்குச் செல்லும் ஆசை இல்லையா?" எனக் கேட்டதுண்டு.

எனக்கு இரு வீடுகள் எனது தேசத்தில் இருந்தன. இன்று அவைகள் அங்கே இல்லை. அவைகள் அழிக்கப்பட்டு விட்டன. இனி நான் தேசத்துக்குப் போனால் எங்கே தூங்குவது? ஹோட்டலிலா? ஹோட்டலில் தூங்குவதற்காகத் தேசத்துக்குப் போவதானால் அதில் ஏதாவது அர்த்தங்கள் உள்ளதா? இங்கும் நிறைய ஹோட்டல்கள் உள்ளதால் இதையும் எனது தேசமாகக் கருதுவதில் தப்பு ஏதாவது உள்ளதா? நான் பல தேசங்களில் பல ஹோட்டல்களில் தூங்கினேன். ஆனால் எனது வீட்டின் முற்றத்தில் தூங்கும் போது கிடைத்த சுகம் எங்கேயுமே கிடைத்ததில்லை.

"வா!"

அவன் என்னை இழுத்தான்.

அவனது முகம் சண்முகத்தின் முகமாக இருந்தது. "டேய்! என்னை உனக்குத் தெரியுமோடா?" எனக் கேட்டான்.

"நீ சண்முகம்தானை"

"ப்ராஞ்சிலை எவ்வளவோ சண்முகங்கள் இருக்கு. என்னைச் சண்முகம் எண்டு உனக்கு எப்பிடித் தெரியும்?"

"உன்ரை மற்றப்பேர் சமாதான நீதவான்தானை?"

"அவனுக்கும் சண்முகம்தான் பேர். அவன் செத்து 3 வரிசம்."

"நீ அப்ப பூனைக்குட்டி?"

"நான் பூனைக்குட்டியில்லை, புலி."

"டேய், என்னிட்டை ஒரு சதமும் இல்லை. என்னை மட்டும் அவங்களிட்டை காட்டிக்குடுத்திடாதை."

"நான் புலியெண்டதை வைச்சு என்னைப் புலியெண்டு நினைச்சிட்டியே?"

"நீதான் நான் சொல்லிற சண்முகம். உன்னை டுன்ஹில் எண்டும் நாங்கள் கூப்பிடுறது உன்ரை ஞாபகத்திலை இருக்கா?"

"டேய், நான்தானடா டுன்ஹில்! நான்தானடா சண்முகம்! நீ சொல்லிற சண்முகம் நான்தானடா."

"டேய்! எனக்கு விடாய். வா ரெண்டு ரின் எடுப்பம்."

"என்னிட்டை ஒரு ரூபாகூட இல்லை."

"உனக்கு நல்ல வேலைதானை. அப்பவும் போலை இப்பவும் குசினியர்தானை?"

"வேலையும் பூழலும்."

"அப்ப உனக்கு நல்ல சோமாஸ் (வேலை இழந்தவர்களிற்குக் கிடைக்கும் தற்காலிக அரச உதவிப்பணம்) போலை?"

"சோமாஸ் கிழிஞ்சு மூண்டு வரிசம். இப்ப எனக்கு ஏரெம்மி" (வேலை இல்லாதிருப்போரிற்கு அரசு வழங்கும் உதவிப்பணம்)

"கதையை விட்டிட்டு 2 ரின் வாங்கடா!"

"சத்தியமாச் சொல்லிறன். என்னிட்டை ஒரு சதம் கூட இல்லை. இருந்தா இல்லையெண்டு சொல்லுவானா டுன்ஹில்?"

"எனக்கெண்டாத் தண்ணி விடாய். உன்னிட்டைக் கிரடிட் காட் இருக்குத்தானே! எடு!"

"மேர்ட், கிரடிட் காட்டும் இல்லை, காட்டும் இல்லை, விசாவும் இல்லை, வீடும் இல்லை."

"நீயும் அப்ப என்னைப் போல. உன்ரை மனிசி?"

"வேசையை நான்தான் இங்கை கடனெடுத்துக் கூப்பிட்டனான். ஓடீட்டாள்"

"என்ரை மனிசியும் ஓடீட்டாள்."



படிப்பகம்

www.padippakam.com

"ஓ!"

"நீயும் கடன் எடுத்தே அவளைக் கூப்பிட்டனி!"

"அவளை இங்கை அனுப்பி வைக்கிறது சீதனத்திலை ஒரு கொண்டிசனா இருந்தது."

"நல்ல சீதனம் கிடைச்சி ருக்குமே?"

"நான் கேட்டதெல்லாம் கிடைச்சது."

"நீ காசை வச்சுக்கொண்டு பிச்சைக்காரனுக்கு நடிக்காம ரெண்டு பியர் வாங்கு!"

"என்னிட்டை அவள் போனாப் பிறகும் 2 லட்சம் கிடந்தது. உப்ப ஒண்டும் இல்லை. எல்லாத்தையும் குடிச்சிட்டன்."

"விளங்குது. நல்லா விளங்குது. வா! அந்தச் சந்திக்குப் போவம். எல்லாம் சரிவரும்."

என்னைச் சில தமிழர்கள் ஒரு மாதிரியாகப் பார்த்துச் சென்றனர். இவர்கள் பார்வையால் நான் கருகிவிடுவேனா? சரி! நான் கருகு கின்றேன் என வைத்துக் கொள் வோம். கருகிப்போனால் என்ன வாம்?

எனது மனைவியின் முகம் எனக்கு மறந்துபோய்விட்டது. சில மாதங்களின் முன் நான் அறிவு கெட்டு ஓர் குப்பைக் கூடத்தின் அருகில் தூங்கிக் கொண்டிருந்த போது ஒருத்தி என் தூக்கத்தைக் கலைத்தாள்.

"குடி!"

அவளது கரத்தில் ஓர் பியர் ரின் இருந்தது. அதனது முதலா வது மிடறு எனக்குள்.

"என்னைத் தெரியுதோ?"

"யார் நீ?"

"நான் உனது மனைவி!"

"எனக்கு மனைவி ஒருபோதும் கிடைத்ததில்லை."

"நான்தான் உனது மனைவி, குடி!"

"பிடி! ரின் காலியாகிவிட்டது."

"பிடி! இது இன்னமும் உடைக்கப்படவில்லை!"

"நான் விஸ்கி குடித்துப் பல ஆண்டுகள்."

"குடி!"

"இது பியர்."

"இல்லை இது விஸ்கி."

"இது மது!"

"இல்லை. இது தண்ணீர்!"

"இது என் மனைவி!"

"இல்லை! நானே உனது மனைவி!"

வெறிமயக்கம் தடைகளை மறுதலித்தும், தடைகளிற்குத் தயங் காமலும்... நான் அவளை இழுத் தேன்.

"விடு!" அவள் கத்தினாள். "இது வீதி!"

"வீதியே எனது வீடு!"

"என்னை விடு!"

"முடியாது!"

"கிட!"

"இது கட்டில் அல்ல, வீதி!"

"இந்த வீதி முழுவதும் எனது கட்டில்கள் உள்ளன. கிட!"

ஓடத் தொடங்கியவளை இழுத்து வீதியில் கிடத்தி சட்டை யைக் கிழித்து, அவளின் கதறலை மறந்து இந்தக் கேள்வியைக் கேட் டேன்.

"நீ எனது மனைவியா?"

"இல்லை!"

"நீ எனது மனைவியாகுவாயா?"

"இல்லை!"

"நீ எனது மனைவியாக இருந் தாயா?"

"இல்லை."

"ஓடு!"

அவள் தனது முலைகளை மறைப்பதற்கு எந்த எத்தனமும் செய்யாமல் ஓடினாள்.

சந்தியில் தமிழ்த் தலைகள் ஒன்றுமே தெரியவில்லை.

"டேய்! உன்னை நம்பேலாது!" என நான் அவனைக் கடித்தேன்.

"பொறு, அவங்கள் வருவாங் கள்!" என்றபின் தனது மணி பேர்ஸை எடுத்துத் திறந்து "2 ஈரோ! 2 ஈரோ!" என ஓர் இனம் புரியாத களிப்பில் கத்தினான்.

"போ! ரெண்டு பியர் வாங்கி வா!" என நான் கத்தினேன்.

"உன்னிடம் 1 ஈரோ இருக்கா? இருந்தால் இரண்டு பெரிய பியர் வாங்கலாம்!"

என்னிடம் மணிபேர்ஸ் இல்லை. காற்சட்டைப் பைக்குள் கையை விட்டேன். ஏரோ தட்டுப் பட்டது. அவனிடம் கொடுத்தேன். அவன் அதனைப் பரிசோதித்து விட்டு '2 ஈரோ' எனக் கத்தினான்.

"ஓடு! இரண்டு 8-6 பியர் வாங்கி வா!" நான் கத்தினேன். அவன் ஓடி யதும் நான் சந்தியின் போன் கபினுள் நுழைந்தேன். 'போன் பண்ணுவதற் காக அல்ல. வெளியைக் காட்டிலும் குளிர் கொஞ்சம் குறைவாக. இந்த போன் கபின்கள் எனது வீடாகவும், வெளியாகவும்.

"இந்தா!" என்றபடி அவன் என்னிடம் ஓர் ரின்னைத் தந்த பின்னர் "பத்து நிமிசம் கழியப் பார், பியர் இல்லை விஸ்கி குடிப்பம்" என்றான்.

8-6, இந்த இரண்டு இலக்கங் களும் போதையின் உயரத்தினை நுகர்வோனிற்கு அழுத்திச் சொல் லும். கயர்வு கலக்கப்பட்ட கரும்பின் சுவை இதற்குள். ஓர் ரின் அடித் தாலே ஏறிவிடும். ஏறிவிட்டால் பின் ரின் ரின்னாகத் தாகம் வரும். என்னைப்போல் வீதியை வீடாக்கிக் கொண்டவர்களின் துணைவன் 8-6 என நான் நினைப்பதுண்டு.

"வாறான்! வாறான்! வாறாங் கள்!" எனச் சண்முகம் கத்துவது எனது காதை உடைத்தது. "விஸ்கி வருகிறது மணக்குதடா!" என்றபடி துள்ளினான்.

ஓர் பரதநாட்டியப் பாணியில் ஆடி ஆடி வந்த 5 பேரின் எந்த முகமும் எனக்குத் தெரிந்த முகங்க ளாக இல்லை. நான் பல ஆண்டுகள் அதிகமாக அலையாத பகுதி அது.



படிப்பகம்

அவர்கள் இளைஞர்களாக இருந்தனர். பழையவர்களாக இருந்திருப்பின் முகம் மாறியிருப்பினும் ஒரு வகையில் அடையாளம் கண்டு பிடிக்கக்கூடியதாக இருந்திருக்கும். பழையவர்களையும் இளைஞர்களையும் ஒட்டிப் பிறந்தோராக்கும் சக்தி 8-6 இற்கு உள்ளது. ஒட்டும், வெட்டும், அடிக்கும், தழுவும், நழுவும், இவை 8-6 ரின் மூடி வைத்திருக்கும் மர்மங்கள். மூடி திறக்கப்பட்டதும் அனைத்து மர்மங்களும் நிர்வாணங்களாகிவிடும்.

"டேய்! சண்முகம்! இவன் ஆரடா?"

ஐவரில் ஒருவன் என்னைச் சுட்டிக்காட்டிக் கேட்டபோது சண்முகம் மிகவும் அமைதியாக "இவன் இந்த ஏரியாவுக்குப் பழையவன், ஆனா கன காலம் இங்காலை வரேல்லை."

"அண்ணை! பிளாஸ்டிக் கிளாஸ் இல்லை. மூடிதான் கிளாஸ். மெல்லமா ஊத்தி அவருக்கு ஒரு பெக் குடுங்கோ!"

"தம்பி என்னிட்டைத் தாரும். ஒரு துளி கூட கீழ விழாம நான் மூடீக்கை விடுவன்." என்றபோது ஐவர் விழிகளும் என்னை மொய்த்தன. சிவப்பு விழிகள்.

"அண்ணை, இவனுக்கு நாசன விட்டி."

"தம்பி எனக்கும் நாசனலிட்டி தான். ஆனா அதை நான் துலைச்சு பத்து வரிசம்."

நான் மூடிக்குள் விஸ்கியை ஊத்தியபோது அவர்கள் என்னை வியப்புடன் பார்த்தனர். மூடிக்குள் நிரம்பியதை உள்ளே விட்டபின் அவர்களிற்கு மேர்சி சொன்னேன்.

"அண்ணை நாங்கள் மூடிக்கை விட்டா அரைவாசியை நிலம் குடிச்சிடும்.!"

"டேய்! நான் விடேக்கை அது கீழை ஒழுகினதை நீ எப்ப பாத்தனி?" எனக் கத்தினான் ஒருவன். அவனை எனது பேரன் எனலாம்.

வயதில் என்ன உள்ளதாம்! வீதி முடக்குகளில் நாங்கள் சந்திக்கும்போது நாம் எமது வயதுகளை மறந்துவிடுவதுண்டு. அப்பு அண்ணனாகி, அண்ணன் தம்பியாகி, முடிவில் தம்பி டேய் ஆகிவிடும் மெத்மாமோர்போஸ் உலகம் அது.

சண்முகம் என்னைப் பார்த்து மர்மமாகச் சிரித்தான்.

"அண்ணை! இழுங்கோ! எங்களுக்கும் தண்ணிவிடாய்." எனப் பேரன் சொன்னவுடன் இழுத்தேன். "மூடி அவன் கையில் பந்துபோல சுழன்று விழுந்தது.

மூடிக்குள் அதனை விட்டபின் "அண்ணை முன்னம் நீங்கள் றூக்பி விளையாடினனீங்களோ"

"ஓம்! என்ரை பந்துகளாக விஸ்கிப் போத்தில்களும் பியர் ரின்களும்"

"எப்ப நீ பிரான்சுக்கு வந்தனி?" என இன்னோர் முகம் கேட்டது.

"டேய்! நீ பிறக்கிறதுக்கு முன்னம்!"

"அண்ணை எனக்கொரு வேலை எடுத்துத் தருவியளே?"

"தம்பி நான் வேலையில்லாம பத்து வரிசம்."

"எனக்கு வேலை இல்லை, ஏறெம்மி வருகுது."

"அண்னை! ஓடிப்போய் ஒரு சப்பட்டை வாங்கிக்கொண்டு வாங்கோ!" என இன்னோர் பேரன் கத்தினான்.

"தம்பி! எனக்கு வீடும் இல்லை, அட்ரசும் இல்லை, ஏறெம்மியும் இல்லை. மூடியை என்னிட்டத்தை தா!"

"டேய்! எனக்குச் சுத்திறியோடா?" என்றபடி புலிபோல் என்மீது பாய்ந்தவன் மீது இன்னொரு பேரன் புலிபோல் பாய்ந்து கடித்து சொக்கையிலிருந்து ரத்தம் கொப்பளித்தபோது "விடு! விடு!", "வயித்தில ஒண்டு குடடா!", "கொனார்!", "வேசைமோன்", "சமாதானம்", "அடி", "பிடி" என பல சொல்கள் ஒரே வேளையில் எனது காதுகளுள் விழுந்தன.

"வேசைமோன்! ஏறெம்மி வந்து ஒரு கிழமையாகுது. ஒரு விஸ்கிப் போத்தில் இல்லாம..."

"டேய்! இவன்ரை பேர் தொமாத், அதை ஓசி எண்டு மாத்தினா?"

"டேய் ஓசி! இறங்கு!"

"நான் இறங்கமாட்டன்! ஏறுவன்!"

"இறங்கடா!" நான் அவனது மூக்கை நோக்கி ஓர் உதை விட்டேன். அது உடைந்து இரத்தம் கக்கியது. அவன் "ஐயோ!" என்றபடி விழுந்தான். நான் அவனது நாடியை நோக்கி மீண்டும் ஓர் உதை கொடுத்தேன். அதுவும் உடைந்து தசையிலிருந்து தப்பித் தனது எலும்பைக் காட்டியது.

சண்முகம் என்னைத் தடுக்க வந்தான். உதை ஒன்றுவிட்டேன். "டேய்! இதெல்லாம் தங்கம்!" என்றபடி அவன் எனது இரண்டாவது உதையையும் கவனத்துக்கு எடுக்காமல் நான்கு கால்களால் நிலத்தைச் சோதித்தபோது அவன் கையிலிருந்து பல்கள் சில பளிச்சிட்டன.

என்னை ஒருவன் தடுக்க வருவது போல வந்து ஓர் பொல்லால் தலையில் அடித்தான். அவ்வளவு தான்.

நான் சிரமப்பட்டு விழிகளைத் திறந்தபோது கடிக்கும் வெறியில் என்னைப் பார்த்து நாய் ஒன்று கத்தியது.

"இறங்கு!"

"என்ன?"

"இறங்கு!"

"நான் ஏறவில்லை!"

"நீ ரயிலிற்குள். உன்னை ஏற்றியது ரயிலல்ல. நீயே அதற்குள் ஏறினாய். இறங்கு!"

"என்ன நான் ரயிலிற்குள்ளா? இந்த ரயில் சிறீலங்கா வரை போகுமா? எனக்கு ஓர் ரிக்கெட் தா!"

"சிறீலங்கா! இது என்ன?"

"நாயைப் பிடி, பின்னால் இழு!"



படிப்பகம்

www.padippakam.com

அவன் நாயை இழுத்தான்.

"எனது நாயின் பெயர் சீஸர்!"

"அது எங்கே?"

"அது செத்துவிட்டது, சிறீலங்காவில்."

"சிறீலங்காவென்றால் என்ன?"

"எனக்கும் அது எதுவென்று தெரியாது!"

"இறங்கு!"

"நான் ஏறவில்லை!"

நாய் என்னை மீண்டும் மிரட்டியது.

"கடி!"

"நான் சொன்னால்தான் அது உன்னைக் கடிக்கும்!" என அவன் என்னிடம் சொன்னான்.

"சொல்!"

"இறங்கு"

நாய் என்னைப் பார்த்துக் குரைத்தது, நான் அதனைப் பார்த்துக் குரைத்தேன்.

நான் எப்படி ரயிலிற்குள் வந்தேன் என்பது எனக்கு விளங்கவேயில்லை. அவன் எனது கழுத்தின் பின்பக்கம் பிடித்து வெளியே தள்ளினான். நான் தள்ளாடியபடி வெளியே வந்தபோது இருளாயிருந்தது. என்னிடம் கடிகாரம் இல்லாததால் நேரம் எதுவென எனக்குத் தெரியவில்லை.

இருவர் தூங்கிக் கொண்டிருந்தனர் ஓர் மெத்ரோ வாசலின் முன். அவர்கள் அருகில் திறக்கப்பட்ட வைன் போத்தல் ஒன்று காலியாகாமல் நிமிர்ந்திருந்தது. ரகசியமாக நான் அதனை எடுத்துக்கொண்டு தூரப்போய் பூட்டப்பட்டுக்கிடந்த ஓர் மினிமார்க்கட் முன்னால் இருந்து குடித்தேன். வைன் நல்ல குளிராக இருந்தது, சுவையாகவும். அதற்குள் நிறைய இல்லாதபோதும் வெறியை விரைவாக ஊட்டியது. விழிகள் களைக்கத் தொடங்கின. நான் தூங்கத் தொடங்கினேன்.

"எழும்பு!"

ஓர் பெண்ணின் குரல் எனது காதிற்குள் கத்தியது. நானோ தூங்கினேன். எனக்குள் ஓர் இனம் புரியாத களைப்பு.

"எழும்பு!"

நான் மிகவும் சிரமப்பட்டு எனது விழிகளைத் திறந்தேன்.

"குடி!"

அவள் என்முன் ஓர் 8-6 பியரை நீட்டினாள். விழிகளின் கரைகளில் சில கண்ணீர்த் துளிகள்.

"பியருக்கு நன்றி! உனது கணவன் உன்னை இன்று அடித்துவிட்டானா?"

"என்னை உனக்குத் தெரியாதா?"

"யார் நீ?"

"நான் உனது மனைவி!"

நான் அவளது முகத்தை நோக்கி பியர் ரின்னை எறிந்தேன்.

■ **தமிழ்மகன்**

ஏழைகள் அடிவயிற்றில்
அகிம்சை போராட்டம்
நிறங்கள் பிரிக்கும் கட்சி பூமியில்

●●

முள் குத்திய புண்ணுக்கு
நிவாரண ஒத்தனம்
சுனாமி

●●

மிதிபடும் தாளில்
மானுடத்தின் காயங்கள்
நிகழ்வுகள்

தேர் முகத்தில்
நசுங்கும் முகங்கள்
சேரி வேதம்

●●

உண்டியல் நிரப்பு
உழைக்கும் பணம்
குடி

●●

மார்பை வருடும்
சமூக கிளிசல்
தீ தின்ற வெண்மணி

●●

கோயில் சுவற்றில்
சர்ச்சை சுவரொட்டி
பகுத்தறிவு வாசகம்

●●

பூமி சதுரங்கத்தில்
நகரும் காய்கள்
மதங்களாட்சியா
மக்களாட்சியா

●●

முகவரி இல்லாத கடிதம்
திருத்தப்படாத தேர்வுத்தாள்
அயோத்தி ராமன்

மௌனம் சினமானது
கொல்லி சுனமானது
கண்ணகி

●


படிப்பகம்

www.padippakam.com

■ குடியரசன்


# கணிதம் நம் உடைமை 7

ஹரப்பாவில் வீடுகள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டன என நாம் படித்திருக்கிறோம். களிமண்ணைச் சுட்டு "விரிந்தும் - குறுகியும்" என்ற நிலைகளை எய்தாத நிலையில் இன்றைய காலத்தில் சட்டி, பானை, ஓடு, செங்கல் போன்றவை உருவாக்கும் முறையை அன்றே ஹரப்பா மக்கள் உணர்ந்திருந்தனர். இது அம்மக்களின் அறிவியல் வளர்ச்சியை நமக்கு உணர்த்துகிறது. அறிவியலின் மேன்மை கணிதம் என்பதால், கணிதம் பற்றிய அவர்களின் அறிவு நமக்கு அவசிய மான தகவலாக அமைகிறது.

ஹரப்பா காலத்திற்கு முன்னதாகவே (மக்களால் அறியப்படும் காலம்) 'களிபங்கம்' என்ற காலம் வரலாற்றில் பேசப்படுகிறது. இக்காலத்தில் சுட்ட செங்கல் பயன்படுத்தப்பட்டதாக தகவல்கள் கிடைக்கின்றன. இவைகளை ஒப்பிடும்போது மண்ணைச் சுட்டு கடினமாக்கி வலிமைமிகு உபயோகங்களுக்கு பயன்படுத்தும் முறை அக்காலங்களில் இருந்தது நமக்குப் புலப்படுகிறது. மண்ணிலிருந்து உலோகங்கள் எடுக்கப்படுவதால், உலோகத்தை உருக்குதல், வார்த்தல், வேறு வடிவங்களுக்கு மாற்றுதல் போன்றவற்றையும் அம்மக்கள் அறிந்திருந்தனர் என்பது நமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை.

மூல்தான் முதல் லாகூர் வரை, அதாவது நூறு மைல் தொலைவிற்கு ரயில்வே இருப்புப்பாதை அமைத்ததற்கு ஹரப்பா பகுதியில் கிடைத்த செங்கற்களை அடிமட்டமாக சென்ற நூற்றாண்டில் பயன் படுத்தினர் என்பது கூடுதல் தகவல். ஹரப்பாவின் சுட்ட செங்கற்கள் வரலாற்று ஆவணமாக பாதுகாக்கப்படவேண்டிய அரிய வகைச் சொத்தாக இருப்பினும் கிடைத்த பொருட்கள் (சுட்ட மண்) வெகு அளவினதாக இருந்ததால், உபயோகம் பெரிய குற்றமாகக் கருதப்படவில்லை. இதில் ஆச்சரியம் என்னவெனில், செங்கற்கள் வடிவம் மாறாமல், குலையாமல் உறுதியான முழு வடிவத்தில் இன்றும் உள்ளன என்பதே.

செங்கலை உருவாக்க அவர்கள் பயன்படுத்திய மண், உவர்ப்பு ஆற்று நீர், தேவையான அளவிற்கான தீ போன்றவை நாம் ஆராய்ச்சி செய்து ஆச்சர்யம் அடைந்தவைகளே. செங்கல் வடிவங்கள் இதுவரை 15 வகைகளில் நமக்கு ஹரப்பாவில் கிடைத்துள்ளன.




செங்கல் அமைப்பின் தோற்றம் நீளம் - அகலம் - உயரம் முறையே 4:2:1 என்ற அமைப்பே பெரும்பாலும் பெற்றிருந்தது.

4-இன் பாதி 2

2-இன் பாதி 1

உயரிய அளவாக 4-ஐயும் அதில் பாதியான 2-ஐயும் அதிலும் பாதியான 1-ஐயும் முப்பரிமாண அளவுகளின் விகிதங்களாகக் கொண்டது மிகப்பெரிய கணித நுணுக்கம் வாய்ந்தது.

4:2:1 என்பது விகிதமாக இருப்பதால் 8, 4, 2 அல்லது 12, 6, 3 அல்லது 16, 8, 4 போன்ற அளவுகளில் ஏதேனும் அலகுகளாக உருவாக்கப்படும் வடிவம் மிகவும் உறுதியாகவும், தன் நிலையை வெகுகாலம் தக்கவைத்துக்கொள்ளும் என்பது வடிவ கணித உண்மை. இந்த உண்மையையும் ஹரப்பா மக்கள் அறிந்திருக்க வேண்டும் என்றே அங்கு கிடைக்கப் பெற்ற செங்கல் வடிவங்கள் நம்மை நம்பவைக்கிறது.

வில்லியம் புருன்டன், மயினிகர் போன்ற அறிஞர்களின் கூற்றுப்படி ஹரப்பா நாகரீகம் ஏதோ துவக்க நாகரீகமாக மட்டுமே இருந்திட வாய்ப்பில்லை. இந்த நாகரீகம் இம்மக்களின் வாழ்க்கைக்கு முன்பே வாழ்ந்த மக்களின் தொடர்ச்சியான நாகரீகமாகவே இருந்திருக்க வேண்டும் என்ற முடிவிற்கு நம்மை வரத் தூண்டுகிறது.

மாயச் சதுரங்கள்

(A)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

(B)

| | | | |
|---|---|---|---|
| 1 | | | 4 |
| | 6 | 7 | |
| | 10 | 11 | |
| 13 | | | 16 |

(C)

| | | | |
|---|---|---|---|
| 1 | 15 | 14 | 4 |
| 12 | 6 | 7 | 9 |
| 8 | 10 | 11 | 5 |
| 13 | 3 | 2 | 16 |



படிப்பகம்

www.padippakam.com

இவைகளைப் பற்றி 'டாவோ' (Tao) என்ற பவுத்தம் சீன முறைமையில் வெகுவாக ஆராய்ச்சி செய்துள்ளது.

இங்கு A, B, C என மூன்று படங்கள் தரப்பட்டுள் ளன. படம் C-யில் அடிக்கோடிட்ட எண்கள் 1, 4, 6, 7, 10, 11, 13, 16 என்பன படம் A-வைப் போலவே எவ்வித மாற்றமும் செய்யப்படாமல் உள்ளன.

படம் B-யில் காட்டப்பட்டுள்ளபடி 2, 3 என்ற எண்கள் 14, 15 என்ற எண்களோடு குறுக்காக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன. இதைப்போலவே (12, 8) (9, 5) உடனும் குறுக்காக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன. இதன்படி நமக்கு புதியபடம் C கிடைக்கிறது. படம் C-யில் எல்லா எண்களின் கூட்டுத் தொகையும் சமமாக உள்ளதைக் காணலாம்.

அதாவது 1-16 வரை எண்களை வரிசையாக எழுதிக்கொண்டு பின்னர் அவைகளை இடமாற்றம் செய்வதின் மூலம் சமமான தொகை எவ்விதத்திலிருந்து கூட்டினாலும் கிடைப்பதாக நாம் பெற்றுள்ளோம்.


2-17 வரை எண்களை நாம் எடுத்துக்கொள்வோம்.

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | 16 | 15 | 5 | |
| 13 | 7 | 8 | 10 | |
| 9 | 11 | 12 | 6 | |
| 14 | 4 | 3 | 17 | 38 |

இதைப்போல தொடர்ச்சியாக உள்ள சதுரவடிவ எண்கள் அமைப்பின் ஒரே கூட்டுத்தொகை வருமாறு எண்ணற்ற முடிவிலா மாற்றுச் சதுரங்களை நாம் உருவாக்கலாம். இவை 'டாவோ' என்ற வகை பவுத்தப் பிரிவில் மிகவும் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.

நாம் குளங்களில் கல் எரியும் போது ஏற்படும் வடிவங்கள், நீரின் மையத்திலிருந்து வட்ட வடிவத் தொடராக வெளிப்படுவதை காணலாம். இதையும் 'டாவோ' இவ்வாறு விவாதிக்கிறது.




மேலே காட்டப்பட்ட படத்தில் தொடர்ச்சியான வட்டங்கள்; மையப்புள்ளி ஒன்று மட்டுமே. அப் புள்ளி நாம் எறிந்த கல்லால் தோற்றுவிக்கப்பட்டது.

தொடரும் வட்டங்களின் பரப்பு விரிவடைந் தாலும் மையம் பொதுவாக வாய்த்திருப்பதால் இவ் வகையான வட்டம் சிறப்புடையதாக உள்ளது.

மனித இனத்தின் வளர்ச்சி, குவியம் இரண்டையும் தொடர்புபடுத்தி 'டாவோ' பவுத்தம் விவாதிக்கிறது. அந்த விவாதத்தை அடுத்த கட்டுரையில் காணலாம்.

நாம் முன்னர் கண்ட மாயச் சதுரம் இவ்வாறாக 'டாவோ' பவுத்தத்தால் விவரிக்கப்படுகிறது. மேலே




உள்ள சதுரத்தில் இரண்டு உள்வட்டங்களும், ஒரு வெளி வட்டமும் காட்டப்பட்டுள்ளது. ஆக மூன்று வட்டங் கள் உள்ளன. முதல், மூன்றாம் வட்டத்தில் உள்ள எண்கள் இடமாற்றம் செய்யப்படாமல் உள்ளன. இரண்டாம் வட்டத்தின் புள்ளிகள் மட்டும் குறுக்காக இடமாற் றம் செய்யப்பட்டுள்ளன. இதை இவ்வாறாக நாம் கணக்கிடலாம்.

முதல் வட்ட எண்கள் - மாற்றமில்லை.

இரண்டாம் வட்ட எண்கள் - மாற்றமுண்டு

மூன்றாம் வட்ட எண்கள் - மாற்றமில்லை

மேலும் ஒரு வட்டம் உருவாக்கப்படும் அளவிற்கு எண்கள் இருந்தால் அதாவது (1-25 வரை) மாற்றத் தகுந்த எண்கள் உள்ளடக்கியதாக இருக்கும்.

இது கணிதத்தின் ஒரு விளையாட்டாக இருந்தா லும், இது குறித்து பவுத்த இலக்கியங்கள் அன்றே விவாதிருத்திருப்பது நமக்கு அறிவியல் பின்புலம் இருந்திருப்பதை நிரூபிக்கிறது.

மூன்று வரிசை, ஐந்து வரிசை எண்களின் பவுத்த விளக் கத்தினையும் பின்வரும் கட்டுரைகளில் காண லாம்.

ஓவியங்களில் வட்டம், சதுரம் ஆகியவற்றின் கணக்கீடு - பவுத்தப் பயன்பாடுகள் குறித்து திருமிகு. ஓவியர் சந்ரு, கலைக்கல்லூரி பேராசிரியர் அவர் களிடம் பல சந்தேகங்களை கேட்டுள்ளேன். அவர் எனக்கு அது குறித்து அறிவு ஏற்படுத்திய பின்னர், அந்த நுணுக்கங்களையும் இணைத்து வரும் கட்டுரைகளில் சந்திப்போம்.

- தொடரும்

அறிவிப்பு

நெய்வேலி புதிய கோடாங்கி வாசகர் வட்டத்திற்கு கவிஞர் வெ. வெங்கடாசலம் (நெய்வேலி டவுன்சிப்) ஒருங்கிணைப் பாளராக பொறுப்பேற்கிறார்.

தொடர்புக்கு 0-94435-39550



படிப்பகம்

www.padippakam.com

# பஞ்சாயத்து – சாதியத்தின் ஆணிவேர்

***மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பின் 'தமிழக ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்களின் கூட்டமைப்பு' என்ற வெளியீட்டிலிலிருந்து எடுக்கப்பட்ட ஊராட்சித் தலைவிகளின் குரல்கள் புதிய கோடாங்கி வாசகர்களுக்காக இங்கு தொகுக்கப்படுகிறது.***

தொகுப்பு ■ சிவகாமி

**திருமிகு செல்வி, தலைவர், திம்மராச நாயக்கனூர் ஊராட்சி மன்றம்:**

ஒதுக்கப்பட்ட திம்மராச நாயக்கனூர் ஊராட்சிக்கு 2001-இல் நடைபெற்ற ஊராட்சி மன்றத் தேர்தலில் 6 பேர் தலைவர் பதவிக்கு போட்டி போட்டு அதில் 870 வோட்டுகள் கிடைத்து நான் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

எங்களுடைய பஞ்சாயத்தில் மக்கள் தொகை 3000 பேர் இருக்கிறார்கள். முருங்கை சாகுபடிதான் இங்கு விவசாயம். நாங்கள் கூலி விவசாய வேலைதான் செய்கிறோம். எங்கள் கிராமத்தில் 22 ஜாதிகள் இருக்கின்றன. தேர்தல் அறிவிக்கப்பட்டபோது நான் என் தாய் வீட்டில் கொடைக்கானலில் இருந்தேன். உயர் ஜாதி நாட்டாமைக்காரர்கள் என் மாமாவை அனுப்பி வைத்து என்னை அழைத்துக் கொண்டு வந்தார்கள். தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்யச் சொன்னார்கள். இதுவரை திம்மராசநாயக்கனூர் கிராமத்தில் இருந்து தலைவராக யாரும் வந்தது கிடையாது, திம்மராசநாயக்கனூரிலிருந்து தலைவரை வரவழைக்க வேண்டும் என என்னை உயர்ஜாதி இந்துக்கள் ரூ.5000/ வரை செலவு செய்து தேர்தலில் போட்டியிட வைத்தார்கள். பொம்மிநாயக்கனூரிலிருந்து 4 பேர் போட்டியிட்டதினால் ஓட்டு சிதறி மொத்தம் 870 ஓட்டு பெற்று நான் ஜெயித்தேன்.

திம்மராசநாயக்கனூர் பஞ்சாயத்தில் மூப்பர், நாயக்கர் இனம் அதிகம் (இவர்கள் நாட்டாமைக்காரர்கள்). அருந்ததியர் 10 குடும்பங்கள்தான் இருக்கிறார்கள். 8 கிராமிய கலைஞர்கள் குடும்பங்கள் வெளியேறிவிட்டன (அவர்கள் கிராமம் கிராமமாகச் சென்று பிழைப்பு நடத்துகிறார்கள்).

ஊராட்சிக்கு நிதியாக ரூ1.30 லட்சம் பணம் வந்தது. அப்பணத்திலிருந்து எனக்கு தேர்தலில் செலவு செய்த பணத்தை உயர் ஜாதிக்காரர்கள் கேட்டார்கள். மே 1, 2002 கிராம சபாவில் வந்த நிதிக்கு கணக்கு கொடுக்கிறேன், வந்து பார்த்துக் கொள்ளுங்கள் எனக் கூறினேன். அதற்கு முன்பே நாட்டாமைக்காரர்கள் தண்டோரா போட்டு அவர்களாகவே கூட்டம் நடத்தினார்கள். இதில் நானும் கலந்துகொண்டேன். இந்தக் கூட்டத்திலும் என்னிடம் ரூ. 5000/-ஐ கேட்டதற்கு கிராம சபாவில் இது சம்பந்தமாக பேசலாம் எனக் கூறிவிட்டேன்.

கிராம சபா கூட்டத்தை முடித்துவிட்டு, ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு நான், பஞ்சாயத்து கிளார்க், B.D.O. ஆபீசில் இருந்து வந்த அலுவலர் ஆகியோர் சென்றோம். நாங்கள் அங்கு இருந்தபோது 10 முதல் 15 பேர் கொண்ட (ஜாதி இந்துக்கள்) கும்பல் வந்து என்னிடம் இனிமேல் நாங்கள் சொல்வதைத்தான் நீ கேட்கவேண்டும். செக்புக், பாஸ்புக் நாங்கள் எடுத்துக் கொண்டு போகிறோம் என்று வெள்ளை பேப்பரில் கட்டாய கையெழுத்து வாங்கிக் கொண்டனர். இதில் கையெழுத்துப் போட்ட வார்டு உறுப்பினர்கள் மூப்பர், நாயக்கர் சமூகத்தைச் சார்ந்தவர்கள். இது சம்பந்தமாக போலீசில் புகார் கொடுக்கச் சென்றேன். அதையறிந்த துணை பஞ்சாயத்துத் தலைவர் (பள்ளர்) என்னிடம் புகாரை திரும்பப் பெறுமாறு சொன்னார். புகாரை திரும்பப் பெற்ற பிறகு 3.5.2002 அன்று பாஸ்புக், செக்புக்கையும் எடுத்து வந்து அலுவலகத்தில் கொடுத்துவிட்டுச் சென்றார்கள்.

நான் 5-ஆம் வகுப்பு வரைதான் படித்து இருக்கிறேன். எனக்கு படிப்பறிவு கம்மியாக இருப்பதாலும், அனுபவம் அதிகம் இல்லாததாலும் ஊராட்சி வேலைகளை வார்டு உறுப்பினர், துணைத்தலைவர், என் கணவர் ஆகியோரை வைத்துப் பார்த்துக் கொள்கிறேன். ஊராட்சிக்குத் தெரியாமல் நாட்டாமைக்காரர்கள் அவர்களாகவே வீடுகளுக்கு 55 குழாய் இணைப்பு கொடுத்துவிட்டார்கள். இது சம்பந்தமாக BDO ஆபீசில் புகார் செய்தேன். யாருக்கெல்லாம் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்ற பட்டியலை அதிகாரி கேட்டதினால், கிராமத்தில் போய் இணைப்பு கொடுத்து விட்டார்கள். இது சம்பந்தமாக BDO ஆபீசில் புகார் செய்தேன். யாருக்கெல்லாம் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்ற பட்டியலை அதிகாரி கேட்டதினால், கிராமத்தில் போய் இணைப்பு எடுத்துக் கொண்டவர்களின் விவரம் கேட்டதற்கு, ஆதிக்க ஜாதியினர் 'நாங்கள் போடுவோம். நீ யார் எங்களைக் கேள்வி கேட்பதற்கு' என்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

அந்தக் காலத்திலிருந்தே எங்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் (அருந்ததியினர்) செருப்புப் போடக்கூடாது. எங்களுக்கு டீ கடைகளில் தனி டம்ளர் வைத்திருப்பார்கள். கிராமசபைக் கூட்டத்தின் போதும் நான் தரையில்தான் உட்கார வேண்டும். 'எங்க ஜாதிக்கு கீழ் உள்ளவதான நீ, என்னடி எங்களுக்குச் சமமா நாற்காலியில் உட்கார்ந்திருப்பது' என்று கூறுவார்கள். ஊரில் கோவில் திருவிழா என்றால், கொட்டு அடிக்க, தோட்டி வேலை செய்ய மட்டும்தான் எங்கள் இனத்தவரை அழைத்துச் செல்வார்கள். வரிவசூலிப்பது எல்லாம் அவர்களே பார்த்துக் கொள்வார்கள். எல்லா ஜாதி இனத்தவருக்கும் சங்கம் இருக்கு. எங்க ஜாதிக்கு இல்லை.

நான் படித்திருந்தால் இப்ப எனக்கு உதவியாக இருந்திருக்கும். எங்கள் ஊராட்சி எழுத்தருக்கு 20 வருஷம் சர்வீஸ். என்னைக் கேட்காமலேயே, எனக்குத் தெரியாமலேயே செக் புத்தகத்தில் என்னை மாதிரியும், துணைத்தலைவர் மாதிரியும், கையெழுத்துப் போட்டு வங்கியில் இருந்து பணம் எடுத்துள்ளார். இது பற்றி புகார் கொடுத்தபோது அந்த கிளார்க் கைது செய்யப்பட்டார். வங்கி மேனேஜர் என்னை அழைத்து 'நீ அவன் கையாடல் செய்த 1,00,000 ரூபாயை கட்டிவிட வேண்டும். இல்லையென்றால் 25,000 கட்டி அவனை வெளியில் கொண்டு வா. பின் அவனிடமிருந்து பணத்தை வசூல் செய்து கொள்வதாக' கூறினார். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை யென்று கூறிவிட்டேன். இவ்வாறு நான் என் பணிகளை தொடர்வதில் தொடர்ந்து இடையூறுகள் இருந்து கொண்டே இருக்கிறது.

**திருமிகு கு.எஸ். மணி, தலைவர், பொட்டுலுப்பட்டி ஊராட்சி, உசிலம்பட்டி ஒன்றியம், மதுரை மாவட்டம்:**

எங்களது பொட்டுலுப்பட்டி கிராம பஞ்சாயத்தில் சுமார் 1100 வாக்காளர்கள் உள்ளனர். இதில் ஆண்கள் சுமார் 570 பேரும், பெண்கள் சுமார் 530 பேரும் உள்ளனர். சாதிய அடிப்படையில் தலித் இனத்தைச் சேர்ந்தவர்கள் சுமார் 350 பேரும், இதர இனத்தைச் சேர்ந்தவர்கள் சுமார் 750 பேரும் அடங்குவர்.

என்னை பஞ்சாயத்துத் தலைவராக தேர்தலில் போட்டியிட கூட்டத்தில் பொதுமக்கள் தீர்மானித்த போது எனக்கு சிறிது பயமாக இருந்தது. குறிப்பாக, தாழ்த்தப்பட்ட இனத்தைச் சாராத பிற இனத்தைச் சார்ந்தவர்கள் தாழ்த்தப்பட்ட பெண்ணாகிய எனக்கு எப்படி ஓட்டுப் போடுவார்கள்? என உள்ளுக்குள்ளே ஒரு பயம் இருந்தது. அனைவரும் அவ்வப்போது ஆதரவு தெரிவித்தபோதும் அப்பயம் தொடர்ந்து கொண்டே இருந்தது. தேர்தல் பிரச்சாரத்திற்கு நான் அதிகமாக போகவில்லை. எனது கணவரும் மற்றவர் களுமே தொடர்ந்து பிரச்சாரம் செய்து வந்தனர். இந்நிலையில் தேர்தல் செலவு குறித்து நடைமுறைச் சிக்கல் ஏற்பட்டது. என்னிடம் எவ்வித பணமும் இல்லை. என்னை நம்பி தனியாக கடன் கொடுப்பவரும் இல்லை. அப்போது எங்களூரைச் சேர்ந்த ஜெயராஜ் என்ற இதர இனத்தைச் சார்ந்த ஒருவர் தனது சுயலாபத்தை மனதில் வைத்துக் கொண்டு எனக்கு உதவுவதுபோல் முன் வந்து தேர்தலுக்காக ரூ. 15,000/- செலவழிப்பதாகவும், ஜெயித்தபின் அப்பணத்தை அவரிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமெனவும் கூறி என்னிடம் புரோ நோட்டில் எழுதி வாங்கிக் கொண்டு செலவழித்தார். தேர்தல் முடியும்வரை எவ்வித பிரச்சினையும் எத்தரப்பிலிருந்தும் வரவில்லை. சிறிது நாட்களிலேயே எனக்கு தேர்தல் செலவுக்கு கடன் கொடுத்த ஜெயராஜ் தேர்தலின்போது ரூ.15000/- செலவழித்தேன் என்று கூறி, தற்போது அதை ரூ. 30,000/- எனக்கூறி அதை உடனே பட்டுவாடா செய்யும்படி தொந்தரவு செய்ய ஆரம்பித்தார். அப்போது பஞ்சாயத்துத் திட்டங்களில் ஒன்றான பழைய வீடுகளை பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு செய்தலுக்காக நபர் ஒன்றுக்கு ரூ. 10,000/- வீதம் மொத்தம் 10 வீடுகளுக்கு ரூ. 1,00,000/-த்திற்கான திட்டத்தின் முன் பணமாக ரூ. 3,000 வீதம் 30,000 நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டது. இந்த பணத்தை அபகரிப்பதற்காக எனக்கு தேர்தலின்போது கடன் கொடுத்த ஜெயராஜும், பஞ்சாயத்து உதவித் தலைவரான இரவிச்சந்திரனும் திட்டமிட்டு மேற் கூறிய விசயத்தை எனக்கு தெரிவிக்காமலும், தனி பஞ்சாயத்து உறுப்பினர்கள் கூட்டத்தைக் கூட்டி தீர்மானம் இயற்றாமலும் என்னிடம் வற்புறுத்தி காசோலையில் கையெழுத்துப் பெற்று பணத்தை இருவரும் பங்கிட்டுக் கொண்டனர். இந்த பணத்தின் விவரமே மக்கள் என் மேல் செல்லம்பட்டி ஒன்றிய ஆணையாளரிடம் புகார் கொடுத்த பின்புதான் முழுமையாக தெரியவந்தது.

அதன்பின் நடந்தவைகளை நான் செல்லம்பட்டி BDO அவர்களிடம் புகாராக முறையிட்ட பின் எங்கள் பஞ்சாயத்து எழுத்தர் (கணக்காளர்), பஞ்சாயத்து உதவித் தலைவர் இரவிச்சந்திரன், அவரின் கூட்டாளி ஜெயராஜ் ஆகிய மூன்று நபர்களையும் அழைத்து உடனடியாக பஞ்சாயத்துப் பணம் ரூ. 30,000/-த்தை பஞ்சாயத்தில் சேர்க்கும்படி உத்தரவிட்டார். அவர்களும் ஒரு வார காலத்திற்குள் திரும்பச் செலுத்தி விடுவதாக உறுதியளித்தனர். ஒரு வாரத்திற்குப்பின் ரூ. 10,000/-த்துடன் BDO-வை அலுவலகத்தில் சந்தித்து மீதிப் பணத்திற்கு விரைவில் ஏற்பாடு செய்வதாகக் கூறியிருக்கின்றனர். வீடு பழுதுபார்ப்பதற்காக திட்டத்தின் மீதிப்பணம் ரூ. 70,000/- பஞ்சாயத்திற்கு வந்திருப்பதாக கிளார்க்கின் மூலம் கேள்விப்பட்டு, ஏற்கனவே என்னை மிரட்டி எடுத்த தொகை முழுவதையும் கட்டாமல், மீண்டும் பஞ்சாயத்துப் பணத்தை எடுப்பதற்காக என்னுடைய கணவரை அழைத்து அவரிடம் எவ்வித தகவலும் தெரிவிக்காமல் என்னிடம் இரண்டு வெற்றுக் காசோலையில் கையொப்பம் வாங்கி வருமாறு கேட்டுள்ளனர். என் கணவர் என்னிடம் கையெழுத்து வாங்கி வருவதாய் கூறிவிட்டு வீட்டிற்கு வந்து என்னிடம் நடந்தவைகளைச் சொன்னார். உடனே நான் என் கணவரின் துணையோடு மதுரை மாவட்ட ஆட்சியரிடம் முறையிட்டேன். அவர் மாவட்ட காவல்துறையின் உதவியோடு பஞ்சாயத்து உதவித் தலைவரையும், அவரின் கூட்டாளியையும், உசிலம்பட்டி காவலர்கள் மூலம்



படிப்பகம்

www.padippakam.com

அழைத்துவரச்செய்து விசாரணை மேற்கொள்ள உத்தரவிட்டார். விசாரணையில் பாக்கியுள்ள 20,000 ரூபாயை உடனடியாக செலுத்த காவல்துறையினர் கண்டிப்பாக உத்தரவிட்ட தன் பேரில் பணத்தை உடனே செலுத்தி விட்டனர். இனிமேல் வருங் காலங்களில் பஞ்சாயத்துப் பணத்தை முறையின்றி எடுக்கவோ, செலவழிக்கவோ, தலைவரை மிரட்டி காசோலையில் கையொப்பம் வாங்கவோ எவ்வித முயற்சியும் மேற்கொள்ளக்கூடாது என்றும் அப்படி ஏதேனும் இனிமேல் நடந்தால் அவர்கள் மேல் சட்ட ரீதியாக கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் காவல்துறையினர் எச்சரிக்கை செய்து அனுப்பினர்.

உதவித் தலைவர் மற்றும் அவரது கூட்டாளிகள் ஆகியோரின் ஏவுதலால் நான் ஊரில் இல்லாத சமயத்தில் நான் குடியிருக்கும் பனை ஓலை வேய்ந்த வீட்டை எரித்து விட்டனர். தகவல் தெரிந்து வெளியூரில் இருந்து வந்த நான் உடனே மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரிடமும், உசிலம்பட்டி காவல் நிலையத்திலும் நடந்ததை புகார் மூலம் தெரியப்படுத்தினேன். ஆனால் இதுவரை காவல்துறையினரும், மாவட்ட ஆட்சியரும் விசாரணை உள்ளிட்ட எவ்வித நடவடிக்கையும் எடுக்காததோடு என்னுடைய எரிந்து போன வீட்டிற்கு நட்ஷடஈடும் வழங்கவில்லை.

என்னை பஞ்சாயத்துத் தலைவராக செயல்பட விடக்கூடாது என்ற ஆதிக்க வெறியில் தொடர்ந்து என்னை அவமரியாதை செய்தும், அவமானப்படுத்தியும் பஞ்சாயத்து உதவித் தலைவர் இரவிச்சந்திரன் பல்வேறு கூட்டங்கள் நடத்தி வந்தார். உதாரணமாக, பஞ்சாயத்து கூட்டத்தில் என்னை நாற்காலியில் அமர விடாமல் கீழே தரையில் அமரும்படி கட்டாயப்படுத்தினார். என்னை பெண் என்றும், தலித் என்றும் கூறி ஊர் மரபுகளை மீறி நான் நாற்காலியில் அமர்ந்து பஞ்சாயத்துக் கூட்டங்களை நடத்தக்கூடாது என்று மிரட்டினார். இதற்கு கையாளாக தன் கூலிப் பட்டாளத்தைச் சேர்ந்த அதே கிராமத்தில் வசிக்கும் ஆதிக்க சாதியைச் சேர்ந்த மாயி என்பவரை ஒரு பஞ்சாயத்துக் கூட்டத்தின் போது அனுமதியின்றி உள்ளே நுழைந்து என்னை திட்டுவதற்கும், தாக்குவதற்கும் ஏவிவிட்டார். இந்த நபர் உள்ளே நுழைந்து என்னுடைய சட்டையைக் கிழித்துவிட்டு சேலையை உருவி என்னை மானபங்கப்படுத்தினார். அப்போது உடனிருந்த மற்ற உறுப்பினர்கள் என்னைக் காப்பாற்றி ஆறுதல் கூறினர். நான் உடனே மீண்டும் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து பஞ்சாயத்து கூட்டத்தின்போது உதவி பஞ்சாயத்து தலைவரின் கூலிப்படையின் மூலம் மானப்பங்கப்படுத்தப்பட்டது குறித்து புகார் செய்தேன். அவரும் உடனே மாவட்ட காவல்துறையினர் உதவியோடு உள்ளூர் (உசிலம்பட்டி) காவல் நிலைய அதிகாரிகள் முன்னிலையில் பஞ்சாயத்து உதவித் தலைவர் மற்றும் அவரின் கூலிப்படையினர் ஆகியோரை அழைத்து விசாரணை செய்ய கேட்டுக் கொண்டார். கடந்த முறை என் வீட்டிற்கு தீ வைத்த போது எவ்வித சரியான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையென மாவட்ட ஆட்சியரிடம் நான் சுட்டிக் காட்டியதோடு, இப்பிரச்சினைக்குரிய தீர்வை இம்முறை நீங்கள் சரியாக எடுக்காவிட்டால் நான் DPI உள்ளிட்ட அமைப்புக்களின் துணையோடு வேறுவித நடவடிக்கைகளில் ஈடுபடுவேன் எனக் கூறினேன். அதன்பின் காவல்துறை விசாரணை செய்தபோது, ஊர்ப் பெரியவர்கள் தலையிட்டு இனிமேல் இவ்விதம் நடைபெறாமல் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என பொறுப்பு ஏற்றுக்கொண்டதன் பேரில் சமரசம் செய்து வைக்கப்பட்டதோடு, இதை மீறினால் தாழ்த்தப்பட்டோர் மீதான வன்கொடுமைகள் சட்டத்தின்கீழ் வழக்கு தொடரப்படும் என எச்சரித்து அனுப்பினர்.

இவ்வளவு, தொடர் பிரச்சினை, இடைஞ்சல்களுக்கிடையேயும், என்னை தலைவராய் தேர்ந்தெடுத்த பஞ்சாயத்திற்கு,

1. சுமார் ரூ. 3 லட்சம் மதிப்பில் புதிய கண்மாய் அமைக்கும் பணி

2. சுமார் ரூ. 84,000 மதிப்பில் ஊரணி அமைக்கும் பணி

3. சுமார் ரூ. 50,000 மதிப்பில் கிராமச் சாலைகள் அமைக்கும் பணி

4. சுமார் ரூ. 7 லட்சம் மதிப்பில் காலனி வீடுகள் பழுதுநீக்குதல் மற்றும் பராமரிக்கும் பணிகள் ஆகியவைகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த குறுகியகால அனுபவத்தின் வாயிலாக நான் பல்வேறு படிப்பினைகள் பெற்றுள்ளேன். குறிப்பாக, என்னால் தன்னம்பிக்கையுடன் தனித்து செயல்பட முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. மீண்டும் அடுத்த தேர்தலில் போட்டியிட்டு என்னுடைய பஞ்சாயத்திற்கு இன்னும் பல்வேறு அடிப்படை, அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கையோடு நடப்பு ஆண்டு. இன்னும் எங்கள் பஞ்சாயத்திற்கு தேவையான சுடுகாட்டில் கொட்டகை அமைத்தல், காலனி வீடுகள் கட்டுதல், பால்வாடி அமைத்தல், நாடகமேடை அமைத்தல் போன்றவைகளுக்கு தீர்மானங்கள் இயற்றப்பட்டு நடைமுறையில் உள்ளன. அவற்றை பெற்றுத் தருவதற்கான முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றேன்.

**திருமிகு. ஏ. ஜெயலலிதா, தலைவர், வெள்ளரி வோடை ஊராட்சி, மண்டபம் ஒன்றியம், இராமநாதபுரம் மாவட்டம்:**

என் பெயர் வி. ஜெயலலிதா, வயது 32. நான் பத்தாம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். எனக்கு திருமணமாகி இரண்டு பெண் குழந்தைகள் உள்ளன. என் கணவர் விவசாயத் தொழிலாளி. என்னுடைய இரண்டு பெண் குழந்தைகளும் படிக்கிறார்கள். எங்களுக்கு சொந்தமாக 1.5 குறுக்கம் நிலம் மட்டுமே உள்ளது. இந்த நிலத்தை நம்பித்தான் நாங்கள் வாழ்கிறோம். இந்த பூமியும் வானம் பார்த்த பூமியாக இருப்பதால் மிகவும் சிரமமாக இருக்கிறது. இந்த ஊராட்சியில் விவசாய நிலம் அதிகமில்லை. 50% மக்களிடம் மட்டுமே விளைநிலம் இருக்கிறது. இவர்கள்தான் சிறிது வசதியானவர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

நான் வெள்ளரிவோடை ஊராட்சி, மண்டபம் ஒன்றியத்தில் 2001-இல் நடைபெற்ற ஊராட்சி மன்றத் தலைவர் தேர்தலில் எதிர்ப்புகளின்றி தேர்வு செய்யப் பட்டேன். எங்கள் ஊராட்சி பெண்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட தனித்தொகுதி. எங்கள் ஊராட்சியில் ஊராட்சி மன்றத் தலைவர், உதவித் தலைவர், வார்டு மெம்பர் இவர்கள் அனைவரும் எதிர்ப்புகளின்றித் தான் தேர்வு செய்யப்படுவார்கள். காரணம் இந்த பஞ் சாயத்தில் உள்ள உள்ளூர் கிராம பஞ்சாயத்துத் தலை வரான திரு. பழனிச்சாமி மற்றும் ஊர் பொதுமக்கள் அனைவராலும் சேர்ந்து எடுக்கப்பட்ட ஊர்க்கட்டுப் பாடு முறையாகும். 'இந்தக் கட்டுப்பாடானது கடந்த இரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து நடந்து வருகிறது. இந்த ஊர்க்கட்டுப்பாட்டின் முறைப்படி ஒவ்வொரு தேர்தலின்போதும் புதிய ஆட்கள் மட்டுமே எதிர்ப்பு களின்றி தேர்வு செய்யப்படுவர். தேர்தலில் யாரும் போட்டியிடமாட்டார்கள். இவ்வாறு தேர்ந்தெடுக்கப் படுபவர்கள் நாடார் மற்றும் தேவர் இனத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே. ஏற்கனவே பதவியில் இருந்தவர்கள் மீண்டும் பதவி வகிக்க வேண்டும். மேலும் பெண்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடத் திற்கு பெண்கள் மட்டுமே பதவி வகிக்க முன்வர வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதற்காக இவ்வாறு உள்ளது.

எங்கள் ஊராட்சி 2,160 ஜனத்தொகை கொண்ட, 350 குடும்பங்கள் உடையதாகும். இதில் 30 ஆதி திராவிடர் குடும்பங்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்த ஊராட்சியில் அதிகமான ஆதிக்க இனத்தவர்கள் நாடார்கள் மட்டுமே.

இந்த ஊராட்சியில் பிற ஜாதி ஆண்களின் ஆதிக் கத்தால் தாழ்த்தப்பட்டோர் வாழ்க்கையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட வாய்ப்பில்லை. மேலும் எண் ணிக்கை மிகவும் குறைவாகவே தாழ்த்தப்பட்டோர் உள்ளதால் இவர்களால் துணிந்து எதையும் செயல் படுத்த முடியாத நிலையில் உள்ளனர். தாழ்த்தப்பட்ட மக்களையும் ஊர் பொதுக்குழுவில் சேர்த்தால் மற்ற ஜாதியின் ஆண்கள் இதை எதிர்ப்பார்கள். இவர்கள் தேர்தலிலும் நிற்க முடியாது. தாழ்த்தப்பட்ட மக்கள் மற்ற இனத்தவரின் வீட்டிற்குள் நுழையக் கூடாது. மேலும் மற்ற இனத்தவர்கள் இவர்களின் வீட்டிற் குள்ளேயே நுழையக்கூடாது. தீண்டாமை எங்கள் ஊராட்சியில் வேரூன்றியுள்ளது. இச்சமூகக் குற்றத்தை களைவதற்காக முயன்று வருகிறேன். வெள்ளரி வோடை ஊராட்சி அலுவலகத்திற்கு அருகில் சுமார் 126 செண்டு நிலம் உள்ளது. இந்த நிலம் இந்த ஊராட் சியின் பொது நிலமாகும். இந்த நிலத்தில் ஆண்டு தோறும் நடக்கும் அம்மன் கோவில் திருவிழாவில் சாமி வழிபாட்டிற்கென்று கொட்டகை அமைக்கப் பட்டு பின்னர் கொட்டகையை பிரித்து விடுவார்கள். இப்படியே ஒவ்வொரு ஆண்டும் பிரச்சினையில்லாமல் நடந்து வந்தது. இந்த நிலத்தை நாடார் சமூகத்தைச் சேர்ந்த திரு. முத்துவேல் என்பவர் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளார். இந்த பொது நிலத்தை, முத்துவேல் தனக்கு சொந்தம் என்று உரிமை கொண்டாடுவதை இந்த ஊர் மக்களால் ஜீரணிக்க முடியவில்லை. அத னால் வெள்ளரிவோடை மக்கள் அனைவரும் சேர்ந்து இந்தப் பிரச்சினையை என்னிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்து விட்டனர்.

முதல் முயற்சியாக கிராம நிர்வாக அலுவலர் (VAO) விற்கு மனு 2001-இல் கொடுத்தேன். மேலும் அலுவல கம் சென்று இந்த நிலத்திற்கான பட்டா உள்ளதா? யார் பேரில் உள்ளது என்று பார்த்தேன். அப்போது தான் தெரிந்தது இந்த நிலம் அந்த ஊராட்சியின் பொதுச் சொத்து என்பது. மேலும் ஊராட்சிக்கென்று யார் ஊராட்சி மன்றத் தலைவராக தேர்வு பெற்று வரு கிறார்களோ அவர்கள் அப்பொறுப்பில் இருக்கும் வரை இந்த நிலமும் அவர்களின் பொறுப்பில் இருக் குமே தவிர தலைவருக்குச் சொந்தமாக இருக்காது. அந்த இடத்தின் சர்வே எண் 235, பட்டா எண் 457 என்று ஆவணங்களில் இருந்தது. இதைப் பார்த்த போதுதான் எனக்கும் இந்த நிலம் ஊராட்சியின் பொதுச் சொத்து, தனிநபரின் சொத்து இல்லை என்பதைப் புரிந்துகொண்டு, மீண்டும் முழு நம்பிக்கையுடன் எதிர்த்துப் போராடத் தொடங்கி னேன்.

அதன் பின்னர் இந்த நிலத்தை அளக்க ஏற்பாடு செய்தேன். நிலம் அளக்கும் நில அளவை அதிகாரி முதலில் ஒரு வாரம் கழித்து வந்து அளந்து தருகிறேன் என்று சொன்னவர் மீண்டும் வரவேயில்லை. நாங்கள் இடம் அளக்க ஏற்பாடு செய்ததைப் பார்த்த முத்து வேல் நீதிமன்றத்தில் என்மீது வழக்கு தொடுத்தார். அதில் "எனக்குச் சொந்தமான நிலத்தை, இந்த ஊராட்சியின் ஊராட்சிமன்றத் தலைவர் திருமதி. ஏ. ஜெயலலிதா ஆக்கிரமிப்பு செய்ய நினைக்கிறார்" என்று வழக்கு தொடுத்து, எனக்கு நீதிமன்றம் மூலம் 2002 ஜனவரி 25-ஆம் தேதி நீதிமன்றத்தின் முன் வர வேண்டும் என்ற அறிவிப்பு வந்தது. அன்று நான் நீதி மன்றம் சென்றேன். வழக்கு பலமுறை மாற்றி வைக்கப் பட்டும், தொடர்ந்து நான் சென்றேன். இவ்வாறு எதிர்பார்த்து பலமுறை (பிப்ரவரி 22, மார்ச் 20, ஏப்ரல் 8, ஜூலை 4) நீதிமன்றம் போய்விட்டு சும்மா வருவதால் எங்கள் அரசாங்க வழக்கறிஞர் திரு. அருளாநந்த பரிமளம் என்னிடம் "நீங்கள் கோர்ட்டுக்கு வரவேண் டாம். குமாஸ்தாவை மட்டும் அனுப்புங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றார். அதன் பின்னர் தான் தெரிந்தது, இவரும் முத்துவேலின் கை பொம்மை என்று இவரை விட்டு விட்டு வேறு வழக் கறிஞரைப் பார்க்கலாம் என்றால், மாவட்ட ஆட்சியர் இப்பொறுப்பை இவரிடம் ஒப்படைத்துள்ளார். நான் அவரைக் கவனிக்காததால் முத்துவேல் கவனிக்கத் தொடங்கிவிட்டார். என்னிடம் வழக்கறிஞர் நன் முறையில் பேசிவிட்டு, செய்யவேண்டியவற்றை எதிர் தரப்பினருக்கு செய்கிறார். மக்களின் ஒத்துழைப்பு தற்போது குறைந்து கொண்டே வருகிறது. காரணம் முத்துவேலின் குடும்பத்திற்கு பயப்படுகிறார்கள். முத்துவேலின் குடும்பம் ஆட்பலம், பணபலம் கொண்டது என்பதால், சாட்சி சொல்ல மக்கள் முன்வர அஞ்சுகிறார்கள். என்னுடைய பணிக்கால 5


படிப்பகம்

www.padippakam.com

வருடத்திற்குள் என்னுடைய முழு முயற்சியால், இந்த நிலம் மக்களுக்கா அல்லது அந்த தனி நபருக்கா என்பதை அறியும் வரை தொடர்ந்து போராடுவேன்.

**திருமிகு. S. லதா, தலைவர், திருவோணம் ஒன்றியம், தஞ்சாவூர் மாவட்டம்:**

எங்களது நெய்வேலி வடக்கு ஊராட்சி, தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியத்தில் அமைந்துள்ளது. எங்களது ஊராட்சி 1,320 குடும்பங்களுடைய, 4,335 ஜனத்தொகை கொண்டதாகும். இதில் ஆண்கள் 2,178 நபர்களும், பெண்கள் 2,757 நபர்களும் உள்ளனர். இதில் ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் 2,389 நபர்கள். 1,946 நபர்கள் இதர இனத்தைச் சேர்ந்தவர்கள். இந்த ஊராட்சி 15 தெருக்களை உள்ளடக்கிய ஊராட்சியாகும். இந்த ஊராட்சியில் 4 வார்டுகள் உள்ளன. மொத்த வார்டு உறுப்பினர்கள் 9 நபர்கள், இதில் ஆண்கள் 5 நபர்களும், பெண்கள் 4 நபர்களும் ஆவர். இவர்களில் 5 உறுப்பினர்கள் தாழ்த்தப்பட்டோர். 4 உறுப்பினர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள்.

எங்கள் ஊராட்சியில் கள்ளர் தெருவிற்கு கிராம கல்விக்குழு (SSA) திட்டத்தின் கீழ் பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஒதுக்கீட்டிலிருந்து ரூ. 60,000/-த்தை முதல் தவணையாக எடுத்து பணியினைத் தொடங்கி, வேலை நடந்துகொண்டு இருந்தது. இதன் தொடர்பணியினை முடிப்பதற்காக, இரண்டாவது தவணைத்தொகை பெறுவதற்காக காசோலை வேண்டி, முதன்மைக் கல்வி அலுவலர் (CEO) அலுவலகம் சென்றேன். தாழ்த்தப்பட்டவராக இருப்பதாலும், பெண் என்பதாலும் என்னை அமரச் சொல்லவில்லை. இதுபோன்றுதான் எந்த துறைக்குச் சென்று எனது ஊராட்சியில் உள்ள பிரச்சினைகளை நான் சொன்னாலும் கேட்பது இல்லை.

கல்விக்குழு முதல் கூட்டம் கூட்டும்போது, என்னையும் அழைத்தார்கள். நான் சென்றிருந்தேன். கட்டிடம் கட்டியதற்கு ரூ. 40,000/- தான் செலவாகியுள்ளது. ஆனால் என்னிடம் ரூ.70,000/-ற்கு கையொப்பம் கேட்டார்கள். நான் போடமுடியாது என்று மறுத்துவிட்டு வந்துவிட்டேன்.

எங்கள் ஊராட்சி தாழ்த்தப்பட்டோருக்காக ஒதுக்கப்பட்ட ஊராட்சியாகும். இந்த ஊராட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை அதிகார வர்க்கத்தினரின், மேல் ஜாதியினரின் எதிர்ப்பு இருந்து வருகின்றது.

இந்த எதிர்ப்பு இன்றுவரை தொடர்வதற்கு உதாரணமாக, வார்டு உறுப்பினர்கள் ஒத்துழைப்பு தருவதில்லை. கிராம சபைக் கூட்டங்களுக்கு அனைவரும் வருவதில்லை. ஜாதி மற்றும் அரசியல் நோக்குடன் இருப்பதால், கூட்டங்களைப் புறக்கணிக்கிறார்கள். இதனால் எந்தத் தீர்மானங்களையும் நிறைவேற்ற இயலவில்லை.

இதுபோன்று ஊராட்சிமன்ற கிளார்க்கால் ஏகப்பட்ட பிரச்சினைகளைச் சந்திக்க நேரிட்டது. ஊராட்சிக்கு செய்யவேண்டிய வரிவசூல்களை ஊராட்சி பில் புக்கில் வசூல் செய்யாமல், அவர் தனக்கென்று தனி பில் புக் அடித்து வசூல் செய்தார். அதைக் கண்டுபிடித்து, அவரைப் பணியிலிருந்து விலக்கிவிட்டோம். அவரை விலக்கியதை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குத் தெரியப்படுத்தாமல், 5 மாங்களுக்குப்பின் புதிதாக கிளார்க்கை தேர்வு செய்தோம். எனது அறியாமையைப் பயன்படுத்திக் கொண்டு, முன்னாள் கிளார்க் இடைப்பட்ட அந்த 5 மாதங்களுக்கும் ஊதியம் கேட்டு, பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் என்மீது புகார் மனு கொடுத்துள்ளார். இப்பொழுது நான் அவருக்கு 5 மாத ஊதியம் கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றேன். என்னதான் பிரச்சினைகள் இருந்தாலும், என்னை தேர்ந்தெடுத்த மக்களுக்கு என் சேவையை செய்யாமல் பின்வாங்கமாட்டேன்.

**திருமிகு ஆர். ஈஸ்வரி, தலைவர், சுப கவுண்டன் புதூர் ஊராட்சி, ஆனைமலை யூனியன், பொள்ளாச்சி வட்டம், கோவை மாவட்டம்:**

கடந்த 1996-ஆம் ஆண்டு நடைபெற்ற ஊராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டு சுப கவுண்டன்புதூர் ஊராட்சி மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். தற்போது இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறேன். இது தலித் பெண்களுக்கென்று தமிழக அரசால் ஒதுக்கப்பட்ட தனித் தொகுதியாகும். தேர்தலின்போது போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு உயர் சாதியினர் தொல்லை கொடுத்தனர். எனக்கு என் சகோதரர்களும், என் சமுதாய மக்களும் உறுதுணையாக இருந்ததால் நான் தேர்தலில் வெற்றி பெற்றுவிடுவேன் என்று உறுதியுடன் இருந்தேன். நான் தேர்ந்தெடுக்கப்பட்டபோது அரசியலைப் பற்றியோ பரவலாக்கப்பட்ட ஆளுமை முறை குறித்தோ எனக்கு எதுவும் தெரியாது. ஊராட்சியில் இருந்த பிற சமூகத் தலைவர்கள் வலுவான அரசியல் பின்னணியுடன் பணி புரிந்தனர். நான் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த பெண் தலைவர் என்பதால் பிற அரசியல் தலைவர்கள் என்னை நிராகரித்தும், எதிர்த்தும் வந்தனர். ஊராட்சி மன்ற துணைத் தலைவர்கள் உதவியுடன் என்னை மிரட்டியும், தொந்தரவு கொடுத்தும் வந்தனர்.

எனது ஊராட்சியில் சாதி ஆளுமை இன்னமும் நிலவி வருகின்றது. எனக்கு கல்வி அறிவு இருந்த காரணத்தாலும், தன்னம்பிக்கையும், துணிவும் இருந்த காரணத்தாலும், ஊராட்சி நிர்வாகம் குறித்த எனது அறிவை வளர்த்துக் கொண்டு, எனது பணிகளில் ஏற்படும் இடையூறுகளை சமாளித்துக் கொண்டு திட்டங்களை நிறைவேற்றி வருகிறேன். சுயேட்சை வேட்பாளராக தேர்வு செய்யப்பட்டதால் அடுத்த கட்சி உறுப்பினர்களின் தலையீடு இல்லாமல் எனது கடமைகளை சுயமாக நிறைவேற்ற முடிகிறது. நிதிப் பற்றாக்குறையால் எனது ஊராட்சிப் பணிகளை முதல் இரண்டு வருடங்களுக்கு சரிவர நிறைவேற்ற


படிப்பகம்

www.padippakam.com

முடியவில்லை. பின்னர் குறைந்த நிதியைக் கொண்டு எனது ஊராட்சியின் அடிப்படைத் தேவைகளை முடிந்த அளவு நிறைவேற்றி வருகிறேன். அப்போது எனக்கிருக்கும் தன்னம்பிக்கை மற்றும் அறிவின் துணையோடு எனது ஊராட்சிக் கடமைகளை நன் முறையாக நடத்தி வருகிறேன்.

**திருமிகு எம். காளியம்மாள், தலைவர், தெத்துப் பட்டி ஊராட்சி, அரவக்குறிச்சி ஒன்றியம், கரூர் மாவட்டம்:**

எங்களது தெத்துப்பட்டி ஊராட்சி கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி ஒன்றியம், அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ளது. தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த நான் இரண்டாவது முறையாக ஊராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறேன்.

தொகுப்பு வீடுகள் வழங்குவதில் நான் ஒவ்வொரு வீட்டிற்கும் லஞ்சம் வாங்குவதாக பிரச்சினை எழுந்தது. இது சம்பந்தமாக நான் மாவட்ட ஆட்சியரை சந்தித்து, எங்கள் ஊராட்சிக்கு வந்து இப்பிரச்சினையில் தலையிட்டு தீர விசாரித்து முடிவு செய்ய வேண்டும் என்று கூறினேன். ஆட்சியர் வந்து விசாரித்த பின், தொகுப்பு வீடு தேர்வு செய்வதில் ஊழல் இல்லை என்று முடிவு செய்தார்.

சின்ன தொப்பாரபட்டி என்ற கிராமத்தில், போர்வெல் போட்டு, பைப்லைன் அமைத்து, மேல் நிலைத் தொட்டி கட்ட வேண்டியிருந்தது. அப்போது, பக்கத்தில் 100 மீட்டர் தள்ளி தொட்டியை நாயக்கர் சமூகத்தைச் சார்ந்தவர்கள், அவர்கள் தெரு வழியாக பைப்லைன் எடுத்துச் செல்ல அனுமதி மறுத்தார்கள். எனவே நான், என் உதவியாளர், என் கணவர், ஊராட்சி மன்ற முன்னாள் உதவித் தலைவர் ஆகியோர் உதவியுடன் பைப்லைன் போடும் முயற்சியில் ஈடுபட்டோம். அவர்கள் சினமடைந்து எங்கள் மீது மண்ணை அள்ளிப்போட்டு தாக்க முயற்சித்தனர். அந்த வேலையை பாதியில் விட்டு விட்டு மாவட்ட ஆட்சியரிடம் பிரச்சினை குறித்து முறையிட்டேன். எங்கள் ஊராட்சிக்கு வந்த மாவட்ட ஆட்சியர் தண்ணீர் பொதுச் சொத்து என்று கூறி, எனக்கு காவல் துறை பாதுகாப்பு அளித்து உதவி செய்தார். அதன் பின்னர் பைப்லைன் போடும் பணி நிறைவு பெற்றது. ஆனால் ஆரம்பத்தில் அவர்கள் குழாயிலிருந்து தண்ணீர் பிடிக்க மறுத்தார்கள். மீண்டும் மாவட்ட ஆட்சியரிடம் முறையிட்டேன். அவரே நேரில் வந்து குழாய் திறந்து தண்ணீர் விநியோகம் செய்தார். காலப் போக்கில் மக்கள் அந்த நீரை பயன்படுத்தத் துவங்கினர்.

**திருமிகு D. சித்ரா தேவராஜன், தலைவர், தாங்கி ஊராட்சி, வாலாஜாபாத் ஒன்றியம், காஞ்சிபுரம் மாவட்டம்:**

என்பெயர் D. சித்ரா, வயது 36. நான் பட்டப் படிப்பு வரை படித்துள்ளேன். என் தாத்தா 1996-க்கு முன் இருந்த கிராம பஞ்சாயத்துக்கு தலைவராக பதவி வகித்தார். அவர் நல்ல முறையில் பணியாற்றியதால் மக்கள் மத்தியில் என் குடும்பத்திற்கு நற்பெயர் இருக்கிறது. என் ஊராட்சி மக்களுக்கு தொண்டு புரிந்து அவர்களின் நிலையை உயர்த்த வேண்டும் என்ற எண்ணம் எனது இளம் வயது முதலே இருந்தது. 2001 இல் நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தலில் எனது குடும்பத்தினர் ஆதரவுடன் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றேன். என்னுடன் 6 வார்டு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் மிகவும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் 3 பேர் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் 3 பேர் இவர்களில் பெண் உறுப்பினர்கள் மூவர்.

ஊராட்சி மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 2003-இல் ஆண்களின் எண்ணிக்கை 410 மற்றும் பெண்களின் எண்ணிக்கை 436 ஆக மொத்தம் 846. தாழ்த்தப்பட்டவர்களின் மக்கள் தொகை மொத்தம் 308, அதில் ஆண்கள் 156 மற்றும் பெண்கள் 152 இவர்களில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 150 ஆகும்.

பெரும்பாலானோர் விவசாயக் கூலிகளாக உள்ளனர். தாழ்த்தப்பட்டோர் சமூகத்தைச் சேர்ந்த 73 குடும்பங்கள் வாழ்கின்ற இடம் கோவிலுக்கு சொந்தமான இடம் என்பதால் அவர்கள் வீடு கட்டியுள்ள இடத்திற்கு பட்டா கிடைக்கவில்லை. எனவே அரசு கட்டித்தரும் தொகுப்பு வீடுகள் போன்ற திட்டங்களினால் பயன்பெற முடியாமல் தவிக்கின்றனர். அவர்கள் வாழும் பகுதிக்கு பட்டாவுடன் கூடிய தொகுப்பு வீடுகள் கட்டித்தரப்பட வேண்டும். இதற்காக ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டிருக்கிறது.

மிகவும் வறுமையில் உள்ள 26 குடும்பங்களுக்கு தொகுப்பு வீடுகளுக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. அதில் குறைந்தது 10 பேர்களுக்காவது வீடு கட்ட உதவி அளிக்கப்படும் என எதிர்பார்க்கிறோம்.

**திருமிகு ஆர். ஜோதி, தலைவர், வீரராகபுரம் ஊராட்சி, திருவள்ளூர் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்:**

என் பெயர் ஆர். ஜோதி. தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஒதுக்கப்பட்ட திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த, வீரராகபுரம் ஊராட்சியில் மன்றத் தலைவர்களுக்கான பதவிக்காக போட்டியிட்டு வென்றேன். கடந்த மூன்று ஆண்டுகளாக நான் ஊராட்சி மன்றத் தலைவராக உள்ளேன். சுடுகாட்டிற்கு வீரராகபுரம் கிராம மக்கள் செல்வதென்றால் சுற்றுப் பாதையில் சுமார் அரை கிலோ மீட்டர் நடந்துதான் செல்ல வேண்டிய நிலை இருந்து வந்தது. இதனால் பொது மக்கள் மிகவும் அவதியுற்றனர். நான் பஞ்சாயத்துத் தலைவராக பொறுப் பேற்றவுடன், இப்பாதைக்கான மாற்றுப் பாதையை கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு, இவ்வூரில் வசிக்கும் வாசு நாயுடு, திரு. ஜனார்த்தன நாயுடு போன்றவர்களுக்கு சொந்தமான இடங்களை அவர்களிடம் பேசி பெற்றேன். இவர்கள் நிலங்களுக்கிடையில் சென்னையில் வசிக்கும் திரு. நவநீதம், திரு. திருநாவுக்கரசு போன்றோர்களுக்கு சொந்தமான இடமும்



படிப்பகம்

www.padippakam.com

இருந்தது. நாங்கள் அவர்கள் ஒன்றும் கூறமாட்டார்கள் என்று நினைத்து சாலை போட்டு விட்டோம். அவர்கள் வந்து பறையர்களுக்கு இந்த இடத்தைத் தரமுடியாது என்று கூறி என் மீது 2003 ஆம் ஆண்டு வழக்கு தொடுத்தனர். 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வந்துவிட்டது. போலீசாரின் உதவியுடன் சாலையை அகற்ற வந்தனர். மக்கள் முற்றுகையிட்டு எதிர்ப்பு தெரிவித்தவுடன் திரும்பிச் சென்று விட்டனர். இங்குள்ள அம்பேத்கர் மக்கள் விடுதலை முன்னணியினருடன் சேர்ந்து கிராம மக்கள் அவர்கள் கொடியை இப்பொழுது அங்கே நட்டு வைத்துள்ளனர். இதனால் இப்பொழுது அவர்கள் ஏதும் பிரச்சினை செய்யவில்லை.

(இவ்வெளியீடு Human Rights Advocacy, Egmore, Chennai-8 என்ற முகவரியில் கிடைக்கும்)

## புதிய கோடாங்கியின் நாட்குறிப்பு

### ஜனவரி - பிப்ரவரி

ஜன. 5 : தலித் நிலவுரிமைப் போராட்டக்குழுக் கூட்டத்தில் நிகழ், சன்னா, சிவகாமி, கருப்பன், கிறித்துதாசு காந்தி, இன்பக்குமார், பேரா. ராஜ்குமார், நிக்கோலஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜன.11 : Dalit Chamber of Commerce உறுப்பினர் கூட்டத்தை Dalit Renaissance அமைப்பைச் சேர்ந்த லாரன்ஸ் வின்சென்ட் அவர்கள் நடத்த தீப்தி சுகுமார், சிவகாமி, நாகேஸ்வரி, மேரி ஜான், டானியல், கருப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர். கருப்பன் அதன் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டார்.

ஜன. 15 : கரூர்- வேப்பங்குடி கிராமம். புதிய கோடாங்கியின் எழுச்சி முகாம். சரவணன் ஒருங்கிணைக்க, நிகழ், அரங்க மல்லிகா, சிவகாமி, லெனின், குடியரசு ஆகியோர் கலந்து கொண்டு கலந்துரையாடல் நிகழ்த்தினர். அன்று இரவு அரங்க மல்லிகாவின் ஊரான திருவானைக்கோவிலில் தலித்துகள் நடத்திய பொங்கல் விழாவில் கலந்துகொண்டு அனைவரும் உரையாற்றினர்.

ஜன. 28 : ஐதராபாத்தில் நடைபெற்ற சாகித்ய அகாதமியின் பெண் எழுத்தாளர்களுக்கான தேசிய அளவு கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றியது.

பிப். 7 : தலித் நிலவுரிமைப் போராட்டக்குழுவின் நான்காவது கூட்டம் நட்டப்பட்டது.

பிப். 12 : கரூர், வேலாயுதம்பாளையம் TNPL SC/ST தொழிலாளர்களுக்கான விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. குடியரசன், அகவி, சிவகாமி ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

அன்று மாலை 5 மணி அளவில் திருச்சியில் சந்திரசேகர் நடத்திய கொத்தடிமை விழிப்புணர்வுக் கருத்தரங்கில் சிவகாமி கலந்து கொண்டு உரையாற்றினார்.

இரவு 7 மணி முதல் 9 மணி வரை Fr. சிங்கராயர், திருச்சி அய்க்கஃப் இல்லத்தில் ஏற்பாடு செய்த மாணவர்களுக்கான கருத்தரங்கில் அந்தோணி குருசு, சிவகாமி, லெனின், குடியரசு ஆகியோர் உரையாற்றினர்.

பிப். 13 : புதுக்கோட்டையில் ஆதி-திராவிட நல விடுதிக் காப்பாளருக்கான ஒருநாள் பயிற்சி முகாமை புதிய கோடாங்கியும், அ.பெ.கா. நூலகமும் இணைந்து நடத்தியது. டாக்டர் ஜெயராமன் ஒருங்கிணைக்க சிவகாமி, லெனின், குடியரசு, பாக்கியராஜ், ரமணி, அருள்மேரி உலகநாதன், ஞானாலயா நூலகம் கிருஷ்ணமூர்த்தி, சதாசிவம் பேரா. நல்லுசாமி ஆகியோர் பயிற்சியளித்தனர்.

பிப். 15, 16 : சிதம்பரம் பயணம். 16-ஆம் தேதி பாப்பாப்பட்டி, கீரிப்பட்டியில் தேர்தல் நடத்தமுடியாத சூழ்நிலைக்குத் தீர்வுகாண அண்ணாமலை பல்கலை கழகத்தில் நடைபெற்ற இரண்டு நாள் கருத்தரங்கின் துவக்க விழாவில் புதிய கோடாங்கியின் எழுத்தாளர்கள் சிவகாமி, சன்னா, திருவள்ளூர் சுப்பிரமணியம் ஆகியோரும், அசோக் வரதன் செட்டி IAS., கா. பழனித்துரை, பேரா. தாண்டவன் ஆகியோரும் கலந்து கொண்டனர். பேரா. தனிக்கொடி ஒருங்கிணைப்பு செய்தார்.

பிப். 20 : பன்னூர் - மொளச்சூர் திருவள்ளூர் மாவட்டம். புதிய கோடாங்கியின் எழுச்சி முகாம் நடைபெற்றது. குரயரசு, சன்னா, லெனின், வேலுசாமி, ராஜசேகர், அருள்ஒளி உறவின் முறை அந்தோணி ராஜ், ஆதித்தமிழர் விடுதலை முன்னணி தயாளன், பெருமாள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இரவு சென்னை - எண்ணூரில் கோபி, பழனி, ரவிச்சந்திரன் ஏற்பாடு செய்த சமூக விழிப்புணர்வு முகாமில் கலந்து கொண்டு சிவகாமி உரையாற்றினார்.

பிப். 21, 22, 23 : அம்பேத்கர் சிறுத்தைகள் LIC, ICF, Central Excise, SBI, IOB, அரசு ஊழியர், வருமானவரி, TNEB போன்ற பல்வேறு SC/ST ஊழியர் சங்கப் பிரதிநிதிகளை சந்தித்து தலித் நில உரிமை மாநாடு குறித்து விவாதித்து கருத்துக்கள் பெறப்பட்டது.

பிப். 24 : தலித் நிலஉரிமை போராட்டக்குழுவின் 5-ஆவது கூட்டம் ICSA-வில் நடந்தது. மணிவண்ணன் IAS (ஓய்வு), கருப்பன் IAS (ஓய்வு) , சிவகாமி, இன்பக்குமார், SC/ST ஊழியர் சங்கங்கள், Fr. ஜோஸ், Fr. ஜான் சுரேஷ், புதிய கோடாங்கி எழுத்தாளர்கள் ஆக நூறு பேர் கலந்து கொண்டனர்.

பிப். 25 : சாந்தோம் உயர்நிலைப் பள்ளியின் ஆண்டு விழாவில் கலந்து கொண்டது புதிய கோடாங்கி குழாம் - அப்படியே மாநாட்டுக்கான அரங்கைப் பார்வையிட்டது.

பிப். 26 : சென்னை பல்கலைக் கழகம் டாக்டர் தங்கராஜ் ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு.

பிப். 27 : திருத்தணி R.K. பேட்டையில் புதிய கோடாங்கியின் எழுச்சி முகாம். இன்பக்குமார், கோபி, சன்னா, வேலுசாமி, லெனின், குடியரசு, சிவகாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

# கேள்வி - பதில்

■ முனிமா

**வரும் தேர்தலில் மூன்றாவது அணி உருவாகும் வாய்ப்புகள் இருக்கிறது என பேச்சு அடிபடுகிறது. அப்படி அமைந்தால் அதன் வெற்றி வாய்ப்பு எப்படி இருக்கும்?**

*- பாண்டியன், பண்ருட்டி.*

மூப்பனார் தலைமையில் த.ம.கா. மூன்றாவது அணியை உருவாக்க முயற்சி செய்து, அதுவே இப்போது வாசன், சிதம்பரம், இளங்கோவன் என்று மூன்றாகப் பிரிந்து நிற்கிறது. பாமக-வின் நிரந்தரக் கொள்கை சந்தர்ப்பவாதம். ஆகையால் சொல்லக்கூடிய அளவில் மூன்றாவது அணி என்று தற்போது எதுவும் இல்லை. பாட்டாளி மக்கள் கட்சி தனது பேரம் பேசும் நிலையைத்தான் உயர்த்திக் கொண்டுள்ளது. மூன்றாவது அணிக்கான விதையே ஊன்றப்படவில்லை.

**தலித் விடுதலை என்றால் என்ன என்று எவரும் வரையறுத்துச் சொல்ல முடியாது என்று மகஇக-வினர் பேசி வருகின்றனரே.**

*- பிரான்சிஸ், மதுரை*

சாதியை திட்டவட்டமாக வரையறுத்து, சாதியற்ற தலித்துகளுக்கு சாதி இந்துக்கள்தான் தலைமையேற்பார்கள் என்று வரையறுத்து, அந்தக் கட்டங்களுக்குள் காய் நகர்த்துபவர்களுக்கு தலித் விடுதலையை வரையறுப்பது அல்லது அடையாளப்படுத்துவது சிரமம்தான். ஒப்புக்கொள்கிறோம்.

**தேர்தலில் பங்கெடுக்கும் தலித் இயக்கங்கள் அனைத்தும் சாதி இந்துக்களின் கோரிக்கைகளையே தங்கள் கோரிக்கைகளாக முன்வைக்கிறார்களே. ஏன்?**

*- மாடசாமி, கிள்ளைப்புத்தூர்.*

தேர்தலில் சாதி இந்துக்களின் ஓட்டுக்களைப் பெறுவதற்காக தங்கள் கோரிக்கைகளையே மாற்ற வேண்டிய அவசியம் வந்துவிட்டது.

**பெரியார் பற்றிய விமர்சனத்துக்கு சரியான பதில் தலித்தல்லாதவர் தரப்பிலிருந்து வரவில்லை. மாறாக பெரியார் பற்றி அவதூறை கிளப்புவதாக செய்கிறார்கள். நீங்கள் இது குறித்து என்ன செய்யப் போகிறீர்கள்?**

*- ராஜதுரை, செங்கல்பட்டு.*

பெரியார் தலித்துகளுக்கு வேண்டிய நன்மைகளை செய்துவிட்டார் என்கின்றனர் தலித்தல்லாதார். எங்களுக்கு எந்தப் பலனும் வந்துசேரவில்லை என்கின்றனர் தலித்துகள். தலித்துகள் பயனடைந்தார்களா இல்லையா என்பதைக்கூட தலித்துகள் சொல்லக்கூடாது என்கிறார்கள். அதையும் பெரியார் என்பவரின் பெயர்மீது ஆணையிட்டுச் சொல்கிறார்கள். ஆகையால் முன்னைவிட வேகமாக இந்தப் பெரியார் என்பவர் யார் என்ற கேள்வி அவசியமாகிறது.

**மக்கள் பிரச்சினைகளை முன்வைக்கும்போது தலித் இயக்கங்களுக்கு மக்கள் ஆதரவு உள்ளது. ஆனால் அவையே அரசியல் கட்சிகளாக உருவாகும்போது மட்டும் மக்கள் அவற்றிலிருந்து அந்நியப்படுவது ஏன்?**

*- வெள்ளையன், பாண்டிச்சேரி.*

அரசியல் கட்சிகளாக உருவானபின் மக்கள் பிரச்சினைகளைப் புறந்தள்ளி வெற்று கோஷங்களை முன்வைப்பதாலும் இருக்கலாம்.

**விடுதலை ராசேந்திரன் நடத்தும் பெரியார் முழக்கம் என்ற பத்திரிக்கையில் கொளத்தூர் மணி பேசியதாக நிகழ்வு ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதில் ஒரு தகவல் தரப்பட்டுள்ளது. அதாவது பெரியார், ஆறு கோடி தலித் மக்களின் வாழ்க்கையை பணயம் வைத்து காந்தியின் உயிரைக் காப்பாற்ற வேண்டாம் என்று ஒரு தந்தியை அனுப்பியதாகவும், அதை மீறி அம்பேத்கர் தவறு செய்துவிட்டார் என்று கொளத்தூர் மணி பேசியிருக்கிறார். இத்தகவல் உண்மையானதுதானா?**

*- சுப்பையன், மேப்பூர்.*

தமிழ்நாட்டில், கீழ்வெண்மணியில் நாற்பத்தி நான்கு திராவிட தலித்துகள் உயிரோடு கொளுத்தப்பட்டபோது எந்தக் கண்டனமும் செய்யாத பெரியார், ஆறு கோடி தலித்துகளுக்காக காந்தியின் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் நாடே கொந்தளித்துப் போயிருந்த சூழ்நிலையில் வெளிநாட்டுக்குப் போய்விட்டு அங்கேயிருந்து ஆத்தமாட்டாமல் தந்தி கொடுத்தார் என்று சொல்வது நம்புவதற்குக் கடினமாக உள்ளது. அம்பேத்கர் எழுதிய அல்லது அவர் குறித்த ஆவணங்களிலும் இந்தத் தந்தி குறித்து எந்தப் பதிவுமில்லை.



படிப்பகம்

www.padippakam.com

மனுவாதி சங்கரராமனா? அவனைக் கொன்றதாக குற்றஞ்சாட்டப்பட்ட சங்கராச்சாரியா? யார் பக்கம் தலித்துகள்?

*- ரங்கசாமி, ஏற்காடு.*

காந்தியா? கோட்சேவா? யார் பக்கம்? நீங்கள் கேட்ட கேள்விக்கும் இந்தப் பதிலில் உள்ள கேள்விகளுக்கும் எப்படி பொருத்தம்!!!

மீண்டும் ஜெயலலிதாவா?

*- பிரேம்குமார், சொக்கையம்பட்டி.*

மீண்டும் ஜெயலலிதாவா என்ற கேள்வியில் உள்ள உங்கள் நடுக்கம் நியாயமானதே. எனினும் விலை போகக்கூடிய சில அரசியல் கட்சிகள் உங்களின் இந்த நடுக்கத்தால் அதிக பேரத்திற்குத் தயாராகிறார்கள் என்பதே உண்மை.

பஞ்சமி நிலம் கிடைக்காததற்குக் காரணம் ஆதிக்க சாதியா? அரசு அதிகாரிகளா?

*- குலோத்துங்கன், கலவை.*

இரண்டுக்கும் வேறுபாடு இருக்கிறதா என்ன?

தலித் இலக்கியத்தை தலித்துகள்தான் எழுத முடியும் என்பதை பிறர் ஏற்றுக் கொண்டு விட்டார்களா?

*- பாண்டித்துரை, செங்கல்பட்டு.*

ஆம். ஏற்றுக்கொண்டு விட்டார்கள்.

---

■ அமிர்தம் சூர்யா



## கன்னித் தீவை ஏன் கண்டுபிடிக்க இயலவில்லை?

கேலி சித்திரக்காரன் தன்னையொரு
புராதன கூஜாவாக கற்பிதம் செய்ததிலிருந்து
கூஜாவிலிருந்து பூர்வஜென்ம பூதங்களை
தன் சாயலிலிருந்து உருவி எடுத்து
ஒவ்வொன்றாய் வீசுகிறான்
விதையாய் கன்னித் தீவின் விளிம்பெங்கும்.

கன்னித் தீவை கண்டுபிடிக்கக் கூடாதென்று
பெண்கள் பிரார்த்திக்கின்றனர்.
அடைப்பட்டிருப்பது பெட்டியாயினும்
சிந்துபாத் ஆயுளின் தோள் சர்வகாலமும்
தன்னை சுமப்பதின் சுகம் ருசிக்கிறாள்
எல்லா பெண்களுக்குள்ளிருக்கும் லைலா.

ஹைக்கூ வடிவிலிருந்து லைலா நிஜவுருவுக்கு
திரும்புவதை ஆண்களும் விரும்பவில்லை.
சதா சூழ்முலை குளியலிலிருக்கும்
மந்திரவாதி மூசாவின் பிம்பம்
எல்லோருக்குள்ளுமிருந்ததால்...

கன்னித்தீவை கண்டுபிடிக்க
மீண்டும் மீண்டும்
சிந்துபாத் வேடந்தாங்கியவன்
மாயசதி, அரூபயுத்தம், சலிப்புறா தேடலுடன்
புறப்படுகிறான்
கன்னித்தீவிலிருந்தே...

கன்னித்தீவென்பது...
கலை, விடுதலை, ஞானம், உனதான்மா
இவற்றின் குறியீடென்று
கதைக்கிறான் நவீன கவிஞன்.

இந்த காரணங்களால் தான்
கன்னித்தீவை இதுநாள் வரை
கண்டுபிடிக்க இயலவில்லை.

## சாவாமைக்குள் தூங்கும் இறப்பின் துடிப்பு

துப்பறியும் நிபுணனின் பாவனையில்
நரிநாற்றம் தாங்கி
பித்ருக்களின் பூமராங்
தீரா பசியுடன்
ஊழ்வாசம் முகர்ந்தபடி
நெருங்கும் சமயம்
திடுக்கிட்டு குரைக்கிறது
கருநாயாய்
நடுச் சாமத்தில் வாழ்வு...

எல்லோர் வீட்டிலிருந்தும் எழுகிற
குரைப்புகளின் குரல் சங்கிலியின் பிணைப்பு
ஒரு குடியில் அறுபட்டதே
அந்த நாய்க்கு என்னவானது?
தேவதச்சனிடமிருந்து
சாவாமையின் வரை படத்தை
கைப்பற்றியவர்களின் வீட்டில்
கருநாய்கள் மௌனித்தேயிருக்கும் போலும்...



படிப்பகம்

www.padippakam.com

# பகவான் புத்தர் கடவுள் அல்ல என்பதன் அரசியலும், அரசியலில் கடவுள் புத்தர் நுழைய வேண்டியதன் அவசியமும்

■ புத்தமித்திரன்

சாமி புத்தன் தனை மறைக்க சந்திரர்க்கும் ஆகாது
நேமி புத்தன் தனை மறைக்க கோரி சூரியர்க்கும் ஆகாது
சாமி புத்தன் முன் நடப்பான், சஞ்சலமேன் கெந்தருவா
நேமி புத்தன் தன்னருளால் நாம் நிலைத்திருப்போம் கெந்தருவா!

- மகாகவி பாப்பாத்தி அம்மாள்

பாரத தேசத்தில் தோன்றிய மாபெரும் யுகப் புருஷனும், சத்தியகீர்த்தியும் ஓங்கி உலகெல்லாம் அளந்த ஞானநெறிக் கடவுளுமான பகவான் ஸ்ரீபுத்தர் என்னும் மனித வடிவில் வந்துதித்த தெய்வத்தின் தெய்வம் ஸ்தாபித்த தர்ம மார்க்கமான புத்த நெறி, அது தோன்றிய தேசத்திலேயே அழிந்துபோய்விட்டது என்று ஓயாது ஒப்பாரிக் குரல்களை எழுப்பி வருகிறார்கள் பிராமணர்களும், அவர்களால் 'அகுசலம்' வைக்கப்பட்டு அதையே திருப்பி உரைத்து வரும் வெளிநாட்டு ஆங்கில அறிவு ஜீவிகளும்.

இவ்விரண்டை மட்டுமே அரைகுறையாகக் கற்றவர்கள், கற்றதாய் கூறிக்கொள்பவர்கள் இதையே திரும்ப திரும்ப பௌத்தம், சாக்கியம், ஜைனம், சிராமணியம் (சமணம்) குறித்து தங்கள் கருத்துக்களாக உள்ளேற்றிக் கொண்டு கூறி வருகிறார்கள்.

'உரைத்தல்' என்பதே அரசியல் சார்ந்த ஓர் வெளிப்பாடுதான் என்று பின்நவீனத்துவம் திரும்ப, திரும்ப வலியுறுத்தி (Presentation itself is a representation) வரும் இந்த காலக்கட்டத்தில் கூட கொடுக்கப்படும் யாவற்றையும் சந்தேகிக்கக் கற்றுக்கொள்ளாமல் இருப்பது, மனிதன் தன்னை ஒரு கற்கும் மிருகம் என்று அழைத்துக் கொள்வதற்கு சற்றும் கௌரவம் சேர்ப்பதாய் இல்லை.

இன்றைக்கு 'அறிவொளிக்காலம்' ஏற்படுத்திய எத்தனையோ சிந்தனை மாற்றங்களை நாம் பெற்றவர்களாய் இருக்கிறோம். வீட்டுக்கு வீடு, வீதிக்கு வீதி, ஊருக்கு ஊர், அறிவியல் தாக்கம், அறிவியல் பற்றிய அறிவு பரிட்சயம் மிக்கவர் பெருகி வருகின்ற காலம் இது. பொதுப்படையான அறிவு சார்ந்த குழுக்கள் (Intelligentia) பெருமளவில் பெருகியிருக்கின்ற காலம் இது. இப்படிப்பட்ட காலத்தில் கூட பீடி சாமியார், கேடி சாமியார், பாம்பு சாமியார், புட்டபர்த்தி சாமியார் என்று உடனுக்குடனே திடீர் சாமியார்கள், கடவுள்கள் தோன்றுவதும், மக்கள் அவர்களை கண்ணெதிர் கண்ட கடவுள்களாக்கி துதிப்பதும், தோத்திரப்பாடல்கள், பஜனைகள், பூ, தேங்காய் ஆராதனைகள் செய்வதும், 70 mm சின்னத்திரை 'Online' இணையத்தளங்களில் நாம் கண்டு வருகிறோம்.

இத்தனைக்கும் பெரிய போக பூமி என்றும், டாலருக்கும், உடல் பலத்துக்கும், ராணுவ தொழில் நுட்பத்திற்கும் பெயர்போன பூமியான அமெரிக்காவில் 9/11 நிகழ்விற்குப் பிறகு பள்ளிகளில் தெய்வ பிரார்த்தனைகளும், மாதா கோயில்களில் மணியோசைச் சத்தங்களும் அதிகரித்துள்ளன என்றும், உலகில் அதிகக் கடவுள் பயம் உள்ளவர்களாக (எவ்வளவுதான் பாபம் செய்பவர்களாக அமெரிக்கர்கள் இருந்தபோதிலும்/ஒரு வேளை அதிக பாபம் செய்வதால் என்னவோ) அமெரிக்காவில் இருக்கிறார்கள் என்பதைப் பற்றியும் ஆய்வறிக்கைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

பிள்ளையார் பால் குடிக்கிறார் என்றதும், நியூயார்க் நகரில் உள்ள மெத்தப் படித்த அறிவு ஜீவிகள் தான் முதன் முதலில் முண்டியடித்துக்கொண்டு ஓடி க்யூவில் நின்றவர்கள் என்பதும் நாம் மறக்கக்கூடிய தொலைவில் நடந்தேறியிருக்கவில்லை.

கம்யூனிஷத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு சோவியத் நாடுகளில் முன்னெப்பொழுதும் இல்லாத அளவிற்கு மக்கள் திருச்சபைகளுக்கும், கிறிஸ்துவ மடாலயங்களுக்கும் செல்வது அதிகரித்துள்ளது பற்றி பல குறிப்புகள் வெளியானதை அறியாதவர்கள் மிகக்குறைவு.



படிப்பகம்

www.padippakam.com

இங்ஙனம் எவ்வளவுதான் கடவுள் இறந்து போய் விட்டார் என்று அறிஞர்கள், சிந்தனையாளர்கள் கத்தினாலும், சங்கு ஊதினாலும், மக்களின் கடவுள் நம்பிக்கை என்பது குறைந்ததாக, முற்று முழுதாக வடிந்ததாக இல்லை. இது ஒருவகை ஆற்றலின் தன்மையை ஒத்திருக்கின்றது. அதாவது ஆற்றல் குறை வதும், கூடுவதும் என்பதாக மாறுபாடுகள் உற்றாலும், ஆற்றலின் முழுமைத் தன்மையில் கூடுதலோ குறைதலோ ஏற்படுவதில்லை என்பதைப் போல இந்தக் கடவுளிடம் பக்தி குறைந்து, அந்தக் கடவுளிடம் பக்தி மிகுந்து என்று தனிப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் நம்பிக்கையில் ஏற்படு கின்றதேயன்றி கடவுள் நம்பிக்கை என்பது என்னவோ அழியாது மக்களூடு நிலைத்து நிற்கின்ற ஓர் சக்தியாக இருக்கிறது.

**எமது சாக்கிய குலத்து செல்வங்கள் அறியாமை எனும் மலம் நீங்கி எழுகிறார்கள். மீட்டெழும் எமது கௌதமன் உலக துறப்பவனாகஇல்லாமல் உலகை கைக்கொள்பவனாக எழுகிறார். தர்ம ராஜ்ஜியத்தை நிறுவுவதே இனி நோக்கம். எல்லோரும் எல்லாமும்பெறவேண்டும்.**

கடவுளின் இந்த நிரந்தர முடிவின்றி, அர்த்தங்களை கொண்டுறங்கும் ஒரு பனுவலைப் போன்ற இயல்பானது, வாசகனுக்கு ஏற்றாற்போன்ற அர்த்தங்களை தருவதாய் இருந்துகொண்டே இருக்கிறது. இதில் கடவுள் என்னும் பிரதியின் அர்த்தங்களைப் பற்றிய ஒழுங்குகளை கட்ட மைக்கும் பணியை தன் தோள் மீது வலிந்து தூக்கிப் போட்டுக் கொள்ளும் இடைத்தரகர்கள் வேலை என்பது, எப்படியேனும் தங்களைத் தக்கவைத்துக் கொள்ளும் சுய துடிப்பு உடையதாய் இருக்கிறது.

இப்படிப்பட்ட இந்த இடைநிலையாளர்களே, மதக்குருமார்கள், ஓதுவார் மூர்த்திகள், காமகோடி பீடாதிபதிகள் 'கடவுள்கள்' என்று வலம் வரும் போது, அவர்களை பெரும்பான்மையான மக்கள் திரள் ஏற்றுக்கொள்ளும்பொழுது, கடவுளின் தூதுவர் கள் என்று வந்த இயேசு கிறிஸ்து, முகம்மது நபி போன்றவர்கள் தேவதூதர்கள் என்ற நிலையிலிருந்து கடவுள் ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டு தெய்வங்களாய் வணங்கப்படும்போது இவர்களுக்கு முன் காலத்தில் மூத்தவரும், ஒப்பில்லாத சுயஞானோதயம் எய்திய வரும், எவ்வுயிர்க்கும் இனிய தர்ம நெறியை உலகிற்கு தன் ஞானோதயத்திற்குப் பிறகு பரப்பியவரும், பல் வேறு அற்புதங்களைச் செய்யும் சக்திகள் கொண்டிருந் தவரும் ஆனால், அவற்றை பெரிதுபடுத்தாமல் மக் களுக்கு சிந்தனைதான் முக்கியம் என்று சிந்தித்து, தக்கது இது, தகாதது இது, ஒப்பது இது, ஒப்பாதது இது, நன்று இது, தீது இது, நன்மை இது, தீமை இது, இன்பம் இது, துன்பம் இது, இனியது இது, இன்னாதது இது, இவ்வழி நன்று, இவ்வழி தீது, இம்மொழி இனிது, இம்மொழி தீது, இனியன விரும்பு, இன்னா விலக்கு என்று கோடி மக்கள் கூடி வாழ வேண்டிய தர்மத்தையும், புத்தியை யும், மானுட பரஸ்பர சகோதரத் தத்துவத்தையும் (சங்கம்) போதித்தவரும், போதி மாதவரும், ஒப்பில் லாத உலகின் இரவு பகலற்ற திவ்ய ஜோதியும் ஆன பகவான் புத்தரை - இந்திய தேசத்தில் கடவுள் இல்லை. அவன் சாக்ரடீஸ் போன்ற தாடியும் மீசையும் கொண்டலைந்த தத்துவவாதி என்பதைப் போன்று சித்தரிப்பவர்கள் இருக்கிறார்கள். யார் இவர்கள்? ஏன் இவர்கள் பகவான் புத்தரை கடவுள் என்றும், தெய்வம் என்றும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்? ஏன் மக் களிடமிருந்து பகவானை மறைக்கிறார்கள்? சரி, இவர்கள் அவரைக் கடவுள் என்று ஏற்றுக்கொள்ளா தது, முதிர்ந்த ஞானப் பெருக்கின் விளைவால் என்றே வைத்துக்கொள்வோம். இவர்கள் யார் 2000 ஆண்டு களுக்கு முன்பிருந்த மக்களின் இதயத்தைப்பற்றி அவ்வளவு துல்லியமாக பிரதிபலிக்க? 2000 ஆண்டு களுக்கு முன்பிருந்தே, பகவான் புத்தரை மக்கள் கடவுளாக ஏற்றுக்கொள்ளவில்லை என்று இவர்கள், அந்த மக்களின் சார்பாக பேச, கூற இவர்களிடம் உள்ள ஆதாரங்கள் என்ன? பார்ப்பனன் புத்தரைக் கடவுளாக்கி விற்று வந்தான் என்று கூறுவார் களேயானால், சரி தனக்கு ஆதாயம் கிடைக்கிறது என்றால், ஆட்டுப் புழுக்கையையும், மாட்டுச் சாணி யையும் தெய்வமாக்கும் பார்ப்பான் புத்தரால் கிடைக்கும் ஆதாயத்திற்காக அவரை கடவுளாக்கி னான் என்றால், அதில் என்ன தப்பு? அதனால் விழைந்த கேடு என்ன? புத்தரை கடவுள் ஆக்கினான் என்பதற்கு என்ன ஆதாரம்? புத்தரைப் பின்பற்றிய கோடானு கோடி மக்கள் கல்லை, மண்ணை, பாம்பை, பல்லியை தெய்வமென கும்பிடும் மக்கள், மனிதருள் ஓர் மஹாபுருஷனாகத் தோன்றிய அவதாரப் புரு ஷனை, வியந்து 'இதுதான் தெய்வத்தின் வடிவமோ? தெய்வம் மனித வடிவில் வந்தால் இப்படித்தான் இருக்குமோ?' என்று வியந்து தெய்வமாகப் போற்றித் துதித்து தங்கள் பற்றுதலை, அன்பைத் தெரிவித்திருக்க மாட்டார்களா? எல்லாவற்றிற்கும் பார்ப்பனன்தானா மூலம்? மற்றவர்கள் எல்லாம் தண்டங்களா, இல்லை முண்டங்களா?

எம்.ஜி.ஆருக்கும், குஷ்புவிற்கும் கோவில் வைத்துக் கும்பிடும் இன்றைய 21-ஆம் நூற்றாண்டு அறிவொளிக் கால, அறிவியல் யுகப்பிறவிகள் இருக்கும்பொழுது, குறைந்தபட்சம் அப்படிப்பட்ட ஒரு நூறு முட்டாள் கள் கூடவா அந்நாளில் இல்லை? அய்யன் புத்தனை தெய்வமென்று கொண்டாட? சரி, தன் இனக்குழுவில் தோன்றிய ஒரு ஆள், நாடு, நகரம், ஊர் போற்றும் ஓர் தர்ம போதகனாக, தத்துவவாதியாக வளர்ந்திருக்கிறான். அவனைப் பற்றி விரிவான கதையாடல்களை, புனைவு களை ஏற்படுத்தி வாழ்விற்கென்று ஆதாயம் தேடும் சுயநலம்மிக்க, புத்தனின் இனத்தவரான ஒரு சில சாக்கி யர்கள் கூடவா அவனை தெய்வமென்று ஆக்கி இருக்க மாட்டார்கள்?



படிப்பகம்

www.padippakam.com

அது எப்படி புத்தனை மட்டும் 'மனிதன்' என்று கறாராக மக்கள் அடையாளம் கண்டு கொண்டார்கள் என்பது, அதுவும் 2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்கள்? புத்தன் = சாதாரண மனிதன் மட்டுமே என்று அன்றைய கால கட்டத்து மக்கள் நம்பினார்கள் என்று சொல்வது சுத்த பைத்தியக்காரத்தனமாய் இல்லை? இல்லை, பைத்தியக்காரர்கள் ஆக்குவதற்காக சொல்கிறார்கள் என்பதே சரி.

புத்தன் வாழும் காலத்திலேயே தெய்வமாகக் கொண்டாடப்பட்டான், கும்பிடப்பட்டான். செல்லும் வழிதோறும் அவனை கும்பிடும் கரங்கள் பகல் என்றால் கதிரையும், இரவென்றால் நிலவையும் மறைத்தன. அதனால் ரவியும் (சூரியன்), சந்திரனும், பூமி மகளின் முகம் காணமுடியாது ஒருவருக்கொருவர் திகைப்புற்று தம்மைத் தாமே தழுவிக்கொள்பவர்களாயினர் என்று 'அஷ்வகோஷ்' புத்த சரித்திரத்தில் எழுதுகிறான். அதெல்லாம் சுத்த கவைக்குதவாத கற்பனை! ஆனால் இயேசு கிறிஸ்து வரலாற்றுப் புருஷன் என்றாலும், அவன் தேவதூதன்! அவன் கடவுளின் பிள்ளை!! முகமது கடவுளின் தூதன்.

அரசனின் வரவைப்பற்றி எப்பொழுதும் கட்டியங்காரன்தான் ஓயாது கூறுவான், 'ராஜாதி ராஜ ராஜ பராக்கிரம வீர மார்த்தாண்ட ராஜாதிராஜா வருகிறார்' என்று! ஆனால் ராஜனோ தன் தோற்றப் பொலிவாலும், தன் கம்பீரத்தாலும், தன் நடத்தையினாலும், அவனை அறியாமலே அவன்தான் ராஜன் என்று மற்றவர்கள் அறிந்து உடனே வணங்கும்படி வருகை செய்கிறான். அவன் உருமாறி மாறுவேடம் போட்டு நகர் வலம் வரும்போது, இன்னதொரு பணியை செய்ய வேண்டி தக்கதொரு வேடம் புனைந்து வரும் பொழுது, சொந்த மனையாள் 'நீ மன்னனா? எனது காதலன் நீதானா?' என்று கேட்டால் கூட மௌனம் சாதிப்பான். அது காரிய மௌனம், அதுவே ஆரிய மௌனம் (Noble Silence). அப்படிப்பட்ட தெய்வ மௌனம்தான் பகவான் புத்தன் கொண்டதும். அவனை "நீ கடவுளா? நீ கடவுளைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" என்று மக்கள் கேட்டபொழுது அவன் காத்த அந்த மௌனம் யுகங்களை தன் கற்பத்துள் உயிர்காக்கும் ஹிரணிய கர்ப்ப மௌனம் அது. அந்த மௌனம் மஹா ரகசியம் என்றும், மகா குஹயம் என்றும், மஹா மௌன உபதேசம் என்றும் சிராமண பௌத்த ரிஷிகளால் போற்றப்படுவது. இஃதெல்லாம் அறிந்துகொள்ள குறைந்தபட்ச நேர்மையும், தன் அறியாமைப்பற்றிய வெட்கமும் வேண்டும். அஃதன்றி, சுயபுத்தியும், சுய அறிவு வேட்கையும்,மெய்ப்பொருள் தேடி நாடும், ஓடும் மன வேட்கையும், தாகமும் இன்றி எவரோ ஒரு சிலர் எழுதியதும், பேசியதும், சொன்னதுமே மெய்யெனக் கொண்டு ஒழுகுவதன் கேட்டினை சொல்லி முடியாது. சந்தேகப்படவும் கற்றுக் கொள். ஏனென்றால் அறிவின் கதவுகளைத் திறக்கும் மந்திரக்கோல்களில் அதுவும் ஒன்று என்று பகவானின் பிள்ளைகளாம் பௌத்த ரிஷிகள் போதித்தது அதனால்தான். பின் நவீனத்துவ முற்ற முழுதான தீர்வுகள் என்று எவைகளும் இல்லை. கொடுக்கப்பட்டவை அனைத்தும் மீண்டும் பரிசீலனைக்குரியவைகள். சந்தேகப்படுவதை நாம் கொண்டாட வேண்டும், மூட நம்பிக்கைகளுக்கு எதிராக நாம் அவநம்பிக்கைகளை (Doubts) முன் வைக்கவேண்டும் என்று சொல்வதும் இது கருதியே தான் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

மக்கள் பகவான் புத்தனை கடவுள் என்று கொண்டாடியபோது, பார்ப்பனர்கள் பயன்பெற வேண்டி அர்ச்சக வேடம் தரித்தார்களா? அல்லது பார்ப்பனர்கள் சுய ஆதாயம் வேண்டி பகவான் புத்தனை கடவுள் ஆக்கினார்களா? என்று கேள்வி கேட்டுப் பார்ப்பது நல்லது, பார்ப்பனர்கள்தான் பகவான் புத்தனை கடவுள் ஆக்கியவர்கள் என்று சொல்பவர்கள். ஏன் என்றால், இதே பார்ப்பனர்கள் தான் ஓயாது புத்தனை ஒரு மனிதன் என்று தங்கள் கதா காலட்சேபங்களில், கருத்துரைகளில் கூறி வருகி றார்கள் இதுகாறும். அதே சமயத்தில் புத்தனை மஹா விஷ்ணுவின் அவதாரமென்றும் தெய்வமென்றும் மறந்தும் கூட, ஒருபோது கூட சொல்லிவிடக்கூடாது என்பதில் ஹயக்ரீவ (குதிரை முகம் கொண்ட அரக்கன்) மௌனம் சாதிப்பவர்கள்.

அவதாரம் என்று அங்கீகரிக்க வேண்டிய அளவிற்கு அவர்கள் தள்ளப்படுகிறார்கள். ஏன்? இதுபோல் மஹாவீரரை அங்கீகரிக்க வேண்டிய நிர்பந்தம் அவர்களுக்கு ஏன் ஏற்படவில்லை என்ற கேள்வியையும் பகுத்தறிவும் சிந்தனை மனம், சிந்திக்கும் மனம் கேட்க வேண்டும்.

பகவான் புத்தனை மஹாவிஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றாக்கி பார்ப்பனர்கள் உள்வாங்கிக் கொண்டார்கள் என்று மார்க்சிய ஞானக்கொழுந்துகளிலிருந்து, திராவிட ஞானக் கொழுப்புகள் வரை திரும்பத் திரும்ப 'உள்வாங்கும்' பார்ப்பனீயத்தைப்பற்றி அச்சக்குரல் எழுப்புகிறார்கள். ஏன் அப்படிப்பட்ட 'உள் வாங்குதல்' நிலைக்கு ஒரு யானையை ஓர் மலையை விழுங்கித் தொலைக்க வேண்டிய நிலைக்கு பார்ப்பனீயம் தள்ளப்பட்டது. நிர்ப்பந்தம் என்ன? எது அவர்களை அப்படி செய்யவேண்டிய கட்டாயப் படுத்தியது? ஏன் அப்படிப்பட்ட ஒரு அதித நடவடிக்கை எடுத்தாலொழிய தப்பிக்க முடியாது இந்த புத்தனிடமிருந்து என்ற நிலை வந்தது? யார் இதற்கு காரணமாக இருந்திருப்பார்கள்? அ. மார்க்ஸ் Edward Said-இன் 'கலாச்சாரமும் சாம்ராஜ்ஜியவாதமும்' நூல் அறிமுகம் உங்களுக்கு செய்யவில்லை? 'சாம்ராஜ்ஜியம் ஒவ்வொரு முறையும் கலாச்சாரத்தின் பின்னே செல்லும் தன்னை தக்கவைத்துக்கொள்ள, தகவமைத்துக்கொள்ள' என்ற Edward Said-கள் கருத்து உங்களுக்குப் புரியவில்லை? புத்தன் என்னும் தெய்வத்தின் பின் பார்ப்பனியம் ஏன் போனது என்றால் அவனை மீறி, அவனை எதிர்த்து இந்த மண்ணில் ஒரு மயிரும் செய்ய முடியாது என்ற நிலை.

புத்தனின் ஆகிருதியின், விஸ்வரூபத்தின் முன் பார்ப்பனீயம் மண்டியிடுகின்ற தருணம், சாட்சியம் அல்லவா அவனை மஹாவிஷ்ணுவின் அவதாரம்


படிப்பகம்

www.padippakam.com

என்று அங்கீகரிப்பது? போர்க்கால அவசர ஒப்பந்தம் போல! சரி இன்னொரு விதமாக இதைப் பார்ப்போமே. மஹாவிஷ்ணு என்ன பார்ப்பனர்களுக்கு சொந்தமானவனா? மஹாவிஷ்ணுவுக்கும், பார்ப்பனர்களுக்கும் ஏதும் சம்பந்தம் உண்டா? மஹாவிஷ்ணுவை பார்ப்பனர்கள் கும்பிட்டவர்களா? மஹாவிஷ்ணுவினைப் பற்றி வேதங்களுக்கு ஏதும் ஞானம் உண்டா? அவனைப் பற்றி அறியும் வல்லமை வேதங்களுக்கு உண்டா? அவனை அறிந்து கொள்ளும் தகுதி தெய்வ கடாட்சம் வேதங்களுக்கேனும், அவைகளை இன்று வரைக்கும் படித்து முடிக்க முடியாமல் பள்ளிச் சிறுவனைப் போல் திணறும் பிரம்மனுக்கேனும் உண்டா? இங்ஙனம் இருக்க பகவான் புத்தனை மஹாவிஷ்ணுவின் அவதாரம் என்று மக்கள் கண்டுகொண்டதை பார்ப்பனர்கள் ஒப்புக்கொண்டார்களா? அல்லது பார்ப்பனர்கள் அங்கீகரித்தார்கள், எனவே மக்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்பதா? பரசுராமன் மஹா விஷ்ணுவின் அவதாரம்தான், அவனை யார்/எந்த மக்கள் ஏற்றுக் கொண்டார்கள்? வாமனன் மஹா விஷ்ணுவின் அவதாரம்தான், அவனை யார்/எந்த மக்கள் ஏற்றுக் கொண்டார்கள்? பகவான் புத்தன் மஹா விஷ்ணுவே என்பதை பௌத்த ரிஷிகள் சிராமண ரிஷிகள் அல்லாமல் வேறு யாரால் அறிந்து கொள்ள முடியும்? பார்ப்பனர்கள் செய்வதெல்லாம் கள்ளம் செய்வதுதான், தெரிந்து கொள்ளுங்கள். கிள்ளை ஒரு போதும் தானாக பேசாது. போலி ஒருபோதும் தானாக உற்பத்தியாவதில்லை. மஹாவிஷ்ணுவே பார்ப்பன வேடம் தரித்தாலும், அவதாரம் எடுத்தாலும் சுவாமிக்கே வரவேற்பு கொடுக்க மக்கள் தயாராக இல்லை என்பது பரசுராம, வாமன அவதாரங்களின் பரிதாபகர நிலையிலிருந்தே தெரிந்து கொள்கிறோம்.

இங்ஙனம் கோடானுகோடி மக்களால் நூற்றாண்டு காலம் பகவான் என்றும், ஆதி தேவன் என்றும், சிவன் என்றும், விஷ்ணு என்றும், அவலோகிதேஸ்வரன் என்றும், ஜெகநாதன் என்றும், லோகநாதன் என்றும், முருகன் என்றும், திருமால் என்றும், செவ்வேல் என்றும், கருவேல் என்றும் கோடானுகோடி தெய்வரூபங்களாகவும், தாரா என்றும், பைரவி என்றும், மகமாயி என்றும், காலச்சூரி என்றும், காளி என்றும், பகவான் புத்தனும், அவன் தனை ஈன்றெடுத்த தெய்வமாதா ஆதிசக்தியாம் மஹாமாயியும், பகவான் புத்தனின் மனித வடிவ அவதாரத்திற்குப் பின்னே தோன்றிய பல்லாயிரக்கணக்கான போதிசத்துவர்களையும், ஆண்/பெண்/ அலிரிஷிகளையும்/முனி புருஷர்களையும் மக்கள் தெய்வங்களாய் போற்றி ஆல் கண்டவிடத்தும், வேம்பு கண்டவிடத்தும், புன்னை மரம் கண்டவிடத்தும், மிடாறும், முழையும், குகையும், குன்றும் கண்டவிடத்தும், குளமும் சுனையும் தோட்டமும், வளமும் தோப்பும் கண்டவிடத்தும், கோயில்களும், சைத்தியசாலைகளும் (அதனால் சைத்தியசாலா வாரு என்ற குலமே எனது சாக்கியர், கலியர் குலத்தில் இருக்கிறது. சைத்தியசாலைகள் கண்டதனால்) நிறுவி மக்கள், பாரத தேசமெங்கும் பகவானை கும்பிட்டு நிற்போராயினர். கோயில் என்று சொல்வதெல்லாம் பகவான் கோயில் அல்லால் வேறு கோயில் அன்று. குளம் என்று சொல்வதெல்லாம் பகவான் கோயில் குளம் அல்லால் வேறன்றாம்.

இங்ஙனம் தெய்வம் என்றால் பகவான் புத்தனே என்று எங்கும் கொண்டாடப்படுவதாய் இத்தேசத்தில் இருக்கின்றது. கோயில் என்றால் பகவான் புத்தனின் கோயில் என்றே இருக்கின்றது. ஆனால் என்ன ஆச்சரியம்? மக்களுக்கு தாங்கள் கும்பிடும் இந்த தெய்வத்தின் மூலப்பெயர் புத்தன்தான் என்பது மறக்கடிக்கப்பட்டிருக்கிறது. யாரால் மறக்கடிக்கப்பட்டிருக்கிறது? பார்ப்பனர்களால், பணியாக்களால், சைவ வெள்ளாளப் பிள்ளைகளால், காஞ்சி காமகோடி பீடங்களால், ஆதி சங்கராச்சாரியர்களின் வாரிசுகளால், கருணீகர வெள்ளாளர்களால், திடீரென்று சைவமாகிப்போன மரக்கறி உணவு உண்ணிகளாகிப் போனவர்களால் ஆசை முகம் மறக்கடிக்கப்பட்டிருக்கிறது. தம்பிக்கும், தமையனுக்குமிடையேயான உறவு இன்னது என்று தெரிவிக்கப்படாமல் இருவரையும் ஒரே களத்தில் பொருத்துவித்து சைவ உணவு பட்சிணிகள் மனித வேட்டையாடிவருகின்றன. சாமி புத்தன் என்ற வரலாற்று உண்மையை மறைத்தும், அவன்தன் சாக்கிய குலத்து பிள்ளைகளை தாழ்ந்தவர்களாக்கியும், தனிமைப் படுத்தியும் சதுர்வர்ண மயத்தில் தாமறியாமலேயே அட்டவணைப்படுத்தப்பட்டிருக்கும் கோடானுகோடி மக்களை அறியாமையில் மூழ்க வைத்து, சாக்கியப் பிள்ளைகளுக்கு இந்த கோடானு கோடி பௌத்த மக்களுக்கும் இடையில் சண்டை வளர்த்து, சிந்தும் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் ஓநாய் பார்ப்பனியம் விளையாடி வருகிறது. 'சைவ உணவு' என்ற பெயரில் கோடானுகோடி மக்களின் நிணமும், இரத்தமும், சுண்டிக் கருகி எலும்புந்தோலும் நைந்து நொறுங்கி பொடிபடும்படி கஷ்டங்களை கொடுமைகளை திணித்து வருகிறது.

நான் எனது முன்னைய கட்டுரையான நான் சக்கிலியன் அல்ல என்பதன் அரசியலும் நான் சக்கிலியன் என்பதன் தத்துவத்தில் குறிப்பிட்டாற் போல், இந்தியாவின் அண்டை நாடுகளான பர்மா, சிலோன், ஜாவா, சுமத்திரா, சீனா, பூடான் போன்ற நாடுகளில் எல்லாம் பௌத்தர்களே இருக்கிறார்கள். அங்கு மருந்துக்குக்கூட பார்ப்பனர் இல்லை. அதேபோல, இந்தியா தவிர்த்த மற்ற மேற்சொன்ன நாடுகளில் எல்லாம் பகவான் புத்தனைக் கடவுள் என்று கொண்டாடும் கோடானுகோடி மக்கள் இருக்கிறார்கள். ஆனால் பகவான் புத்தனை கடவுள் என்று கொண்டாட மருந்துக்குக் கூட ஒரு பௌத்தன் இந்தியாவில் இல்லை. அது எப்படி பௌத்தர்கள் இருக்கும் இடத்தில் பார்ப்பனர்களும், பார்ப்பன தலைமை உள்ள இடத்தில் பௌத்தர்களும் இல்லாது இருக்கிறார்கள்? இந்தியாவில் மட்டும் புத்தனை தெய்வம் என்று கொண்டாட ஒரு ஆள்கூட இல்லை! அதெப்படி திபெத்காரனுக்கும், சிலோன், பர்மா, வியட்நாம்காரனுக்கும் கடவுளாக - தேவாதி தேவனாகத் தெரியும் 'புத்தனை' இந்தியாவில் ஒருவன் கூட தேவன் என்றும், தெய்வம் என்றும் கொண்டாடாது இருக்கின்றான்? அவ்வளவு தூரம் புத்தன் ஒரு



படிப்பகம்

www.padippakam.com

வரலாற்று புருஷன் = மனுசன் என்பது மட்டும் இத்துனை திட்டவட்டமாக எப்படி 'இந்தியர்களுக்கு' மட்டும் தெரிந்தது? நீ என்ன சீனாக்காரன், ஜப்பான் காரனைவிட புத்திசாலியா? அறிவுத்துறை நிபுணனா? விற்பன்னனா? அமெரிக்காவில் வெள்ளை மூளையை கதிகலங்கச் செய்யும் அறிவுக்குறிகள் ஆரோக்கியமாய் செழிப்பாய் அழகாய் சீனாவிலும், ஜப்பானிலும் இல்லாமல் வேறு எங்கும் இருக்கின்றன? கேவலம் துண்டுபீடி சாமியார்களையும், போலி வேடதாரிகளை யும் தெய்வம் என்று கொண்டாடும் பித்து உள்ள மக்களுக்கு தர்மமும், காதலும், ஞானமும் போதித்த ஆலின் கீழிருந்து அறம் சொன்ன சிவனாம் பகவான் புத்தனிடம் தெய்வம் என்ற அச்சமும், மதிப்பும், பயமும், பக்தியும் ஏற்படவில்லையா? என்னடா தமிழர்களே! பாரத பிள்ளைகளே! உங்கள் அறியாமை பற்றி நான் என்ன சொல்வது?

சீனாக்காரனின், ஜப்பான்காரனின், பிலிப்பைன்ஸ் காரனின், இன்றுவரைக்கும் சீனாவிடமிருந்து விடுதலை பெறாது இருந்தாலும் அறிவு தீர்க்கமும், தெளிவுமிக்க திபெத்காரனின் அறிவின், ஆற்றலின் முன் உன்னால் சவால்விட முடியுமா? அவனை நீ ஜெயிக்க முடியுமா? அவன், பகவான் புத்தனைக் கும்பிடுபவன்தான். தெய்வம் என்று தினம் ஓம் மணி பத்மயாமே போன்ற மந்திரங்களை உச்சரிப்பவன்தான். பகவான் புத்தனுக்கு தேவாலயங்களை நிறுவியும் அவைகளுக்கு தினம் சென்று ஊதுபத்தி, சாம்பிராணி, தேங்காய், பழம் வைத்து பூஜை செய்பவன்தான். திபெத்காரனைபோல் தாந்திரீக, மாந்திரீக பௌத்த மர்மக்கலை, யோகக் கலைகளில் சிறந்த யோகிகள் உலகிலேயே கிடையாது தான். இப்படி பகவான் புத்தனிடம் பக்தி கொண்டிருந் தும், சீனாக்காரன் இளிச்சவாயனாகி இழிந்து விட்டானா? தன் நிலையினின்று தாழ்ந்துவிட்டானா? ஜப்பான்காரனின் அறிவியல் மின்னனு தொழில் நுட்பம், வளர்ச்சி முன் நீ நிற்க முடியுமா? அமெரிக்கா நிற்குமா? பைத்தியக்காரர்களே! பகவான் புத்தனிடம் கொண்ட பக்தியினால் சீனாக்காரனும், திபெத் காரனும், பர்மாகாரனும், சிலோன்காரனும், ஜப்பான் காரனும் எய்தியுள்ள மேன்மைகள் கோடியன்றோ? அவர்களின் கவிதைகளும், இசையும், எழிலும், வளர்ச்சியும் நீ கற்பனை செய்யும் தொலைவுக்கு அப்பால் இருக்கின்றதை நீ கண்ணெதிரே காண்கின் றனை அல்லையோ? இன்னும் உனக்கு கண் திறக்க வில்லையோ? என்றே யான் அலறுகிறேன். தாய்லாந்து பெண்களின் அறிவும், அழகும் கண்ணதாசனை பித்து பிடிக்கச் செய்த விஷயம் உனக்குத் தெரியாதா? 'கள்ளரும்பில் செவ்விதழ் மழைக்கார் விரும்பிய பூங்குழல்' என்று 'தாய் கிளியை' (தாய்லாந்து கிளிகளைப் போன்ற பெண்களை) பற்றி அவன் புலம்பித்தீர்த்த சிருங்காரப் பாடல்களை நீ கேட்ட தில்லையா? ஜப்பானிய பெண்களின் அழகு உலகப் பிரசித்தம் அல்லவா? அவர்கள் இல்லாத சுவர்க்கம் - அரை வீசம் நெய்யுக்கு சமானமில்லை என்று சென்றவர்கள், கண்டவர்கள் வருணித்ததை நீ கேட்ட றிந்தது உண்டா? சீனாக்காரியின் நளினமும், நீண்ட அழகிய கால்களும் நீ இன்னும் அறிந்ததில்லையோ?

அவர்களின் கலாச்சாரம், பண்பாடு, நடைமுறை, வாழ்க்கை நெறி, அரசியல் முறைமை, காதல் வெறி, காம அர்த்த பாவனைகள், பொருளியற்தர்க்கம், அறிவியற் தொழில்நுட்பம் அனைத்துள்ளும் பொதுளித்துளும்பி நிறைந்து அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபித்து - அர்த்தப்படுத்தும் - வலிவூட்டும், உயிரூட்டி பொறு வுறுத்தும் ஒப்பற்ற சர்வசக்தி பூரணமாய், ஜீவிதமாய், ஆதாரமாய் இருப்பது பகவான் புத்தன் என்னும் திருமந்திரம், மூல மஹாமந்திரம் அல்லால் வேறேது?

குங்பூ, ஜூடோ, கராத்தே போன்ற அற்புதமான தற்காப்புக் கலைகள், மர்மக்கலைகள் - புத்தன் அருள் பெற்ற இந்த தேசங்களில் தோன்றி செழித்ததன்றி வேறெங்கேயாம் செல்வர்களே? இங்ஙனம் ஆளும் வளர, அறிவும் வளர, தேகமும், புத்தியும் விசாலமடைய மனதிற்கும் உடலிற்கும் கிரேக்கர்களைப்போன்று முக்கியத்துவம் கொடுத்து வளர்ந்தவர்கள், வளர்ப்ப வர்கள் பௌத்தர்கள் அன்றி வேறு யாராம்? உடலை வருத்தியும், உடலை அனுபவித்தும், உடலை தியாகம் செய்தும் ஜிவ்வென்று காற்றில் ஏறி பறந்தும் சிராமண, பௌத்த ரிஷிகள் காயகல்ப வித்தைகள் செய்தவை பற்றி அறிய உனது சித்தர் பாடல்களே போதுமே! இந்த சித்தர்களுக்கெல்லாம் சுயம்புவான ஞான முதல்வனாய் முன்னை பழமைக்கும் மூத்த பழமை யான வரலாற்று ஆதர்சமாய் இருப்பது பகவான் சாமி புத்தன் அல்லால் வேறு யார் என்று நீங்கள் எனக்கு நிறுவ வல்லீர்கள், சொல்வீர்கள்!

பௌத்த நெறிகளை வாழ்க்கை நெறியாய், வாழும் முறையாய் கொண்டொழுகும் சிலோனில் 98 சதவீதம் பேர் படித்தவர்களாயும், நல்ல கல்வி ஞானம் உடையவர்களாயும் இருப்பதும் அதே போல் பர்மா, திபெத், சீனா, ஜப்பான், தாய்லாந்து போன்ற நாடுகளில் பெண்களின் சுதந்திரம், கல்வி, கலை ஞானங்கள் மிக மேம்பட்டிருப்பதும், பெண்கள் ராஜ்யபாரத்தை நிர்வகிப்பதும் நாம் கண்கூடாக காண்கிறோமில் லையா? உனது புழைநாறும் பார்ப்பன பெண்டிரின் வரிசையைப் பற்றி தெரிந்து கொள்ள ராஜாராம் மோகன்ராயின் சீர்திருத்த முயற்சிகள் போதுமே. கல்கியின் பிராமணக் குடும்பங்கள் பற்றிய கதைகள், கட்டுரைகள் போதுமே! நரேந்திரநாத் தத்தா என்னும் விவேகானந்தனின் விமர்சனங்கள் போதுமே. பெண் களை வசக்கி தொழுவத்தில் கட்டினவனும், மாடாய் நடத்தியவனும் பார்ப்பனன்தானே! பார்ப்பனத் திகளுக்கு பார்ப்பனன் என்னும் ஆண் கொண்டேற்றிய கொடுமைகள் கொஞ்சமா! நஞ்சமா?

பெ.சு. மணி, பாரதியாரின் 'பௌத்த மார்க்கத்தில் பெண்களின் நிலை' பற்றிய கட்டுரை கவிதாசரனில் வெளிவந்ததற்கு பாரதியின் புராணப் பெருமை பேசும் விசயமாகப் பார்க்கிறார். ஆனால் அதே இதழில் பௌத்தம் மறைந்தது என்பதற்காக பலரும் வைத்த ஒப்பாரிகள் பற்றி மறுதலித்து நானும் கட்டுரை எழுதியிருந்தேன். மொழியில் படியும் பாசிசம் பற்றி பெரிதாய் சிலாகித்த பெ.சு. மணி மொழியில் படிந்த பாசிசத்தை நடைமுறைப்படுத்தும் வண்ணமாய் பாரதியின் அறிவுத்திறமையை புகழ்ந்ததோடு



படிப்பகம்

www.padippakam.com

**இந்திய தேசத்தில் சிலை என்பதெல்லாம் தெய்வமென்று வழிபட்டதெல்லாம், கோயில் என்று கட்டப்பட்டதெல்லாம் பகவான் புத்தனுக் கானவையே, புத்தனுக்கென்றே, புத்தனையே என்பதை ஏன் மறைக்கிறீர்கள்? பார்ப்பனன் அவை அனைத்தையும் 'இந்து மதம்' என்று பெயரிட்டு வெள்ளைக்காரன் அழைக்கும்படி செய்தான் என்றால் உனக்கு ஏன் இன்னும் புத்தி வராமலிருக்கிறது?**

நிறுத்திக்கொண்டு, பௌத்தம் பற்றி 'பேசா மணியாய்' இருக்கிறார். மொழியில் பாசிசம் படிவது மட்டுமல்ல 'தல்லாடுவதும்' உண்டு. நான் யோசித்தேன். அடடா! பெண்களின் ஒப்புயர்வற்ற ஆளுமையை அங்கீகரித்த, தேரிகளின் பாடல்களை ஆக்குவித்த பல ஒப்புயர்வற்ற பெண் கவிஞர்களை, தத்துவவாதிகளை - மணி மேகலை, நீலகேசி, காக்கைப் பாடினியார், நச்சொள் ளையார், அவ்வையார், குண்டலகேசி போன்ற அறிஞர்களை தோற்றுவித்த பௌத்தத்தை ஒரு பெண் கூடவா ஞாபகம் வைத்திருக்கவில்லை? இப்படி பெண்களை பால்நீக்கி ஒரு சகஜசமான ஜீவியாக உலவக்காரணமாயிருந்த பௌத்தம் வீழ்ந்தது என்பது எவ்வளவு கரும் பொய் என்று.

பகவான் புத்தனை - காதலனாய், கணவனாய், நல்லாசிரியனுமாய் ஒப்பற்ற குருவாய், தத்தித் தவழ்ந்து குறுநகை புரிந்து நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்து, யாழும் குழலும், அமிழ்தும் குழைத்த மழலை பேசும் பாலகனாய், காதலியாய் வர்ணித்து, உள்ளுருகி, ஊன் உருகி, உயிர் உருக்கி, நெக்குருகி கசிந்து கண்ணீர் உகுத்து காதலாகிப் பாடிய தெய்வ பாசுரங்கள் அல்லவா தேரிக்கதா என்ற பாடல்கள். அப்படிப்பட்ட அன்பிற்கும், நன்றிக்கும், நட்புக்கும் நித்தம் மரியாதை கொண்டாடும் பெண்களில் ஒரு சிலர் கூடவா பகவான் புத்தனை தெய்வம் என்று கொண்டாடாது விட்டார்கள் இந்தியாவில்?

கண்ணகியைப் பற்றி விரிவான ஆராய்ச்சிகளை மேற்கொண்ட அறிஞர்கள் பலரும் 'கண்ணகி' என்ற பெயர்தான் மக்களுக்கு தெரியவில்லையே தவிர இருக்கும் அனைத்து மாரியம்மன் கோயில்கள், ஒற்றை முளைச்சி அம்மன் கோயில், திரௌபதி அம்மன் கோயில், ஓம் காளியம்மன் கோயில் என்பனவெல்லாம் கண்ணகியின் கோயில்களே (பேராசிரியர் துளசி ராமசாமி நூல்களை பார்க்க) என்று சொல்கிறார்கள். எனது தாயாரும், கோவலன் செட்டி செலவாறு கதைபற்றி எனக்கு உபதேசம் செய்யும்பொழுது, கோவலன் முற்பிறப்பில் ஓர் எண்ணெய் வாணிகனாய் இருந்தான் என்றும் அவன் எண்ணெய்க் குடங்கள் விலைபோகாதபோது வடமதுரை பத்ரகாளியம்மன் கோயிலுக்கு ஆயிரம் திருவிளக்கு தீபம் ஏற்றி எண்ணெய் எல்லாம் விற்றால் பூஜை செய்வேனென்று வேண்டிக்கொண்டான் என்றும், அவன் வேண்டு கோளின்படி எண்ணெய் எல்லாம் விற்றுப்போக அவன் காளியம்மனுக்கு ஆயிரம் தீபங்கள் ஏற்றி பூஜை செய்தான் என்றும், ஆனால் அக்கோயில் பாண்டிய மன்னர்களின் உத்தரவால் பூஜை வழிபாடு செய்யப் படக்கூடாது என்று தாழிடப்பட்டு மூடுண்டு கிடந்தது என்றும், இவன் இப்படி பூஜை செய்ததால் அவன் தலையை வாங்கும்படி மன்னர் ஆணை பிறப்பித்தார் என்றும், அவ்வண்ணமே அந்த எட்டி செட்டி செலவாரு என்னும் அந்த எண்ணெய் வாணிகனின் தலை வெட்டப்பட்டது என்றும், அப்படி வெட்டப்பட்ட அந்தத் தலை ஒரு காளிதேவியின் மடியில் விழுந்து, ஒரு குற்றமும் அறியாது உனக்கு திருவிளக்கு ஏற்றிய குற்றத்திற்கு நான் பலி ஆனது சரியா என்றழுதது என்றும், அதற்கு உனது அடுத்த பிறவியில் 'கண்ணகி' என்ற பெயரில் உனது மனைவியாக நான் பாண்டிய ராஜனுக்கு மகளாய் பிறந்து பழி தீர்ப்பேன் என்றும் கூறினாள் என்பதிலிருந்து கண்ணகி காளியம்மனே என்பது தெளிவு. இவளே தாராதேவி என்றும், மகமாயி என்றும், சக்தி என்றும் அறியப்பட்டு விதந்து ஓதப்படும் உத்தமியும் ஆவாள்.

இவ்வாறே இருக்கும் தெய்வங்கள் எல்லாம் புத்தனின் திருக்கோலங்களாய் இருப்பினும் அவற்றை 'புத்தன்' எனும் திருநாமம்கொண்டு பயத்தாலும், பக்தியாலும், பரவசத்தாலும், ஆசையாலும் அய்யன் தனக்கிட்டுக்கொண்ட அந்த திவ்ய மதுரமாய் மஹா மந்திரமாய் 'புத்தன்' எனும் பெயர் கொண்டு அழைக்காது - அவன்தன் ஒளிரூபம் கண்டு 'ஜோதிருபாயனே' என்றும் அவனின் அன்பு ரூபம் கண்டு 'சிவனே' என்றும், அவனது அறிவு ரூபம், புத்தி ரூபம் கண்டு 'விஷ்ணுவே' என்றும், அவனின் கம்பீரம் மிகு யானை நிகர்த்த திருவெழில் ரூபங்கண்டு 'கணநாதனே' என்றும் 'கஜேந்திரனே' என்றும் மனிதருள் சிம்ஹமென மூறி நிமிர்ந்து முழங்கி நடந்த அப்பெருமானின் கம்பீரம் கண்டு 'நரசிம்ஹா' என்றும், மாந்தருள் தோன்றிய தெய்வபுருஷன், உத்தமபுருஷன் என்பதால் 'மஹாபுருஷனே', 'புருஷோத்தமனே' என்றும், சொல்லொனா செயற் கரிய பெருந்தவம் செய்தமை வியந்து 'மாதவனே' என்றும், மாயத்திற்கோர் மாயம் செய்த தேவன் என்பதாய் வியந்து 'மாயனே' என்றும், மஹாதீர்க்கம் மிக்க ஞானசொரூபன் என்பதால் 'மஹாதிகனே' (பாலியல் மஹாதிகா என வரும் அது சமஸ்கிருதத்தில் மஹாதீர்கா என்று "ர" கரம் பெறும். வக்க பாலி சொல் வர்க்கம் என்று வடமொழி வழக்குறும். சக்கா என்ற பாலிச்சொல். சக்கரம் என்று வடமொழி வழக்குறுவதைக் காண்க) விஸ்வமாம் உலகங்களை நிர்மாணிப்பதால் 'விஷ்வகம்மா' என்றும் 'விஷ்வ கர்மா' என்றும் மக்கள் அய்யனை வியந்து வியந்து போற்றுவராயினர். இங்ஙனம் அய்யனை ஆயிரத் தெட்டு திவ்வியத்திருநாமங்கள் கொண்டு மக்கள் போற்றித் துதித்ததும், கோயில்கள் நிறுவியதும், வணங்கி அவன் தன் பொற்றாமரை மலரடியினை களில் சரண்புகுந்ததும் வரலாற்று உண்மை என்னும்



படிப்பகம்

www.padippakam.com

விடுதலை தரும் நற்செய்தியை பாலி, திபெத்திய திவ்விய ஆகமங்களாக காஞ்சூர், தோஞ்சூர் தொகுதிகளின் மொழிபெயர்ப்புகளில் கண்டு தெளிக அல்லது வல்லறிஞர் தம்மிடஞ்சேர்ந்து பயின்று தெளிக, தேர்க என்று யாம் வேண்டுகிறோம். கையில் வெண்ணெய் போன்ற அயோத்திதாசரின் தொகுதிகள் இருக்கின்றன. இயலாதவர்கள் வேறு எங்கும் நெய்யுக்கு அலைந்து திரிய வேண்டியதில்லை!

பகவான் புத்தனின் ஆயிரத்தெட்டு திருநாமங்கள் பற்றிய குறிப்புகளை சிலப்பதிகாரத்திலும், மணி மேகலையிலும், யாப்பருங்கலக்காரிகை, அரப்பளீஸ்வர சதகங்களிலும் கண்டு கொள்க. சிலம்பு யாத்த இளங்கோவடிகளும், மணிமேகலை பாடிய தண்டமிழ் சாத்தனும், மணிமேகலை தத்துவத்துறை கடந்து போகக் காரணமாய் இருந்த அறவண அடிகளும், கோவலன் - கண்ணகி இருவரை நல்வழிப்படுத்தும் நாடுகாண் கதையில் வரும் கவுந்தி அடிகளும், தீதில் பிராமணா எனும் மாடலமறையோன் தானும் பௌத்த ரிஷிகள் என்பது தெளிவன்றோ? சிராமண என்ற சொல்லே சமணன் என்று ஆகிறது. புத்தனுக்கு 'ஜைனா' என்ற திருநாமம் உண்டு. நமது அறிவு சார்ந்த தமிழ் அறிவு ஜீவிகளோ சமண மதம் ஜைனர்களுடையது என்பர். பௌத்தம் வேறு சாக்கியம் வேறு என்று மயங்குவர். சாக்கியம் வேறு கலியம் வேறு. கலியம் என்றால் லாஜிக் (Logic) என்று அர்த்தம் 64 வகையான கலிக்காணம் சிராமண ரிஷிகள் கற்று தேர்ந்திருந்தார்கள் என்று எனது தாயார் ராஜமாதா மஹாகவி பாப்பாத்தியார் எனக்கு உபதேசித் திருக்கிறார்.

சிராமணா என்ற சொல், பாலியில் சமணா என்றும், தமிழில் சமணம் என்றும் வழக்குறும் என்பதை மயக்குறும் தமிழ் அறிவு ஜீவிகள் அறியர். நாலடியாரை சமண முனிவர்களாகிய ஜைனர்கள் எழுதியது என்பர். திருவள்ளுவரை சாக்கிய மாதானு பங்கியை சமணர், அதாவது ஜைனர் என்பர், ஆனால் புத்தனுக்கு ஐயன் என்னும் திருநாமம் உண்டு. அது காக்கவந்தவன், ரட்சிப்பவர் என்ற அர்த்தமுள்ள 'ஜைனா' என்ற பாலிச்சொல் ஆகும். இதுமட்டுமன்றி இந்திரியங்களை வென்று மாறனை அழித்து ஜெய பேரிகை கொட்டி முழங்கி பகவன் எழுந்ததாய் அவரை 'மஹாவீரர்' என்றும் சிராமண ரிஷிகள் போற்றினர். இது அறியாமல் புத்தன் வேறு, மஹாவீரர் வேறு, சமணம் வேறு, சாக்கியம் வேறு, பௌத்தம் வேறு, கலியம் வேறு என்று ஒரு குடும்பத்து சொற்களையே, ஒரு பொருள் தரும் வெவ்வேறு கருத்துக்களையே, வேறு வேறு என்று காட்டிடவும், கூறு கூறு என்று ஆக்கிடவும் முனைவர், முனையற்ற இந்த முனைவர்கள்.

ஆயினும், பூர்வ தமிழ் ஒளியான அறிவின் இறைவனாம் ஞானமுதல்வனாம் அய்யனை பின்பற்றிய கூட்டம் வெள்ளம்போல் இன்னம் இருந்துகொண்டே இருக்கின்றது. தெள்ளுதமிழில் உள்ளது அத்தனையும் பௌத்தம், சாக்கியம், சமணம், கலியம், ஜைனம் என்று வழங்கப்படும் அய்யனின் திருவாய்மொழியுரைகளே, அவற்றின் அடி ஒட்டி எழுந்தவைகளே. இந்த பாரத தேசத்தில் உள்ள 18 மொழிகளும் எண்ணிறந்த இனக்குழு பாஷைகளும் பகவானின் பிள்ளைகளால் வளர்க்கப்பட்டவையே, உள்ள ஒவ்வொருவரும் புத்தனோடு நீக்கறும் வரலாற்று தொடர்பு உள்ளவர்களே. இப்படி ஒப்புயர்வற்ற அந்த தெய்வத்தை புதையுண்ட சாமி ஆக்கி அவனைப் பற்றி பேசாது கள்ள மௌனம் (Criminal Silence) சாதிப்பதும் அவனின் இனக்குழு மக்களான சாக்கியராம், கலியராம் சாக்கிய கலியராம் - மஹாதிகர்களாம் - ஜாம்பவான் களாம் - ஆதித்தமிழர்களாம், அருந்ததியர்களாம் - ஆதி ஜரவர்களாம் மக்களிடமிருந்து வங்கொடுமை செய்து பகவானுக்கும் அவர்களுக்குமான தொப்புள் கொடி உறவறுக்க முயற்சித்து, இந்த மக்களை - விலக்கப்பட்ட, சிறைப்படுத்தப்பட்ட, தனிமைப் படுத்தப்பட்ட மக்களாய்ப் பார்ப்பனீயமும் அதன் கூலிப்படைகளும் செய்துவருகின்ற கொடுமையும் சொல்லி முடியாத மிகக்கொடூரமான வரலாற்று வஞ்சகம் ஆகும். விலக்கப்பட்ட அந்த மக்களும் விலக் கப்பட்ட அந்த கடவுளும் எழும் காலங்கள் இவை (The forbidden god & his forbidden people are emerging now).

பகவான் புத்தனின் பிறப்பிலிருந்து மஹாபரி நிர்வாணம் வரைக்குமான வாழ்க்கை என்பதே மிக அதீதமான அமானுஷ்ய தன்மைகள் கொண்டுள்ளன என்பதை திரிபீடங்களை கற்கின்ற எவரும் புரிந்து கொள்ளும் முதல் உண்மையாகும். பகவான் புத்தன் போதிமரம் அடைந்து பெற்ற 'ஞானோதயம்' என்னும் வரலாற்று நிகழ்வோ பாரதக்கடவுள் குறித்த தர்க்கங்களுக்கு, விசாரணைகளுக்கு அளந்து கரை காணமுடியாத ஓர் அமானுஷ்ய தெய்வ சம்பந்தம் மிக்க அதி அற்புத நிகழ்வாக இருக்கிறது.

பகவானின் தாயார் மஹாமாயாவின் கனவில் ஓர் அழகிய வெள்ளை யானை வந்து வயிற்றில் நுழைவதும், பின் கொஞ்ச நாட்களில் அவரின் இடுப்பின் வலது பக்கத்திலிருந்து குழந்தை சித்தார்த்தர் வெளிப்போந்து நடப்பதும், அவரின் மானுட அவதாரத்தை தேவாதி தேவர்கள் கின்னரர, கிம்புருட, யக்ஷ. கெந்தவர்கள் பூமாரி பெய்து வானவெளியில் நின்று வாழ்த்தி போற்றி துதிப்பதும், சுத்தோதன மஹாராஜன், பகவானை தேவாதி தேவனே, நரசிம்மனே என்று வணங்கி போற்றுவதும் அதிதன் உலகின் ஒப்பற்ற ஒளி அவதரித்துள்ளார், இவன் உலகங்களை வெல்லும் என்றைக்கும் அழியாத சக்ரவர்த்தியாக நிலைப்பான் என்று ஆனந்தித்து, தான் அந்த திவ்ய நிகழ்வினை காணும் பேறு பெறாமலேயே இறந்துபோக நேருவது குறித்து துன்பக் கண்ணீர் வடிப்பதும், சித்தார்த்தரின் மனதை துறவறத்தின் பால் திருப்பும் பொருட்டு, தேவராஜனான 'சக்கா' தேவர்களை அனுப்பி, முதியவன் போன்ற மாயக்காட்சியையும், நோயுற்றவன் போன்ற மாயக்காட்சியையும், இறந்தவன் போன்ற மாயக்காட்சியையும் சித்தார்த்த ராஜ்குமாரின் முன்னே ஏற்படுத்தி அவரை துறவறத்திற்கு ஈர்ப்பதும், நள்ளிரவில் பகவான் துறவறத்தினை மேற்கொள்ள துணிந்து அரண்மனையை விட்டு வெளியேறும்


படிப்பகம்

www.padippakam.com

**முழுக்க முழுக்க பௌத்தத்தை "இந்து மதம்" என்று காட்டிய பிறகு, பௌத்தர்கள் பேசவும், எழுதவும், படிக்கவும், ஊரில் நுழையவும், வழிபடவும் செய்யவிடாது தடுத்து கீழ்த்தரமான பணிகளை செய்பவர்கள் என்ற பட்டம் கட்டி, ஊமையாக்கி கீழே தள்ளினர்.**

மஹா துறவறத்தை தேவர், வானோரும் போற்றி கருணாமூர்த்தி உலக துன்பங்களை தீர்க்கும் தர்மத்தை கண்டடையப் போகிறார் என்று வணங்கி பூமாரி பெய்து போற்றுவதும் பகவான் தனது அழகிய கேசத்தை அறுத்து எறிவதும், அதை தேவராஜனான 'சக்கா' புனிதமென எடுத்துச் செல்வதும், அய்யன் கழற்றிவைக்கும் ஆபரணங்களை எல்லாம் தேவ லோகங்களில் உள்ளவர்கள் வந்து ஏந்தி செல்வதும், அய்யன் போதிமரம் அடைந்து 'ஞானம்' பெறுவதும், ஞானம் அடையும் முன்பு 'மாறன்' பலவிதமான கேடுகளை, மயக்கங்களை ஏற்படுத்தி அய்யனை திசைதிருப்ப முயன்று அய்யனின் ஞானக் கண்ணால் எரியுண்டு சாம்பலாவதும், அய்யன் முற்ற முழுமையான ஞான ஒளியாய் அங்கிங்கெனாது எங்கும் பிரகாசமாய் ஓங்கி 'ஒளி' என ஏருவதும், தேவர்கள், கின்னரர, கிம்புருட, ரிஷிகோடிகள் அனைவரும் அய்யனைப் போற்றி பூமாரி பொழிந்து துதிப்பதும், அய்யன் ஞானத்தை சொல்லாது ஆரிய மௌனம் காக்கும் பொழுது பிரம்மதேவன் ஓடோடி வந்து அடிபணிந்து தெண்டனிட்டு ஞானத்தை உரைக்க திருஉள்ளம் கொண்டருள வேண்டுமென வேண்டுவதும், பின்னும் 66 லட்சம் கோடி பிரம்மாக்களுடன் வந்து தெண்டனித்து அடிபணிந்து அய்யனை திருஞானமொழி (தர்மம்) உலகுய்யும் பொருட்டு திருவாய் மொழி அருளும்படி வேண்டி அய்யன் சாரநாத்தில் அய்ந்து சீடர்களுக்கு தர்ம பரிவர்த்தன மஹா உபதேசம் செய்ததும், அவற்றை தேவாதி தேவர்களும், பிரம்மா போன்ற தேவன்களும் மறைந்திருந்து கேட்பதும், பகவான் புத்தன் காற்றில் ஜிவ்வென்று நினைத்த இடங்களுக்கு சென்று வெவ்வேறு மக்களுக்கு தர்மோபதேசம் செய்ததும், கடைசி தர்மோபதேசத்திற்குப் பின் அய்யன் மஹாநிர்வாணம் எய்திய பிறகு அய்யன் அமர்ந்து உபதேசித்த தர்ம சிம்ஹாசனத்தை தேவாதி தேவர்கள் வந்து வானுலகிற்கு எடுத்துச் சென்றதும் என்று பகவானின் வரலாறு முழுவதும் - தெய்வ நிலை சார்ந்ததாய் இருந்தும் அய்யனை ஒரு சாதாரண மனிதனாக தொடர்ந்து சித்தரிக்க முற்படுவதின் அரசியல்தான் என்ன?

இவைகள் அனைத்தும் புனைவுகள் என்றால், நம்பகத்தன்மையற்ற வெறும் கற்பனைக் கதையாடல் களை என்றால், அதே மதிப்பீட்டைத்தானே இயேசு கிறிஸ்து நிகழ்த்திய அற்புதங்களுக்கும், அவரைப் பற்றிய தொன்மைக் கதையாடல்களுக்கும் முகமது நபியினைப் பற்றிய புனைவுகளுக்கும் வழங்க வேண்டும்? ஒரு தொன்மத்திற்கு, ஒரு புனைவுக்கு ஒரு வரலாற்று மதிப்பீடு என்பதும், இன்னொரு புனைவுக்கு தொன்மத்திற்கு வேறொரு மதிப்பீடு என்பதும், புனைவுகள் எல்லாம் சமம், ஆனால் சில புனைவுகள் மட்டும் அதீத சமம் என்னும் வேடிக்கையாய் இருக்கின்றதன்றோ? அந்த அரசியல் நன்றோ?

புத்தனை மனிதன் என்று அவனை சுற்றியிருக்கும் தொன்ம, புனைவு ஓடுகளை கூடுகளை ஒதுக்கிப் பார்க்க முற்படுபவர்கள் - முற்ற முழுதான புத்தன் = சாதாரணமானவன் என்ற பெரும் கண்டுபிடிப்பை செய்பவர்கள், அப்படிப்பட்ட தொன்ம புனைவு நீக்கம் செய்யப்பட்ட கிறிஸ்துவையும், முகமது நபியையும் தேடி சாதாரண மனிதர்கள்தான் அவர்கள், அவர்கள் தங்களை இறைதூதர்கள் என்று அழைத்துக் கொண்டதெல்லாம் வெறும் பின்னாளைய புனைவுகள் என்று கண்டுபிடிப்புகளை நிகழ்த்த வேண்டியது தானே? ஏன் அவ்வளவு தயக்கம்? மாய்ந்து, மாய்ந்து இஸ்லாத்திற்கும், கிறிஸ்துவத்திற்கும் வக்காலத்து வாங்குபவர்கள் கிறிஸ்து, முகமது பற்றிய பகுத்தறிவுவாத அறிவு கொளுத்த வேண்டியது தானே? அப்படி அறிவு கொளுத்தினால் எங்கே கிறிஸ்துவ, முஸ்லீம் துப்பாக்கி முனைகளின் முன் உயிரிழக்க நேருமோ என்ற பயம். அனால், புத்தன் விசயம் அப்படி இல்லையே. அவனும் புதையுண்டு கேட்பாரற்று கிடக்கிறான். அவனுடைய பிள்ளைகளையும், நொறுக்குண்ட மக்களாக்கியாயிற்று. எனவே அச்சமின்றி, ஆராய்ச்சி நேர்மையின்றி புத்தனை மனிதன் என்றும், அவனின் பிள்ளைகளை பீவாரி களாகவும், செருப்பு தைப்பவர்களாயும் கேவலப்படுத் தலாம். யார் கேட்கப் போகிறார்கள்? அவனையும், அவன் மக்களையும் எப்படி நிந்தித்தாலும் வதைத்தாலும் தங்களை எதிர்த்துக் கேட்க, அவர்களுக்கு என்று வக்காலத்து வாங்க யார் இருக்கிறார்கள்? என்ற திமிர் அலட்சியம் தரும் அதிகார வெறி! அறியாமை இருள்! மோகம்!

சரி, அப்படியே பகவான் புத்தனை ஒரு மனிதன் என்று எடுத்துக் கொண்டு பார்ப்போமே. அவனளவிற்கு பிறரின், பிறிதின் துயர் துன்பம் கண்டு தன் துன்பம் என்பதாய் கொண்டு நாடு, மனை, மக்களைவிட்டு துன்பங்களையே முற்றமுழுதாக தூக்கி எறிந்துவிட வேண்டும் என்ற Utopian கனவு கொண்டு அதற்கான வழிமுறைகளை, மார்க்கங்களைத் தேடிச் சென்ற மனிதன் உலக வரலாற்றில் உண்டா? தேவதூதன் என்று தன்னைப் பற்றி அறிந்துகொண்ட அல்லது நம்பிக்கை கொண்ட பின்புதானே சிலுவை சுமக்க இயேசு என்ற மனிதனும், முகமது நபி என்ற மனிதனும் முன்வந்தார்கள். ஆனால் எந்தவொரு தெய்வீக உணர்வோ, ஆட்படுதலோ இன்றி வாடிய பயிர்களை கண்ட போதெல்லாம் வாடி இவற்றின் வாட்டம் தீர்க்க ஓர் வழியில்லையா? என்று வாழ்வை துறந்துவந்த மாமனிதன் புத்தன் அல்லால் வேறு யாராம்? வரலாற்றிலே இது காறும்!

இறைதூதர்கள் எல்லாம் ஒன்று அற்புதங்களை செய்து மக்களை கவர்கிறார்கள் அல்லது சேனை


படிப்பகம்

www.padippakam.com

படை பலம் திரட்டி போரிட்டு தங்கள் செய்திகளை மக்கள் ஏற்றுக்கொள்ளும்படி வைக்கிறார்கள். ஒரு பணக்கார பெண்மணியின் பொன்னும், பொருளும், படையும் தேவைப்படுகிறது, இறைதூதனான நபிக்கே தன் செய்திகளை மக்களிடம் கொண்டு செல்வதற்கு வெற்றி கொள்வதற்கு. ஆனால் ஞானோதயத்திற்கு பிறகு பகவான் புத்தன் தனது ராஜாங்கம் சென்ற துண்டோ, தன் அதிகார பீடத்தில் அமர்ந்து தான் மெய்யெனக் கண்டவற்றை மக்களை ஏற்க செய்திட வேண்டி.

பிக்ஷம் ஏற்று தர்மம் சொன்ன, போதித்த தர்ம ராஜன் ராஜாதி ராஜன் அவனைப் போல் வேறு யார்? 'ஞானோதயம்' என்பது எவரேனும் எந்த தெய்வ மேனும் பகவானுக்கு அனுகிரகம் செய்ததுண்டா? இல்லையே. தானே முளைத்தெழுந்த சுயம்பு. ஞானப் பிழம்பு - திவ்விய - முன்னுவமை - தோற்றக்காரணம் ஒருவனில்லாத 'சுத்த சுயம்பு' அல்லவா, எந்தை பகவான், புத்தன்? அவனிடம் மண்டியிட்ட தேவாதி தேவர்கள் அல்லவா ஞானம் வேண்டி கரவாகரைந்து நிற்கிறார்கள். ஆனால் இறைதூதர்கள் யாரோ இறை வன் அனுப்பும் தேவர்களின் முன்பல்லவா மண்டியிட்டு ஞான உபதேசம் பெறுகிறார்கள்? பகவான் புத்தன் அற்புதங்களை நிகழ்த்தும் சக்திகளை கட்டின்றி கைக்கொண்டிருந்தும் அவைகளை பெரிது படுத்தாது "The Miracle of Instruction" எனும் உரையாடல் மூலம் சிந்தனையை புத்தியை பெருக்கும் அற்புதமே சிறந்தது என்று சங்காரவா (A.N. 3.60, சுத்த சங்காரவோ என்ற பகவான் புத்தனின் உரையாடல் தெரிவு என்ற ஆச்சாரிய புத்த ஷிதாவின் நூலைக் காண்க) என்ற பிராமணனுக்கு தனது அற்புதம் நிகழ்த்தும் ஆற்றல் களையும், அவற்றில் 'அறிவுறுத்தல்' எனும் அற்புதமே (Miracle of Instruction) மிகச் சிறந்தது என்றும் அதையே தான் செய்வதாகவும் தெளிவுபடுத்தியிருப்பதைக் காண்க. இங்ஙனம் பகவான் புத்தனைப் போன்று உரையாடல்களில் நம்பிக்கை வைத்து மனிதனின் அறியும் திறனை மதித்து, தன்னெதிர் உள்ளவரின் அறிவையும் கணக்கில் எடுத்துக்கொண்டு உரையாடல் (Dialogue) மூலம் பிரச்சினைகளை எதிர்கொண்டு, அலசி ஆராய்ந்து முடிவுகளை நோக்கி அறிவுப் பூர்வ மான, புத்திப்பூர்வமான, ஞானப்பூர்வ மான வழி முறையை முதன்மைப்படுத்திய அறிவு தெய்வம் - மனித வடிவில் தெய்வம் - மனிதன் - உலகில் வேறெ வரேனும் உண்டா? புத்தனின் அதி அற்புத சக்திகளைப் பற்றி சங்காரவா சத்தாவிலும் 'விசுத்தி மார்க் கம்' என்ற நூலிலும் திரிபீடகங்களிலும் Thuraman அவர்கள் எழுதிய "Essential Tibetian Buddhism" நூலிலும் Encyclopedia of Britanica-வில் புத்த நெறி பற்றிய கட்டுரைகளிலும், அயோத்திதாசரின் நூல்களில் ஆதாரம் காட்டப்பட்டிருக்கும் தமிழ் பணு வல்கள், செய்யுள் கள் மூலமாகவும் தெரிந்து கொள்க. பகவான் புத்தன் தான் வரலாற்றிலேயே முதன்முதலாக வணங்கப்பட்ட மனிதன் என்றும், அவனை வணங்குவதற்கென்றே அவ னது திருவுருவ சிற்பங்கள் செதுக்கும் கலை உருவான்து என்றும் கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரைக்கும் கூட மதுராவிலும், துவாரஹாவிலும் பகவான் புத்தனின் சிலைகள் வாசுதேவனாக வணங்கப் பட்டனவென்றும், பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் சிலைகள் எவையும் மேற்சொன்னவிடங்களில் கிட்டிடவில்லை யென்றும் சிலை என்றால் அது புத்தனின் உருவம்தான் என்றும் தெரிந்துகொள்ள தொமிலாதாப்பர் 8-ஆம் 9-ஆம் வகுப்புகளுக்கு எழுதியுள்ள 'பண்டைய இந்திய வரலாறு' என்ற பாடஙகளே போதுமே. இவற்றை மறுதலிக்க இன்று வரைக்கும் எந்த வரலாற்று அறி ஞனும் முன்வரவில்லையே.

வேதங்கள் உருவ வழிபாடு பற்றி பேசுகின்றனவா? கோயில்களைப் பற்றி பேசுகின்றனவா? சிற்பக்கலை, கட்டிட நிபுணத்துவம் பற்றி அவைகள் கூறுகின்ற னவா? இல்லையே!

புலைநாறும் யாகசாலைகளையும், ஆடுமாடுகளை கொன்று சுட்டு பொசுக்கும் ஈமத்தீ எரியும் நெருப்பு குண்டங்களும் அல்லவா பார்ப்பனர்களின் புனிதப் பொருட்கள்? வஸ்துக்கள்? ஸ்தலங்கள்? நெருப்பைத் தவிர அவனுக்கேது கடவுள்? அவனுக்கு ஏது 'சாமி' என்பது? அவனிடம் ஏது கோயில்? அவனிடம் ஏது உருவ வழிபாடு? இந்திய தேசத்தில் சிலை என்பதெல் லாம் தெய்வமென்று வழிபட்டதெல்லாம், கோயில் என்று கட்டப்பட்டதெல்லாம் பகவான் புத்தனுக் கானவையே, புத்தனுக்கென்றே, புத்தனையே என்பதை ஏன் மறைக்கிறீர்கள்? பார்ப்பனன் அவை அனைத்தை யும் 'இந்து மதம்' என்று பெயரிட்டு வெள்ளைக் காரன் அழைக்கும்படி செய்தான் என்றால் உனக்கு ஏன் இன்னும் புத்தி வராமலிருக்கிறது? 'புத்தன்' வந்தால் 'புத்தி' வரும். அதனாலேதான் 'பகவான் புத்தன்' எழு கிறான். வருகிறான். புத்தி வந்தால் செல்வம் வரும், இன்பம் வரும், மானுட சமுத்திரம் தானேன்று பாராட்டும் அன்பு செய்யும், காதல் வரும், நீதி நேர்மை, தர்மம் வளரும், ஒருவருக்கொருவர் நட்பும் காதலும், அன்பும் பாராட்டி, வளர்த்து எடுக்கும் பண்புடைமை வரும். பண்பு வர அமைதி பெருகும். பொன்னுலகம் கண்ணெதிரே மண்ணுலகிலேயே எய்தவரும் இன்னும் என்ன வரும்? அதை யாருக்கு முற்றமுழுதாய் சொல்ல வரும்? சொல்லிடுவீர்?

படையெடுத்து வந்த முஸ்லீம்கள் அல்-ஹிந்து எனும் அனைத்து இந்தியாக்களில் கண்ட சிலையை 'புத்' (Buddh) என்றே அழைத்தார்கள் என்பதும் அவன் சூறையாடி, இடித்த உழைத்து நொறுக்கிய சிலைகள் அனைத்தும் புத்தனுடைய திரு விக்கிரகங்கள் என்பதும் பற்றி டாக்டர் அம்பேத்கர் தனது நூல்களில் எழுதியிருப்பதை கண்ணுற வேண்டுகிறேன். ஆக, முழுக்க முழுக்க, மஹாயான பௌத்தத்தைத்தான் ஆங்கிலேயர் மூலம் பார்ப்பனர்கள் இந்துமதம் என்று பெயர் வைத்து அழைத்துக்கொண்டு, இந்த மஹாயான பௌத்த பூர்வக்குடிகளையும், மக்களையும் சதுர்வர்ண கூலிப்படைகளைக் கொண்டு தாக்கி, பாழ்படுத்தி தீண்டாமை என்னும் சமுதாய, பொருளாதார தெய்வீக தொடர்பறுத்து கொடுமைப்படுத்தி வந்திருக்கின்றது முழுக்க முழுக்க பௌத்தத்தை "இந்து மதம்" என்று காட்டிய பிறகு, பௌத்தர்கள் பேசவும், எழுதவும்,



படிப்பகம்

www.padippakam.com

படிக்கவும், ஊரில் நுழையவும், வழிபடவும் செய்ய விடாது தடுத்து கீழ்த்தரமான பணிகளை செய்பவர்கள் என்ற பட்டம் கட்டி, ஊமையாக்கி கீழே தள்ளி அதன்மீது பார்ப்பன சூழ்ச்சியாளர், யுத்த வெறியர்கள், கள்ள வணிகர்கள், சூத்திர கூலிப்படைகள் எனும் நான்கு வருணங்களும் பௌத்தர்களை தனிமைப் படுத்தி (Untouchablised) கொடுமைபடுத்தி அரசியல் நடத்துவது இதுகாறும் சாத்தியமாகி வந்திருக்கின்றது.

இனியும் அந்த மாய்மால பார்ப்பன மற்றும் நால்வருண தொங்கு சதைகளின் சூழ்ச்சி பருப்பு வேகாது. பௌத்த பூர்வ இனக்குழுக்களான கோடானு கோடி மக்கள் தாழ்வுறுத்தப்பட்டு வன்கொடுமை களுக்கு ஆளாக்கப்பட்ட மக்கள் கூட்டங்கள் விழிப் புற்று இன்று எழுந்து வருகின்றன. தம்மை அறியா மலேயே சூத்திரச் சட்டத்துக்குள் வரையறுக்கப்பட்ட பௌத்த குடிகளும் விழிப்பெய்தி உண்மை உணர்ந்து பௌத்த நினைவுகளை மீண்டும் ஞாபகப்படுத்திக் கொண்டு எழுகின்றன. பார்ப்பனத்திற்கு எப்போதுமே சவாலாக இருக்கும் தன்மானம் மிக்க 'சூத்திரன்' என்ற பெயரை - வகைமைப்படுத்தலை ஒத்துக்கொள்ளாது எதிர்த்த குடிகளும், எமது ஆதித்தமிழ் குடிகளோடு இணைந்து இன்று தமிழகத்தில் புத்தனை சரனென்று கொண்டு எழுகின்றன. பகவான் புத்தன் 'அரசியலில்' நுழைகின்றான். அரசியல் என்பது அதிகாரத்திறனை கைப்பற்றும் யுக்தி அல்ல. உரிமைகளை நிலைநாட்டும் மார்க்கம், வழி. அரசியலின் நோக்கம் என்பது நீதியைப் பெறுவதும் நீதியை நிலைநாட்டுவதும் நீதியை சென்றடைவதுமே ஆகும். அப்படிப்பட்ட அரசியலை நடைமுறையின் தத்துவமாம் பௌத்தம் கையில் எடுக்கும். பகவான் புத்தன் எழுகிறான். இதுகாறும் பொட்டுபூச்சிகளாய், வாய் மொழியற்று, கழிவடை சுமந்தும், பீவாரியும், பிணம் எரித்தும், சொல்லொண்ணா வன்கொடுமைகளுக்கு ஆட்பட்டுக் கிடந்த எனது சாக்கிய மக்கள் - கலியர்கள் - பகவான் புத்தனை ஈன்றெடுத்த சாக்கிய வலிமுகவாகு வம்சத்தினராம் அருந்ததியர்கள், ஆதித்தமிழர்கள், மஹாதிகர்கள், ஜாம்பவான்கள், மஹாசங்கிகள், கோசங்கிகள், பரம்பர்கள் எனும் பகவான் தனை ஈற்றுவான் புகழ் கொண்ட தொப்புழ்கொடி உறவுக் காரர்களாம் எனது மக்கள்,

புத்தமே வெல்க என்றும்
தர்மமே வெல்க என்றும்
சங்கமே வெல்க என்றும்

அறிவுடைமையையும், அறத்தினையும், அன் புடைமையையும் முன்னெடுத்து எழுகிறார்கள். பகவானின் திருவெழுச்சி, திருப்பள்ளி எழுச்சியினால் இனி மீண்டும் அசோக தர்மராஜனின் தர்மராஜ் ஜியத்தை நிலைநாட்டும் பெரும்பாக்கியம் எமக்கு நேர்ந்திருக்கிறது. பெருமான் எனது தெய்வ சக்தி மிகுந்து எவ்வளவு விலக்கப்பட்டும் நாங்கள் நொறுக்கப் பட்டும் கூட அவனை மட்டும் மறந்திருக்க போதி வாரு, மங்கவாரு, ஜானவாரு, புட்டகலுவாறு, பகடுத்திலு வாரு, செட்டிசெலவாரு என்ற அய்யனின் திருநாமங்களையே கொண்டு விளங்கும் எனது கோடானு கோடி குலமக்களுக்கு எமது அய்யன் தரும் பரிசு இது. பக்தியினால் எய்தும் மேன்மைகள் கோடி யன்றோ?

ஆணிடமிருந்து பெண்களுக்கான உரிமைகளை மீட்டெடுப்பதும் பார்ப்பன பணியா பறாரிகளிட மிருந்து சிராமண, மஹாதிக தத்துவ மரபுகளை மீட்டெடுப்பதும், பணக்கார பூர்ஜவாக்களிடமிருந்து உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளை மீட்டெடுப்பதும் என்பதாக சுவர்க்க மீட்பு (Paradise Regained) செய்வதற்காக பகவான் எழுகிறார். எமது சாக்கிய குலத்து செல்வங்கள் அறியாமை எனும் மலம் நீங்கி எழுகிறார்கள். மீட்டெழும் எமது கௌதமன் உலக துறப்பவனாக இல்லாமல் (World Disclaimer) உலகை கைக்கொள்பவனாக (World Reclaimer) எழுகிறார். தர்ம ராஜ்ஜியத்தை நிறுவுவதே இனி நோக்கம். எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும். அவரவர் தகுதிக்கும், திறமைக்கும் விருப்புக்கும், ஏற்ப தொழிலும் கலையும் செய்து அன்பும் காதலும் நட்பும் கொண்டு பொன்னு லக வாழ்வின்பம் இவ்வுலகிலேயே அனுபவிப்பதே நமது இலட்சியம். 'காரல் மார்க்ஸ்' எனும் போதி சத்துவன் பெறுவதற்கோர் பொன்னுலம் உண்டென் றான். அதை தருவதற்கே எழுகின்றான் கௌதம புத்தன் எனும் தர்மதேவன்.

புத்திதெய்வமே உனக்கு நல்வரவு

தர்மராஜனே உனக்கு நல்வரவு

சங்கமித்ரனே உனக்கு நல்வரவு

ஜெகத்குருவே, மஹாவிஷ்ணுவே ஸ்ரீபுத்தா

தேவ தேவனே உனது வரவு மங்களமுடையது

வசந்த காலத்தை பரிசளிப்பவன் நீ

நீயே வசந்த காலத்தில் முதன்முதலாய் பூத்தமலர்

முட்களிடையேயும், நீயே மலர்ந்து

மணம் வீசுகின்றாய்

மலர்களின் இனிய தேனமுதமாக

நீயே இருக்கின்றாய்

உனது பாதையில் மங்கலங்கள் சேருகின்றன

ஐயனே வருக! எழுக இனிய எங்கும்

நிலைக்கவே! இருள் தீர்க்க!

ஒளி எங்கும் ஓங்குக!

என்று மீண்டெழும் எனது சாக்கிய

பெருமக்கள் பாடுகிறார்கள்



படிப்பகம்

www.padippakam.com

# மாநாட்டு நிகழ்வுத் தொகுப்பு

■ குடியரசன்

கேட்கப்படாத ஓசையை பதிவு செய்து
பரவலாக்கும் போராட்டத்தை சிவகாமி
அம்மா தலைமை ஏற்றுள்ளார்.
எங்க குரல் இங்க கேட்குதுன்னா
அதுக்கு புதிய கோடாங்கிதான் காரணம்.
அவங்க கூட நின்று வலிமை சேர்க்கிறதுக்கு
எனக்கு மனது நிறைவா இருக்கிறது.
- நீலாசின் / தோடர்

மாநாட்டில் ஓங்கி முழங்கிய குரல்களில் இதுவும் ஒன்று. நீலாசின் அழகான சப்தத்துடன் பாடல் பாடினார். மொழி அந்நியமாய் இருந்தாலும் உறவு நெருங்கியது போல இருந்தது. தேன் என்றார், சிறிய பூ என்றார், அரிதான கனி என்றார். இவையெல்லாம் புதிய கோடாங்கி மாநாட்டின் முதல் காரணமான சிவகாமி அவர்களை நோக்கி சோழியாய், அருங்காய் களாய், கூழாங்கற்களாய் உருட்டப்பட்ட வார்த்தைகள்.

நாங்க எல்லாம் எப்படி உங்களுக்கு அரிய மலைவாழ் குடிகளாய் இருக்கிறோமோ, அப்படித் தான் நீங்களும் எங்களுக்கு. மலைவாழ் மக்களிலே இத்தனை பிரிவு இருக்கிறதை தெரிந்துகொண்டேன். அதுக்கு அவுங்களுக்கு நன்றி.

நாங்க கூட்டமாகவே வாழ்வோம். நாங்கள் அணியும் ஆடைகளை நாங்களே தயாரிக்கிறோம். பொதுவாகவே எங்கள் நிலப்பகுதி மலையாக இருப் பதால் குளிரும் அமைதியும் நிறைந்த சூழலில் நாங்கள் வாழ்கிறோம். நாங்கள் எங்கள் உடம்புகளில் வெண் ணெய் தேய்த்து பாதுகாக்கிறோம்.

மந்து அல்லது மந்தை என்ற வகைக் கூட்டமாக வாழ்கிறோம். மந்துதான் எங்கள் இடத்தைக் குறிக்கும் சொல். அம்மா எடுத்த முயற்சியால் எங்களின் கை வினைப் பொருட்களை நகர மக்களின் விற்பனைக்கு கொண்டு சென்றுள்ளோம். Reserved Forest மற்ற எல்லா நிலத்தையும் அரசாங்கத்தில் புறம்போக்கு நிலம் என்கிறார்கள். ஆனால் அது எங்கள் நிலம். இந்த இரண்டாவது மாநில மாநாட்டில் புதிய கோடாங்கி மாநாட்டில் நாங்கள் நிறைய காரியம் பேசுகிறோம்.

Tribals-ம் மனிதர்கள்தான். அதை சிவகாமி IAS போன்ற மிகச் சிலர்தான் சரியாக புரிந்துகொண்டு செயல்படுகின்றனர். அவர்கள் போல மாவட்டத்திற்கு ஒருவர் வேண்டும். அம்மாவின் இந்த புதிய கோடாங்கி மாநாட்டு முயற்சி மிகப்பெரிய சாதனை. நீங்கள்தான் உண்மையான மண்ணின் மைந்தர்.

உங்களின் கடும் உழைப்பில் பாலைவனம் கூட நந்தவனமாக மாறிவிடும். இந்த உழைப்பில் நாங்களும் கலந்துகொண்டதற்கு ரொம்ப பெருமைப்படுகிறோம். தோடர் நீலாசின் அவர்களின் பேச்சிற்குப் பிறகு அரங்கின் ஆரவாரம் வெகுவாக இருந்தது. நீலாசின் தன்னுடைய அழகான குரலில் கம்பீரமாகப் பாடினார். சொட்டுத் தேன் போல, பட்டுப் பூப் போல அரிதான வர். அன்பானவர். தேவையானவர் நமது புதிய கோடாங் கியை வழிநடத்தும் சிவகாமி அம்மா. அவர்களையும், இந்த நாட்டினையும் நெஞ்சார பெருமையுடன் வாழ்த்தி விடை பெறுகிறேன் என்றார்.

பேராசிரியர் கல்யாணி பேசுகையில், ரெட்டிகள் தங்களை கொண்டா ரெட்டி என்று போலிச் சான் றிதழ்கள் வாங்கி உண்மையான 'கொண்டா ரெட்டி' வகை Tribals-இன் அரசாங்க பலன்களை திருட்டுத் தனமாக அனுபவிக்கின்றனர். இதைப் போலவே நாயுடு மற்றும் நாயக்கர்கள் காட்டு நாயக்கர்கள் என்ற மலை வாழ் மக்களின் பேரில் போலிச் சான்றிதழ் பெற்று உண்மையான மலைவாழ் மக்களுக்குப் போய்ச்சேர வேண்டிய நன்மையை நயவஞ்சகமாகப் பறிக்கின்றனர். இதை உயர்நீதி மன்றம் வரை கொண்டுசெல்ல மலை வாழ் மக்களிடம் பணம், செல்வாக்கு போன்ற ஏதும் இல்லை. இதற்காக நாங்கள் தொடர்ந்து போராடு கிறோம். சிவகாமி அம்மா மிகவும் முயற்சி எடுத்து அரசாங்கத்தின் அதிகாரத்தை எளிய மக்களின் கைகளுக்கு கொண்டுவந்து சேர்த்துள்ளார். அவர் ஆதிதிராவிடச் செயலாளராக இருந்தபோது பலதரப்பு மலைவாழ் மக்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்க பெரும் முயற்சி எடுத்தார். இருளர்கள் மோசமாக புறக்கணிக் கப்பட்டபோது இவர்தான் சட்டத்தின் பாதுகாப்பை எளிய மக்களின் தேவைக்கு உறுதிப்படுத்தினார். சென்ற மாநாட்டின்போது இரண்டாம் நாள் காலை யில் சிறப்புக் கூட்டம் இருளர் சாதி சான்றிதழ் வழங்க மாவட்ட வருவாய் துறையினரை உள்ளடக்கிய கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து மக்களுக்கு நீதி வழங்கினார். இவர்போல மற்ற அதிகாரிகளும் செயல் பட்டால் நாட்டில் தாழ்த்தப்பட்டவர், மழைவாழ் மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்றார்.

ஜேக்கப் பெல்லி பேசும்போது, மலைவாழ் மக்களின் பாடல்கள், கலை, பண்பாடு பற்றி விரிவாகக் குறிப்பிட்டார்.

லீலாவதி பேசுகையில்,

எங்களின் மீது ஒவ்வொருத்தரின் மீதும் தனித்தனியே 100 வழக்காடுகள் உள்ளன.


படிப்பகம்

www.padippakam.com

வளத்தையும், நிலத்தையும் எங்கள் ஆதிவாசி களால்தான் பாதுகாக்க இயலும். இதை எதிர்க்க யார் முயன்றாலும் அதை சந்திக்க நாங்கள் தயாராக உள்ளோம்.

இந்த நிலம் எங்களுக்குத்தான் சொந்தம். எங்கள் பாட்டன் பூட்டன் வாழ்ந்த நிலம் இது. இதை நாங்கள் யாருக்கும் விட்டுத்தர மாட்டோம் என்ற கருத்தை மையப்படுத்தி பேசினார். இவரின் முழுமையான கட்டுரை சென்ற இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

அடுத்ததாக அருட்தந்தை பேசுகையில் இருபது ஆண்டுகளாக நாங்கள் பழங்குடியினருக்காக போராடி வருகிறோம். சிறு வன மகசூல் சேகரிப்பு உரிமம் பழங்குடியினருக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும். இந்த நிலம் ஆதிவாசிகளின் பாரம்பரிய உரிமை. இந்த உரிமை இந்திய அதிகாரத்திற்கு முன்பேயான உரிமை. வனங்களைப் பாதுகாப்பதில் / வளப்படுத்துவதில் ஆதிவாசிகளை அரசு ஈடுபடுத்த வேண்டும். மண்ணுக்குப் பட்டா கிடையாது. மரங்களை வெட்டமுடியாது. ஆனால் அவை விளைவிக்கும் பயன்களை மக்கள் எடுத்துக் கொள்ளலாம். இதற்குப் பெயர் ஊசிப்பட்டா என்று பெயர். அரசானது மலைவாழ் மக்களுக்கு வேலை வாய்ப்பு, நீர் ஆதாரங்களை வலுப்படுத்த வேண்டும். வனத்துறை, கடத்தல்காரன், வியாபாரிகள் இம்மூவரும் பழங்குடியினரின் பூர்வீக உரிமையில் அநீதியாய் செயல்பட்டு அம்மக்களை ஏமாற்றுகின்றனர். மேடம் போன்றவர்கள் முயற்சியால் இது தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. மேலும் மேடம் அவர்கள் மலை வாழ் மக்களின் வாழ்வியல் முன்னேற்றத்தை, பண்பாட்டை தொடர்ந்து பாதுகாக் கும் முயற்சி மிகவும் பாராட்டுக்குரியது.

தலித் ஆதரவாளர் அரங்கின் ஒருங்கிணைப்பாளரான திரு. நிகழ் அய்க்கண் பேசுகையில்,

தமிழகத்தில் தலித் அல்லாத பிற அமைப்புகளில் சிலர் மட்டுமே தலித்துகள் மீது நடத்தப்படும் வன்கொடுமையை எதிர்த்து தங்களது பங்கை நிகழ்த்து கிறார்கள். குறிப்பாக பேரா. கல்யாணி தலித்துகளின் அடிப்படை வசதி, கல்வி, முன்னேற்றம் பற்றி அதிகமாக உழைக்கின்றார். இருளர்கள் மீது நிகழ்த்தப்படும் அனைத்துவகையான ஒடுக்கு முறைக்கும் எதிராக குரல் தருகிறார். பேரா. பஞ்சாங்கம் தலித் மக்கள் அதிகாரம் பெறுவதற்கான தளத்தை உருவாக்குவதில் தலித் ஆதரவாளர் என்ற முறையில் மிகப்பெரிய பங்காற்று கிறார். ஜே. சங்கர் கல்விப்பணியில் தலித்துகளுக்காக கூடுதலாக உழைக்கிறார். இவர் ஒரு தலித்.

சமூக உறவுகளில் தலித்துகளுக்கும் சாதி இந்துக் களுக்கும் கலந்து உறவாடும் தளங்களைப் பற்றி - கல்வி, போக்குவரத்து, சுடுகாடு பயன்படுத்துவதில் தலித் அல்லாதவர்கள் காட்டும் தலித் எதிர்ப்புணர்வு மிகவும் தொடர்ந்து வருகிறது.

நிலம், கடன், வேலைவாய்ப்பில் தலித் மக்களின் மீது பாரபட்சம் நிகழ்த்தப்படுகிறது. வன்கொடுமை, தாக்குதல், வேலைவாய்ப்பு பற்றிய அச்சம் தலித்துகள் மீது நிகழ்த்தப்படுகிறது. எல்லோருக்கும் பொதுவான உரிமை, வாய்ப்பு என்ற நிலை இதுவரையிலும் தோற்றுவிக்கப்படவில்லை. கம்யூனிஸ்டுகள் வர்க்கப் போராட்டத்தில் கவனம் செலுத்தினர். பொருளாதாரம் சமப்பட்டால் சாதி - இந்துத்துவ முறைமை தகர்க்கப்படும் என்று கம்யூனிஸ்டுகள் நம்பினர். சூத்திரர்கள் தலித்துகளின் போராட்டத்தில் சேர்ந்து கொள்ள விரும்புவதில்லை.

பகுத்தறிவு கருத்துகளை சாதி இந்துக்களிடம் தொடர்ந்து போதிப்பதால் மட்டுமே சாதி இந்துக்களிடம் மாற்றம் ஏற்பட்டுவிடாது. மேலும் சாதி இந்துக் களின் மீது ஏற்படுத்தப்படும் நிர்பந்தமே சாதி இந்துக்களின் நிலையில் மாறுபாடு ஏற்படுத்த இயலும். சாதி - தீண்டாமை இருப்பதற்கு சாதி இந்துக்கள் முழு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. சில தலித் ஆதரவாளர்களின் முற்போக்கு நமக்கு நம்பிக்கை அளிக்கிறது. தலித்துகளின் தனி ஊராட்சி என்ற எழுத்தாளர் சிவகாமி அவர்களின் படைப்பு தலித்துகளின் விடுதலையை உறுதி செய்யும் மாபெரும் கருத்துள்ள செயல்பாடு.

அடுத்ததாக, க. பஞ்சாங்கம் அவர்கள் பேசும் போது மனிதம் என்கின்ற சுதந்திரமான வாழ்விற்கு பெரிய சவால்கள் ஏற்பட்டுக் கொண்டுள்ளன. பொருளாதாரம் ஒரே இடத்தில் குவியமாக குவிக்கப்பட்டுள்ளபோது மனிதர்களின் வாழ்க்கையில் ஒரு பேரிடர் தோன்றியுள்ளது. தலித்தியங்கள் இடையே உள்ள உட்கூறுகள், உட்சாதி விமர்சனம் (புதிய கோடாங்கி ஜனவரி இதழ்), காவனூர் போன்ற நிலை, தலித்தியம் ஒன்றுகட்டப்பட்ட பிறகு நடந்தேறியுள்ளது வேதனையானது. உட்சாதி கூறிலேயே ஒரு சாதி ஆதிக்க சாதியாக மாறியுள்ளது மிகவும் வருந்தத்தக்கது. எனவே சமூகத்தில் அருந்ததியர் போன்றவர்களின் விழிப்புணர்வு, தேவை உருவாக்கப்படுகிறது என்றால், அங்கு அடக்குமுறை அதிகரித்துள்ளது என்பது பொருள். எனவே தலித்துகள் ஒருங்கிணைவது மிகவும் அவசியமாகிறது. இதற்கான பணியினை புதிய கோடாங்கி மிகவும் பொலிவுடன் செய்கிறது. தலித் கலை இலக்கிய வளர்ச்சி என்ற கட்டுரைஎ்ய நான் பின்னர் வாசிக்க இருக்கிறேன். கலை, பண்பாட்டுத் துறை, அரசியல் போன்றவற்றின் தலித் ஆதரவாளரின் செயல்பாட்டால் இயக்கிற என்ன பயன்? இயக்கம் அவர்களால் வளருமா? என்பதை கவனிக்கப்பட வேண்டிய சக்தியாக உள்ளது. மாவோவின் ஐக்கிய முன்னணியைப் போல, தலித் ஆதரவாளர்களின் பங்கு தலித் விடுதலைக்கு உதவும் என நான் திடமாக நம்புகிறேன். தலித் ஆதரவாளர்களை ஐயப்படுவது, தலித் இயக்க வளர்ச்சியை மட்டுப்படுத்தும். எனவே தலித் ஆதரவாளர் தலித்துகளை விட கூடுதல் உணர்வு கொண்டு இருப்பதற்கு, நமது பேரா. கல்யாணி போல இருப்பதற்கு மிகுந்த வாய்ப்பு உண்டு. அதே நேரத்தில் தலித் ஆதரவாளர்கள் நன்கு அலசி ஆராய்ந்துதான் நீங்கள் உங்களின் பக்க பலமாக எடுத்துக்கொள்ள வேண்டும். தலித் ஆதரவு சக்திகள் பக்கபலமாக இருக்க வேண்டுமே தவிர, தலைமை தாங்க முற்படக் கூடாது. அப்படிச் செயல்பட்டால், அது தலித் இயக்கத்திற்கு செய்யப்படும் பெரும் துரோகமாக அமையும்.



படிப்பகம்

www.padippakam.com

பாபா கல்விமணி பேசும்போது,

திமுக, அதிமுக-வில் உள்ள தலித்துகளுக்கு பிரச்சினை வந்தால் அதை முன்னெடுக்க புதிய தமிழகம், விடுதலைச் சிறுத்தைகள்தான் முன்வருகின்றன. தேர்தல் வேலை செய்ய மட்டும்தான் திமுக, அதிமுக தலித்துகளை பயன்படுத்திக் கொள்கின்றன. பிரச்சினை என்றால் அக்கட்சிகள் அமைதி காக்கின்றன. தலித்துகள் பிரச்சினை என்பது சமூகத்தின் பிரச்சினை. இவர்களின் பிரச்சினை தீராமல் சமூகப் பிரச்சினைகள் தீராது. உதிராம்பட்டியில் உள்ள இரண்டு பள்ளர்களை மேல்சாதியினர் கட்டிவைத்து அடித்தே அதில் ஒருவரை கொன்றுள்ளனர். பொதுவாக இருளர்களைத்தான் இதுபோல சாதி இந்துக்கள் செய்வார்கள். ஆனால் திருச்சிக்கு அருகாமையில், தலித்துகளுக்கு நடந்துள்ள இந்த வன்கொடுமை மிகவும் கொடுமையானது. வன்கொடுமைக்கு எதிராக எந்த இயக்கம் குரல் தருகிறதோ, அது மட்டுமே மக்கள் இடையில் எடுபடும்.

லீலாவதி போன்றோர்களை விசாரிக்கும்போது, மனித ரீதியான தாக்குதல் தற்போது குறைந்து வருகிறது என்பது நம்பிக்கை தருகிறது. சண்முகையா பாண்டியன் ஒரு பெரிய மாநாட்டை ராமநாதபுரத்திலும், கொங்குவேளாளர், ஜகத்ரட்சகனின் வீரவன்னியர் பேரவை ஆகியன SC/ST - PCR சட்டங்ளை எடுத்து விடவேண்டும் என குரல் தருகின்றனர். இந்த நேரத்தில் தலித் ஆதரவாளர்களின் கூடமை மேலோங்குகிறது. நான் சாதி இந்துக்களிடமும் இந்த கருத்துக்களை சொல்லிக் கொண்டுதான் இருக்கிறேன். வன் கொடுமை சட்டத்தைப் பயன்படுத்திராது அரசு அதிகாரிகள் தான். தாழ்த்தப்பட்ட மக்கள் புகார் தான் தர இயலும். எனவே தவறாகப் பயன்படுத்துவதெனில்,

1. போலீஸ், 2. நிர்வாகத்துறை, 3. நீதித்துறை மட்டும். எனவே கூட்டத்தை தவறாகப் பயன்படுத்துவது என்பதற்கான வாய்ப்பே இல்லை. புகார் பொய் எனில், சம்மந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வாய்ப்பு உள்ளது. இந்திய தண்டனைச் சட்டம் தவறாகப் பயன்படுத்துவதில், அதை நீக்கிவிட வேண்டும் என்று யாராவது செவிசாய்ப்பாங்களா? தலித்துகளின் பாதுகாப்பு என்றால் சாதி இந்துக் களுக்கு அவ்வளவு சாதாரணமாய்ப் போய்விட்டது.

தலித்துகளிடம் ஓட்டுக் கேட்கவாவது சாதி இந்துக்கள் அவர்களை மதித்து நடத்துகின்றனர். ஆனால் இந்த அதிகாரிகள் அப்படி இல்லை. IAS, IPS படித்த கவுண்டர், தேவர் அதிகாரிகளில் சிலர் கவுண்டராக, தேவராகத்தான்உள்ளனர். இதையும் நாம் கவனித்துக் கொண்டு போராட்டம் நடத்த வேண்டியுள்ளது. புதிய கோடாங்கி தன்னுடைய அடுத்த மாநாட்டில் 1. குடுகுடுப்பைக்காரர்கள், 2. நாவிதர்களையும் இணைத்துக் கொண்டு போராடவேண்டும். அதில் நான் இதே உரிமையோடு கலந்துகொள்வேன்.

டாக்டர் ஜெயராமன் பேசும்போது,

நம்முடைய விடுதலை என்பது எங்கிருந்து பெறுவது? எங்கிருந்து தொடங்குவது? தலித் பெண்கள் மானம் மறைக்க உடை உடுத்தக்கூட நாம் போராட வேண்டியுள்ளது. அதற்கு தலித் அல்லாதவர்கள் இந்த மக்களை நேசித்தவர்கள்தான். மிஷனரிகள் இல்லை என்றால் தலித்துகளின் கல்வி வளர்ச்சி என்பது இவ்வளவு இருந்திருக்காது. தலித் மக்களின் மேம்பாட்டிற்காக நமது கல்யாணி சார் போராடுவதைப் பார்க்கும்போது நமக்கு மிகுந்த நம்பிக்கை வருகிறது. தலித் சமூகம் தலித் அல்லாதவர்களிடம் பல காலம் விசுவாசமாக இருந்து வருகிறது. இம்மக்களிடம் ஆதரவாக, உறவாக தலித் ஆதரவாளர்கள் இப்பொழுது முன்வருகின்றன. இவர்களின் பங்கையும் சேர்த்துத் தான் தலித்துகளின் ஒன்றுபட்ட விடுதலை சாத்தியமாகும்.

பேரா. அந்தோனி குருசு, மேலை நாடுகளில் சில நாடுகளில் ஆளும் வர்க்கமும் ஒடுக்கப்படுபவர்களும் கிறித்தவர்களாக இருந்தபோது, அங்கு தோற்றுவிக்கப் பட்ட இறையியல்தான் விடுதலை இறையியல். இந்த விடுதலை இறையியல் இந்து சமூக முறையின் வன் கொடுமையினை எதிர்க்கும் இறையியலாக முன் னெடுக்கப்படுகிறது. தலித் விடுதலை இறையியல் என்பது இன்று எல்லா மட்டங்களிலும் பேசப்படுகின்றது. சாதி இந்து கிறித்தவர்களுக்கு, தலித் கிருத்தவர்களுக்கு என்று தனித் தனி கல்லறைகள் இங்கு இருப்பது விடுதலை இறையியலை மட்டுப்படுத்தும் செயல்.

பேரா. லெனின், மதம் மாறியவர்களின் சமூக நிலை என்ற தலைப்பில் பேசினார். மதம் மாறிய தலித்துகள், கிருத்துவம் விடுதலை தரும் என்று நம்பினர். சாதிய கட்டமைப்பை உள்ளடக்கிய இந்து மதம் தலித்துகளை ஒடுக்குகிறது. இதை புறக்கணித்து சமத்துவம் கோரி மதம் மாறிய தலித்துகளை கிருத்துவம் முழுமையான சகோதரத் துடன் அங்கீகரிக்கின்றதா? என்றால் இல்லை. இந்து மதத்தின் கொடுமைகளை அடிப்படையில் நிராகரிக் கின்ற மதமாக கிருத்துவம் உள்ளது போல, இந்த மண்ணில் கிருத்துவம் வேர்பிடிக்கும் போது, இந்து மதத்தின் சாரத்தை உள்வாங்கியுள்ளது என்பது இன்றைய நடைமுறையில் உள்ளது. உன்னைப் போல உன் அயலானை நேசி என்று பைபிளில் உள்ளது. இதைப் படித்ததாக எந்த சாதி கிருத்துவனின் நடவடிக்கையும் இல்லை.

கிருத்துவ வழிபாடு நடத்தும் குருமார்கள் முகம் பார்க்கிற வணங்கும் உரிமை சாதி கிருத்துவர்களுக்கு மட்டுமே உள்ளது. பெரும்பாலான கிருத்துவ ஆலயங்களில், ஆலயங்களுக்குள் சுவர் கட்டினார்கள். கல்லறை இடையில் சாதி கிருத்துவர்கள், தலித் கிருத்துவர்கள் என்ற பிரிவை உறுதி செய்யும் வகையில் சுவர்கள் கட்டப்பட்டன. தலித்துகளுக்கு பிஷப் பதவி வழங்கப் பட வேண்டும் என்ற போராட்டம் வளர்ச்சியடைந்த பிறகுதான் மதம் பரப்பிய சாமியார்களுக்கே விடுதலை. நான் பணியாற்றும் லயோலா கல்லூரி முற்போக்கான விடுதலைத் தத்துவத்தை நடைமுறையில் கொண்டுள்ளது. சேசு சபைகள் முற்போக்கான பணி, பல நலன்களை தலித் கிருத்துவர்களுக்கு வழங்கியுள்ளது. கிருத்துவர்களின் இடஒதுக்கீட்டில் தலித் கிருத்துவர்



படிப்பகம்

www.padippakam.com

களுக்கான இடஒதுக்கீட்டை நாம் தனித்துப் பெற வேண்டும். CSI & RC என்ற இரண்டு வகை கிருத்துவ அமைப்புகள் இந்தியாவில் உள்ளன. CSI முழுவதும் நாடார்களிடம் உள்ளது. தென்னிந்தியாவில் தலித்துகள் கிருத்துவர்கள் சபையின் சொத்தை நுகர இயலுவதில்லை. இதை நாம் கவனத்தில்கொண்டு மதம் மாறிய தலித்துகளின் நிலையை ஆய்வு செய்து, செயல்வடிவம் தரவேண்டும்.

**மதமாற்றம் சாதி ஒழிப்பிற்கு தீர்வாகுமா?**

X.D. ஜெயராஜ் பேசுகையில், தான் ஒரு கிருத்துவன் என்றும் 'சாதி' என்பதைப்பற்றி தன்னுடைய முன்னோர்கள், ஆலயத்தவர்கள் ஏதும் கூறிடவில்லை. கிருத்துவ ஆலயங்களில் தரப்படும் திராட்சை ரசமும் அப்பமும் கிருத்துவர்கள், தலித் கிருத்தவர்கள் என்று பேதப்படுத்தி வழங்குவதைக் கண்டபோது நான் மிகவும் வேதனைப்பட்டேன். தேவாலயங்களில் பறை இசைக்கப்படுவதை தேவாலய நிர்வாகிகள் எதிர்த்தனர். இங்கு சாதி கிருத்துவர்கள், தலித் கிருத்துவர்கள் என்று இரண்டு வகைக் கல்லறைகள் உள்ளன. திருவிருந்து போன்ற ஆலய நிகழ்வுகளில் மூடப்பழக்க வழக்கங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன. கிருத்துவ மதம் தலித்துகளை மேலை நாட்டவராக மதம் மாற்றியுள்ளவை. மற்றபடி சாதியை ஒழித்திடவில்லை. மதம் மாறிய கிருத்துவன் தன்னை தலித் என்று உணராத வகையில் நிலைமை உள்ளது. நிறுவனங்கள் பிராமண கட்டமைப்பை அப்படியே பின்பற்றி வருகின்றது. இந்நிலை மாற வேண்டும்.

வடிவேல் ராவணன் பேசும்போது, புதிய கோடாங்கி என்ற இதழையே ஓர் இயக்கமாக மாற்றி போராடி வருகின்ற பாசமிகு சகோதரி சிவகாமி அம்மையார் பாராட்டுக்குரியவர். நம் மக்கள் தீபாவளி கொண்டாடுவதில்லை. இவர்கள் எந்த மதத்தையும் கொண்டாடுவதில்லை. அவர்கள்தான் தலித்துகள். எனவே தலித்துகள் மதங்களை புறக்கணித்தவர்கள். மதமற்றவர்கள். இந்து புராணங்கள் சாதி அமைப்பை நியாயப்படுத்தும் புனித நூலாக உள்ளன. புருச சுக்தம் முதல் மனுஸ்மிருதி வரையில் சாதி-வர்ணம் போன்றவற்றை eternal, inevitaible என்று நியாயப்படுத்துகின்றன. மாக்ஸ் முல்லர் இந்தியாவிற்கு வராமலேயே, இந்து மத புராணங்களை தொகுத்து, இந்துக்களுக்கு கூடுதல் தளம் விரித்துள்ளார். பூணூல் போடுதலை சிறப்பாகச் சொல்லி மக்களை இந்துத்துவ மாயையில் பிராமணர்கள் இன்று ஆக்கி வைத்துள்ளனர்.

திரு. கிருத்துதாசு காந்தி IAS பேசும்போது,

தலித் என்றால் என்ன? பட்டியலினத்தவர்கள் யார்? பழங்குடியினர் என்றால் யார், என்ன என்ற தெளிவு இல்லாமல் நான் ஒரு கருத்து கொண்டிருந்தால் அது அறியாமையே. அரவாணிகள் சமூகத்தின் தங்களை healthy participants ஆக வாழ விரும்புவதில்லை. இதை நாம் புரிந்து கொள்ளாதவரை, நாம் அவர்கள் நோயாளிகளாக main stream தலித்தவர்களாகவே பிரிக்கும் பிழையை செய்கிறோம். அவர்களிடமிருந்து விவரங்கள் புதியகோடாங்கி, தலித் முரசு போன்ற மீடியாக்கள் வெளிவரும்போது உண்மை வெளிப்படுகிறது.

(திருமதி சிவமாமி IAS, திரு சந்ரு,
திரு சன்னா அவர்களின்
உரைகள் அடுத்த இதழில்)

## தொடரும் திருட்டு

■ ப. வில்லியம் அந்தோனி

நீண்ட நாட்களாக கன்னமிடப்பட்ட
எல்லோரும் விழித்திருக்கும் நேரம்
எதுகுறித்த கவலையுமின்றி
கலைநயத்துடன் கட்டியங்கூறப்பட்டதும்
தேர்ந்த வல்லுனர்களால்
நேர்த்தியாக திட்டமிடப்பட்டதுமான
மூகம் மூடாத கொள்ளை
அனைவர் முன்னிலையிலும்
ஆர்ப்பாட்டமாய் அரங்கேறும்
இன்னமும் நீளக்கூடுமென்ற ஆயாசம் பொய்த்து
எல்லாக் கெட்டவர்களும்
நல்லவர்களாகி
எல்லாப் புதிர்களையும் விடுவித்து
இரண்டே நாட்களில் சுபமாகிப்போன
முன்னது எடுத்துச்சென்றதோ ஏராளம்
கிளைக்கதையாய்ப் பிரியும்
வக்கிரக் காதலுடன்
குதர்க்கம் பேசித்திரியும்
கலகலப்பான பாத்திரங்களுடன்
கபடும் சூதும் காட்சிகளாய் விரிய
கலாச்சாரங்கெட்ட
விளம்பரங்களுக்கிடையே
இழுத்துக்கட்டப்பட்ட புதிய மகா தொடர்
அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு
எடுத்துச் செல்லவிருப்பது
எதை எதையோ..?

●


படிப்பகம்

www.padippakam.com

மாநாட்டுக் கட்டுரை

■ அ. அந்தோனிகுருசு

# தலித்துகளும் விடுதலை இறையியலும்

### எழுபதுகளில் கருவாகி உருவாகி...

கடவுளையே மையப்படுத்தி சுழன்று வந்த மெய்யியல், மனிதனையே மையப்படுத்தி இயங்கத் தொடங்கியதன் மையப்புள்ளியே விடுதலை இறையியல். தென் அமெரிக்க நாட்டில் 20-ஆம் நூற்றாண்டில் விடுதலை இறையியல் முகிழ்த்தது. அப்போது "ஒடுக்கு வோர்கள் ஒடுக்கப்படுவோர்கள் இருசாராருமே கிறித்தவர்களாகவே இருந்தனர்." (பெலிக்ஸ் வில்பிரட், Beyond Setted Foundations, P. 216) விடுதலை இறையியலின் வேதநூல் எனப்படுகிற குஸ்தாவோ குத்தியேரசு எழுதிய 'விடுதலை இறையியல்' நூல் 1971-இல் வெளிவந்தது. அவரைத் தொடர்ந்து இறையியல் உலகில் புரட்சிகர அலைவீச்சை லியனார்த்தோ பாஃப், ஹூகோ ஆஸ்மன், ஜே.எஸ். செகுந்தோ, எர்னஸ்டோ கார்தெனால் போன்றோர் ஏற்படுத்தினர்.

### மார்க்சிய உரைகல்லில் உரசிப்பார்த்து...

விண்ணுலகு x மண்ணுலகு என்று பிளவுபட்ட இறையியல் உலகுபற்றிப் பேசிவந்த கண்ணோட்டத்தின் அடித்தளத்தையே அடியோடு மாற்ற விடுதலை இறையியல் காரணமாகிறது. மண்ணிலேயே சுவர்கத்தை உருவாக்க முடியும். "உலகின் இன்றைய தேவை உலகம் எப்படிப்பட்டது என்று விளக்குவதல்ல! வேரோட்டமாக அதனை எவ்வாறு மாற்றி அமைப்பது என்பது தான் இன்றைய பிரச்சினை!" என்றெல்லாம் குறிப்பிட்ட காரல்மார்க்சின் மார்க்சியத்தின் உரைகல்லில் திருவிவிலியத்தையும், அடக்குமுறை அரசியல் அதிகார ஆட்சி நிலவும் நாடுகளில் வாழும் மக்கள் எதார்த்தங்களையும் உரசிப்பார்த்தால் ஆக்கம் பெற்றதே விடுதலை இறையியல்.

### இறையியலின் இயங்கியல் புதிதாய்...

இறையியல் என்பதன் மரபுரீதி வரையறைகளைத் தகர்த்துவிட்டு புதிய வரைவிலக்கணத் தேடலுக்கான அறைகூவலை அது விடுத்தது. "இறையியல் வாழ்வுப் பிரச்சினைகளில் ஈடுபடவேண்டும். அவற்றுக்குச் செயலளவில் விடைதேட வேண்டும். இறையியல் என்பது செயல்நோக்கு அறிவியல். சமூக, பொருளாதார, அரசியல் ஆய்வுகளின் துணையின்றி இறையியல் மக்களின் வாழ்வுக்கு நடைமுறையில் வழிகாட்ட இயலாது" என்று இறையியலின் இயங்குமுறை புது விளக்கம் பெற்றது. (தே. அல்போன்ஸ், 'இறையியல்... அது எதற்கு?' மறை அருவி வெள்ளம் 10 அலை 2, 1986, ப.51)

பாரம்பரியக் கடவுள் மைய இறையியல் மனிதன், உலகம், பெண், உலகியல் வாழ்க்கை முதலியவற்றைப் புறக்கணித்தது. அது கடும் விமர்சனத்துக்கு இலக்காகியது. 'சேரிப்புறங்களைச் சேராத இறையியல்' என்று அது அடையாளப்படுத்தப்பட்டது. "சமூகத்தில் வசதியாக வாழ்பவர்கள் செய்யும் இறையியலில் ஏழைகளின் இறையனுபவம் பொதுவாக எதிரொலிக்கப் பெறுவதில்லை. ஈராயிரம் ஆண்டுகளாகக் கிறித்துவத்தில் இறையியல் செய்தோர் பெரும்பாலும் ஆண்களே. இதனால் கிறித்துவ இறையியலில் பெண்களின் இறையனுபவமும் இதயக் குரல்களும் இடம்பெறுவதில்லை" (மேலது, ப. 47) இன்று அதன் குறை சுட்டப்பட்டது.

### இறந்துபோன இறையியல்கள் உள்ளுக்குள்...

"சமூகத்தில் எத்தனையோ பொய்மைகள், போலித்தனங்கள், மனிதத் தன்மையைக் குலைக்கும் மதிப்பீடுகள், சமத்துவத்திற்கும் சகோதரத்துவத்துக்கும் எதிரான அமைப்புகள் இவற்றையெல்லாம் இறையியல் இடித்துக் காட்ட வேண்டும்" (மேலது ப. 49) என்று விடுதலையின் வரலாற்றுத் தேவையின் இலக்கு வலியுறுத்தப்பட்டது. "ஏழை எளியவருக்கு எதிரான எத்தனையோ அநீதிகள், சாதி, சமயவெறி, பெண்ணடிமைத்தனம், வஞ்சம், அக்கறையின்மை என நமது சமூகத்தில் எத்தனையோ அவலங்கள். இவற்றுக்கெல்லாம் எதிராகக் குரல் கொடுக்காத இறையியல்கள் உள்ளுக்குள் உண்மையாகவே இறந்துவிட்டவைதான்!" (மேலது ப.49) என்பன போன்ற கடும் விமர்சனங்கள் பழமைவாத இறையியல்களது முடிவை அறிவித்தன.

### சீற்றத்தில் சிலிர்ப்புகளாய்...

"இந்த வையத்தின் அவலங்களை மறந்துவிட்டு, வானத்தின் அழகுகளைப் பற்றி ஒடுக்கப்படுவோர்களது பெருமூச்சாகவும், இதயமற்றோரது இதயமாகவும் செயல்படாத சமயம் போதையூட்டும் அபின் போன்றது" என்று சாடிய மார்க்சின் மொழிகள் புதிய மொழி வார்ப்புகளாக இறையியலாரால் தெறிப்புகளாக வெளிவந்தன. இதற்கு மேலும் ஒருபடி சென்று, 'குற்றமற்ற ஆபேல்களின் குருதி சிந்தப்படுவதைக் கண்டும் அதுபற்றிக் குரல் எழுப்பாத இறையியல் எல்லாம் அந்த இரத்தப்பழியில் தங்களையும் கறைப்படுத்திக் கொண்டவைதாம்!" (மேலது பக். 53) என்றெல்லாம் விடுதலையின் வெடிப்புகள் அறச் சின எழுத்துக்களாகச் சீற்றச் சிலிர்ப்பைப் புலப்படுத்தின.

### கருத்தியல் தளமாய்... ஆயுதமாய்

ஒடுக்கப்பட்டு, உரிமை இழந்த மக்களாக வாழும் தலித்துகள், பெண்கள், பழங்குடிகள், குழந்தைகள்,



படிப்பகம்

www.padippakam.com

அகதிகள் என்று பலவகைச் சமூகங்களுக்கும் தென்னமெரிக்கச் சூழலில் உருவான இந்த விடுதலை இறையியல் அந்தந்தக் காலனிய அரசியல் அடிமைத்தனங்களுக்கும், நிறவெறிப்பாகுபாடுகளுக்கும், ஆணாதிக்க அடக்குமுறைகளுக்கும், ஏகாதிபத்திய ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான விடுதலைத் தேட்டத்துக்கான கருத்தியல் தளமாகியது. கிறித்துவ சமய நிறுவனச் சூழ்நிலையில் தலித் விடுதலை, பழங்குடியினர் விடுதலை, பெண்ணிய விடுதலை என்று இயக்கமாக அணிதிரண்டவர்களது கருத்தியல் ஆயுதமாகியது. விடுதலைக்கான எழுத்துக்களை ஆயுதமாகப் பயன்படுத்த வேண்டும் என்றார் ஜீன் பால் சார்த்ரு.

**முழுமனித மயமாக்கத்தைக் கோரி...**

“கற்பி! ஒன்றுசேர்! புரட்சிசெய்!” என்று தலித் மக்களுக்கு விடுதலைக்கான தாரக மந்திரத்தை வழங்கிய புரட்சியாளர் அம்பேத்கரது பாதையில் கிறித்தவ தலித் விடுதலை இயக்கம் (CDLM), தலித் கிறித்தவர் விடுதலை இயக்கம் (DCLM), அட்டவணை வகுப்பினர் கிறித்தவர் கூட்டமைப்பு போன்ற இயக்கங்களுக்கு வலுவூட்டும் சக்தியாக விடுதலை இறையியல் விளங்கியது. நிறுவனத் திருச்சபையில் சாதிக் கிறித்தவர்களாகிய போலிக் கிறித்தவர்கள் அடங்கிய பிரிவும், சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் ஆகிய முழுமனித மயமாக்கத்தைக் கோரிப் போராடுகிற தலித் கிறித்தவர்களது வேறொரு பிரிவும் இன்றும் நிலைபெற்றுள்ளது.

**உடைப்பதும் படைப்பதுமாய்...**

“இந்து மதம் சாதிய அமைப்பை நிறுவனப்படுத்தி ஒடுக்குமுறையை நிலைநிறுத்திவிட்டது. எனவே உண்மையான விடுதலையோ, சமூக மாற்றமோ சாதியத்துக்குச் சேவகம் செய்யும் சமயங்கள் தொடர்ந்து வரும் நிலையில் சாத்தியமாகாது!” என்பதை இறையியலார்களும் உணர்த்தினார்கள் (பெலிக்ஸ் வில்பிரட், முன்னர் குறித்த நூல், ப. 220). “அநீதியான அமைப்புகளை உடைப்பதும் நீதியான அமைப்புகளைப் படைப்பதும் நற்செய்திப் பணி” என்று இறையியல் பேராசிரியர் ச.தே. செல்வராசு அறிவுறுத்தினார் (இறையியல் இறைவாக்கினர், வைகறை வெளியீடு, ப.6). தென் அமெரிக்கா, பிரேசில், தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் விடுதலை இறையியல் கருத்தியலுக்குச் செயல் வடிவம் கொடுக்கப் புரட்சியை முன்னெடுத்து எழுதியவர்கள், பேசியவர்கள், செயல்பட்டவர்கள் தேசிய அரசுகளது இராணுவ, காவல்துறைகளது அடக்கு முறைகளையும், நிறுவனத் திருச்சபை அதிகார வர்க்கத்தில் ஆளுகை புரிந்தோரது எதிர்ப்பு நடவடிக்கைகளையும் எதிர்கொள்ள நேரிட்டது போலவே தமிழகத்தில் அருளாளர்கள், அருட்சகோதரிகள், கிறித்தவத் தலைவர்கள் சிலர் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் பலவிதங்களில் தொடுக்கப்பட்டன.

**பார்ப்பனர்களைத் துரத்தித் தேடிய கிறித்தவமா?**

மதம் மாறிய கிறித்தவர்கள் பற்றியும், கிறித்தவ மதம் பற்றியும் புரட்சியாளர் அம்பேத்கர் முன்வைத்த முக்கியமான விமர்சனங்களை இங்கு இணைத்துப் பார்க்கவேண்டும்! கிறித்தவ சமய வளர்ச்சிக்கு ஏற்பட்ட தடைகள் மூன்று. அவற்றுள் மூன்றாவது தடை: “கிறித்துவ மதப் பிரசாரகர்கள் பிராமணர்களுடன் ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்காக அன்றி வேறு எதற்காகப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் மருத்துவ மனைகள் போன்றவற்றையும் துவக்கினார்கள் என்பதை விளக்கமுடியாது... பிராமணரும் உயர் வகுப்பினரும் கிறித்தவ மதப்பிரச்சாரக் குழுக்கள் பராமரித்த கல்வி நிலையங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டனர். இத்தகைய கல்வி நிலையங்களைக் கொண்டு வந்த மதத்தைக் குறித்து ஒருபோதும் சிந்தித்ததில்லை!” *(டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர்: பேச்சும் எழுத்தும், தொ. 10, ப. 500)*

இதற்குக் காரணமாகக் கிறித்தவ மதத்தில் தத்துவம் இல்லை; இந்து இறையியல் கிறித்துவ இறையியலைத் தோற்கடித்துவிடும் காரணங்கள் பற்றி விவாதித்துள்ளார் அண்ணல். தீண்டாமைக் கொடுமையால் வதைப்பட்டவர்கள் இந்து மதத்தை விட்டுக் கிறித்தவ மதத்துக்கு மாறுவது மருத்துவ உதவிகள் பெறவும், உலக வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களைப் பெற்றுக் கொள்ளவும்தான் என்று காந்தியார் விமர்சனம் செய்தார் அவ்வாறான மத மாற்றச் செயலை ‘அநாகரீகப் போட்டி’ என்று சாடினார். இதனை (மேலது ப. 514) மறுத்து மதமாற்றம் இந்து மதச் சிறையிலிருந்து விடுபடுவதற்கான விடுதலையின் வழிமுறை என்று புரட்சியாளர் அம்பேத்கர் மறுத்து எழுதினார்.

**கறைபடிந்த வரலாறாய்...**

1. குழந்தைகள், 2. இளைஞர்கள், 3. வெகுசன மக்கள், 4. பெண்கள், 5. நோயாளிகள் ஆகிய ஐந்து சாராருக்கு கிறித்தவர்கள் சேவைப்பணி ஆற்றிவருவதைப் புரட்சியாளர் அம்பேத்கர் அங்கீகரித்துள்ளார். ஆனால் இவர்கள் நடத்தும் பள்ளிகள், கல்லூரிகள், தங்கும் விடுதிகள், மருத்துவ உதவிகள் ஆகியன ஆதிக்க சாதி இந்துக்களுக்கும், அவர்களில் வசதிபடைத்தவர்களுக்குமே பயன்பட்டுள்ளன. தீண்டத்தகாத தலித் மக்களுக்கு ஏன் பயனளிக்கவில்லை என்ற வினாவை எழுப்பியுள்ளார். சாதி முறையை மதம் பரப்பச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள கிறித்தவம் தனக்கான பாகுபாட்டுச் சவக்குழியைத் தானே வெட்டிக்கொண்டு அதில் வீழ்ந்தது வேதயையானது!

மதம் மாறிய தாழ்த்தப்பட்டோர் குடியுரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும், பொருளாதார உயர்வு அடையவும் விரும்புகின்றனர். “மதமாற்றம் செய்யப்பட்டவர்களின் மனோபாவத்தில் மாற்றம் செய்வதில் கிறித்தவ சமயம் என்ன சாதித்துள்ளது? மதமாற்றம் செய்யப்பட்ட தீண்டப்படாதவர்கள் தீண்டப்படுபவர்களது நிலைக்கு உயர்ந்துள்ளனரா? தீண்டப்படுபவர்களும் தீண்டப்படாதவர்களும் தங்கள் சாதியைக் கைவிட்டனரா?” என்று கேள்வி எழுப்புகிறார். (மேலது ப. 525) போலிக் கிறித்தவர்களான சாதிக் கிறித்தவர்கள் மனமாற்றம் அடையவே இல்லை!



படிப்பகம்

www.padippakam.com

அம்பேத்கர் அந்தக் காலத்தில் சுட்டிக்காட்டிய ஆதிக்க சாதிப் போலிக் கிறித்தவர்கள் மீது தொடுத்த குற்றச்சாட்டுகளுக்குக் காரணமான நடத்தைகளோ பின்வரும் மனோபாவங்களோ பெருமளவில் மாறிவிட்டதாகக் கூற இயலாது: தலித்துகளைக் கேவலமாக நடத்துவது, நிராகரிப்பது, ஒதுக்கிவைப்பது, மண உறவு கொள்ள மறுப்பது முதலான சாதியின் எல்லாக் கடுமையான முறைகளையும் கடைப்பிடிப்பது, கிராமங்களில் இந்து சனாதனப் பழக்கங்களைப் பின்பற்றுவது, 'பறையர்கள்' என்று கேவலமாகச் சாதி கூறி அழைப்பது, தங்கள் செல்வம், அதிகாரம், செல்வாக்கு, தகுதி ஆகியவற்றைப் பயன்படுத்திச் சமுதாயத்திலிருந்து விலக்கி வைப்பது, கோபத்தை வெளிப்படுத்துவது, கல்லறையிலும் தனியிடம் ஒதுக்குவது, சுவர் தடுப்பு எழுப்புவது போன்ற (மேலது பக். 526-527) அருவருக்கத்தக்க செயல்களை மதம் மாறிய தலித்துகளுக்கு எதிராகச் செய்வது தொடர்ந்து வருகிறது இன்றும்!

**சிங்கத்தின் வாயிலிருந்து தப்பிப் புலிவாய்ப்பட்டு...**

"கிறித்துவ சமூகங்களில் தலித்துகள் இன்னும் முகமற்றவர்களாய், ஓரம் கட்டடப்பட்டவர்களாய் அல்லலுறுவது மறுக்கமுடியாத உண்மை. எவ்வித அடிமை நிலையையும், அடக்கு முறையையும் எதிர்த்து அவர்கள் இந்து சமயத்தைவிட்டு வெளியேறினார்களோ அதே நிலையில்தான் இன்றும் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர்... அவர்களின் குடியிருப்புகள் பிரிக்கப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டு, ஊருக்குப் புறம்பே ஒதுக்கப்பட்டுச்சேரிகளில் வசிக்கின்றனர். மேட்டுக்குடிக் கிறித்தவர்கள் அவர்களைச் சமுதாய வாழ்விலிருந்தும், திருச்சபை அமைப்புகளிலிருந்தும் ஒதுக்கி வைக்கும் கொடுமை இன்னும் மறையவில்லை" என்கிறார் இதுபற்றிப் பகுப்பாய்வு செய்துள்ள இறையியல் பேராசிரியர் எஸ். தேவராஜ் (விடியல் தேடும் கிறிஸ்தவர்கள், மறை அருவி, வெள்ளம் 27 அலை 3, 2003 (ஜூலை-செப்) பக். 29-30.)

**மாற்றுச் சிந்தனை செயல்பாடுகள் நோக்கி...**

தங்கள் விடியலுக்கான போராட்டத்தில் விடுதலை இறையியல் தந்த உந்துதலால் தலித் அல்லாத அருளாளர்கள் இவர்களைப் புரிந்துகொள்ள முயல்கின்றனர். போராடுவோர் களம் இறங்கி வெளிப்படையாகத் தங்களைத் தலித்துகள் என்று அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். சமத்துவத்துக்கான 10 அம்சத் திட்டத்தை அமலாக்கக் கோருகின்றனர். கடந்த காலங்களில் இளையோர் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்துள்ளனர். ஆயர்களிடம் குமுறலையும் கூக்குரலையும் வெளியிட்டுள்ளனர். சிலர் எல்லா முயற்சிகளும் தோற்றுப்போனது கண்டு பௌத்த சமயத்தில் இணைந்துள்ளனர். சிலர் பொதுவுடைமை இயக்கம், தந்தை பெரியாரது சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றில் இணைந்துள்ளனர். அதிகாரப் பகிர்வு, பங்கேற்பு அமைப்புகளில் பங்கேற்பு, கிறித்தவ நிறுவனங்களுக்குள் இடஒதுக்கீடு, அகமணம் கடந்த மண உறவு ஆகியவற்றைக் கோரிவருகின்றனர்.

"இந்திய கலாச்சாரத்தில் காணப்படும் முழுமையான மனித நலக் கோட்பாடு (integral humanism) இந்திய விடுதலை இறையியலுக்கு ஏவுதலாகவும் சவாலாகவும் இருக்கமுடியும்" என்கிறார் முனைவர் ச. அருள்சாமி. ('இந்தியாவில் விடுதலை இறையியல்' மறை அருவி, வெள்ளம் 9, 1985 (ஜூலை-செப்) ப. 56.) இறையியலாளர்களுள் காந்தியம், மார்க்சியம், அத்வைதம் போன்ற கருத்தியலின் விடுதலை வழி தேடுகின்றவர்களே பெரும்பாலோர். அம்பேத்கரிய, பெரியாரிய வழிமுறைகளினூடாக விடியலைத் தேடுவோர் மிகச் சிலரே!'

**மார்க்சியம் அச்சுறுத்தலின் கோலமல்ல..!**

விடுதலை இறையியலை முன்னெடுப்போரின் மார்க்சியச் சார்பு திருச்சபை நிறுவனத்துக்கு அச்சுறுத்தலாகத் தோன்றியது. வர்க்கப் போராட்டம், அந்நியமாதல் போன்றவை முதலாளித்துவ ஒழிப்புக்குக் காரணமாவதால் கவனத்துடன் கையாளுமாறு கத்தோலிக்கத் தலைமை பீடம் எச்சரிக்கை விடுத்தது. (வத்திக்கான் 1984 விடுதலை இறையியலின் சில அம்சங்கள் பற்றிய விமர்சனம்) "விடுதலை இறையியல் தோன்றிய அரசியல் பண்பாட்டுப் பின்னணியை இந்த ஏடு சரியாகப் புரிந்துகொள்ளவில்லை" என்று விமர்சித்துள்ளார் இறையியல் பேராசிரியர் ஒருவர். (பால்வியோன், மீண்டும் விடுதலை இறையியல், மறைஅருவி, 1986 (அக்-டிச) ப. 20.

மார்க்சியப் பகுப்பாய்வு அணுகுமுறையானது, நிவாரணப் பணி, மனமாற்றப் பணி ஆகியவற்றைக் காட்டிலும் அமைப்புமாற்றப் பணியே செய்யத்தக்கதாக அறைகூவல் விடுத்தது. தலித்திய நோக்கில் இந்து சனாதன வைதிகப் பார்ப்பனியம் தக்கவைக்கும் தீண்டாமை, சாதியப் படிநிலை, அதை நியாயப்படுத்தும் சமய தத்துவங்கள் இவற்றைக் கட்டிக் காக்க முனையும் இந்துத்துவ அரசியல் இயக்கங்கள், அரசியல் கட்சிகள் ஆகியவற்றை எதிர்க்கின்ற போராட்டங்களைத் தலித்துகள் தங்கள் ஆதரவு சக்திகளுடன் முழுவீச்சில் நடத்த வேண்டிய இன்றியமையாமையை விடுதலை இறையியல் உயர்த்தியது. "நமது சூழலில் அடிபட்டவர்கள், மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் தலித் மக்களே! அவர்களைக் கொண்டுதான், அவர்கள் பார்வையிலிருந்துதான் இறையியலாக்கம் செய்ய முடியும். (இறையியல் இறைவாக்கினர், ப. 61)"

நீதி நிலவும் சமத்துவ சகோதரத்துவ சமூகத்தை உருவாக்க அகமண உறவைத் தகர்க்கும் பண்பாட்டுப் புரட்சி, நியாயமான நிலப்பகிர்வு, கல்வி, மருத்துவம் ஆகியவற்றை உறுதி செய்யும் பொருளா தாரப் புரட்சி, அரசியல் அதிகாரத்தில் தலித் மக்கள் பங்கேற்பதற்கு ஏற்ப இட ஒதுக்கீடு, இரட்டை வாக்குரிமை போன்ற அரசியல் புரட்சி ஆகியவற்றுக்கு ஆதரவான கருத்துக்களை தலித்துகள் பயன்படுத்த விடுதலை இறையியல் வழிகாட்டியது. "பொதுமக்க ளுடைய நலனையும், அடிப்படை உரிமைகளையும் கொடூரமாகப் புறக்கணிக்கின்ற அடக்குமுறை அதி காரங்களை எதிர்கொள்ள வேண்டிய அட்டூழியமான சூழ்நிலையில்



படிப்பகம்

www.padippakam.com

ஆயுதம் தாங்கிப் போராடுவது தான் இறுதிவழியெனப் பட்டால் அவ்வாறு போராடுவதால் சரியே!" என்று வத்திக்கான் 1986 சுதந்திரம், விடுதலை குறித்த ஏடு (எண் 79) தெளிவுபடுத்தியது. (மேலது, ப. 27) இது மார்க்சியம் பற்றிய நிறுவனக் கிறித்தவப் புரிதலைக் காட்டியது. இந்திய - தமிழகச் சூழலில் எதிர்கால விடுதலைத் தத்துவம் எதில் உள்ளது?

தலித் மக்களது முழுமனித விடுதலைக்கு அம்பேத்கரியக் கருத்தியலை வழிமுறையாகக் கொண்டு தீர்வு காணவேண்டும். விடுதலை இறையியல் அப்போது தலித் இறையியலாகப் புதிய மாற்றம் அடையும்.

**விடுதலைச் செயல்திட்ட இலக்குநோக்கி...**

அம்பேத்கரிய நோக்கில் எட்டுகட்டச் செயல் திட்டங்களை இறையியல் சிந்தனையாளர் செபமாலை ராசா எடுத்துரைத்துள்ளார். (அம்பேத்கரும் தலித் மாண்பிற்கான செயல்பாடுகளும் - மறை அருவி (அக்-டிச) 1997, வெள்ளம் 21, பக். 192-220.

1. மார்க்சியப் பகுப்பாய்வு நோக்கில் சாதி, வர்க்கம், பார்ப்பனியம், முதலாளித்துவம் ஆகியவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும். அம்பேத்கர் காட்டிய வழியில் இவற்றை ஒழிப்பதற்கான இயக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

2. தலித்தாகப் பிறக்க நேர்ந்து பலவகை இழிவுகளுக்கும் இலக்காகிக் காயமுறுவோரது அனுபவங்களிலிருந்து தன்னுணர்வும், தன்மான உணர்வும் பெற்று ஒடுக்கப்பட்டோர் மனித மாண்பு நிலைபெறத் தம்மையே அர்ப்பணித்துக்கொண்டு விடுதலைச் செயல்பாட்டைத் தொடர வேண்டும்.

3. மாண்பை மீட்டெடுக்க இழிநிலையை மாற்றியே தீருவேன் என்கிற சிந்தனைப் புரட்சி முடிவு, நம்மால் முடியும் என்கிற தன்னம்பிக்கை, பார்ப்பனியமும் முதலாளியமும் இருபெரும் எதிரிகள் என்கிற தெளிவு, தீண்டாமை - சாதியம் ஆகியவற்றுக்குப் பலமுனைப் போராட்ட முனைப்பு, தாக்கப்படும்போது மனித மாண்பை மீட்கும் மறுதாக்குதல் அணுகுமுறை ஆகியவற்றை தெரிந்து செயல்பட வேண்டும். அது குடியுரிமை பெறவும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றவும் நடத்த வேண்டியிருக்கும்.

4. சமூக மாற்றம் நிகழவேண்டுமென்றால் சாதி ஒழிக்கப்பட வேண்டும். சாதி ஒழிக்கப்பட கல்வித் தகுதியில் தலித்துகளை உயர்த்தவேண்டும். பெண்கள் 100% கட்டாயக் கல்வி பெறச் செய்யவேண்டும். தனி நபர்களைத் தலைமை வழிபாடு செய்வதை விட்டொழிக்க வேண்டும். இடஒதுக்கீட்டின் பயன் தலித் மக்களைச் சென்று சேரச் செய்தல் வேண்டும்.

5. சாதியும் தீண்டாமையும் ஒழிய மதமாற்றமே மாற்று மருந்து.

6. புத்தர் கண்ட புரட்சி அறவழியைக் கடைப் பிடிக்க வேண்டும்.

7. மக்களை இணைத்துக் கற்பி ஒன்றுசேர் புரட்சிசெய் என்கிற வழிமுறையை நடைமுறையாக்க இயக்கத்தைக் கட்டுவதும் தலித் இதழ்களை நடத்துவதும் மாநாடுகள் மூலம் மக்களைப் பயிற்றுவதும் தேவை.

8. ஒருங்கிணைந்த செயல் முறையாக உபசாதிகளைக் கடந்த ஒற்றுமை - கூட்டொருமைப்பாடு - கூட்டமைப்பு அணுகுமுறையில் தடைகளை அகற்றினால் விடுதலை உறுதி!


## தமிழக மனித உரிமக்கழகம் நடத்தும் மாபெரும் பட்டினிப் போராட்டம்!

**நாள் :** 02.03.2005 புதன்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை

**இடம் :** வள்ளுவர் கோட்டம், சென்னை

**தலைமை :** **அரங்க குணசேகரன்** பொதுச்செயலாளர்

**●பொதுத்துறை காத்தல்! ●தனியார் துறைகளிலும் சமூக நீதி பெறுதல்!**

- தலித்துகள் - பழங்குடியினர் வாழ்விடங்களை தனி ஊராட்சியாக்குதல்
- தனியார் துறைகளில் இடஒதுக்கீட்டுக்கு வகை செய்தல்
- விவசாய கூலித்தொழிலாளர் நலனுக்காக கோலப்பன் குழு பரிந்துரைகளை உடனடியாக நடைமுறைப்படுத்துதல்
- இன்னும் பல கோரிக்கைகளை முன்னிருத்தி போராட்டம்

அனைவரும் பங்கேற்க வாருங்கள்!




படிப்பகம்

www.padippakam.com

# மக்கள் பகுதி

இந்து காட்டுநாயக்கன் (ST) இனத்தைச் சேர்ந்த நான் +2 வரை படித்துள்ளேன். வேலைக்குச் செல்ல சான்றிதழ் தேவைப் படுவதால் மாவட்ட ஆட்சியருக்கு மனு செய்தும் கிடைக்கவில்லை. 5 வருடமாக சாதிச் சான்றிதழ் இல்லாததால் வேலைக்குச் செல்லாமல் ரோட்டில் காகிதம் பொறுக்கிக் கொண்டிருக்கிறேன். எங்கள் இனத்தைச் சேர்ந்த 135 பேர் இங்கு உள்ளனர். சாதிச் சான்றிதழ் வழங்க ஆவண செய்ய வேண்டுகிறேன்.

*எம். நாகராஜன், த/பெ. மூக்காண்டி, 55/1, இராமமூர்த்தி நகர் முதல் தெரு, எண்ணூர், சென்னை - 600 057.*

எங்கள் மகளிர் குழு உறுப்பினர்கள் கருவாடு, காய்-கனி வியாபாரம், பூ வியாபாரம் செய்பவர்கள். சுனாமி பாதிப்பால் தொழில் இன்றி கஷ்டப்படுகிறார்கள். எனவே எங்களுக்கு உங்களால் ஆன உதவியும், மகளிருக்கு லோன் வழங்கவும் ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*டி. ஜோஸ்பின், ஊக்குநர், கடல் மகளிர் சுய உதவிக்குழு, எண். 165, வள்ளுவர் நகர், கத்திவாக்கம், சென்னை - 600 057. மற்றும் வானம் மகளிர் சுயநிதிக்குழு, 165, வள்ளுவர் நகர், கத்திவாக்கம், சென்னை - 600 057.*

காலணி செய்யும் தொழிலும், தையல் தொழிலும் செய்து வரும் எங்கள் 60 குடும்பங்கள் நல்லமுறையில் வாழ, எங்கள் தொழிலுக்குத் தேவையான பொருட்கள் கிடைக்க வழிவகை செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

*பொதுமக்கள் (அருந்ததியர்), மொளச்சூர் ஊராட்சி, மொளச்சூர், டாக்டர் அம்பேத்கர் தெரு, திருப்பெரும்புதூர் காலுக்கா, காஞ்சிபுரம்.*

ஏழை அருந்ததி இனத்தைச் சேர்ந்த எனக்கு செருப்பு தைக்கும் தொழிலுக்கு வங்கிக் கடன் பெற உதவி செய்யும்படி பணிவுடன் வேண்டுகிறேன்.

*கிஷ்டன், த/பெ. வெங்கடய்யா (லேட்), எண். 33, மொளச்சூர் வழி, அம்பேத்கர் காலனி (அருந்ததியர்), SVC அஞ்சல், திருப்பெரும்பூதூர் வட்டம்*

எனக்கு விபத்தில் கால் ஊனம் ஆகிவிட்டது. என்னால் எந்த வேலையும் செய்யமுடியாது. செருப்பு தைக்கும் தொழில் மட்டும் தெரியும். வங்கிக் கடன் பெற உதவி செய்யும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

*சி.ஏ. ரோபியோ, த/பெ. அமுல்ராஜ், பாத்திமாபுரம், அருந்ததியர் காலனி, கீழச்சேரி, திருவள்ளூர் தாலூக்கா.*

நாள் (2002-2004) ஆண்டில் இடைநிலை ஆசிரியர் பயிற்சியை திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூரில் முடித்துள்ளேன். வேலை கிடைக்க ஆவன செய்ய பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

*எஸ். பாக்கியலட்சுமி, த/பெ. ஜி. சுப்பையா (லேட்), அம்பேத்கர் தெரு, அருந்ததிபுரம், மொளச்சூர்.*

நான் +2-இல் 922/1200 மற்றும் SSLC-யில் 426/500 மதிப்பெண்கள் எடுத்துள்ளேன். எங்கள் குடும்பத்தில் மூன்று பெண் குழந்தைகளும் ஒரு ஆண்மகனும் உள்ளனர். வறுமை யில் வாடும் என் மேம்படிப்புக்கு உதவிட தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

*பா. சசிரேகா, த/பெ. T.S. பாண்டியன், C/o. A.C. நாகைய்யா, 1/213, தெரசா தெரு, மொளச்சூர் - 602 106.*

அருந்ததியர் இனத்தைச் சேர்ந்த நான் மொளச்சூர் ஊராட்சியில் துப்புரவு பணியாளராக 6 ஆண்டுகளாக பணிசெய்து வருகிறேன். ரூ. 300/- மட்டுமே சம்பளம் தருகின்றனர்.

ஊராட்சி மன்றத் தலைவரிடம் பலமுறை சம்பள உயர்வு கேட்டும் உயர்த்தவில்லை. வறுமையில் வாடும் எனக்கு சம்பளம் உயர்த்த ஊராட்சித் தலைவருக்கு அறிவுறுத்துமாறு வணக்கத் துடன் கேட்டுக்கொள்கிறேன்.

*சின்னய்யன், த/பெ. சவரய்யா (அருந்ததியர்), 33, மொளச்சூர் கிராமம், SVC போஸ்ட், திருப்பெரும்பபுதூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்.*

நான் எண்ணூரில் மனநலம் குன்றிய குழந்தை களுக்கான பள்ளிக்கூடம் நடத்தி வருகிறேன். 15 மாணவர்கள் படிக்கின்றனர். தற்போது பள்ளிக்கூடம் நடந்த ஒரு காலிமனை ஒதுக்கித்தர வேண்டுகிறேன்.

*B. செந்தமிழ் செல்வி, Kumaran Special School, காமராஜர் நகர், எண்ணூர், சென்னை - 600 057.*

எங்கள் கிராமத்தில் அருந்ததியர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலம் (சர்வே எண். 205) சம்பந்தமான வழக்கு எங்களுக்கு சாதகமாக தீர்வான பின்பும் நிலத்தை அளந்து பிரித்துக் கொடுக்காமல் சிலர் அதை விற்பனை செய்தும், வீடுகள் கட்டி ஆக்கிரமிப்பு செய்தும் வருகிறார்கள். எனவே நேரடி விசாரணை செய்து எங்கள் வாழ்க்கைக்கு ஒளியேற்றுமாறு வேண்டுகிறோம்.

*பி.ஆர். முனுசாமி மற்றும் கிராம பொதுமக்கள், த/பெ. பொம்மி பெரிய ராகவன், மொளச்சூர் கிராமம், SVC அஞ்சல், திருப்பெரும்புதூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்.*

எங்கள் ஆதிவாசியினர் மூதாதையர் காலந்தொட்டு பிழைப்பு நடத்தி வரும் வருவாய்த்துறைக்குச் சொந்தமான 108.0-31 நிலத்தில் வனத்துறையினர் அத்துமீறி நுழைந்து அப்பாவி ஆதிவாசிகளை வெளியேற்றும் எண்ணத்துடன் பயிர்களை அழித்தும், வீடுகளை தீயிட்டு கொளுத்தியும், சிறையில் அடைத்தும் கொடுமைப்படுத்தி வருகின்றனர். வனத்துறையினரின் இந்த நடவடிக்கையை தடுத்து நிறுத்தி எங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

*M. லீலாவதி, செயலாளர், ஆதிவாசி விடுதலை இயக்கம், மூலையாறு.*

புதிய கோடாங்கியும் CSI-யும் இணைந்து சேலத்தில் நடத்திய மாநில ஆதிவாசிப் பெண் தலைவர்களுக்கான ஒரு நாள் கலந்துரையாடலில் கலந்து கொண்டவள் நான். ஊசிமலை, தாளகரை, சோளகணை, தேவர்மலை, தாமரைக்கரை ஆகிய ஊர்ப்பகுதி மக்கள் பிழைப்பதற்காக எஸ்டேட் சென்று வருகின்றனர். இவர்களை சொந்த ஊர்களில் தக்கவைத்துக் கொள்வதற்காக ஒவ்வொரு ஊரிலும் தண்ணீர் வசதி, சாலை வசதி, மருத்துவ வசதி, கழிவறை வசதி, மின் இணைப்பு வசதி போன்ற வசதிகளை செய்து கொடுத்திட உதவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் இவ்வூர் மக்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சிகள் செய்து கொடுத்தால் பேருதவியாக இருக்கும்.

*சி. சாந்தகுமாரி, ST காலனி, தாமரைக்கரை, அந்தியூர் வழி, ஈரோடு மாவட்டம்.*



படிப்பகம்

www.padippakam.com

# முகத்தில் முகம்

வழக்கமான கட்டுரைகளுடன், 'மாநாட்டுக் கட்டுரை'கள் எனும் தலைப்பில் வந்துள்ள, 7 கட்டுரைகளும் சிறப்பாக இருந்தது. சிந்திக்கவும், விவாதிக்கவும் தூண்டுபவை. நன்றி.

கேள்வி - பதில் பகுதியில் சொக்கநாதன், மதுராகுளம் என்பவரின் கேள்விக்கு, முனிமா அளித்துள்ள பதிலையொட்டி ஒரு விளக்கம். உண்மையில் அமெரிக்க அதிபர் தேர்தலில் இரண்டாம் தடவை போட்டியிட்ட போர் வெறியன் புஷ்ஷுக்கு ஆதரவாக 51 சதவீதம் வாக்குகளே கிடைத்தன. 49 சதவிகித வாக்குகள் அவருக்கு எதிரானவை. 2 சதவிகிதம் வித்தியாசத்தில் அவர் ஜெயிப்பதற்கு மீடியாக்கள், வலதுசாரிக் கிறித்துவ அடிப்படைவாதிகள், மதப் பிரச்சாரங்கள் இவர்களின் ஆதரவே காரணம். எனவே அமெரிக்க மக்கள் அனைவரும் புஷ் ஆதரவாளர்கள் அல்லர்! அமெரிக்க வணிக நிறுவனங்களும், தகவல் தொடர்பு சாதனங்களும், தீவிர வலதுசாரி, மதவாத அடிப்படையில் அதிரடிப் பிரச்சாரம் செய்துதான், 51 சதவிகித வாக்குகளை புஷ் பெற முடிந்தது. மத வாதம் என்பது, அமெரிக்காவிலும் அதிகரித்து வரும் ஒரு கொடிய நோய்!

தி.க.சி., நெல்லை

இளைஞர்கள் சுயவேலை பெறவும், சுயதொழில் மற்றும் ஏற்றுமதியில் வாய்ப்பினைப் பெறவும் தங்களின் மாத இதழில் ஒரே ஒரு பக்கம் ஒதுக்கி இளைஞர்களின் எதிர்காலத்தினை வளர்க்கவேண்டும்.

இருளில் இருக்கும் இளைஞர்கள் வெளிச்சத்திற்கு வருவதற்கு, எதிர் நீச்சல் அடிப்பதற்கு ஆவண செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

M. மணிமாறன், திருச்சி

வணக்கம். புதிய கோடாங்கி பிப்ரவரி 2005 இதழின் அட்டைப்படம் கவிதையாகவும் காக்கைகளின் மாநாடு போல் இருந்தாலும் இது தலித்துகளின் உரிமை முழங்கும் மாநாடு போல் எளிமையான வடிவமைப்பில் சிறப்பு வாய்ந்ததாக உள்ளது.

K.A. குணசேகரனின் சமூக மாற்றத்திற்கு துணை நிற்கும் நாட்டுப்புற கலைகள் என்ற பார்வையில் அமைந்துள்ள கட்டுரை வடிவமைப்பு நன்றாக இருந்தது. நிஜநாடகங்கள் மூலம் திறந்தவெளி அமைப்பில் சொல்லக்கூடிய கருத்துக்கள் மக்களை சேருவது மட்டும் இல்லாமல் சமூக மாற்றத்திற்கு அடித்தளமாகவும் இருக்கும்.

அ. ராமசாமியின் வரலாறு யாரை விடுதலை செய்யும் என்ற கட்டுரையின் போக்கில் இருந்து மாறுபடுகிறது. ஒரு விடுதலைக்கான போராட்டமும் இழப்புகளும் வரலாறாக மாறுமே தவிர வரலாறு யாரையும் விடுதலை செய்யாது. வேண்டுமானால் நடக்கும் நிகழ்வுகளில் பதிவுகளை விடுதலை யுக்திகளாக எடுத்துக் கொள்ளும் அடித்தளமாக இருக்கும்.

பவானியின் உயிர்வதை என்றும் சிறுகதை மனதை நெகிழ வைக்கக் கூடியதாக உள்ளது. மொத்தத்தில் மாநாட்டு சிறப்பு மலர் நன்றாக உள்ளது.

தமிழ்மகன், மேட்டூர் அணை

தலித் மறுமலர்ச்சியில் மிக முக்கியப் பங்காற்றிவரும் 'புதிய கோடாங்கியின்' எழுச்சிமிக்க இலக்கியச்சேவை தொடர்ந்து நடைபெற வாழ்த்துகிறேன். அந்த இலட்சியப் பயணத்தில் அணிதிரளும் போராளிகளில் என்னையும் ஒருவனாக இணைத்துக் கொள்வதில் பேருவகை அடைகிறேன்.

W. வில்லியம் அந்தோணி, ஏமப்பேர்.

## அறிவிப்பு

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் மறு வாழ்வுக்காக பாரிசிலிருந்து எழுத்தாளர் கலாமோகன் அவர்கள் நூறு ஈரோக்களை அனுப்பியுள்ளார். உரிய விதத்தில் அது புதிய கோடாங்கியால் சேர்க்கப்பட்டுவிடும்.

- ஆசிரியர்

Published, Printed and owned by Audrey Jannet joseph, Published from 2/206, Pandian Salai, Canalpuram Road, Neelangarai, Chennai - 41.
Printed at Sri Lakshmi Printers, 20 Big Street, Anakaputhur - 600 070, Editor : AUDREY JANNET JOSEPH



படிப்பகம்

www.padippakam.com

# இனி வரும் சந்ததி எச்.ஐ.வி இன்றி மண்ணுலகில் நடைபோடட்டும்!



## பிறக்கப் போகும் குழந்தையின் தாய் தந்தைக்கு எச்.ஐ.வி பரிசோதனை நல்லது.

இதற்கான ஆலோசனையும், பரிசோதனையும்
ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும்,
மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும்
இலவசமாக செய்யப்படுகிறது. பயனடைவீர்.

## தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்

**சென்னை 600 008.**

Published, Printed and owned by Audrey Jannet joseph, Published from 2/206, Pandian Salai, Canalpuram Road, neelangarai, Chennai - 41.
Printed at Sri Lakshmi Printers, 20, Big Street, Anakaputhur - 600 070. Editor : AUDREY JANNET JOSEPH

படிப்பகம்

www.padippakam.com




Postal Regn. No. TN/PMG(CCR)/842/03-05 Registrar of Newspapers for India Regn. No. TNTAM /2001/4926

படிப்பகம்